T. D. R. C. 99

R.R. 299|II|1936

ந்யாய்ப்ரகாசம்

R66
N06
119961

Part I.

உ

ஓம் ஸ்ரீகணேசாய நம:

T.D.RC 99
RRM 994

ஸ்ரீ ஸ்வாமி நித்தியாநந்தகிரி அவர்கள்

இயற்றியருளிய

நியாயப்பிரகாசம்.

இஃது

ஸ்ரீ சாது இரத்தினவேதாந்த விசாரணைச்சபையாருள் ஒருவராகிய

பு. நாகரத்தின நாயகர் அவர்களால்

மொழிபெயர்க்கப்பட்டு,

டி சபையாருள் ஒருவராகிய

வி. முருகேசமுதலியார் அவர்களால்

பரிசோதிக்கப்பட்டு,

டி பு. நாகரத்தினநாயகர் அவர்களால்

சென்னை

திரிபுரசுந்தரிவிலாச அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

119961
866
706

ஓம் ஸ்ரீகணேசாயநம:, ஸ்ரீகுருப்யோநம:,

ஸ்ரீகாசிவிஸ்வேஸ்வராயநம:, ஸ்ரீசங்கராசார்யேப்யோநம:.

நியாயப் பிரகாசம்.

முதற் பரிச்சேதம்.

க. மங்களாசரணத்தின் கவி.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

ஸ்ரீ குருவையும், சர்வவிக்கினங்களை நாசஞ்செய்பவரான விநாயகரையும், பார்வதியின் பதியான ஸ்ரீ மஹாதேவரையும், இலட்சுமியின் பதியான ஸ்ரீ விஷ்ணுவையும் நமஸ்கரித்து, கௌதமமுனிவரால் அருளிச்செய்யப்பட்ட நியாய சாத்திரத்தின் பிரமாண முதலிய பதினாறு பதார்த்தங்களையும், கணாதமுனிவரால் அருளிச் செய்யப்பட்ட வைசேடிக சாத்திரத்தின் திரவியமுதலிய ஏழு பதார்த்தங்களையும் நன்றாக நிச்சயஞ் செய்து யாம் இக்கத்தியரூபமாக நியாயப் பிரகாசமென்னும் இந்நூலியற்றுவாம்.

உ. இப்பிராகிருதநூலியற்றுவதனாலாம் பயன்.

சங்கை:—குசுமாஞ்சலி, லீலாவதி முதலிய நியாய நூற்கள் பலவுளவாதலின் அந்நூற்களை வாசிப்பதனாலேயே அதிகாரிகட்கு அத்திரவிய முதலிய பதார்த்தங்களின் உணர்ச்சி யுண்டாகின்றது. ஆகையால் நியாயப் பிரகாசமெனப் பெயருள்ள விந்நூலியற்றுவதனாலோர் பயனுமில்லையென்னுஞ் சங்கையுண்டாக இனி இந்நூலியற்றுவதனாலாம் பயனைக் கூறுவாம்.

“ஸநயாஸலஹி ஐடி” குசுமாஞ்சலி, லீலாவதி முதலிய நூற்களை வாசிப்பதனால் அதிகாரிகட்கு அத்திரவிய முதலிய பதார்த்தங்களின் போதமுண்டாய்விடுகின்றது; எனினும்; அவ்வெல்லா நூற்களும் சமஸ்கிருத பாஷையி லிருக்கின்றன வாகையால் வியாகரணம், காவியம், கோசம் முதலிய சாதனமுள்ள வர்கட்கே அச்சமஸ்கிருத நூற்களால் போத (ஞான) முண்டாய் விடுகின்றது. வியாகரண முதலிய சாதனங்களில்லாப் புருஷர்கட்கு அச்சமஸ்கிருத நூற்களால் பதார்த்தங்களின் போத முண்டாவதில்லை. வியாகரண முதலிய சாதன நூற்களை வாசிப்பதனால் மிக்கப்பிரயாசமிருத்தலாலும், அவ்வதிகாரிகள் வியாகரண முதலிய நூற்களை [illegible] பிரயாசமில்லாமலே அந்த நியாயவைசேடிக சாத்[illegible]

திரங்களின் பதார்த்தங்களையறிய விச்சித்திருக்கின்றார்களோ அவ்வதிகாரிகள் இதத்தின் பொருட்டு, அதாவது அவ்வதிகாரிகட்கு எளிதாகவே அப்பதார்த்தங்களை போதிக்குமாறு நியாயப்பிரகாச மெனப்பெயரிய ஓர்வசனநூலை, பிராகிருதத்தில் உத்தேசம், லக்ஷணம், பரீக்ஷை என்னும் இம்மூன்றைக் கூறும் வாயிலாக யாம் இயற்றுவாம்.

சங்கை:—உத்தேசம், லக்ஷணம், பரீக்ஷை என்னும் இம் மூன்றின் சொரூபம் யாதென்னுஞ் சங்கையுண்டாக இனி முறையாக உத்தேசமுதலியவைகளின் சொரூபம் வர்ணிப்பாம்.

௧. உத்தேசத்தினது லக்ஷணத்தின் வர்ணனம்.

உத்தேசலக்ஷணம்:—"[illegible]" (இ-ள்.) பெயர் மாத்திரத்தா லெவ்வஸ்துவைக் கூறுவதுண்டோ அது உத்தேசமெனப்படும். எங்ஙனம்: திரவியம் (பொருள்), குணம் (பண்பு), கர்மம் (தொழில்), சாமானியம் (பொதுமை), விசேஷம் (சிறப்பு), சமவாயம் (ஒற்றுமைச்சம்பந்தம்), அபாவம் (இன்மை) என திரவிய முதலிய பெயர் மாத்திரத்தால் எத்திரவிய முதலிய பதார்த்தங்களின் கூற்றுண்டோ அது உத்தேசமெனப்படும்.

௨. இலக்ஷணத்தினது லக்ஷணத்தின் வர்ணனம்.

இலக்ஷணத்தின் இலக்ஷணம்:—"[illegible]" (இ-ள்.) எவ்வஸ்துவிற்கு எது அசாதாரண தர்மமாகின்றதோ அவ்வசாதாரண தர்மம் அவ்வஸ்துவின் லக்ஷணமெனப்படும். எங்ஙனம்: கந்தகுணம் கேவலம்பிருதிவியிலேயே இருக்கிறது; பிருதிவிக்கு வேறான ஜல முதலிய வற்றில் கந்தகுணமிருப்பதில்லை, ஆகையால் பிருதிவிமாத்திரத்தின் அசாதாரண தர்மமாவதால் அக்கந்தமுடைமை பிருதிவியின் லக்ஷணமாம். அங்ஙனமே சீதபரிசமுடைமை நீரின் லக்ஷணமாம். வெம்மைப் பரிச முடைமை வன்னியின் லக்ஷணமாம். இவ்வாறாக எவ்வெத்தர்மம் எவ்வெப்பதார்த்தங்களின் அசாதாரணதர்மமாகின்றதோ அவ்வவ்வசாதாரண தர்மம் அவ்வப் பதார்த்தங்களின் லக்ஷண* வடிவமாகவேயறிக. ஆண்டு அந்தலக்ஷணவடிவதர்மத்தில் லக்ஷியத்தன்மையவச்சேதக (வரையப்பட்ட) தர்மத்தின் உடனிகழ்ச்சித் தன்மையாதோ, அதாவது அந்த லக்ஷியத் தன்மையின் அவச்சேதக தர்மத்தின் வியாப்பியத் தன்மையும், வியாபகத் தன்மையும் யாதோ அதுவே அந்த லக்ஷணவடிவதர்மத்தில் அசாதாரணத் தன்மையாம். எங்ஙனம்: கந்தமுடைமை வடிவலக்ஷணத்திற்கு பிருதிவியி லிருக்கும் லக்ஷியத்தன்மை யாதோ அந்த †லக்ஷியத் தன்மையின் அவச்சேதக தர்மம் பிருதிவித் தன்மையாம். அப்பிருதிவித் தன்மை தர்மத்தின் வியாப்பியத் தன்மையும், வியாபகத் தன்மையும், கந்த

* வடிவமெனின் சொரூபமென்றறிக, இதனால் பிருதிவித்தன்மை வடிவதருமமெனின் பிருதிவித்துவரூபமான தருமமென்பது பொருள்.

† இலக்ஷியத்தன்மையின் அவச்சேதகம்—இலக்ஷணத்தாலறியப்பட்டு வரைந்து கொண்டிருப்பது.

முடைமை வடிவதர்மத்திலிருக்கின்றன. இதுவே அக்கந்தமுடைமை வடிவதர்மத்தில் அசாதாரணத் தன்மையாம். யாண்டாண்டு கந்தமுடைமை இருக்கின்றதோ ஆண்டாண்டு பிருதிவித் தன்மை இருக்கின்றது. இவ்வாற்றால் அக்கந்த முடைமையில் பிருதிவித்தவ தர்மத்தின் வியாப்பியத் தன்மை பிரதீதியா (காணப்படு) கின்றது. யாண்டாண்டு பிருதிவித் தன்மை தர்மமிருக்கின்றதோ ஆண்டாண்டு கந்தமுடைமை இருக்கின்றது. இவ்வாற்றால் அக்கந்த முடைமையில் பிருதிவித்தன்மை தர்மத்தின்வியாபகத்தன்மை பிரதீதியாகின்றது. ஆண்டு எவ்வஸ்துவின் வாசக சப்தத்தின் பெயரினது உச்சரிப்பு முதலிலுண்டாகின்றதோ அவ்வஸ்து வியாப்பியமெனப்படும். எவ்வஸ்துவினது வாசக சப்தத்தின் உச்சரிப்பு பின்னருண்டாகின்றதோ அவ்வஸ்து வியாபகமெனப்படும்.

௩. பரீக்ஷையினது லக்ஷணத்தின் வர்ணனம்.

பரீக்ஷையின் லக்ஷணம்:—"[illegible]" (இ-ள்.) இந்த லக்ஷித வஸ்துவிற்கு இந்தலக்ஷணம் சம்பவிக்கிறதா இல்லையாவென்னும் விசாரம் யாதோ அது பரீக்ஷையெனப்படும். எங்ஙனம்: பிருதிவிமுதலிய லக்ஷித வஸ்துக்கட்கு கந்தமுடைமை முதலிய லக்ஷணம் சம்பவிக்கிறதா இல்லையா வென்னும் விசாரம் யாதோ அதுபரீக்ஷையெனப்படும்.

சங்கை:—உத்தேசம், லக்ஷணம், பரீக்ஷை என்னு மிம்மூன்றிற்கும் பயன்யாது என்னும் சங்கையுண்டாக இனி அவைகளின் பயனை நிரூபிப்பாம்.

௪. உத்தேசம், லக்ஷணம், பரீக்ஷை யென்னும் மூன்றின் பிரயோஜன வர்ணனம்.

ஆண்டு, உத்தேசத்திற்கோ அனுமானத்தில் பக்ஷத்தின் ஞானம் பயனும், லக்ஷணத்திற்கு பக்ஷத்தில் வேறு பதார்த்தங்களின் பேத ஞானம் பயனும், பரீக்ஷைக்கு அந்த லக்ஷணத்தில் அதிவியாப்தி முதலிய தோஷங்களின் நிவிர்த்தியுமே பயனும்.

"[illegible]" (இ-ள்.) பிருதிவி, ஜலமுதலிய மற்ற பதார்த்தங்களின் பேதமுடையதாம், கந்தமுடைமையால், எவ்வெப்பொருள் ஜலமுதலிய பதார்த்தங்களின் பேதமுடைய தில்லையோ அவ்வப் பொருள் கந்தமுடையது மன்றாம், ஜலமுதலிய பொருள்களைப் போலும். இவ்வனுமானத்தில் பிருதிவியென்னும் உத்தேசத்திற்கு பிருதிவி வடிவபக்ஷத்தின் ஞானமே பயனாம். கந்தமுடைமை வடிவலக்ஷணத்திற்கு பிருதிவி வடிவபக்ஷத்தில் ஜலமுதலிய வேறு பதார்த்தங்களின் பேதஞானமே பயனும், அல்லது 'இது பிருதிவி' என்னும் விவகாரத்திற்கு விஷயமாகத்தக்கதாம், கந்தமுடைமையா லென்னும் விவகாரம் அந்த லக்ஷணத்திற்குப் பயனும். இவ்வாறான கிரமத்தினை பின்னர் யாண்டு மறிக.

சங்கை:—லக்ஷணத்தில் அதிவியாப்தி முதலிய தோஷங்களின் நீக்கம் பரீக்ஷைக்குப் பயனைக் கூறப்பட்டது. அவ்வதிவியாப்தி முதலிய தோஷங்களெத்தனை வகைத்தாம். அத்தோஷங்களின் சொரூபம் யாவை யென்னும் சங்கையுண்டாக; இனி அவ்வதிவியாப்தி முதலிய தோஷங்களின் சொரூபங்களை வர்ணிப்பாம். ஆண்டு, அதிவியாப்தி, அவ்வியாப்தி, அசம்பவ மென்னும் முக்குற்றங்களுளவாம். அம்முக்குற்றங்களிலோர் குற்றமும் எந்த லக்ஷணத்தில் உளதாகின்றதோ அந்த லக்ஷணம் துஷ்ட மெனப்படும். துஷ்ட லக்ஷணத்தால் லக்ஷியப் பொருளின் சித்தி யுண்டாகிறதில்லை. அம்மூன்று குற்றங்களில்லாதவிலக்ஷணம் யாதோ அந்த லக்ஷணம் துஷ்டமல்லாததெனப்படும். துஷ்டமில்லாத லக்ஷணத்தினாலேயே லக்ஷியப் பொருளின் சித்தி யுண்டாகின்றது.

௭. அதிவியாப்தி தோஷத்தின் லக்ஷணம்.

அதிவியாப்தி லக்ஷணம்:—"லக்ஷ்யவ்ருத்தித்வே ஸதி அலக்ஷ்யவ்ருத்தித்வம் அதிவ்யாப்தி:" (இ-ள்.) தனது லக்ஷியத்திலிருப்பதாயும் அலக்ஷியத்திலிருப்பதாயுமுள்ளது யாதோ அது அதிவியாப்தி குற்றமெனப்படும். எங்ஙனம்: 'கோடுடையது ஆ' என்னும் லக்ஷணம் ஒருவன் கூறின் அக்கோடுடைமை வடிவலக்ஷணம் ஆவிற்கு அதிவியாப்தி தோஷமுடையதாம். எற்றுக்கெனின், எங்ஙனம்: ஆக்கள் கோடுடையனவாமோ அங்ஙனமே எருமை, ஆடு முதலியனவும் கோடுடையனவாம். ஆகையால் கோடுடைமை வடிவலக்ஷணம் தனது லக்ஷியவடிவ ஆக்களிலிருந்துகொண்டு அலக்ஷியவடிவ எருமை, ஆடு முதலியவைகளில் செல்லுகின்றதாகையால் இக்கோடுடைமை வடிவலக்ஷணம் அதிவியாப்தி தோஷமுடையதாம்.

௮. அவ்வியாப்தி தோஷத்தின் லக்ஷணம்.

அவ்வியாப்தி லக்ஷணம்:—"லக்ஷ்யைகதேசாவ்ருத்தித்வம் அவ்யாப்தி:" (இ-ள்.) தனதுலக்ஷியத்தின் ஏகதேசத்தில் இராததுயாதோ அது அவ்வியாப்திகுற்றமெனப்படும். எங்ஙனம்: 'ஆ' கபில (புகைவண்ண) நிறமுடையது என ஆவிற்குகபிலநிறமுடைமை வடிவலக்ஷணம் ஒருவன்கூறின் அக்கபிலநிறமுடைமைவடிவலக்ஷணம் அவ்வியாப்தி குற்றமுடையதாம். எற்றுக்கெனின், அக்கபிலநிறமுடைமை வடிவலக்ஷணம் தனதுவடிவலக்ஷியமாவனவெல்லா ஆக்களிலுமிருப்பதில்லை, ஆனால் சில ஆக்களிடத்தே அக்கபில நிறமுடைமை இருக்கிறதாகையால் லக்ஷியத்தின் ஏகதேசத்தில் இல்லாமை பற்றி அக்கபில நிறமுடைமை லக்ஷணம் அவ்வியாப்தி குற்றமுடையதாம்.

௯. அசம்பவ தோஷத்தின் லக்ஷணம்.

அசம்பவ லக்ஷணம்:—"லக்ஷ்யமாத்ராவ்ருத்தித்வம் அஸம்பவ:" (இ-ள்.) தனது லக்ஷியத்திலேயே இல்லாதது யாதோ அது அசம்பவ குற்றமெனப்படும். எங்ஙனம்: ஒருவன் 'ஆ' ஒற்றைக்குளம்புடையது என ஒற்றைக்குளம்புடைமை லக்ஷணம் கூறின் அவ் வொற்றைக் குளம்புடைமை வடிவ ஆவின் லக்ஷணம் அசம்பவ குற்றமுடையதாம். எனெனின், ஓராவினிடத்தும்

ஒற்றைக் குளம்பு சம்பவிக்கிறதில்லை. எல்லா ஆக்களின் பாதங்களில் இரட்டைக் குளம்புகளிருக்கின்றன. குதிரை, கழுதை, முதலியவைகளிடத்தே யே ஒற்றைக் குளம்பு இருக்கின்றது. ஆகையால் அவ்வொற்றைக் குளம்புடைமை வடிவ 'ஆ' வின் லக்ஷணம் தனது லக்ஷிய மாத்திரத்தில் இல்லாமையால் அசம்பவ குற்றமுடையதாம். ஆகையால் கோடுடைமை, கபில நிறமுடைமை, ஒற்றைக் குளம்புடைமையாம், இம்மூன்றும் 'ஆ' வின் லக்ஷணம் முறையாக அதிவியாப்தி, அவ்வியாப்தி, அசம்பவமாம் முக்குற்றங்களுடையதாவதால் தனது லக்ஷிய வடிவ 'ஆ' வின் சித்தி செய்வதில்லை. அவ்வதி வியாப்தி முதலிய மூன்று குற்றங்களில்லாத சாசம்பளம் (அலைதாடி) முதலிய லக்ஷணம்யாதோ அந்த லக்ஷணமே 'ஆ' வடிவலக்ஷியத்திற்கு சித்திக்கின்றது. ஆண்டுக் கழுத்தின் கீழ் தொங்கும் சர்மத்தினை (தோலை) அலைதாடி என்பர். முதலியவென்பதனால் கோமுதலியவைகளைக் கொள்ளுக. ஆகையால் அவ்வலைதாடியுடைய கோமுதலியவைகளிடத்தும், அலைதாடி இல்லாதகோடுடைய எருமை, ஆடு முதலியவைகளிடத்தும், அவ்விலக்கணத்தின் அதிவியாப்தி யுண்டாகிறதில்லை. இவ்வாறாக அதிவியாப்தி, அவ்வியாப்தி, அசம்பவ வடிவ மூன்று குற்றங்களின் பரிகாரம் யாதோ அதுவே பரீக்ஷைக்குப் பயனாம். இவ்விதமாய உத்தேசம், லக்ஷணம், பரீக்ஷை என்னும் மூன்றும் நியாயப் பிரகாசமெனப் பெயரிய இந்நூலிற் கூறப்பட்டன. ஆகையால் இந்நூலால் அதிகாரிகட்குத் திரவியமுதலிய பதார்த்தங்களின் தத்துவஞானம் அவசியமுண்டாம். இவ்வார்த்தை ஸ்ரீபாஷ்யகாரரும் கூறியிருக்கின்றனர்.

ஆண்டு பாஷ்ய வசனம்:—"த்ரிவிதா சாஸ்ய ஶாஸ்த்ரஸ்ய ப்ரவ்ருத்தி: உத்தேஶோ லக்ஷணம் பரீக்ஷா சேதி." (இ-ள்.) உத்தேசம், லக்ஷணம், பரீக்ஷை என்னு மூவிதத்தால் (இந்நியாயவைசேஷிக) சாத்திரத்தில் பிரவிருத்தி யுண்டாகின்றது.

௰. அநுபந்த சதுட்டயத்தின் நிரூபணம்.

சங்கை:—புத்தியுடைய புருஷர்களுக்கு எச்சாத்திரத்தை வாசிப்பதில் பிரவிருத்தி (ஊக்கம்) உண்டாகின்றதோ, அச்சாத்திரத்தின் விஷயம், பயன், அதிகாரி, சம்பந்தம் என்னும் நான்கு அநுபந்தங்களைக் கண்ணுறுவதனாலேயே பிரவிருத்தி யுண்டாகின்றது. இந்நான்கு அநுபந்தங்களின் ஞானமின்றி புத்தியுடைய புருஷர்கட்கு சாத்திரத்தை வாசிப்பதில் பிரவிருத்தி யுண்டாகிறதில்லை என்னும் வார்த்தை வேறு சாத்திரத்திலும் கூறியிருக்கிறது.

ஆண்டு ஶ்லோகம்:—"ஸித்தார்த்தம் ஸித்தஸம்பந்தம் ஶ்ரோதும் ஶ்ரோதா ப்ரவர்த்ததே ஶாஸ்த்ராதௌ தேந வக்தவ்ய: ஸம்பந்த: ஸப்ரயோஜந:" (இ-ள்.) கேட்போருக்குச் சாத்திரத்தின் பயன் ஞாதமோ (அறியப்பட்டதோ) அங்ஙனமே எச்சாத்திரத்தின் சம்பந்தம் ஞாதமோ அத்தகைய சாத்திரத்தினையே சிரவணம் செய்வதற்கு கேட்போர் பிரவிருத்திக்கின்றனர். ஆகையால், கேட்போர்கள் சாத்திரத்தில் பிரவிருத்திப்பதற்காக சாத்திர கர்த்தா வித்வா

ளைவன் சாத்திரத்தின் முதலில் சம்பந்தமும், பயனும், அவசியமாகக் கூற வேண்டும். அச்சதுட்டய (நான்கு) அநுபந்தம் இந்நூலிற் கூறப்படவில்லை; ஆகையால் புத்தியுடைய புருஷர்கட்கு இந்நூலை வாசிப்பதில் பிரவிருத்திசம்பவியாதென்னும் சங்கையுண்டாக, இனி இரண்டாவது கவியில் அதிகாரியைக் கூறுவதானே குறிப்பிடப்பட்டுள்ள சதுட்டய அநுபந்தங்களைக் கூறுவாம். அல்லது கௌதமமுனிவராலும், கணாதமுனிவராலும் அருளிச்செய்யப்பட்ட நியாய வைசேடிக சாத்திரங்களின் பதார்த்தங்களை நன்றாக நிச்சயஞ்செய்து நூலைச் சுந்தரமாக இயற்றுவாம்; என முற்கூறிய வசனத்தால் நியாயப் பிரகாசமெனப் பெயரிய விந்நூலிற்கு நியாய வைசேடிக சாத்திரங்களின் பிரகரண வடிவத் தன்மைகள் கூறப்பட்டன. எச்சதுட்டய அநுபந்தம் சாத்திரத்திற்குண்டோ அச்சதுட்டய அநுபந்தமே அச்சாத்திரத்தின் பிரகரணக்களாகின்றன. ஆகையால் அச்சதுட்டய அநுபந்தங்களைக் கூறுவாம்.

கக. சாத்திரத்தினது அபிதேயத்தின் லக்ஷணம்.

"[illegible]" (இ-ள்.) சாத்திரத்தா லுண்டாய பிரமையால் (உண்மைஞானத்தால்) நிவர்த்தமாகத் தக்க அஞ்ஞானத்திற்கு எப்பதார்த்தம் விஷயமாகின்றதோ அப்பதார்த்தம் அச்சாத்திரத்தின் அபிதேய மெனப்படும். எங்ஙனம்: நியாய சாத்திரத்தினை வாசிப்பதற்கு முன் புருஷனுக்கு திரவிய முதலிய பதார்த்தங்களின் அஞ்ஞான மிருக்கின்றது. அவ்வஞ்ஞானம் நியாய சாத்திரத்தினை வாசிப்பதனா லுண்டான பதார்த்த ஞானத்தால் நீங்கி விடுகின்றது. ஆகையால் அத்திரவிய முதலிய பதார்த்தங்கள் நியாயசாத்திரத்தின் அபிதேயமாம். இவ் வபிதேயத்தினையே விஷயமெனப்படும்.

கஉ. சாத்திரத்தினது பிரயோஜன லக்ஷணம்.

"[illegible]" (இ-ள்.) எவ்வர்த்தத்தினது பிரவிருத்தியின் உத்தேசத்தால் புருஷன் அதன் சாதனங்களில் முயலுகின்றானோ அவ்வர்த்தம் பயனெனப்படும். அப்பயனும் இருவிதமாம். ஒன்று முக்கியப் பயனும் மற்றது கௌணப்பயனுமாம்.

கங. முக்யப் பிரயோஜனத்தின் லக்ஷணம்.

"[illegible]" (இ-ள்.) பிறவத்தனை விஷயம் செய்யும் இச்சையினதீனமாகாத விச்சையும், அவ்விச்சைக்கு விஷயமும் யாதோ அது முக்கியப் பயனெனப்படும். எங்ஙனம்: சுகத்திலும், துக்காபாவத்திலும் யாவருக்கு முண்டாகும் இச்சையாதோ அவ்விச்சை வேறொரு வஸ்துவை விஷயம் செய்யும் இச்சையின் அதீனமன்று. அவ்விரண்டிலும் உலகவருக்குத் தானாகவே இச்சையுண்டாகிறதாகையால் சுகமும், துக்காபாவமுமாகும் இரண்டும் முக்கியப் பயனெனப்படும்.

கச. கௌணப் பிரயோஜனத்தின் லக்ஷணம்.

"[illegible]" (இ-ள்.) முக்கியப் பயனை விஷயம் செய்யும் இச்சையினதீனமான இச்சையும், அவ் விச்

சைக்கு விஷயமும், யாதாமோ அது கௌணப்பயனெனப்படும். எங்ஙனம்: முக்கியப்பயன் வடிவ சுகத்தினதும் துக்காபாவத்தினதும் சாதனம் யாதோ அச்சாதனங்களில் யாவருக்கு முண்டாமிச்சை யாதோ அது, 'சுகமெமக்குண்டாகுக.' அங்ஙனமே 'துக்காபாவமெமக்குண்டாகுக' வென்னுஞ் சுகத்தையும், துக்காபாவத்தையும் விஷயஞ் செய்யும் இச்சையின் அதீனமாகவே அச்சாதனங்களில் இச்சையுண்டாகின்றது. தானாக வச்சாதனங்களில் இச்சை யுண்டாவதில்லை. ஆகையால் அச்சுகத்தின் சாதனமும், துக்காபாவத்தின் சாதனமும் கௌணப் பயனெனப்படும். ஈண்டு பிரசங்கத்தில் அத்தியந்த துக்க நிவிர்த்தி வடிவ மோக்ஷம் இந்நியாய சாத்திரத்தின் முக்கியப் பயனும். இம் மோக்ஷத்தினை நிச்ரேயசம், அபவர்க்கம், முக்தி, பரமபுருஷார்த்தம், பந்த நிவிர்த்தி யென இவை முதலிய பெயர்களால் வழங்கப்படுகின்றது. அம்மோக்ஷ சாதன வடிவ தத்துவ ஞானம் யாதோ அத்தத்துவஞானம் இந்நியாய சாத்திரத்தின் கௌணப் பயனும்.

கரு. அதிகாரி லக்ஷணம்.

"[illegible]" (இ-ள்.) முக்கிய கௌண வேறுபாட்டால், கூறிய இருவித பயன்களது விச்சையுடைய புருஷன் இந்நியாய சாத்திரத்திற்கு அதிகாரியெனப்படுவன்.

கசா. சாத்திரத்தின் எழுவித சம்பந்த வர்ணனம்.

சம்பந்தமோ பலவிதமாகின்றன; விஷயத்திற்கும், சாத்திரத்திற்கும், பிரதி பாத்திய பிரதி பாதக பாவ சம்பந்தமாம். ஈண்டு திரவிய முதலிய பதார்த்த வடிவ விஷயமோ பிரதிபாத்தியமாம்; இந்நியாய சாத்திரம் அதனை பிரதி பாதிப்பதாம். பதார்த்த தத்துவ ஞானத்திற்கும், சாத்திரத்திற்கும் ஜன்னிய ஜனக பாவ சம்பந்தமாம்; பதார்த்த தத்துவ ஞானமோ ஜன்னியமாம், விசார வாயிலாக விந்நியாய சாத்திரம் அதன் ஜனகமாம். மோக்ஷத்திற்கும், சாத்திரத்திற்கும் பிரயோஜ்ஜிய பிரயோஜக பாவசம்பந்தமாம்; மோக்ஷமோ பிரயோஜ்ஜியமாம், தத்துவ ஞான வாயிலாக விந்நியாய சாத்திரம் அதன் பிரயோஜகமாம். மோக்ஷத்திற்கும், பதார்த்த தத்துவ ஞானத்திற்கும் பிரயோஜ்ஜிய பிரயோஜக பாவசம்பந்தமாம்; மோக்ஷமோ பிரயோஜ்ஜியமும், பதார்த்த தத்துவ ஞானம் அதன் பிரயோஜகமுமாம். திரவிய முதலிய பதார்த்தங்களுக்கும், தத்துவ ஞானத்திற்கும் விஷய விஷயி பாவசம்பந்தமாம்; திரவிய முதலிய பதார்த்தங்கள் விஷயமும் தத்துவஞானம் விஷயியுமாம். மோக்ஷவடிவ பயனுக்கும், அதிகாரிக்கும் பிராப்பிய பிராபக பாவ சம்பந்தமாம்; பயனோ பிராப்பியமும் அதிகாரி அதன் பிராபகனுமாம். அதிகாரிக்கும், விசாரத்திற்கும் கர்த்துரு கர்த்தவ்விய பாவசம்பந்தமாம்; அதிகாரி கர்த்தாவும் விசாரம் கர்த்தவ்வியமுமாம். இவ்வாறுக் அநேக சம்பந்தங்க ளுண்டாகக் கூடும். இவ்வாறு விஷயம், பயன், அதிகாரி, சம்பந்தமாம் இந்நான்கு அநுபந்தங்களைக் கண்ணுற்ற புத்தியுடைய புருஷனுக்கு இந்நூலைப் படிப்பதில் முயலுதல் உண்டாகும். இது சதுட்டய அநுபந்தநிரூபணம்.

கஎ. மங்கல வாதத்தின் வர்ணனம்.

சங்கை:—நூற்றுவக்கத்தில் சதுஷ்டய அநுபந்தங்களின் நிரூபணத்திற்கோ நூலில் அதிகாரிகளின் பிரவிருத்தியே பயனும். ஆகையால் சபலமாவது பற்றி நூற்றுவக்கத்தில் சதுஷ்டய அநுபந்தங்களின் நிரூபணம் செய்வது உசித (நல)மாம். நூற்றுவக்கத்தில் குரு, ஈஸ்வரன் முதலியோரது நமஸ்காரமுதலிய மங்கலம் செய்வதற்கோர் பயனுமில்லை. ஆகையால் அம்மங்கலம் செய்வது நலமுடைத் தன்றென்னும் சங்கையுண்டாகவினி மதவேறுபாட்டால் அம்மங்கலத்தின் பயனை நிரூபிப்பாம்.

கஅ. பிராசீன நவீன நையாயிகர்களின் மதபேதத்தால் மங்கலத்தினது பலத்தின் வர்ணனம்.

ஆண்டு பிராசீன நையாயிகரோ விது கூறுகின்றனர். எந்நூலிலெம் மங்கலம் கூறப்பட்டிருக்கிறதோ அதற்குவந்நூல் முடிதலேபயனும்; ஆனால் அம்மங்கலம் ஞானவடிவமாவதால் விரைவிலழிவதாம். அந்நூலின் முடிவு சிலகாலத்திற்குப் பின்னுண்டாகும். விரைவிலழியும் அத்தகையமங்கலத்திற்கு வேறு காலத்திலுண்டாவதான முடிவை யுண்டாக்குந் தன்மை ஓர் வியாபாரமின்றி நேராகச் சம்பவிக்கிறதில்லை. ஆகையால் இடையில் அம்மங்கல ஜன்னியத்திற்கோர் வியாபாரம் கல்பிக்க வேண்டும். அந்த வியாபாரம் நூன்முடிவின் பிரதிபந்தக பாப வடிவ இடையூற்றின் துவம்ச வடிவமாகவே இருக்கின்றது. அம்மங்கலத்தாலுண்டா மிடையூற்றின் துவம்சம் நூன் முடிவு வடிவ காரியத்தின் மறைப்பில்லாத முதற்க்ஷணத்திலிருக்கின்றது, ஆகையால் அம்மங்கலம் இடையூற்றின் துவம்ச வாயிலாக நூன் முடிதற்குக் காரணமாம், எங்ஙனம்; யாகவடிவ கிரியை சிலகாலத்திற்குப் பின் வரப்போகிற ஸ்வர்க்கத்திற்குத் தன்னாற் றோற்றிய தர்மவடிவ அபூர்வ வாயிலாக காரணமாகின்றது.

சிந்தாமணிக்காரர் முதலிய நவீன நையாயிகர்களோ விது கூறுகின்றனர். நூலின் முடிவு அம்மங்கலத்தின் பயனன்று. நூல் முடிவிற்கு பிரதிபந்தமாகிய பாப வடிவ இடையூற்றின் துவம்ச மாத்திரமே அம்மங்கலத்தின் பயனும். நூலின் முடிவோ விக்கினபாவத்தோடுள்ள அதிர்ஷ்ட புத்தி ஸ்பூர்த்தி முதலிய தனது சாமகிரியி (காரணத்தி)னாலேயே யுண்டாகின்றது. அம்மங்கலமோ முடிவிற்குக்காரணமாகிய விக்கினத்துவம்சத்தின்காரணமாவதால் அம்முடிவைக்குறித்து அன்னியதாசித்தமே (வேறோராற்றாற் பெறப்படுவதே)யாம். எக்காரியத்திற்கு எத்தனை காரண சாமக்கிரியிருக்கவேண்டுமோ, அக்காரண சாமக்கிரியினும் எப்பொருள் வேறுமோ அப்பொருள் அக்காரியத்தைக் குறித்து அன்னியதா சித்தமாகின்றது. இவ்வார்த்தை பின்னர் ஆறாவது பரிச்சேதத்திற் றெளிவாகும். அல்லது எப்பிராசீன புருஷர்கள் அம்மங்கலத்திற்கு விக்கின துவம்ச வாயிலாக சமாப்தியின் காரணமெய்புகின்றனரோ அவர்கள் மதத்தில் விக்கின துவம்சம், சமாப்தியாமிரண்டினும் மங்கலத்தின் காரியத்தன்மை யொப்புவதில் மிகைப்படக்கூறும் குற்றமே சம்பவிக்கின்றது, கேவலம் விக்கினத் (தடையின்) துவம்சத்தில் அம்மங்கலத்

தின் காரியத்தன்மை யொப்புவதில் மிகைப்படக்கூறும் குற்றத்தின் அடைவு பிராப்தமாகிறதில்லை, ஆனால் எளிதிற் கூறுதல் வடிவ குணமே பிராப்தமாகின்றது. இக்காரணத்தானும் அம்மங்கலத்திற்கு விக்கினத்துவம்சமாத்திரமே பயனாக வொப்புவது நலமுடைத்தாம்.

சங்கை:—ஓர் கால் அம்மங்கலத்திற்கு விக்கினத்துவம்ச மாத்திரமே பயனாகுமாயின், எப்புருஷனிடத்தில் தானாகவே விக்கினங்களின் அத்தியந்தாபாவம் இருக்கின்றதோ அப்புருஷன் செய்யும் மங்கலம் பயனில்லாததேயாம்.

சமாதானம்:—விக்கினங்களின் முழுதும் அபாவமுடைய புருஷன் செய்யும் மங்கலம் யாதோ அம்மங்கலத்தில் பயனில்லாத் தன்மையில் எமக்கும் இஷ்டமாம், அதாவது அவ்விடத்தில் அம்மங்கலம் பயனில்லாததேயாம்.

சங்கை:—மங்கலத்திற்குப் பயனில்லாத் தன்மை யொப்பின் பயனில்லாத அர்த்தத்தில் புருஷனுக்குப் பிரவிர்த்தி யுண்டாகிறதில்லை, ஆகையால் அம்மங்கலத்தில் புருஷனுக்குப் பிரவிர்த்தியே யுண்டாகலாகாது.

சமாதானம்:—நூல் முடிவிற்குத் தடையாய பாப விசேஷத்தினை விக்கினமென்பர். அவ்விக்கினங்களும், விக்கினங்களின் அபாவமும் ஒருவனுக்கும் பிரத்தியக்ஷமாவதில்லை. யாவருக்கும் அவற்றில் சந்தேகமேயிருக்கின்றது, ஆகையால் தானாகவே சித்தித்த அவ்விக்கினங்களின் அத்தியந்தாபாவமுடையவனுக்கும் நம்மிடத்து விக்கினமிருக்கிறதா? இல்லையா? என்பதாகத் தன்னிடத்தில்லாத விக்கினங்களின் சங்கையைச்செய்து, சங்கித்த விக்கினங்களை நிவிர்த்தி செய்யும் பொருட்டு மங்கலத்தில் பிரவிர்த்தி சம்பவிக்கிறது. அவ்விக்கினங்களின் சம்சய நிச்சய சாதாரண ஞானமாத்திரமே அம்மங்கலத்தில் பிரவிர்த்தியையுண்டு பண்ணுவதாம், சம்சய வடிவவிக்கினங்களின் ஞானம் விக்கினமில்லாதபுருஷனிடத்து முளதாம், ஆகையால் அவ்விக்கினங்களின் அத்தியந்தாபாவமுடையவனுக்கும், அம்மங்கலத்தில்பிரவிர்த்தியுண்டாகக்கூடும். ஓர்கால் அச்சம்சயஞானத்தைப் பிரவிர்த்திக்குக் காரணமாக வொப்பாவிடினும், அவ்விக்கின மில்லாதவனுக்கு ஆன்றோ ரொழுக்கத்தானேயே அம்மங்கலத்தில் பிரவிர்த்தியுண்டாகும். கருத்திதுவாம்: முன்னிருந்த வான்றோர்களியாவரும் தாமியற்றிய நூற்றுவக்கத்தில் மங்கலத்தைச் செய்து வந்திருக்கின்றனர், ஆகையால் யாமும் நூற்றுவக்கத்தில் மங்கலம் செய்தல் நலமுடைத்தாமென வான்றோ ரொழுக்கத்தால் அப்புருஷனுக்கு மங்கலத்தில் பிரவிர்த்தி சம்பவிக்கின்றது. ஆண்டு "யத்யதாசரதி ச்ரேஷ்டஸ்தத்ததேவேதரோ ஜந: ஸ யத்ப்ரமாணங் குருதே லோகஸ்தததநுவர்த்ததே"

(இ-ள்.) ஆன்றோர் எவ்வெக்கருமங்கள் செய்கின்றனரோ அவ்வக்கர்மங்களையே ஏனையோரும் செய்கின்றனர். அவ்வான்றோர் எதனைப்பிரமாணமாகக் கொள்ளுகின்றனரோ அதனையே ஏனையோரும் பிராமாணமாகக் கொள்ளுகின்றனர்; என்னும் கீதா வசனத்தில் ஸ்ரீ கிருஷ்ணபகவான் ஆன்றோர்களின் ஒழுக்கத்தானும் உலகவரது பிரவிர்த்தியைக்கூறியிருக்கின்றனர்.

சங்கை:—விக்கினங்களின் முழுதும் அபாவமுடைய புருஷன் செய்த மங்கலத்திற்குப் பயனின்மை யேற்படின் அம்மங்கலத்தில் விக்கின நாசத்தின் காரணத் தன்மையைக் கூறிய வேத வசனம் அப்பிரமாணமாகும்.

சமாதானம்:—விக்கினங்கள் உளதாகிலோ அவ்வேத வசனம் அம்மங்கலத்தில் விக்கினத்துவம்சத்திற்குக் காரணத்தன்மைக் கூறியிருக்கிறது. விக்கினங்களின் முழுதுமபாவமுள்ளதாக அவ்வேத வசனம் அம்மங்கலத்தில் விக்கினத் துவம்சத்தின் காரணத் தன்மையைக் கூறவில்லை; ஆகையால் அவ்வேத வசனத்தில் அப்பிரமாணத் தன்மையில்லை, கருத்திதாவாம்: விக்கினத் துவம்சத்தில் எங்ஙனம் மங்கலத்திற்குக் காரணத்தன்மையுளதோ அங்ஙனமே விக்கினவடிவ பிரதியோகிக்கும் தனது துவம்சத்தில் காரணத்தன்மையுளது. எவ்விடத்தில் பிரதியோகி விக்கின வடிவ காரணமில்லையோ, மங்கல வடிவகாரணமிருக்கிறதோ, அவ்விடத்தில் மங்கல வடிவகாரணத்தால் விக்கினத்துவம்சத்தின் காரியத்தினுற்பத்தி யுண்டாகா விடினும் அம்மங்கலத்தில் விக்கினத் துவம்சத்திற்குக் காரணத்தன்மையின் பாதமுண்டாகிறதில்லை. எங்ஙனம்: குலாலவடிவகாரணத்தினிருப்புளதாயினும் மற்றும், மண், தண்டம், சக்கரம் முதலிய காரணங்களின் அபாவமுளதாக குலாலனால் கடவடிவகாரியத்தின் உற்பத்தியுண்டாகிறதில்லை. அதனால் அக்குலாலனிடத்தில் கடத்தின் காரணத் தன்மையின் பாதமுண்டாகிறதில்லை. ஏனெனின் எக்காரியத்தினுற்பத்தியில் எத்தனைக் காரணங்கள் அபேக்ஷிக்கப்படுமோ அவ்வளவு காரணங்களு மெப்பொழுது தொகுமிக்கின்றனவோ அப்பொழுதே அக்காரியத்தினுற்பத்தி யுண்டாகின்றது. சில குறைந்த காரணங்களால் அக்காரியத்தினுற்பத்தியுண்டாகிறதில்லை. ஆகையால் மங்கலத்தில் விக்கினத்துவம்சத்திற்குக் காரணத்தன்மை கூறுவதாகிய வேதவசனம் அப்பிரமாணவடிவமன்று. இக்காரணத்தாலேயோ பாபமில்லாத புருஷனுடையன் தன்னிடத்தில் பாபத்தின் பிராந்தியைச் செய்து பாபத்தின் நிவிர்த்தியின் பொருட்டுச் செய்யும் பிராயச்சித்தம் யாதோ அந்த பிராயச்சித்தத்திற்குப் பயனில்லாத் தன்மையுண்டாயினும் பிராயச் சித்தத்தில் பாபத்தின் நிவிர்த்திக்குக் காரணத்தன்மையைக் கூறுவதான வேதவாக்கியத்திற்கு அப்பிரமாணத் தன்மை யுண்டாகிறதில்லை.

சங்கை:—அம்மங்கலத்தில் அவ்விக்கினத்துவம்சத்தின் காரணத் தன்மை சம்பவியாது, ஏனெனின் "ஸர்வே-விக்நா: ப்ரஶமம் யாந்தி கணேஶஸ்துதிபாடத:" (இ-ள்.) கணேசரின் ஸ்தோத்திரத்தைப்படிப்பதால் விக்கினங்கள் யாவும் நிவிர்த்தியாய் விடுகின்றன வென்னும் இச்சாத்திர வசனம் கணேசரின் தோத்திரத்தைப் படித்தலினும் விக்கினத் துவம்சத்திற்குக் காரணத்தன்மைக் கூறியிருக்கிறது, அன்றியும், தர்மசாத்திரத்திற்கூறிய பிராயச்சித்தம் யாதோ அந்த பிராயச் சித்தங்களாலும் பாபவடிவ விக்கினங்களின் துவம்சமுண்டாகின்றது. அத்தோத்திரத்தைப் படித்தலினாலுண்டாம் விக்கினத் துவம்சத்திலும், பிராயச்சித்தத்தாலுண்டாம் விக்கினத் துவம்சத்திலும், மங்கலத்திற்குக் காரணத்தன்மையின் அபாவமிருப்பதால் மங்கலத்தில்விக்கினத்துவம்சத்தின் காரணத்தன்மை சம்பவியாது. ஓர்கால் மங்கலமின்றி வேறொருபாயத்தால் விக்கினங்களின் துவம்சமுண்டாவதின்றாயின் அம்மங்கலத்தில் விக்கினத் துவம்சத்தின் காரணத் தன்மை சம்பவிக்கும், ஆனால் விக்கினங்களின் துவம்சமோ மங்கலமின்றி வேறு உபாயங்களாலுண்டாய் விடுகின்றது. ஆகையால் அம்மங்கலத்தில் விக்கினத் துவம்சத்தின் காரணத் தன்மை சம்பவியாது.

சமாதானம்:—சர்வ விக்கினத் துவம்சங்களில் அம்மங்கலத்திற்குக் காரணத்தன்மையில்லை. * விஜாதீய விக்கினத் துவம்சத்திலேயே அம்மங்கலத்திற்குக்காரணத் தன்மையுண்டு. விஜாதீய விக்கினத் துவம்சத்தில் கணேசர் ஸ்தோத்திரப் படிப்பிற்கும், விஜாதீய விக்கினத் துவம்சத்தில் பிராயச் சித்தத்திற்கும், காரணத் தன்மையுண்டு, ஆகையால் ஸ்தோத்திரத்தைப் படிப்பதனாலுண்டாவதும், பிராயச்சித்தத்தாலுண்டாவதுமான விக்கினத் துவம்சத்தில் அம்மங்கலத்திற்குக் காரணத் தன்மையில்லை யாயினும் அவ்விஜாதீய விக்கினத் துவம்சத்திற்குக் காரணத்தன்மை யுண்மையால் அம்மங்கலத்தில் விக்கினத் துவம்சத்தினது காரணத்தன்மையின் அபாவம் சித்தமானதில்லை.

சங்கை:—ஓர் கால் விக்கினத் துவம்ச மாத்திரமே அம்மங்கலத்தின் பயனாகுமாயின், நூன்முடிதலில் இச்சையுடைய புருஷனுக்கு அம்மங்கலத்தில் பிரவிர்த்தி யுண்டாவதின்றாக வேண்டும். நூன்முடிவில் விருப்பமுடையவனுக்கும் அம்மங்கலத்தில் பிரவிர்த்தியுண்டாகப் பிரத்தியக்ஷமாய்க் காணப்படுகிறதாகையால் முடிவிற்குச்சாதனமான விக்கினத்துவம்சத்தின் சாதனத்தன்மை ஞானத்தாலேயே அம்மங்கலத்தில் பிரவிர்த்தியைக் கூறுவதாகும். அதெப்போதுண்டாகிறதோ அப்போது அவ்விக்கினத் துவம்சத்தில் முடிவின் சாதனத்தன்மைச் சித்தமாகிறதென்பது சம்பவியாது. ஏனெனின்: எப்புருஷனிடத்தில் விக்கினங்களின் அத்தியந்தாபாவம் தானுகவேயிருக்கிறதோ அப்புருஷனியற்றிய நூலும் முடிவெய்துகின்றது. அம்முடிவில் அவ்விக்கினத் துவம்சத்திற்கும் காரணத்தன்மையில்லை.

சமாதானம்:—அல்லா: நூலாசிரியர்களிடத்தில் விக்கினத்துவம்சத்திற்கே முடிவின் காரணத் தன்மையில்லை. ஆனால் சில நூலாசிரியரிடத்தோ விக்கினத்துவம்சத்திற்கே முடிவின் காரணத்தன்மையுண்டு, சில நூலாசிரியரிடத்தோ விக்கினங்களின் அத்தியந்தாபாவத்திற்கே முடிவின் காரணத்தன்மையுண்டு. சில நூலாசிரியரிடத்தோ விக்கினங்களின் பிராகபாவத்திற்கே அம்முடிவின் காரணத்தன்மையுண்டு. அன்றியும் விக்கினங்களின் பேதவடிவ அன்னியோன்னியாபாவமோ அவ்விக்கினங்களுள்ளபோதும் புருஷனிடத்திருக்கின்றது. ஆகையால் விக்கினங்களின் அன்னியோன்னியாபாவத்திற்கு அம்முடிவின் காரணத்தன்மையுண்டும் சம்பவிக்கிறதில்லை. ஆகையால் விக்கின அத்தியந்தாபாவத்தாலுண்டாம் முடிவிலும், விக்கினப்பிராகபா

* விஜாதீய விக்கினத் துவம்சத்திலேயே—கணேசரின் ஸ்தோத்திரத்தைப் படிப்பதாலும், பிராயச்சித்தத்தாலும் உண்டாம் விக்கினத் துவம்சங்களினும் வேறான விக்கினத்துவம்சத்திலேயே மங்கலத்திற்குக் காரணத்தன்மையிருக்கிறது.

வத்தாலுண்டா முடிவிலும் அவ்விக்கினத் துவம்சத்தின் காரணத்தன்மையின் றுமிலும், தன்னாலுண்டாம் முடிவைக்குறித்துக் காரணத்தன்மையிருப்பதால் விக்கினத்துவம்சத்தில் முடிவின் காரணத்தன்மையின் அபாவம் சித்தியாது.

சங்கை:—விக்கினங்களின் துவம்சமும், விக்கினங்களின் அத்தியந்தாபாவமும், விக்கினங்களின் பிராகபாவமுமாம் இம்மூன்று அபாவங்களுக்கும் முடிவின் காரணமொப்பின் காரணத் தன்மையின் அவச்சேதக தர்மம் ஒன்றெனவ் சித்திப்பதின்றாகும். ஆனால் விக்கினப்பிரத்துவம்சாபாவத்தன்மை, விக்கின அத்தியந்தாபாவத்தன்மை, விக்கினப்பிராகபாவத்தன்மை என்னும் இம்மூன்று தர்மங்களும் அக்காரணத்தன்மையின் அவச்சேதகங்களாகும். ஓர் தர்மத்தில் காரணத்தன்மையின் அவச்சேதகத்தன்மை சம்பவித்துவிடுமாயின், நாநா தர்மங்களில் அக்காரணத் தன்மையின் அவச்சேதகத் தன்மை பொருந்துதல் கௌரவ தோஷத்துடன் கூடியதாம்.

சமாதானம்:—நான்முடிவிற்கு எவ்விக்கினபாவத்தின் காரணத் தன்மையுண்டோ அது விக்கினத்துவம்சத் தன்மை, விக்கின அத்தியந்தாபாவத் தன்மை, விக்கினப்பிராக பாவத்தன்மை வடிவமான காரணத்தன்மையன்று. ஆனால் விக்கினச் சம்சர்க்கா பாவவடிவத்தாலேயே அவ்விக்கினபாவத்திற்கும் முடிவைக் குறித்துக் காரணத்தன்மையிருக்கின்றது, விக்கினச் சம்சர்க்காபாவத்தன்மை தர்மம் விக்கினத்துவம்சத்திலும், விக்கின அத்தியந்தாபாவத்திலும், விக்கினப்பிராகபாவத்திலுமாம் இம்மூன்றிலுமிருக்கின்றது. அன்னியோன்னியாபாவத்திலும் வேறான அபாவத்தின் சம்சர்க்கா பாவமென்பர். இவ்வபாவங்களின் ஸ்வரூபம் பின்னர் நான்காவது பரிச்சேதத்திற் றெளிவாகும். ஆகையால் அக்காரணத்தன்மையின் அவச்சேதக தருமத்திற்கு நாநா தர்மத்தின் அவச்சேதகத் தன்மையில்லை. ஆனால் சம்சர்க்கா பாவத்தன்மையாம் ஒரே தர்மம் அக்காரணத் தன்மையின் அவச்சேதகமாம். எத்தர்மம் எக்காரணத் தன்மையின் குறைந்த விடத்திலும் அதிக விடத்திலுமில்லாமல், அக்காரணத் தன்மையின் சமான விடத்திலிருக்கின்றதோ அத்தர்மமே அக்காரணத் தன்மையின் அவச்சேதகமாகின்றது. அதாவது பிறவற்றினின்றும் வியாவர்த்தகமா (பிரிக்கப்படுவதா) கின்றது. எங்ஙனம்! பிரசங்கத்தில் நான்முடிவின் காரணத்தன்மை, கூறிய அம்மூன்று அபாவங்களிலிருக்கின்றது. சம்சர்க்காபாவத்தன்மை தர்மமும் அம்மூன்று அபாவங்களிலிருக்கின்றது, ஆகையால் அச்சம்சர்க்காபாவத்தன்மை தர்மம் அக்காரணத் தன்மையின் அவச்சேதகமெனப்படும். அல்லது யாண்டும் விக்கினங்களின் அத்தியந்தாபாவத்திற்கே அம்முடிவின் காரணத்தன்மையிருக்கின்றது. விக்கினங்களின் துவம்சத்திற்கும், விக்கினங்களின் பிராக பாவத்திற்கும் விக்கினத் துவம்ச வாயிலாக மங்கலத்திற்கும், அம்முடிவின் காரணத்தன்மையில்லை. எதனாலெனின், எவ்வத்துவிற்கு யாண்டு பிரத்துவம்சாபாவம் அல்லது பிராகபாவ மிருக்கிறதோ, அவ்வத்துவிற்கு ஆண்டு அத்தியந்தா பாவமுமிருக்கின்றது. அத்துவம்சப் பிராகபாவத்திற்கு அவ்வத்தியந்தா பாவத்தோடு விரோதமில்லை, ஆகையால் எந்நாலாசிரியரிடத்தில் அவ்விக்கினங்களின் பிரத்

துவம்சா பாவம் அல்லது பிராகபாவமிருக்கிறதோ அந்நாலாசிரியரிடத்திலும் அவ்விக்கினங்களின் அத்தியந்தாபாவம் அவசியமிருக்கிறது. அம்மங்கலமிருக்குமிடத்தை இடமாகக்கொண்ட அவ்விக்கினங்களின் அத்தியந்தாபாவத்தாலேயே முடிவுண்டாய் விடுகின்றது. ஆகையால் அந்நான்முடிவிற்கு மங்கலமும், அம்மங்கலத்தாலுண்டாம் விக்கினத்துவம்சமும், விக்கினங்களின் பிராக பாவமுமாம், மூன்றும் அன்னியதாசித்தமாம் (பிறிதோராற்றற் பெறப்படுவதாம்.) இனி மங்கலத்திற்கு விக்கினத்துவம்சவாயிலாகச் சமாப்தியின் காரணமொப்புவோரான முற்கூறிய பிராசீன நையாயிகர்களின் மதத்தில் வாதி சங்கைசெய்கின்றான்.

சங்கை:—ஓர் கால் மங்கலத்திற்கு விக்கினத் துவம்ச வாயிலாக முடிவிற்குக் காரணத்தன்மையுண்டாயின், நிர்விக்கின முடிவின் பொருட்டு நூற்றுவக்கத்தில் மங்கலஞ்செய்தல் கூடும்: ஆனால் மங்கலத்திற்கு நான்முடிவைக்குறித்துக் காரணத்தன்மையே சித்திப்பதில்லை. ஏனெனின் காரிய காரணத்தின் அன்வயவுடனிகழ்ச்சி ஞானமும், வியதிரேகவுடனிகழ்ச்சி ஞானமுமாமிரண்டுமே அக்காரணத்தன்மையை நிச்சயிப்பனவாகின்றன. அவ்விரண்டும் அம்மங்கலத்தில் இல்லை. அன்வயவியபிசார ஞானமும், வியதிரேக வியபிசார ஞானமுமா மிரண்டும் அக்காரணத் தன்மை நிச்சயத்தின் பிரதிபந்தகமாகின்றன. அவையிரண்டும் அம்மங்கலத்திலிருக்கின்றன.

௧௬. காரணத் தன்மையை நிச்சயிக்கும் அன்வய சஹசாரத்தினதும் வியதிரேக சஹசாரத்தினதும் லக்ஷணம்.

ஆண்டு "காரணஸத்வே கார்ய-ஸத்வம் அந்வய ஸஹசாரஃ" (இ-ள்.) காரணமிருக்க நியமமாக எக்காரியத்தி னுற்பத்தியுண்டோ அது அன்வய (உடன்பாட்டு) சஹசாரம் (உடனிகழ்ச்சி) எனப்படும். எங்ஙனம்: மண், குலாலன், தண்டம், சக்கர முதலிய காரணங்களிருக்க, நியமமாகக் கடவடிவ காரியத்தி னுற்பத்தி யுண்டாகின்றது. ஆகையால் அம்மண் முதலிய காரணங்கள் அன்வய வுடனிகழ்ச்சி யுடையனவாம்.

"காரணாபாவே கார்யாபாவஃ வ்யதிரேக ஸஹசாரஃ", (இ-ள்.) காரணங்களினபாவமிருக்க எந்நியமத்தாற்காரியத்தின் அபாவமுண்டோ அது வியதிரேக (எதிர்மறை), சஹசாரம் (வுடனிகழ்ச்சி) எனப்படும். எங்ஙனம்; மண் முதலியகாரணங்களின் அபாவமிருக்க நியமமாகக்கடவடிவ காரியத்தின் அபாவமிருக்கிறது; அதாவது உற்பத்தியுண்டாவதில்லை. ஆகையால் அம்மண் முதலிய காரணங்கள் வியதிரேக வுடனிகழ்ச்சியுடையனவாம்.

௧௭. காரணத் தன்மையை பாதிக்கும் அன்வய வியபிசாரத்தினதும் வியதிரேக வியபிசாரத்தினதும் லக்ஷணம்.

"காரணஸத்வே கார்யாபாவஃ அந்வய வ்யபிசாரஃ", (இ-ள்.) காரணமிருக்கக் காரியத்தினுற்பத்தி யின்மை வடிவ அபாவம் யாதோ அது அன்வய வியபிசாரமெனப்படும்.

"[illegible]" (இ-ன்) காரணத்தின் அபாவமுள்ளதாயினும் காரியத்தினுற்பத்தியானதே அது வியதிரேக வியபிசாரம் (பிறழ்ச்சி) எனப்படும். காதம்பரீமுதலிய நூல்களிலோ அம்மங்கலம் கூறப்பட்டின்றாயினும், அந்நூல்கள் முடிவெய்தவில்லை, ஆகையால் அம்மங்கலத்தில் இவ்வன்வய வியபிசாரத்தின் ஞானம், அன்வய வுடனிகழ்ச்சி ஞானத்தின் பிரதிபந்தகமாயிலாகக் காரணத்தன்மை நிச்சயத்தினை பாதிப்பதாம். அன்றியும் நாஸ்திக நூல்களில் மங்கலமோ கூறப்படவில்லையாயினும் அந்நூல்கள் முடிவெய்தியிருக்கின்றன. ஆகையால் அம்மங்கலத்தில் வியதிரேக வியபிசாரத்தின் ஞானம் வியதிரேக வுடனிகழ்ச்சி ஞானத்திற்குப்பிரதிபந்தகமாயிலாக அக்காரணத்தன்மை நிச்சயத்தினை பாதிப்பதாம்—கருத்திதுவாம்: அன்வய வியதிரேக வியபிசாரஞான வடிவ பிரதிபந்தகமிருக்க மங்கலத்தில் அன்வய வியதிரேக வுடனிகழ்ச்சியின் நிச்சயமுண்டாகிறதில்லை. அந்த நிச்சயமின்றி அம்மங்கலத்தில் சமாப்தியின் (முடிவின்) காரணத்தன்மைச் சித்தியாகிறதில்லை ஆகையால் மங்கலம் சமாப்தியின் காரணமேயன்று, என வாதியின் சங்கையுண்டாக இனி அநுமானப்பிரமாணத்தால் அம்மங்கலத்தில் விக்கினத்துவம்சரூபமாகச் சமாப்தியின் காரணத்தன்மையைச் சித்திசெய்யும் பொருட்டு முதலில் அநுமானப்பிரமாணத்தால் அம்மங்கலத்தில் சபலத்தன்மையைச் சித்தம் செய்வாம்.

௨௧. மங்கலத்திலிருக்கும் சபலத்தன்மையைச் சாதிக்கும் அநுமானம்.

அவ்வநுமானம் வருமாறு:—"[illegible] விஷயகத்வாத்" (இ-ள்.) அம்மங்கலம் ஓர் பயனுடையதாவதற்கு யோக்கியமாய், பழிப்பல்லாத ஆன்றோரொழுக்கத்திற்கு விஷயமாவதால், எவ்வெவ்வத்து பழிப்பல்லாத ஆன்றோரொழுக்கத்திற்கு விஷயமாமோ, அவ்வவ்வத்து ஓர் பயனுடையதேயாம். எங்ஙனம்: * தர்சம் முதலிய கர்மங்கள் பழிப்பல்லாத ஆன்றோரொழுக்கத்திற்கு விஷயமாவதால் ஸ்வர்க்க முதலிய பயனுடையதாம். அங்ஙனமே அம்மங்கலமும் பழிப்பல்லாத ஆன்றோரொழுக்கத்திற்கு விஷயமாவதால் ஓர் பயனுடைமை அவசியமுண்டாகும். இவ்வநுமானத்தில் மங்கலமோ பக்ஷமாம், சபலத் தன்மை சாத்தியமாம், பழிப்பல்லாத ஆன்றோரொழுக்கத்திற்கு விஷயமாந் தன்மை ஹேதுவாம், தர்சமுதலிய கர்ம விசேஷம் திருஷ்டாந்தமாம். இவ்வாறாக அநுமானத்தின் கிரமத்தைப் பின்னர்க்கண்டு மதிக. இனி பழிப்பல்லாத ஆன்றோரொழுக்கத்திற்கு விஷயமாவதால் என்னும் ஏதுவிலுள்ள பழிப்பில்லாத முதலிய பதங்களின் பயனை வர்ணிப்பாம். ஆண்டுக்கூறிய அநுமானத்தில் "விஷயமாவதால்" என விம்மாத்திரமே ஹேதுவாகக் கூறின், அவ்வேதுவிற்குச் சுகத்தில் வியபிசாரம் (பிறழ்ச்சி) உண்டாகும். ஏனெனின் நான் சுகி என்னும் ஞானத்திற்கு விஷயத்தன்மை அச்சுகத்திலும் இருக்கின்றது, சபலத்தன்மையாகிய சாத்தியம் அச்சுகத்திலில்லை. எக்காரணத்தாலெனின் அச்சுகம் தானே பலவடிவ

* தர்சகர்மம்—அமாவாசையிற் செய்யும் வேள்வி.

மாய், வேறோர் பலத்தினையுண்டாக்குவதன்றாம். ஆகையால் அப்பலத்தன்மை வடிவ சாத்தியத்தின் அபாவமுடைமை சுகத்திலிருப்பதால் விஷயத்தன்மை வடிவ ஏது வியபிசாரியேயாகின்றது, அச்சாத்தியாபாவமுடைமை இருந்தும் தன்மைவடிவ வியபிசாரதோஷத்தை நிவிர்த்தி செய்யும் பொருட்டு அவ்வேதுவில் "ஒழுக்கம்" என்னும் பதம் கூறப்பட்டது, ஆசார ஆசாரத்திற்கு விஷயத்தன்மையால் என்னுமிப்பதம் கூறப்பட்டது. கிரியாவிசேஷத்தினை ஆசாரமென்பர். சுகமோ அக்கிரியை விஷயமாவதில்லை ஆகையால் சுகமே ஆசாரபதத்தால் அக்கிரியைக் கொள்ளத்தக்கதன்று; விஷயத் தன்மைப் பதத்தின் சமீபத் தன்மையால் அவ்வாசார பதத்தால் முயற்சி வடிவ பிரயத்தினத்தையே கொள்ள வேண்டும். அம்முயற்சி, ஞானம், இச்சைகளைப்போன்று சவிஷயகமேயாம். அம்முயற்சியின் விஷயத்தன்மை அச்சுகவடிவ பலத்தில் (பயனில்) இல்லை. ஆகையால் அச்சுகத்தில் சபலத் தன்மை வடிவசாத்தியத்தைப் போன்று அவ்வாசார விஷயத் தன்மை வடிவ ஏதுவிற்கும் அபாவமிருப்பதால் அந்த வியபிசாரதோஷமுண்டாகிறதில்லை. சுகவடிவ பலத்தி னுத்தேசத்தி னுலேயே அப்பலத்தின் சாதனத்தில் புருஷனுக்குப் பிரவிர்த்தியுண்டாகின்றதாகையால், உத்தேசியத் (உத்தேசிக்கப்பட்டத்) தன்மை வடிவமாக அம்முயற்சியின் விஷயத்தன்மை அப்பலத்திலுமிருப்பதால் மீண்டும் அச்சுகவடிவ பலத்தில் அவ்வாசாரமாகிய விஷயத் தன்மை வடிவ ஏது வியபிசாரமேயாகின்றது. என்றாலும், [illegible] விதேயத் (விதிக்கப்படுந்) தன்மை வடிவத்தானேயே அம்முயற்சியின் விஷயத்தன்மையைக் கொள்ளுக. விதேயத் தன்மை வடிவமாக முயற்சி விஷயத் தன்மை அப்பலத்திலிருப்பதில்லை, ஆனால் அப்பலத்தின் சாதனங்களிலேயே யிருக்கின்றது. விதேயத்தன்மை வடிவமாக ஆசார (ஒழுக்க) விஷயத் தன்மையாகிய ஏது வியபிசாரமுடையதன்று. அல்லது "ஆசார விஷயத் தன்மையால்" என இம்மாத்திரமே ஏதுவாகக் கூறுவதால் அச்சுகவடிவ பலத்தில் அவ்வேதுவிற்கு வியபிசாரமுண்டாகிறதில்லையென்றாலும் நாஸ்திக புருஷன் செய்த இனிய வந்தனை முதலியவைகளில் அவ்வேதுவின் வியபிசாரமுண்டாகின்றது. ஏனெனின்: விதேயத்தன்மை வடிவமானதால் முயற்சி விஷயத் தன்மையாக ஏதுவோ அவ்வினிய வந்தனத்திலுமிருக்கின்றது. அவ்வினிய வந்தனத்தில் சபலவடிவ சாத்தியமோ இல்லை. ஆகையால் சபல வடிவ சாத்தியத்தின் அபாவமுடைமை இனிய வந்தன முதலியவைகளிலிருப்பதால் அவ்வாசார விஷயத் தன்மையாகிய ஏது, வியபிசாரியேயாகின்றது. அவ்வியபிசார தோஷத்தை நிவிர்த்தி செய்யும் பொருட்டு அவ்வேதுவில் "ஆன்றோர்" என்னும் பதம் கூறப்பட்டது.

௨௨. ஆன்றோர்த் தன்மையின் லக்ஷணம்.

"[illegible]" (இ-ள்) வேத அம்சத்திலும் பலத்தின் சாதனத்தன்மை யம்சத்திலும் பிராந்தியில்லாத்தன்மையினை ஆன்றோர்த்தன்மையெனப்படும், கர்மத்தின் பலபாகமில்லாத வத்துவில் கர்மத்தின் பலப்பிரதத் தன்மை [illegible]

னில் கர்மத்தின் பலமில்லாத் தன்மை யுத்திருப்பயாதோ அது பலஅம்சத்தில் பிராந்தியெனப் படுகின்றது. பலத்தின் சாதனமில்லாததில் பலத்தின் சாதனத்தன்மை யுத்திரும், பலத்தின் சாதனத்தில் பலத்தின் சாதனமில்லாத் தன்மையுத்திரும் யாதோ அது சாதனத்தன்மையம்சத்தில் பிராந்தியெனப்படுகின்றது. அத்தகைய பிராந்தியில்லாப் புருஷன் ஆன்றோனாம். அத்தகைய ஆன்றோர்த் தன்மை, அப்பால தாத்தின்க தன்மை அம்சத்தில் பிராந்தியுடைய நாத்திக புருஷர்களிடத்தில் இருப்பதில்லை. ஆகையால் இனிய வந்தன முதலியவைகளில் சபலத் தன்மை வடிவச் சாத்தியத்தைப் போன்று ஆன்றோரொழுக்க விஷயத் தன்மையாகிய ஏது அபாவமாவதால் ஆன்றோரொழுக்க விஷயத்தன்மை வடிவ ஏது, இனியவந்தன முதலியவைகளில் வியபிசாரமாவதன்று.

உஉ. வேறுவகையாக ஆன்றோர்த் தன்மையின் லக்ஷணம்.

சில நூலாசிரியரோ ஆன்றோர்த் தன்மைச் கின்னிலக்ஷணம் கூறுகின்றனர். "வேதப்ராமாண்யாப்யுபகமவத்வம் ஆப்தத்வம்" (இ-ள்.) வேதத்தின் பிரமாணத்தன்மையின் அங்கீகாரம் யாதோ அதனை ஆன்றோர்த் தன்மை என்பர். இவ்வாறான ஆன்றோர்த் தன்மை நாத்திக புருஷனிடத்தில் இல்லை. ஏனெனின், நாத்திகர்கள் வேதத்திற்குப் பிரமாணத் தன்மை யங்கீகரிப்பதில்லை. ஆகையால் நாத்திக புருஷன் செய்த இனிய வந்தன முதலியவைகளில் ஆன்றோரொழுக்க விஷயத் தன்மையாகிய ஏதுவிற்கும் அபாவமிருப்பதால் அவ்வேது ஆண்டு வியபிசாரியாவதன்று. அங்ஙனம் கூறிய ஆன்றோர்த் தன்மையின் லக்ஷணம் அசங்கதமாம். ஏனெனின், இவ்வாறிய ஆன்றோர்த் தன்மையுள்ள ஏதுவிற்கு நாத்திகன் செய்த இனிய வந்தன முதலியவைகளில் வியபிசாரமின்றாயினும், வேதத்திற்குப் பிரமாணத் தன்மையை அங்கீகரிக்குமோர் ஆத்திகன் பிரமாதத்தின் வசத்தால் அக்கர்மத்தைச் செய்யும் யோக்கியமான காலத்தைத் தவிர்ந்து இரவில் செய்த தர்சமுதலிய கர்மங்கட்கு எப்பயனும் உண்டாகிறதில்லை. கூறிய ஆன்றோரொழுக்க விஷயத்தன்மை வடிவ ஏதுவோ அக்கர்மத்திலிருக்கின்றது. சபலத்தன்மைவடிவசாத்தியத்தின் அபாவமுடைமை அத்தர்சமுதலிய கர்மங்களிலிருப்பதால் ஆன்றோரொழுக்க விஷயத் தன்மையாகிய ஏது, ஆண்டு வியபிசாரியேயாகும். முற்கூறியபலசாதனத்தன்மையம்சத்தில் பிராந்தியில்லாத் தன்மை வடிவ ஆன்றோர்த்தன்மை அங்கீகரிக்கின், காலத்தைத் தவிர்ந்து பிரமாதத்தால் இரவில் தர்சமுதலிய கர்மங்களை எப்புருஷன் செய்கின்றனோ அந்தப்பிரமாதமுடைய புருஷனிடத்தில் ஆன்றோர்த் தன்மையில்லை. ஏனெனின், எப்பயனை அடையும் பொருட்டு எக்காலத்தில் எக்கர்மம் வேதமானது விதித்திருக்கிறதோ அக்கர்மம் அக்காலத்திற் செய்யப்படுவதாகியே அப்பலத்திற்கு ஏதுவாகின்றது, வேறு காலத்தில் செய்யப்படுவதாகிய அக்கர்மம் அப்பலத்திற்கு ஏதுவாகிறதில்லை. ஆகையால் பலத்தின் சாதனமில்லாததாகிய காலத்தில் பலத்தின் சாதனத் தன்மையுத்திவடிவ பிராந்தி யுடையவனாவதால் பிரமாதி ஆத்திகன் முற்கூறிய ஆன்றோர்த்

தன்மையுடையவனன்று. ஆகையால் பிரமாதி புருஷன் (வழுவுதலுடையவன்) இடத்தில் முற்கூறிய ஆன்றோர்த் தன்மையுள்ள ஏதுவிற்கு வியபிசாரமுண்டாகிறதில்லை. அல்லது "ஆன்றோரொழுக்கத்திற்கு விஷயமாவதால்" என இம்மாத்திரம் ஏது வாக்கியத்தின் நாத்திகன் செய்த இனிய வந்தன முதலியவைகளில் அவ்வேதுவிற்கு வியபிசாரமுண்டாகிறதில்லை, என்றாலும் "ஸ்யேநேநாபிசரந் யஜேத" என்னும் வேத வசனமானது விரோதியை நாசஞ்செய்யும் பொருட்டு விதித்துள்ள ஸ்யேன யாகத்தில் கூறிய அவ்வேதுவிற்கு வியபிசாரமே யுண்டாகின்றது. ஏனெனின், அந்த ஸ்யேன யாகத்தில் சபலத்தன்மை வடிவ சாத்தியமோவில்லை. கூறிய ஆன்றோரொழுக்கத்திற்கு விஷயமாந் தன்மைவடிவ ஏது ஆண்டுளது. ஆகையால் சபலத் தன்மையாகிய சாத்தியத்தின் அபாவமுடைமை ஸ்யேன யாகத்திலிருப்பதால் ஆன்றோரொழுக்க விஷயத்தன்மை வடிவ ஏது ஆண்டு வியபிசாரியாகின்றது. அந்த வியபிசார தோஷத்தை நிவர்த்திசெய்யும் பொருட்டு அவ்வேதுவிற்குப் பழிப்பில்லாத தென்னும் பதம் கூறப்பட்டது.

உ௩. பழிப்பில்லாத் தன்மையின் லக்ஷணம்.

"பலவதநிஷ்டாநநுபந்தீஷ்டஸாதநத்வம்" (இ-ள்.) வலிவுடைய அநிஷ்டத்தை உண்டாக்காத் தன்மை யாதோ அது பழிப்பில்லாத் தன்மையெனப்படும். இப்பழிப்பில்லாத் தன்மை ஆன்றோரது முயற்சி வடிவ ஒழுக்கத்தின் விசேஷணமாகுமிடத்து அதாவது பழிப்பில்லாததாம் அத்தகைய ஆன்றோர்களினொழுக்கம் யாதோ "அவ்வொழுக்கத்திற்கு விஷயமாவதால்" என்பதனைப் பழிப்பில்லாத ஆன்றோரொழுக்க விஷயத்தன்மை வடிவ ஏது, ஸ்யேன யாகத்திலில்லை. ஏனெனின், எப்புருஷன் விரோதியைக் கொல்லுதற் பொருட்டு ஸ்யேன யாகத்தைச் செய்கின்றனோ அவனது விரோதியோ மரிக்கின்றான். ஆனால் ஸ்யேன யாகத்தைச் செய்தவனுக்குப் பரலோகத்தில் நரகத்தின் அடைவு அவசியமுண்டாகின்றதெனத் தர்மசாத்திரத்தில் கூறப்பட்டிருக்கின்றது. ஆகையால் அந்த ஸ்யேனயாகத்தை விஷயஞ்செய்யும் ஆன்றோரொழுக்கம் வலிவுடைய அநிஷ்டத்தை யுண்டாக்காததன்று; ஆனால் நரக வடிவ வலிவுடைய அநிஷ்டத்தை யுண்டாக்குவதேயாம். ஆகையால் அந்த ஸ்யேனயாகத்தில் சபலத் தன்மையாகிய சாத்தியத்தைப் போன்று, பழிப்பற்ற ஆன்றோரொழுக்க விஷயத்தன்மை வடிவ ஏதுவிற்கு அபாவமிருப்பதால் ஆண்டுக் கூறிய ஏதுவிற்கு வியபிசாரமுண்டாவதின்று.

சங்கை:—ஸ்யேனயாகத்தில் கூறிய அவ்வேதுவிற்கு வியபிசாரத்தை நிவர்த்திசெய்யும் பொருட்டு அவ்வேதுவில் பழிப்பில்லாததென்னும் பதம் கூறியது வீணேயாம். ஏனெனின், ஸ்யேன யாகமும் சத்துருவின் மரண வடிவ இஷ்டத்தின் சாதனமாவதால் சபலமேயாம். அச்சமய ஸ்யேன யாகத்தில் ஆன்றோரொழுக்கத்திற்கு விஷயத்தன்மை வடிவ ஏது, உளதாயினும் அவ்வியபிசாரதோஷமுண்டாவதில்லை. சாத்தியத்தின் அபாவமுடைமையிருக்கும் ஏதுவே வியபிசாரியாகின்றது.

சமர்த்தனம்:—"[illegible]" எனக்கூறிய அநுமானத்தில் மங்கலவடிவபக்ஷத்தில் சபலம் என்னும் பதத்தால் (ஸ)பலம் இஷ்டசாதனத் தன்மை வடிவ சபலத்தன்மை சாத்தியத்தினை கொள்ளற்க. ஆனால் மங்கலாசரணத்தில் புத்திமானுக்குப் பிரவிர்த்தியை யுண்டுபண்ணும் பொருட்டு சபலம் என்னும் பதத்தால் வலிவு உடைய அனிஷ்டத்தின் அஜனக (உண்டாக்காத) இஷ்ட சாதனத்தன்மை வடிவ சபலத்தன்மை சாத்தியத்தையே கொள்ளுக, ஏனெனின் விஷம்கலந்த அன்னத்தில் பசியின் நிவிர்த்தி வடிவ இஷ்டத்தின் சாதனத்தன்மை என்னும் ஞானம் புருஷனுக்கிருக்குமாயினும் அப்புருஷனுக்கு அவ்வன்னத்தைப் புசிப்பதில் பிரவிர்த்தி யுண்டாகிறதில்லை, ஆகையால் கேவலம் இஷ்டசாதனத்தன்மை ஞானமாத்திரம் அந்தப் பிரவிர்த்திக்குக் காரணமன்று. ஆனால் வலிவு உடைய அனிஷ்டத்தின் அஜனக இஷ்டசாதனத் தன்மை ஞானமே பிரவிர்த்திக்குக்காரணமாகின்றது. வலிவு உடைய அனிஷ்டத்தினையுண்டுபண்ணாத இஷ்டசாதனத்தன்மை ஞானம், விஷம்கலந்துள்ள அன்னத்தில் இல்லை. ஆனால் அவ்வன்னத்தில் மரணவடிவ வலிவு உடைய அனிஷ்டத்தினை யுண்டாக்குந்தன்மை ஞானமேயுண்டு. ஆகையால் பசியாற் பிடிக்கப்பட்ட புத்திமானுக்கு அவ்வன்னத்தை புசிப்பதில் பிரவிர்த்தி யுண்டாகிறதில்லை. அத்தன்மைத்தாய பிரவிர்த்தியில் உபயோகியான வலிவுஉடைய அனிஷ்டத்தின் அஜனக இஷ்டசாதனத் தன்மையாகிய சபலத்தன்மை சாத்தியம், அந்த ஸ்யேனயாகத்தி லில்லை. முற் கூறியமுறைப்படி ஆன்றோ ரொழுக்கத்திற்கு விஷயமாந் தன்மை வடிவ ஏதுவோ அந்த ஸ்யேன யாகத்திலு மிருக்கின்றது. அவ்வேதுவில் பழிப்பல்லாத வென்பதின் கூற்றின்மையால் வியபிசார தோஷத்தின் அடைவு அவசியமுண்டாம் அந்த வியபிசார தோஷத்தை நிவிர்த்திச் செய்யும் பொருட்டு அவ்வேதுவில் பழிப்பல்லாத வென்னும் பதம் அவசியம் கூறுதல் வேண்டும். இவ்வாறாய அநுமானப்பிரமாணத்தால் அம்மங்கலத்தில் சபலத்தன்மையே சித்தமாகின்றது. ஆண்டு அம்மங்கலத்தின் பயன்யாது? அதாவது எங்ஙனம் தர்சமுதலிய கர்மங்கட்கு ஸ்வர்க்கமாகிய அதிர்ஷ்டபயன் உண்டாகின்றதோ, அங்ஙனமே அம்மங்கலத்திற்கு ம் அதிர்ஷ்ட பயனுண்டா? அல்லது எங்ஙனம் காரீரியாகத்திற்கு மழை வடிவ திர்ஷ்ட பயனுண்டாகின்றதோ. அங்ஙனம் அம்மங்கலத்திற்கும் ஓர் திருஷ்ட பயனுண்டா? எனப் பயன் விசேஷத்தினை அறிதல் வேட்கையுண்டாக எக்கர்மத்திற்குத் திருஷ்டபயன் சம்பவிக்கின்றதோ அக்கர்மத்திற்கு அதிர்ஷ்டபயனைக் கற்பித்தல் நலமன்றும், இஃது நூலாசிரியர்களின் நியமம், நூற்றுவக்கத்தில் அந்நூலாசிரியன் அவக்கிய தமது நூல் விக்கினமின்றி முடிவெய்துக வென்னுமிச்சையானேயே மங்கலத்தில் பிரவிர்த்திக்கின்றான். ஆகையால் அந்நூலாசிரியனது இச்சையின் விஷயவடிவத்தாலும் அந்நூலின் முடிவே முதலில் பிராப்தமாம். ஸ்வர்க்கமுதலியன அல்லது புத்திரர் முதலியன முதலில் பிராப்தமேஅன்று. ஆகையால் மங்கலத்திற்கு விக்கினமின்றி நூல்முடிதல் வடிவபயனே கொள்ளத்தக்கதாம். இக்கருத்

தால் மங்கலத்தில் நூன்முடிவு வடிவ திருஷ்டபயனது ஏதுத் தன்மையினை பரிசேஷ அநுமானத்தால் சித்தம் செய்வாம்.

௨௫. மங்கலத்தில் சமாப்தியின் பயனுடைமையைச் சாதிக்கும் அநுமானம்.

அவ்வநுமானத்தின் ஆகாரமிதுவாம். "[illegible]" (இ-ள்.) மங்கலம் முடிவாகிய பயனையே யுண்டாக்குவதாம், அம்முடிவையொழிந்த வேறுபயனை யுண்டாக்காததாகிப் பயனை யுண்டாக்குவதாவதால், எவ்வெவ் வத்து முடிதல் வடிவபயனை யுண்டாக்குவதன்றோ அவ்வவ்வத்து அம்முடிவை விட வேறுபயனை யுண்டாக்காததாகிப் பயனை யுண்டாக்குவதுமன்றாம், கட முதலிய பதார்த்தங்களைப் போலும். இவ்வாறாய பரிசேஷ வநுமானத்தால் அம்மங்கலத்தில் விக்கினத்துவம்ச வாயிலாக நூன்முடிதல் வடிவ திருஷ்ட பயனது காரணத் தன்மையே சித்தமாகின்றது.

௨௬. அநுமிக்கப்பட்ட சுருதியினால் அம்மங்கலத்தில் சமாப்தி பயனுடைமையின் சித்தி.

சில நூலாசிரியரோ அம்மங்கலத்திற்கு நூன்முடிதலின் காரணத் தன்மையில் சுருதியே பிரமாணமெனக் கூறுகின்றனர் அச்சுருதியிதுவாம். "[illegible]" (இ-ள்.) நூற்கு விக்கினமின்றி முடிவை இச்சிப்பவன் நூன்முகத்தில் மங்கலம் செய்யக் கடவனென்னும் இச்சுருதி ஓர்வேதத்தின் சாகையினும் பிரத்தியக்ஷமாய்க் காணப்படுவதில்லை. என்றாலும் ஆன்றோரொழுக்கத்தால் அச்சுருதி அநுமிக்கப் படுவதாகின்றது, இக்காலத்தில் அச்சுருதியுடன் கூடிய சில வேதத்தின் சாகை நஷ்டமாய் விட்டதாகையால் அச்சுருதி இக்காலத்தில் காணப்படுகிறதில்லை.

௨௭. அம்மங்கலத்தைப் போதிக்கும் சுருதியின் சாதகமான அநுமானம்.

அவ்வநுமானத்தின் ஆகாரமிதுவாம். "[illegible]" (இ-ள்.) வேதமானது போதித்துள்ள கர்த்தவ்விய (செயற்பாலதாந்) தன்மை எதற்கோ அதனை வேதபோதித கர்த்தவ்வியத்தன்மையெனப்படும். அத்தகைய வேதபோதித கர்த்தவ்வியத் தன்மை மங்கலத்தினது அலௌகிகமும் தர்ம சாத்திரத்தால் நிஷித்த மின்மையுமாம் அத்தகைய ஆன்றோ ரொழுக்கத்திற்கு விஷயமாவதால், எவ்வெவ்வத்து அத்தகைய ஆன்றோ ரொழுக்கத்திற்கு விஷயமாகின்றதோ அவ்வவ்வத்து வேதத்தால் போதித்த கர்த்தவ்வியத் தன்மையுடையதேயாம், தர்சமுதலிய கர்மங்களைப் போலும். ஆண்டு இவ்வநுமானத்தில் மங்கலம் பக்ஷமும், வேதமானது போதித்த கர்த்தவ்வியத்தன்மை சாத்தியமும், அலௌகிக தர்ம சாத்திரத்தால் நிஷித்தமில்லாத ஆன்றோரொழுக்கத்திற்கு விஷயத்தன்மை ஏதுவும்,

தர்சமுதலிய கர்மங்கள் திருஷ்டாந்தமுமாம். இவ்வேதுவிலும் முற்கூறிய வேதுவைப்போன்று விஷயத்தன்மை என்னும் பதத்தின் அன்மையிலுள்ள ஆசாரபதத்தால் முயற்சியாகிய பிரயத்தனத்தைக் கொள்ளுக, கிரியையினைக் கொள்ளற்க. ஈண்டு 'தர்மசாத்திரத்தால் நிஷித்தமல்லாத ஆன்றோரொழுக்கத்திற்கு விஷயமாவதால்' என இம்மாத்திரமே ஏதுவாகக்கூறி அவ்வேதுவில் அலௌகிக மென்னும் பதம் கூறுமிடின், உண்டி முதலிய லௌகிக வியவகாரங்களில் அவ்வேதுவிற்கு வியபிசாரமுண்டாகும், ஏனெனின், அவ்வுண்டி முதலியவைகளில் தர்மசாத்திரத்தால் நிஷித்தமில்லாததாகிய அவ்வான்றோர்களின் ஆசாரம் யாதோ அதற்கு விஷயத் தன்மை வடிவ ஏதுவே யிருக்கின்றது, ஆனால் வேதமானது போதித்த கர்த்தவ்வியத் தன்மை வடிவ சாத்தியம் ஆண்டில்லை. ஆகையால் அவ்வேதபோதித கர்த்தவியத் தன்மை வடிவ சாத்தியத்தின் அபாவமுடைமை அவ்வுண்டிமுதலியவைகளிலிருப்பதால் அத்தர்ம சாத்திரத்தால் நிஷித்தமில்லாத ஆன்றோரொழுக்க விஷயத் தன்மை வடிவ ஏது, வியபிசாரியேயாகும். அந்த வியபிசார தோஷத்தை நிவர்த்திசெய்யும் பொருட்டு கூறிய அவ்வேதுவில் அலௌகிக மென்னும் பதங் கூறப்பட்டது.

உ௪. அலௌகிகத் தன்மையின் லக்ஷணம்.

“ விதிம்ருதே யஜ்ஞாயதே ததலௌகிகம் ” (இ-ள்.) சாத்திரத்தின் ஆஜ்ஞை (விதி) யன்றியே கேவலம் ராகாதிகளினால் எவ்வத்து பிராப்தமாமோ அவ்வத்துவினை லௌகிகமெனப்படும். அந்த லௌகிக பதார்த்தத்தினும் வேறாய பதார்த்தம் யாதோ அதனை அலௌகிகமெனப்படும். இவ்வாறாய அலௌகிகத்தன்மை அவ்வுண்டி முதலியவற்றை விஷயஞ் செய்யும் ஒழுக்கத்திலில்லை, ஆனால் அவ்வுண்டிமுதலியவைகளின் கர்த்தவியத்தன்மை, பிராணி மாத்திரத்திற்கு சாத்திரத்தின் ஆஜ்ஞையின்றி கேவலம் ராகத்தானேயே பிராப்தமாம். ஆகையால் உண்டிமுதலிய லௌகிக வியவகாரங்களில் வேதம் போதித்த கர்த்தவ்வியத் தன்மை வடிவ சாத்தியத்தைப் போன்று அலௌகிக தர்ம சாத்திரத்தால் நிஷித்தமல்லாத ஆன்றோரொழுக்க விஷயத்தன்மை வடிவ ஏதுவிற்கும் அபாவமுண்மையால் அவ்வுண்டி முதலியவைகளில் கூறிய அவ்வேதுவிற்கு வியபிசாரமுண்டாவதில்லை அன்றது அவ்வநுமானத்தில் “அலௌகிக ஆன்றோரொழுக்கத்திற்கு விஷயத்தன்மையாவதால்” என இம்மாத்திரமே ஏதுவாகக்கூறி அவ்வேதுவில் “தர்மசாத்திரத்தால் நிஷித்தமல்லாத” வென்னும் பதங் கூறுமிடின் வறுமையுடையவன் இரவின்கட்செய்த சிராத்தத்தி (தென்புலத்தார்க்கடனோம்பலி)ல் அவ்வேதுவிற்கு வியபிசாரமுண்டாகும். ஏனெனின், இரவிற்செய்த தென்புலத்தார்க்கடனோம்பல் முதலியவற்றில் அலௌகிக ஆன்றோரொழுக்க விஷயத்தன்மையாகிய ஏதுவே யிருக்கின்றது. ஆனால் வேதம்போதித்த கர்த்தவியத்தன்மை வடிவ சாத்தியம் ஆண்டில்லை ஆகையால் கூறிய அச்சாத்தியத்தின் அபாவமுடைமை இரவிற் செய்த சிராத்தத்திலிருப்பதால் அலௌகிக ஆன்றோரொழுக்க விஷயத்தன்மை வடிவ ஏது வியபிசாரியேயாகும். அந்த வியபி-

சார தோஷத்தை நிவர்த்திசெய்யும் பொருட்டு அவ்வேதுவில் “தர்மசாத்திரத்தால் நிஷித்தமல்லாத” என்னும் பதம் கூறப்பட்டது. இரவிற் செய்யும் தென்புலத்தார்க் கடனோம்பலை விஷயஞ் செய்யும் ஆன்றோர்களின் ஒழுக்கம் தர்மசாத்திரத்தினால் நிஷித்தமல்லாததன்று; தர்மசாத்திரத்தினால் நிஷித்தமேயாம். ஆகையால் இரவிற்செய்த தென்புலத்தார்க் கடனோம்பலின் அவ்வேத போதித கர்த்தவ்வியத்தன்மை வடிவ சாத்தியத்தைப் போன்று அலௌகிக தர்ம சாத்திரத்தால் நிஷித்தமல்லாத ஆன்றோரொழுக்க விஷயத்தன்மை வடிவ ஏதுவிற்கும் அபாவமுண்மையால் இரவிற் செய்த தென்புலத்தார்க் கடனோம்பலில் கூறிய அவ்வேதுவிற்கு வியபிசார முண்டாகிறதில்லை. அல்லது “அலௌகிக தர்ம சாத்திரத்தால் நிஷித்தமல்லாத ஒழுக்கத்திற்கு விஷயத் தன்மையால்” என இம்மாத்திரமே ஏதுவாகக் கூறி அவ்வேதுவில் ஆன்றோரென்னும் பதங் கூறுமிடின், பௌத்தர் முதலிய நாத்திகர்கள் செய்த இனிய வந்தனமுதலிய கர்மங்களில் அவ்வேதுவிற்கு வியபிசார முண்டாகும். ஏனெனின், அவ்வினிய வந்தன முதலியவைகளில் அலௌகிக தர்மசாத்திரத்தால் நிஷித்தமல்லாதவொழுக்கத்திற்கு விஷயத்தன்மைவடிவ ஏதுவேயிருக்கிறது. ஆனால் அவ்வேதபோதித கர்த்தவ்வியத் தன்மையாகிய சாத்தியம் ஆண்டில்லை. ஆகையால் கூறிய அச்சாத்தியத்தின் அபாவமுடைமை அவ்வினிய வந்தன முதலியவைகளி லிருப்பதால் அலௌகிக தர்மசாத்திரத்தால் நிஷித்தமல்லாத வொழுக்கத்திற்கு விஷயத் தன்மை வடிவ ஏது வியபிசாரியே யாகும். அந்த வியபிசார தோஷத்தை நிவர்த்திச் செய்யும்பொருட்டு அவ்வேதுவில் “ஆன்றோர்” என்னும் பதங்கூறப்பட்டது.

உ௫. சிஷ்டத் தன்மையின் லக்ஷணம்.

“ வேதோக்த கர்மகர்த்ருத்வம் சிஷ்டத்வம் ” (இ-ள்.) வேதமானது கூறியுள்ள அக்கினியோபாசனமுதலிய கர்மங்களின் கர்த்தாத் தன்மையாதோ அதனை சிஷ்ட (ஆன்றோர்)த் தன்மை யெனப்படும். இவ்வாறாகக் கூறிய ஆன்றோரின் லக்ஷணம் சம்பவியாது. ஏனெனின், லக்ஷணத்திலுள்ள வேத சப்தம் யாதோ அவ்வேத சப்தத்தால் எல்லா வேதங்களையும் கொள்ளுவதா? சிறுபான்மை வேதத்தைக்கொள்ளுவதா? முதற் பக்ஷத்திலோ இந்த லக்ஷணம் அசம்பவதோஷ முடையதேயாம். ஏனெனின், வேதங்கள் கூறிய எல்லா கர்மங்களின் கர்த்தாத் தன்மை ஒருவனிடத்தும் சம்பவியாது ஆகையால் ஒருவனும் சிஷ்டனாகான். இரண்டாவது பக்ஷத்திலோ, பௌத்தர் முதலிய நாத்திகரிடத்திலும் ஆன்றோரின் லக்ஷணத்திற்கு அதிவியாப்தி யுண்டாகின்றது. ஏனெனின், “ நஹிம்ஸ்யாத் ஸர்வா பூதாநி ” என்னும் வேத வசனமானது எல்லா பூதங்களது ஹிம்சையின் நிஷேதம் கூறியுளது. சிறுபான்மை வேதங் கூறிய அஹிம்சா வடிவ கர்மத்தின் கர்த்தாத் தன்மை நாத்திகரிடத்து மிருக்கின்றது. நாத்திகரிடத்தில் கூறிய அவ்வான்றோரின் லக்ஷணத்திற்கு அதிவியாப்தியே யுண்டாகின்றது ஆகையால் வேதங் கூறிய கர்மங்களின் கர்த்ருத்தன்மை வடிவ ஆன்றோர்த் தன்மை சம்பவிப்பதில்லை.

௫௰. வேறுவகையால் சிஷ்டத் தன்மையின் லக்ஷணம்.

" வேதப்ராமாண்யாங்கீகாரவத்வம் சிஷ்டத்வம் " (இ-ள்.) இருக்கு முதலிய வெல்லா வேதங்கள் பிரமாண வடிவமாமெனச் சர்வ வேதங்களின் பிரமாணத் தன்மையின் அங்கீகாரம் யாதோ அதனை ஆன்றோர்த் தன்மை என்பர். இவ்வாறுய ஆன்றோர்த் தன்மை நாத்திக புருஷரிடத்திலில்லை ஆகையால் நாத்திகர்கள் செய்த இனிய வந்தன முதலியவைகளில் வேதபோதித கர்த்தவ்வியத் தன்மையாகிய சாத்தியத்தைப் போன்று அலௌகிக தர்ம சாத்திரத்தால் சித்தமல்லாத ஆன்றேரொழுக்கத்திற்கு விஷயத்தன்மையாகிய ஏதுவிற்கும் அபாவமுண்மையால், ஆண்டுக்கூறிய அவ்வேதுவிற்கு வியபிசார முண்டாகிறதில்லை. இவ்வாறாகக் கூறிய அநுமானப் பிரமாணத்தால் சித்தஞ் செய்யப்பட்ட, கூறிய அச்சுருதியே அம்மங்கலத்தின் முடிவின் காரணத் தன்மையில் பிரமாணமாம். இவ்வாறாகச் சில நூலாசிரியரோ அம்மங்கலத்தில் நான்முடிவின் காரணத் தன்மையின முற்கூறிய அநுமானப் பிரமாணத்தால் சித்தஞ்செய்திருக்கின்றனர். சில நூலாசிரியரோ ஆன்றோரொழுக்கத்தால் அநுமானஞ் செய்யப்பட்ட, கூறிய அச்சுருதியால் சித்தஞ் செய்திருக்கின்றனர். இவ்வாறு நூற்களால் அம்மங்கலத்தில், விக்கினத்துவம்ச வாயிலாக நான்முடிவின் காரணத் தன்மை, மதபேதத்தால் அநுமானப் பிரமாணம் அல்லது கூறிய சுருதிப் பிரமாணத்தால் சித்தஞ் செய்யப்பட்டது. இனி அம்மங்கலத்தில் முற்கூறிய அன்வயவியதிரேக வியபிசாரத்தின் நிவிர்த்தியைச் செய்வாம்.

௫௧. மங்கலமின்றி நான்முடிவு உடைய நாத்திகர்களிடத்தில் மங்கலத்தின் சாதகமான அநுமானம்.

முற்கூறிய முறைப்படி அம்மங்கலத்தில் நான்முடிவின் காரணத் தன்மை பெறப்பட மங்கலமின்றியே முடிவெய்திய நாத்திக நூற்களிலும் முடிதல் வடிவ காரியத்தால் மங்கல வடிவ காரணத்தின் அநுமானஞ் செய்யப்பட்டது. எங்ஙனம்: புகை முதலியவற்றில் தூம வடிவ காரியத்தைக் கண்டு தூமத்தின் காரணத்தன்மை வடிவ வன்னியின் அநுமானஞ் செய்யப்படுகிறதோ அங்ஙனமே நான் முடிதல் வடிவ காரியத்தால் மங்கல வடிவ காரணத்தின் அநுமானஞ் செய்யப்படுகின்றது. அவ்வநுமானத்தின் ஆகாரமிதுவாம். " [illegible] " (இ-ள்.) நாத்திகன் முன்னர் மங்கல கர்த்தாவாவன், விக்கினங்களின் துவம்ச வாயிலாக நூலின் முடிவெய்துதலுடையவனாதலால், யாவன் விக்கினங்களின் துவம்ச வாயிலாக நூலின் முடிவையுடையவனாவனோ அவன் முன்னர் மங்கலத்திற்குக் கர்த்தாவே யாகின்றான், சைத்திரனைப் பெயரிய புருஷனைப்போலும். ஈண்டு நான்முகத்தில் மங்கலத்தைச் செய்து நான்முடிவு பெறச் செய்த சைத்திரனைப் பெயரிய புருஷனே திருஷ்டாந்த வடிவமாக அறிக. இவ்வாறுய நான்முடிவு வடிவ காரியத்தால் நாத்திக நூற் கர்த்தாவிற்கு ஜன்மாந்திரத்தின் (வேறுபிறப்பின்)

மங்கலம் அநுமானஞ் செய்யப்படுகின்றது. ஜன்மாந்திரத்தின் மங்கலமே விக்கினத்துவம்ச வாயிலாக நாத்திகரது நான்முடிதற்குக் காரணமாகின்றது.

௫௨. மங்கலமின்றி நான்முடிவையுடைய ஆத்திக புருஷனிடத்து மங்கலத்திற்குச் சாதகமான யுக்தி.

எவ்வாத்திகனது நூலில் மங்கலமின்றியே முடிவு காணப்படுகின்றதோ அவ்வாத்திகனிடத்தில் ஜன்மாந்திரத்தின் மங்கலம் அநுமானஞ் செய்யப்படுவதில்லை, இந்ஜன்மத்தின் மங்கலம் அநுமானஞ் செய்யப்படுகின்றது. அதாவது இந்ஜன்மத்தில் ஆத்திகனானவன் நூற்றிவக்குங் காலத்தில், குரு, ஈஸ்வராது நமஸ்கார முதலிய மங்கலஞ் செய்கின்றான். ஆனால் அம்மங்கலம் நான்முகத்தில் எழுது முதலிய வடிவத்தால் வரையவில்லை. நூற்குப் புறம்பாகச்செய்த அம்மங்கலமே விக்கினத்துவம்ச வாயிலாக அம்முடிவிற்குக் காரணமாகின்றது, அல்லது ஆத்திகனானவன் தன்னிடத்தில் ஓர் பிரமாணத்தால் சித்தித்த விக்கினங்களின் அத்தியந்தாபாவத்தை நிச்சயித்து மங்கலங் கூறவில்லையென்னும் கற்பனையைச்செய்க. ஆகையால் அம்மங்கலத்தில் முற்கூறியுள்ள காரணத்தன்மைநிச்சயத்தினைப் பாதிக்கும் வியதிரேக வியபிசார ஞானம் பிராப்தமாவதில்லை. அம்மங்கலத்தில் நான்முடிவின் காரணத்தன்மையை நிச்சயஞ் செய்யும் அன்வய வியதிரேக ஞானமே பிராப்தமாகின்றது.

௫௩. மங்கலத்துடன் கூடிய நூல் முடியாவிடத்து மங்கலத்திலுள்ள அசாங்கத் தன்மையின் கற்பனை.

* எக்காதம்பரிமுதலிய நூற்களில் அம்மங்கலமிருக்கினும் நான்முடியவில்லையோ அக்காதம்பரி முதலிய நூற்களில் அம்மங்கலத்தின் அசாங்கத் தன்மையே கற்பனஞ் செய்க. ஆண்டு எவ்வங்கங்களோடு கூடிய அம்மங்கலம் விக்கினத் துவம்ச வாயிலாக அச்சமாப்தி வடிவ காரியத்தை யுண்டு பண்ணுவதாகின்றதோ அவ்வங்கங்களில்லாத் தன்மையினை அசாங்கத் தன்மையெனப்படும். எங்ஙனம்: மழையின் பொருட்டு காரிரி வேள்வியைச் செய்யாப்படினும் எப்பொழுது மழையுண்டாகவில்லையோ அப்பொழுது அக்காரிரி வேள்வியில் அசாங்கத் தன்மைக் கற்பனஞ் செய்யப்படுகின்றது, அங்ஙனமே அம்மங்கலஞ் செய்யப்படினும் யாண்டு நான் முடியவில்லையோ ஆண்டு அம்மங்கலத்திற்கு அசாங்கத் தன்மையே கற்பனைச் செய்க. எக்காரணத்தாலெனின், அவ்வெல்லா அங்கங்களோடு கூடியதாகியே அம்மங்கலம் அம்முடிவினை யுண்டாக்குவதாகின்றது.

௫௪. சர்வ அங்கங்களுடன் கூடிய மங்கலத்தோடுள்ள நூல் முடியா விடத்து மிக்க வலிவு உடைய விக்கினத்தின் அல்லது அனேக விக்கினங்களின் கற்பனை.

அவ்வெல்லா அங்கங்களோடுகூடிய மங்கலமுளதாயினும் அந்நூலின் முடிவு உண்டாகிறதில்லையென்னும் நிர்ணயம் ஓர்கால் ஒருவாற்றானுண்டாய்

* காதம்பரியென்பது—பாணனென்ற மாகவியால்லியற்றிய சிருங்கார ரசப் பிரதானமான மகாவியம்.

விடின் அவ்விடத்தில் அந்நூலின் முடிவைத் தடுப்பது ஓர் வலிவு உடைய விக்கினமாக அறிக. அல்லது பிரசுர (அநேக) விக்கினங்களின் பிரதிபந்தகமாக அறிக.

௩௫. வலிவு உடைய மங்கலத்திற்கு அல்லது பிரசுர மங்கலத்திற்கு அவ்விக்கினங்களை நாசஞ்செய்யுந் தன்மை.

சங்கை:— வலிவு உடைய விக்கினத்தையும் அநேக விக்கினங்களையும் அம்மங்கலம் ஏன் நிவர்த்தி செய்யாது?

சமாதானம்:— நூன்முடிவிற்குப் பிரதிபந்தகமான பாபரூப விக்கினங்களை விட அம்மங்கலம் குறைந்த சங்கியை (எண்ணை) உடையதாகாமல் விக்கினங்களுக்குச் சமானமான சங்கியை உடையதாயினவோ அல்லது அதிக சங்கியை உடையதாயினவோ அவ்வநேக மங்கலமே அவ்வநேக விக்கினங்களையும் வலிவு உடைய ஓர் விக்கினத்தையும் நாசஞ்செய்கின்றது. இக்காரணத்தாலேயே நூலாசிரியர் அனந்தத்தில், குரு, ஈஸ்வரர் முதலியவர்களது நமஸ்காரமுதலிய அநேக மங்கலம் செய்கின்றனர். ஏந்நூல் ஒரே மங்கலத்தால் விக்கினத்துவம்ச மூலமாக நூன்முடிவு காணப்படுகிறதோ, ஆங்கு அவ்வொரே மங்கலம் மிக்க வலிவு உடையதாக அறிக. எங்ஙனம் அநேக மங்கலம் அநேக விக்கினங்களையும் வலிவு உடைய ஓர் விக்கினத்தையும் நாசஞ்செய்கின்றதோ அங்ஙனமே மிக்கவலிவு உடைய ஓர் மங்கலமும் அநேக விக்கினங்களையும் வலிவு உடைய ஓர் விக்கினத்தையும் நாசஞ் செய்கின்றது. இவ்வாறாக அவ்வநேகமங்கலமும் மிக்கவலிவு உடைய ஓர் மங்கலமும் அக்காதம்பரி முதலிய நூல்களில் இல்லை. இக்காரணத்தால் காதம்பரி முதலிய நூல்களும் விக்கினத்துவம்ச வாயிலாக முடிவு பெறுவதில்லை.

௩௬. வலிவு உடைய அல்லது பிரசுர மங்கல சஹிதமாய் முடியாவிடத்தில் அம்மங்கலத்திற்குப்பின் உண்டாவதான விக்கினங்களின் கற்பனை.

அல்லது அநேக மங்கலங்களும் அதி வலிவு உடைய ஓர் மங்கலமு மிருக்கினும் நூன்முடிவு பெறாதவிடத்தில் எங்ஙனம் நிச்சயம் ஏற்படுமோ அங்கு இவ்வாறான கற்பனை செய்க. அம்மங்கலத்திற்கு முன்னுள்ள நூன்முடிவின் பிரதிபந்தகவிக்கினங்கள் எத்தனையோ அவ்வெல்லா விக்கினங்களோ அம்மங்கலத்தால் நாசமாய் விட்டன. ஆனால் அம்மங்கலத்தின் பின்னர் உண்டாகும் சில பாப வடிவ விக்கினமே அம்முடிவிற்குப் பிரதிபந்தகமாகின்றன. இக்காரணத்தாலேயே நூலாசிரியர் அவ்விக்கின நிவிர்த்தியின் பொருட்டு அந்நூலினிடையிலும் அம்மங்கலத்தைச் செய்கின்றனர். ஆகையால் அக்காதம்பரி முதலிய நூல்களில் அவ்வன்வய வியபிசார ஞானம் அம்மங்கலத்திலுள்ள முடிவின் காரணத் தன்மையினை பாதிப்பதன்று. ஆனால் முற்கூறிய வியதிரேக வியபிசார ஞானமே அக்காரணத் தன்மையின் நிச்சயஞ் செய்வதாம்.

௩௭. மங்கலத்தினதும் சமாப்தியினதும் ஸ்வரூபத்தைக் கூறும் வாயிலாக அவற்றின் அசாமானாதி கரண்ணியத்தின் சங்கை.

சங்கை:— ஜன்மாந்திரத்தின் மங்கலம், அல்லது இச்சன்மத்தின் மங்கலம் விக்கினத்துவம்சவாயிலாக நூன்முடிவிற்குக் காரணம் எப்பொழுதாகின்றதோ, அப்பொழுது அம்மங்கலத்திற்கும் முடிவு வடிவ காரியத்திற்கும் ஓர் அதிகரணத்திலிருத்தற்றன்மையுண்டாகும். ஓர் அதிகரணத்திலிருக்கும் பதார்த்தங்கட்கே காரிய காரண பாவமுண்டாகின்றது. வெவ்வேறு அதிகரணத்திலிருக்கும் பதார்த்தங்கட்கு அக்காரிய காரண பாவமுண்டாகாது. வெவ்வேறு அதிகரணத்திலிருக்கும் பதார்த்தங்கட்கும் காரிய காரண பாவமுண்டாகுமாயின், தேசாந்தரத்திலிருக்கும் குலாலனால் இத்தேசத்திலுள்ள கடத்தினுற்பத்தியுண்டாகவேண்டும். அங்ஙனமாவதில்லை. ஆகையால் வெவ்வேறு தேசத்திலுள்ள பதார்த்தங்களின் காரிய காரண பாவம் சம்பவியாது. அம்மங்கலமும், நூன்முடிவுமாகிரண்டும் ஓர் அதிகரணத்தில் இருப்பதில்லை. வெவ்வேறு அதிகரணத்திலிருப்பதாம். எனெனின், நூன்முடிவிலுள்ள வர்ணத்தினை (எழுத்தை) சமாப்தி என்பர். அல்லது அம்முடிவிலுள்ள வர்ணத்தின் துவம்சத்தினை சமாப்தியென்பர். இவ்விரெழுத்தினை சாத்திரத்தில் சரமவர்ணமெனக் கூறப்பட்டிருக்கிறது. ஆகாசவடிவமுற்றிய கடையெழுத்து சத்தவடிவமாகையால் அது சமவாயி காரண வடிவ ஆகாசத்திலேயே யிருக்கும். அக்கடையெழுத்தின் துவம்சமும் சமவாயித்தினை கடையெழுத்தின் சமவாயி காரணவடிவ ஆகாசத்திலேயேயிருக்கும். இவ்வாறாக அவ்விரெழுத்து வடிவ சமாப்தி அல்லது அக்கடையெழுத்தின் துவம்ச வடிவ சமாப்தி ஆகாசத்திலேயே இருக்கின்றது. அங்ஙனமாக, இவ்வனாதி வடிவ மங்கலமோ ஞான வடிவமாவதால், நூலாசிரியரது ஆத்மாவில் இருக்கின்றது. ஆகையால் அம்மங்கலம் சமாப்தியின் காரணமாவதன்கண் சாமானாதிகரண்ணியமின்மை பற்றியின் இனி அம்மங்கலத்தில் சமாப்தியினது காரணத் தன்மையின் சித்தி செய்வனவாகிய அம்மங்கல வடிவ காரணத்திற்கும், சமாப்தி வடிவ காரியத்திற்கும் சாமானாதி கரண்ணியம் இருப்பதால்

௩௮. மங்கல வடிவ காரணத்தினதும் சமாப்தி வடிவ காரியத்தினதும் சாமானாதி கரண்ணியத்தின் வர்ணனை.

சமாதானம்:— விக்கினத்துவம்ச வுற்பத்தி யவச்சேதகத்தன்மை வடிவ சம்பந்தத்தால் முடிவு அந்நூலாசிரியரின் சரீரத்தி லிருக்கிறது. அச்சரீரத்தில் அவச்சேதகத் தன்மைச் சம்பந்தமாக அந்த ஞான வடிவ மங்கலமுமிருக்கின்றது. ஜன்மச் சம்பந்தத்தால் நூன்முடிவு பெறுவதென அறிக. அச்சமாப்தியை யுண்டாக்கும் விக்கினத்துவம்சம் யாதோ அவ்விக்கினத்துவம்சத்தினுற்பத்தி சரீரவச்சின்ன ஆத்மாவிலேயே யுண்டாகின்றது. கேவல ஆத்மாவினுண்டாகிறதில்லையாகையால் அச்சரீரம் அம்முடிவினை உண்டாக்கும் விக்கினத்துவம்சத்தினுற்பத்தியின் அவச்சேதகமாம். இவ்வாறாக அக்கிரந்த சமாப்தி அநேக விக்கினத் துவம்ச வுற்பத்தி யவச்சேதகத் தன்மை வடிவ பரம்பரைச் சம்பந்தமாக சரீரத்திலிருக்கின்றது. அந்த ஞான வடிவ மங்கலமும் சரீ

அவச்சின்ன ஆத்மாவிலேயே உண்டாகின்றது, கேவல ஆத்மாவிலுண்டாகிறதில்லை. ஆகையால் அந்த ஞான வடிவ மங்கலமும் அவச்சேதகத் தன்மைச் சம்பந்தமாக அச்சரீரத்திலேயே உண்டாகின்றது. இவ்வாறு ஸ்வஜனக விக்கினத் துவம்ச வுற்பத்தி அவச்சேதகத்தன்மைச்சம்பந்தமாக அச்சரீரத்திலிருப்பதாகிய முடிவைக்குறித்து அச்சரீரத்தில் அவச்சேதகத் தன்மைச் சம்பந்தமாக விருக்கும் அம்மங்கலங் காரணமாகின்றது. ஈண்டுச் ஸ்வஜனக விக்கினத் துவம்ச வுற்பத்தி அவச்சேதகத் தன்மை வடிவ சம்பந்தமோ அச்சமாப்தியிலுள்ள காரியத்தின் அவச்சேதகச் சம்பந்தமாம்; அவச்சேதக வடிவ சம்பந்தமோ அம்மங்கலத்திலுள்ள காரணத்தன்மையின் அவச்சேதகச் சம்பந்தமாம். ஈண்டுக் காரணத்தின் அதிகரணத்தில் எச்சம்பந்தத்தால் அக்காரியமிருக்குமோ அச்சம்பந்தம் காரியத் தன்மையினவச்சேதக மெனப்படும். அக்காரியத்தின் அதிகரணத்தில் எச்சம்பந்தத்தால் அக்காரணமிருக்குமோ அச்சம்பந்தம் காரணத் தன்மையினவச்சேதக மெனப்படும். எங்ஙனம்:—திரவியத்தின் சாக்ஷுஷப் பிரத்தியக்ஷத்தில் உற்பூத ரூபத்தின் காரணத் தன்மையுண்டாகின்றது. ஈண்டு விஷயத்தன்மைச்சம்பந்தத்தால் அச்சாக்ஷுஷப்பிரத்தியக்ஷம் கடமுதலிய திரவியங்களிலிருக்கின்றது. அக்கடமுதலிய திரவியங்களில் அவ்வுற்பூத ரூபம் சமவாய சம்பந்தத்தாலிருக்கின்றது, ஆகையால் அந்த விஷயத்தன்மைச்சம்பந்தமோ அக்காரியத்தன்மையின் அவச்சேதகச் சம்பந்தமாம், அச்சமவாயம் அக்காரணத்தன்மையினவச்சேதகச்சம்பந்தமாம். இம்முறையைப் பின்னர்க்கூறும் சம்பந்தங்களிலும் அறிக. அல்லது அவச்சேதகத் தன்மைச் சம்பந்தத்தால் அச்சமாப்தி அந் நூலாசிரியனது சரீரத்திலிருக்கின்றது. எனெனின், அவ்விற்றெழுத்து வடிவ சமாப்தி உற்பத்தியாவது, அவ்விற்றெழுத்தின் துவம்ச வடிவ சமாப்தி உற்பத்தியாவது அச்சரீராவச்சின்ன ஆகாசத்திலேயே உண்டாகின்றது. கேவல ஆகாசத்திலுண்டாவதில்லை. ஆகையால் அவச்சேதகத் தன்மை வடிவ சம்பந்தத்தால் அச்சமாப்தி அச்சரீரத்திலேயே யிருக்கிறது. அச்சரீரத்தில் ஸ்வஜன்னிய (தன்னாற்றோன்றிய) விக்கினத்துவம்சாவச்சேதகத் தன்மை வடிவ சம்பந்தத்தால் அம்மங்கலமுமிருக்கின்றது. ஈண்டுச் ஸ்வ என்னுஞ் சொல்லால் அம்மங்கலத்தினைக்கொள்ளுக. அம்மங்கலத்தால் உண்டான விக்கினத்துவம்சம் யாதோ, அத்துவம்சம், அச்சரீராவச்சின்ன ஆத்மாவிலேயே யுண்டாகின்றது, கேவல ஆத்மாவிலுண்டாகிறதில்லை. ஆகையால் அம்மங்கலம் ஸ்வஜன்னிய விக்கினத் துவம்சாவச்சேதகத் தன்மை வடிவ பரம்பரைச் சம்பந்தத்தால் அச்சரீரத்திலிருக்கின்றது. இவ்வாறு அவச்சேதகத் தன்மைச் சம்பந்தத்தால் அச்சரீரத்திலுள்ளதாகிய சமாப்திக்கு அச்சரீரத்தில் ஸ்வஜன்னிய விக்கினத்துவம்சாவச்சேதகத் தன்மை வடிவ சம்பந்தத்தாலிருக்கும் அம்மங்கலம் காரணமாகின்றது. ஈண்டு அவச்சேதக வடிவ சம்பந்தமோ அக்காரியத்தின் அவச்சேதகச் சம்பந்தமும், ஸ்வஜன்னிய விக்கினத் துவம்சாவச்சேதகத் தன்மை வடிவ சம்பந்தமோ அக்காரணத் தன்மையின் அவச்சேதகச் சம்பந்தமுமாம். அல்லது ஸ்வப்பிரதியோகி கடை எழுத்திற்கு அநுகூலமான முயற்சித் தன்மையாகிய சம்பந்தத்

தால் அச்சமாப்தி அந் நூலாசிரியோனது ஆத்மாவிலிருக்கின்றது. அம்மங்கலமும் அவ்வாத்மாவில் ஆசிரயத் தன்மை வடிவ சம்பந்தத்தாலிருக்கின்றது. ஈண்டுச் ஸ்வசப்தத்தால் அவ்விற்றெழுத்தின் துவம்சமாகிய சமாப்தியினைக் கொள்ளுக. அவ்விற்றெழுத்தின் துவம்ச வடிவ சமாப்திக்குப் பிரதியோகி யக்கடையெழுத்தோ அவ்வெழுத்திற்கு இயைந்த காரண வடிவமான பிரயத்தின வடிவமுயற்சி அந் நூலாசிரியனது ஆத்மாவில் சமவாய சம்பந்தமாக விருக்கின்றது, அவ்வாத்மாவில் ஞான வடிவ மங்கலமும் ஆசிரயத்தன்மைச் சம்பந்தமாகவிருக்கின்றது. ஆகையால் ஸ்வப்பிரதியோகியான கடை எழுத்திற்கு அநுகூலமான முயற்சியுடைமை வடிவ பரம்பரைச் சம்பந்தத்தால் ஆத்மாவிலிருப்பதாகிய அச்சமாப்திக்கு அவ்வாத்மாவில் ஆசிரயத் தன்மை வடிவ சம்பந்தத்தாலிருப்பதாகிய அம்மங்கலம் காரணமாகின்றது. ஈண்டுச் ஸ்வப்பிரதியோகி கடையெழுத்திற்கு அநுகூலமான முயற்சியுடைமை வடிவ சம்பந்தமோ அக்காரியத் தன்மையின் அவச்சேதகச் சம்பந்தமாம், ஆசிரயத்தன்மை வடிவ சம்பந்தம் அக்காரணத் தன்மையின் அவச்சேதகச் சம்பந்தமாம். இவ்வாறாகக்கூறிய சம்பந்தங்களால் ஜன்மாந்திரத்தின் மங்கலத்திற்காவது அல்லது இஜ்ஜன்மத்தின் மங்கலத்திற்காவது விக்கினத்துவம்சமூலமாக அந் நூன்முடிபெய்துதலின் காரணத் தன்மைச் சம்பவிக்கக் கூடும்.

௩௯. நவீனமதத்தில் விக்கினத் துவம்சத்தினதும் சமாப்தியினதும் சாமானாதி கரண்ணியத்தின் வர்ணனம்.

மங்கலத்திற்குச் சமாப்தியின் காரணமொப்பாமல் மங்கல ஜன்னிய விக்கினத்துவம்சத்திற்கே சமாப்தியின் காரணத்தன்மையை யொப்பும் நவீனையாயிகரோ விக்கினத் துவம்ச வடிவ காரணத்திற்கும், சமாப்தி வடிவ காரியத்திற்கும், இவ்வாறுகச் சாமானாதி கரண்ணியம் (ஒற்றிலக்கணம்) கூறுகின்றனர். ஸ்வப்பிரதியோகியாகிய கடை எழுத்திற்கு அநுகூலமான முயற்சியுடைமை வடிவ சம்பந்தத்தால் அச்சமாப்தி அந் நூலாசிரியனது ஆத்மாவிலிருக்கின்றது. அவ்வாத்மாவில் விக்கினங்களின் துவம்சமும் விசேஷணத் தன்மை வடிவச் சம்பந்தத்தாலிருக்கின்றது. ஈண்டுச் ஸ்வசப்தத்தால் ஈற்றெழுத்தின் துவம்சவடிவசமாப்தியினைக் கொள்ளுக. மற்றவற்றை முற்கூறியவாறே அறிந்துகொள்க. அபாவமாத்திரம் தனது அதிகரணத்தில் விசேஷணத்தன்மைச் சம்பந்தத்தாலேயே யிருக்கின்றது, ஆகையால் அவ்விக்கினங்களின் பிரத்துவம்சாபாவமும் அவ்வாத்மாவில் விசேஷணத் தன்மை வடிவ சம்பந்தத்தாலேயே யிருக்கின்றது, ஆகையால் ஸ்வப்பிரதியோகியான கடையெழுத்திற்கு அநுகூலமான முயற்சித்தன்மை வடிவ பரம்பரைச் சம்பந்தத்தால் அவ்வாத்மாவிலிருப்பதாகிய சமாப்திக்கு அவ்வாத்மாவில் விசேஷணத் தன்மை வடிவ சம்பந்தத்தாலிருக்கும் அவ்விக்கினத் துவம்சங் காரணமாகின்றது. இவ்வாறுய பரம்பரைச் சம்பந்தத்தால் விக்கினங்களின் அத்தியந்தாபாவத்திற்கும், விக்கினங்களின் பிராகபாவத்திற்கும், அச்சமாப்தியின் காரணத்தன்மை அறிதல் வேண்டும். ஈண்டுச் ஸ்வப்பிரதியோகியாகிய கடை எழுத்திற்கு அநுகூலமான முயற்சியுடைமை வடிவசம்பந்தமோ அக்காரியத்தன்மையின்

அவச்சேதகச்சம்பந்தமும், விசேஷணத் தன்மை வடிவ பிரசித்தமோ அக்கார ணத்தன்மையின் அவச்சேதகச் சம்பந்தமாம். கூறிய இம்முறைப்படி அம் மங்கல வடிவ காரணத்திற்கும், அவ்விக்கினத் அபாவ வாபிலாகர் சமர்த்தி வடிவ காரியத்திற்கும், அந்நூலாசிரியனது சரீரத்துடனேத்தான் அல்லது ஆத்மாவுடனேதான் சமானாதிகரண்ணியம் கூடும். ஆகையால் அம்மங்கலத் தில் விக்கினத்துவம்ச வாபிலாக அந்நூல் முடிவெய்துதலின் காரணத் தன் மைக் குற்றமில்லாததாம்.

சய. நூலில் கவி முதலியனவாக மங்கலத்தை யெழுதுவதாலாம் பயனது வர்ணனம்.

சங்கை :—முற்கூறிய முறைப்படி அம்மங்கலத்தில் நூல்முடிவெய்து மென் காரணத் தன்மையின் சித்திபுளதாக, நூலாசிரியன் நூல் விக்கினமில்லா மல் முடியும் பொருட்டு, நூன்முகத்தில் அம்மங்கலம் செய்யத்தக்கதாமெனி னும், அம்மங்கலத்தை நூன்முகத்தில் கவிமுதலிய வடிவங்களாலெழுதுவதில் ஓர் பயனுமின்றாம்.

சமாதானம் :—கவி முதலிய வடிவமாக நூன்முகத்தில் மங்கலத் தை யெழுதாவிடின் ஆத்திகபுருடன் அந்நூலாசிரியனிடத்து நாத்திகத்தன் மையினைச் சங்கித்து அந்நூலிற் பிரவிர்த்திக்கமாட்டான், ஆகையால் அந்நூ லில் ஆத்திகனுக்குப் பிரவிர்த்தியை யுண்டாக்கும் பொருட்டு அந்நூலாசிரிய னானவன் அந்நூன்முகத்தில் கவிமுதலிய வடிவங்களால் அம்மங்கலத்தை அவ சியமாய் வரைதல் வேண்டும், அல்லது மனதினாற் செய்யப்பட்ட ஈஸ்வர ஸ்மரணமுதலிய வடிவ மங்கலம் செய்தவருக்கே பிரதீதி யாகின்றது, மற்றவர்கட்குப் பிரதீதியாகாது நூன்முகத்தில் கவிமுதலிய வடிவமாக வரைந்த மங்கலம் மற்றவர் கட்கும் பிரதீதியாகின்றது. ஆகையால் இவ்வெமது மங்கலத்தைக்கண்டு, எமது சிஷ்யப் பிரசிஷ்ய ர்தியோரும் தாமியற்றும் நூன்முகத்தில் அம்மங்கலத்தைச்செய்கவென்று தமது சிஷ்யப் பிரசிஷ்யர்முதலியோர்க்கு அறிவுறுத்தற் பொருட்டும் அந்நூலாசிரியன் அந் நூன்முகத்தில் கவிமுதலிய வடிவங்களால் அம்மங்கலத்தை வரைதல் இன்றிய மையாமையேயாம்.

சக. வைசேடிக சாத்திரத்திலும் நியாய சாத்திரத்திலும் அத, தர்ம, பிரமாணம் என்னும் இப்பதங்களால் மங்கலத்தி னிருப்பின்து வர்ணனம்.

சங்கை :—வைசேடிக சாத்திரகர்த்தரான (ஆக்கியோரா)ன கணாத முனிவர் அச்சாத்திரத்தின் முதலில் கவி முதலிய வடிவங்களால் ஓர் மங்கலம் எழுதினாரில்லை, அவ்வண்ணமே நியாய சாத்திரகர்த்தா கௌதம முனிவரும் அச்சாத்திரத்தின் முதலில் கவி முதலிய வடிவங்களாக ஓர் மங்கலமுமெழு தினாரில்லை ஆகையால் அம்முனிவர்களிடத்திலும் நாத்திகத் தன்மையினைச் சங்கித்து ஆத்திகர்கட்கு அவர்கள் சாத்திரத்திற் பிரவிர்த்தி யுண்டாவதின் றாகவேண்டும்.

சமாதானம் :—கணாதமுனிவராருளிச்செய்த வைசேடிக சாத்திரத்தின் முதலில் "அதாதோ தர்மம் வ்யாக்யாஸ்யாம:" என்னுஞ் சூத்திரங் கூறப் பட்டிருக்கிறது. அச்சூத்திரத்தின் முதலிலுள்ள "அத" என்னும் சப்தம் யாதோ அவ்வத சப்தமே அம்மங்கலத்தை உணர்த்துவதாம். ஏனெனின், ஸ்மிருதியில் ஓங்காரத்திற்கும், அதவென்னுஞ் சப்தத்திற்கும் மங்கல வடிவத் தன்மையே கூறப்பட்டிருக்கிறது. அஃதெச் சுலோகம். "ஓங்காரஸ்சாதஸப்தஸ்ச த்வாவேதௌ ப்ரஹ்மண: புரா கண்டம் பித்வா விநிர்யாதௌ தஸ்மான் மாங்கலிகாவுபௌ" (இ-ள்.) ஓங்காரமும், அத என்னும் சப்தமுமா மிரண் டும், முன்னர் பிரஹ்மாவின் கண்டத்தைப் பேதித்து வெளிப்பட்டன. அக் காரணத்தால் அவ்விரண்டு சப்தங்கள் மங்கலத்தினையே உணர்த்துவனவாகின் றன. அல்லது ஈஸ்வரது நாமங்கள் கணக்கிடப்பட்டுள்ளவிடத்தும் தர்மமும் ஈஸ்வரது நாமமெனக் கூறப்பட்டுளது. ஆகையால் கூறிய அச்சாத்திரத் தில் எத்தர்மமென்னும் சப்தமிருக்கிறதோ அத்தர்மமென்னும் சப்தம் பர மேஸ்வரனை ஸ்மரிப்பதாவதால் மங்கலவடிவமேயாம்.

கௌதமமுனிவர் அருளிச் செய்த நியாய சாத்திரத்தின் முதலிலோ "ப்ரமாண ப்ரமேய ஸம்ஸய ப்ரயோஜந த்ருஷ்டாந்த ஸித்தாந்த அவயவ தர்க்க நிர்ணய வாத ஜல்ப விதண்டா ஹேத்வாபாஸ சல ஜாதி நிக்ரஹஸ்தானானாம் தத்வஜ்ஞானாந் நிஸ்ரேயஸாதிகம:" என இப்பதினாறு பதார்த்தங்களைப் பிரதிபாதிக்குஞ் சூத்திரங் கூறப்பட்டிருக்கிறது, அச்சூத்திரத்தின் முதலி லுள்ள பிரமாணமென்னும் சப்தமும் பரமேஸ்வரனது நாமத்தையே கூறிய தாம். ஆகையால் பரமேஸ்வரனை ஸ்மரிப்பதாவதால் பிரமாணமென்னும் அச்சப்தமும் மங்கலவடிவமேயாம். இவ்வாறிய ஈஸ்வர வாசக சப்த வடிவ மங்கலத்தைக் கண்ணுற்று ஆத்திக புருஷர்கட்கு நியாய வைசேடிகசாத்திரங் களில் பிரவிருத்தியுண்டாகின்றன.

சஉ. வஸ்து நிர்த்தேச முதலிய வடிவ மூவித மங்கலங்களின் வர்ணனம்.

சங்கை :—குரு, ஈஸ்வரர்களைக் குறித்து செய்யப்படும் நமஸ்காரம் (வணக்கம்) யாதோ அதற்கே மங்கல வடிவத் தன்மை சம்பவமாம். அந்ந மஸ்காரமின்றி கேவலம் குரு, ஈஸ்வரர்களின் ஸ்மரண மாத்திரத்திற்கு மங் கலவடிவத் தன்மை சம்பவியாது.

சமாதானம் :—அம்மங்கலம் நமஸ்கார மாத்திரமேயன்று. ஆறல் அம்மங்கலம் மூவிதமாகின்றன. முதலாவது வஸ்து நிர்த்தேச வடிவ மங்கல மும், இரண்டாவது நமஸ்கார வடிவ மங்கலமும், மூன்றாவது ஆசீர்வாத (வாழ்த்து) வடிவ மங்கலமுமாம். இனி இம்மூன்றின் லக்ஷணங் கூறுவாம்.

சா. வஸ்து நிர்தேச வடிவ மங்கலத்தின் வர்ணனம்.

"நீலாம்போஜதள ஸ்யாமம் ..." (இ-ள்.) நமஸ்காரமுதலியவைகளின்றி கேவலம் பரமேஸ்வர வடிவத்தின்

சங்கீர்த்தனம் (துதி) வஸ்து நிர்த்தேச வடிவ மங்கல மெனப்படும். நமஸ்கார வடிவ மங்கலத்திலும், ஆசீர்வாத வடிவ மங்கலத்திலும், அவ்வீஸ்வர வடிவ வஸ்துவின் சங்கீர்த்தனமிருக்கின்றது, என்றாலும் ஆண்டு நமஸ்கார மாயில்லாத, அல்லது விரும்பிய பொருளின் பிரார்த்தனை வாயிலாகவே அவ்வீஸ்வர வடிவ வஸ்துவின் சங்கீர்த்தன முண்டாகின்றது. ஆகையால் இவ்வஸ்து நிர்த்தேச வடிவ மங்கலத்தின் "லக்ஷணத்தில் நமஸ்காராதியின்றி" என்னும் பதத்தைக் கூறுவதால் இந்த லக்ஷணத்திற்கு அந்த நமஸ்கார வடிவ மங்கலத்திலும், ஆசீர்வாத வடிவ மங்கலத்திலும் அதிவியாப்தியுண்டாகாது.

சச. நமஸ்காரவடிவ மங்கலத்தின் லக்ஷணம்.

"ஸ்வாபேக்ஷோத்கர்ஷ-ப்ரகாரக-ஜ்ஞாநாநுகூல வ்யாபாரவிசேஷோ நமஸ்கார:" (இ-ள்.) நமஸ்காரத்திற்கு யோக்கியமான குரு, ஈஸ்வரன் முதலியவர்களைவிட நமஸ்காரஞ் செய்பவனிடத்துள்ள தாழ்ந்த தன்மையை யாவருக்கும் உணர்த்துவதாகிய நமஸ்கரிப்பவனது மனோ வாக்குக் காயங்களாலாய வியாபார விசேஷம் யாதோ அதனை நமஸ்கார வடிவ மங்கலமென்பர்.

சரு. ஆசீர்வாத வடிவ மங்கலத்தின் லக்ஷணம்.

"ஸ்வேஷ்டஸ்வஸம்பந்தி இஷ்டப்ரார்த்தநா வா ஆசீர்வாத:" (இ-ள்.) ஆசிரியன் தான் விரும்பிய பொருளையும், தனது சீடர்கள் விரும்பிய பொருளையும் அடைவதற்காகச் செய்யும் பரமேஸ்வரப் பிரார்த்தனையை ஆசீர்வாத வடிவ மங்கல மென்பர். ஆகையால் அவ்வைசேடிக சாத்திரத்திலும், நியாய சாத்திரத்திலும், நமஸ்கார வடிவ மங்கலத்திற்கும் ஆசீர்வாதவடிவ மங்கலத்திற்கும், அபாவமிருக்கினும் அவ்வஸ்து நிர்த்தேச வடிவ மங்கலம் அச்சாத்திரத்திலுமிருக்கின்றது.

சங்கை:—"லக்ஷண ப்ரமாணாப்யாம் வஸ்துஸித்தி:" (இ-ள்.) இலட்சணம், பிரமாணமாமிவ்விரண்டினாலேயே வஸ்துவின் சித்தியுண்டாகின்றதென்பது சாத்திரக்காரர்கள் நியமமாம். ஆண்டு மங்கலத்தின் சொருபமோ முற்கூறிய முறைப்படி பிரத்தியக்ஷமுதலிய பிரமாணங்களால் சித்தமாம். ஆனால் அம்மங்கலத்தின் லக்ஷணம் யாதென்னுஞ் சங்கை அடைப்பட, அல்லது முன்னர் வஸ்து நிர்த்தேசமுதலிய மூவித மங்கலத்திற்கு வெவ்வேறு லக்ஷணங் கூறப்பட்டது, அம்மூன்றின் விசேஷ லக்ஷணம் சம்பவிக்கும். இடத்து அம்மங்கலத்திற்கோர் சாமான்னிய லக்ஷணஞ் சித்திக்க வேண்டும், அச்சாமான்னியலக்ஷணமின்றி விசேஷலக்ஷணம் சம்பவியாதென்னும் சங்கையுண்டாக இனி அம்மங்கலத்தின் சாமான்னிய லக்ஷணங் கூறுவாம்.

சசு. மங்கலத்தின் சாமான்னிய லக்ஷணம்.

"விக்நபிந்நத்வே ஸதி விக்நத்வம்ஸப்ரதிபந்தகாபாவபிந்நத்வே ஸதி ப்ராரிப்ஸித விக்நத்வம்ஸாஸாதாரணகாரணம் மங்கலம்" (இ-ள்.) விக்கினங்களி

னும் வேறானதாய், விக்கினத்துவம்சப் பிரதிபந்தகாபாவத்தினும் வேறானதாமான ஆரம்பத்தினிச்சைக்கு விஷயமாகிய காரியத்தின் விக்கினத்துவம்சத்திற்கு அசாதாரண காரணமானதை மங்கலமெனப்படும். ஆண்டுக்கூறிய அம்மங்கலம் விக்கினங்களினும் வேறானதாம், விக்கினத்துவம்ச வடிவ காரியத்தைத் தோற்றுவிப்பதுமான பிரதிபந்தகாபாவத்தினும் வேறானதாம், ஆரம்பத்தினிச்சைக்கு விஷயமாகிய நூலின் பிரதிபந்திக்கும் விக்கினங்களின் துவம்சத்திற்கு அசாதாரணகாரணமுமாம். ஆகையால் மங்கலத்திற்குக்கூறிய இந்தலக்ஷணஞ் சம்பவிக்கின்றது. ஆண்டுக் கூறிய லக்ஷணத்தில் "விக்கினங்களினும் வேறானதாம்" என்னும் பதங்களைக் கூறாவிடின் அவ்விக்கினங்களிலேயே அந்த லக்ஷணத்திற்கு அதிவியாப்தியுண்டாம். ஏனெனின், அந்த விக்கினம் அந்தவிக்கினத்துவம்சத்தினையுண்டாக்கும் பிரதிபந்தகாபாவத்தினும் வேறானதாம், ஆரம்பிக்க விரும்பிய விக்கினத்துவம்சத்தின் அசாதாரண காரணமுமாம். எங்ஙனம்: கடத்தின் துவம்சத்தில் தண்டத்தாலடித்தல் முதலியனவும், அக்கட வடிவ பிரதியோகியும் தனது துவம்சத்தில் அசாதாரண காரணங்களாகின்றனவோ, அங்ஙனமே அவ்விக்கினத் துவம்சத்தில் அவ்விக்கினவடிவ பிரதியோகியும் அசாதாரண காரணமாகின்றது. அவ்விக்கினங்களில் அந்த லட்சணத்தின் அதிவியாப்தியை நிவர்த்திச்செய்யும் பொருட்டு அந்தலக்ஷணத்தில் "விக்கினங்களினும் வேறானதாம்" என்னும் பதங்கள் கூறப்பட்டன. ஆண்டுத் தனது பேதம் தன்னிடத்தி லிருப்பதில்லை. தன்னினும் வேறான வஸ்துவில் தனது பேதமிருக்கிறது. அவ்விக்கினங்களின் பேதம் அவ்விக்கினங்களிலிருப்பதில்லை, ஆகையால் அவ்விக்கினங்களில் அம்மங்கலத்தின் லக்ஷணத்திற்கு அதிவியாப்தியுண்டாகாது. அன்றியுங் கூறிய அந்த லக்ஷணத்தில் "விக்கினத்துவம்சப் பிரதிபந்தகாபாவத்தினும் வேறானதாம்" என்னும் பதங்கள் கூறாவிடின், அவ்விக்கினத் துவம்சப் பிரதிபந்தகாபாவத்தினிடத்தே அம்மங்கலத்தின் லக்ஷணத்திற்கு அதிவியாப்தியுண்டாம். ஏனெனின், பிரதிபந்தகமிருக்க ஓர் காரியத்தினுற்பத்தி யுண்டாவதின்று. ஆகையால் அந்தப் பிரதிபந்தகாபாவமும் காரியத்தினுற்பத்தியில் காரணமாகின்றது. அன்றியும் அவ்விக்கினங்களின் துவம்சமு மோர் காரியவடிவமாம். ஆகையால் அவ்விக்கினத் துவம்சத்தி னுற்பத்தியினும் பிரதிபந்தகாபாவம் காரணமேயாம். அந்தப் பிரதிபந்தகாபாவம் அவ்விக்கினங்களினும் வேறுமாம். அத்தகைய விக்கினத் துவம்சத்தின் காரணமாகியபிரதிபந்தகாபாவத்தில்அந்தலக்ஷணத்தின் அதிவியாப்தியை நிவர்த்திச்செய்யும்பொருட்டு அந்த லக்ஷணத்தில் "விக்கினத் துவம்சப் பிரதிபந்தகாபாவத்தினும் வேறானதாம்" என்னும்பதங்கள் கூறப்பட்டன. அவ்விக்கினத் துவம்சப் பிரதிபந்தகாபாவம் தன்னினும்வேறன்று. ஆகையால் அதனிடத்துக்கூறிய அந்த லக்ஷணத்திற்கு அதிவியாப்தி யுண்டாவதின்று. அன்றுங் கூறிய அம்மங்கலத்தின் லக்ஷணத்தில் "ஆரம்பிக்க விரும்பிய" என்னும் பதங்கள் கூறாவிடின் காரியாரம்பத்தில் (மறையின்பொருட்டுச்செய்யும் வேள்வியில்) அந்த லக்ஷணத்திற்கு அதிவியாப்தியுண்டாம். ஏனெனின், அக்காரியாரம்பம் அவ்விக்கினங்களினும் வே

னதும், அவ்விக்கினத் துவம்சப் பிரதிபந்தகா பாவத்திலும் வேறானதும் மன்றையைத் தடுக்கும் விக்கினங்களின் துவம்சத்திற்கு அசாதாரண காரணமுமாம். அக்காரியாகத்தில் அந்த லக்ஷணத்தின் அதிவியாப்தியை நிவிர்த்தி செய்யும்பொருட்டு அந்த லக்ஷணத்தில் "ஆரம்பிக்கவிரும்பிய" என்னும் பதங்கள் கூறப்பட்டன. ஆரம்பம் செய்யும் இச்சைக்கு விஷயமான காரியம் நூலேயாம். சண்டிப் பிரசங்கத்தில் அதனைப் பிரதிபந்திக்கும் விக்கினங்களின் துவம்சத்திற்கு அசாதாரண காரணம் அம்மங்கலமேயாம். காரியாக மன்று ஆகையால் 'ஆரம்பிக்க விரும்பிய' என்னும் பதத்தைக் கூறியதால், அக்காரியாகத்தில் அந்த லக்ஷணத்திற்கு அதிவியாப்தியுண்டாவதின்று. அவ்வது அம்மங்கலத்தின் லக்ஷணத்தில் "அசாதாரணம்" என்னும் பதம் கூறாவிடின் அந்த லக்ஷணத்திற்கு காலம், அதிர்ஷ்டம் முதலிய சாதாரண காரணங்களில் அதிவியாப்தியுண்டாம். ஏனெனின், அக்காலம் அதிர்ஷ்டமுதலியவைகள் அவ்விக்கினங்களிலும் வேறானதும், அவ்விக்கினத்துவம்சப் பிரதிபந்தகாபாவத்திலும் வேறானதும், ஆரம்பிக்க விரும்பிய நூலின் பிரதிபந்தக விக்கினங்களின் துவம்சத்திற்குக் காரணமுமாம். அக்கால, அதிர்ஷ்ட முதலியவைகளில் கூறிய அந்த லக்ஷணத்தின் அதிவியாப்தியை நிவிர்த்தி செய்யும் பொருட்டு அந்த லக்ஷணத்தில் அசாதாரணமென்னும் பதங்கூறப்பட்டது. ஆண்டு ஈஸ்வரன், ஈஸ்வரனது ஞானம், இச்சை, முயற்சி, தேசம், காலம், அதிர்ஷ்டம், பிராகபாவம், பிரதிபந்தகாபாவமா மென்பனும் காரிய மாத்திரத்திற்குச் சாதாரண காரணங்களாம். அதாவது, இவ்வொன்பான் காரணங்களின்றி ஓர் காரியமும் உற்பத்தியாவதின்று. அந்த லக்ஷணத்தில் காரணத்திற்கு அசாதாரண மென்னும் விசேஷணத்தைக் கூறுவதால், காலம், அதிர்ஷ்ட முதலிய சாதாரண காரணங்களில் கூறிய அம்மங்கலத்தின் லக்ஷணத்திற்கு அதிவியாப்தியுண்டாவதின்று. மங்கலவாதம் முற்றுப்பெற்றது.

சஎ. கேவலம் தத்துவ ஞானத்தான் மோக்ஷத்தினது பிராப்தியின் வர்ணனம்.

இனியிந்நூலிற்கூறப்படுவதற்கு யோக்கியமான த்ரவிய முதலிய பதார்த்தங்களுள்ளே, அப்பதார்த்தங்களின் நிருபணத்திற்கு எவ்வாற்றால் தத்துவ ஞானத்திலுபயோகமும், அத்தத்துவ ஞானத்திற்கு எவ்வாற்றால் மோக்ஷத்தின் சாதனத் தன்மையுமாமோ, அவ்வெவ்வாவகையினையும் விரிவாக நிருபிப்பாம். சுருதியில் கேவலம் தத்துவஞானத்தானேயே மோக்ஷத்தினடைவு கூறப்பட்டிருக்கிறது. ஆண்டுச்சுருதி "தமேவ விதித்வாதி ம்ருத்யுமேதி நாந்ய: பந்தா வித்யதேऽயநாய" (இ-ள்.) ஆத்மாவை அறிந்தே அதிகாரிபுருஷன் துக்கத்தின் அத்தியந்த நிவிர்த்தி வடிவ மோக்ஷத்தையடைகின்றான். அம்மோக்ஷத்தினது பிராப்தியின்பொருட்டு அவ்வாத்ம ஞானமல்லாமல் வேறோருபாயமுமின்று. அவ்வாத்மஞானமொன்றே அம்மோக்ஷத்தின் அடைவிற்கு உபாயமாம், என்பவைமுதலிய அனேக சுருதிகளில் கேவலம் ஆத்ம ஞானத்தானேயே மோக்ஷத்தினடைவு கூறப்பட்டுளது.

சஅ. தத்துவ ஞானமின்றியே காசிமரணம், பிரயாகைமரணம், கர்மம், உபாசனை யிவை முதலியவைகளால் முக்தியினது அடைவு.

சங்கை:—கேவலம் ஆத்மஞான மொன்றினானேயே முக்தியுண்டாகின்றது, வேறோருபாயத்தா லுண்டாகிறதில்லை என்னு நியமம் சம்பவிப்பதின்று. ஏனெனின் சுருதி, ஸ்மிருதிகளில் அம்முக்தியை அடையும் பொருட்டு அத்தத்துவஞானமின்றி வேறு அனேக உபாயங்களுங் கூறப்பட்டிருக்கின்றன.

ஆண்டு "காசீமரணான்முக்தி:" (இ-ள்.) அதிகாரி புருஷனுக்கு ஸ்ரீகாசியில் மரிப்பதால் முக்தியின் பிராப்தி யுண்டாகின்றது என்னும் இச்சுருதியோ காசியில் மரித்தவனுக்கேயே முக்தியின் அடைவு கூறியிருக்கிறது.

"உபாப்யாமேவ பக்ஷாப்யாம் யதாகே பக்ஷிணாம் கதி: ததைவ ஜ்ஞாநகர்மப்யாம் ப்ராப்யதே ப்ரஹ்ம சாச்வதம்" (இ-ள்.) எங்ஙனம் ஆகாசத்தில் பக்ஷிகள் இரண்டு பக்ஷங் (இறக்கை) களாலேயே பறக்கின்றனவோ ஓர் பக்ஷத்தால் பறப்பதின்றோ, அங்ஙனமே அதிகாரி புருஷனுக்கு ஞானம் கர்மமென்னு மிவ்விரண்டினானேயே மோக்ஷத்தினடைவு உண்டாகின்றது, கேவலம் கர்மமொன்றினால், அல்லது ஞானமொன்றினால் மோக்ஷத்தினடைவு உண்டாகிறதில்லை. என்னுமிவைமுதலிய வசனங்களிலோ ஞானம், கர்ம மென்னுமிரண்டின் சமுச்சயத்தி (கூடியது) னானேயே முக்தியினடைவு கூறப்பட்டிருக்கிறது. "கர்மணைவ ஹி ஸம்ஸித்திமாஸ்திதா ஜநகாதய:" (இ-ள்.) ஜனகர் முதலியோர் கர்மத்தினானேயே மோக்ஷத்தை அடைந்தார்கள். இவைமுதலிய வசனங்களால் கேவலம் கர்மத்தினானேயே முக்தியின்பிராப்தி கூறியிருக்கின்றது. அன்றியும், "ப்ரஹ்மஜ்ஞாநாத் ப்ரயாகே வா மரணாத் ... ஸ்நாநாத்வா கோமத்யாம் க்ருஷ்ணஸந்நிதௌ" (இ-ள்) இவ்வதிகாரி புருஷன் பிரஹ்ம ஞானத்தால் அல்லது பிரயாகையில் மரித்ததால், அல்லது ஸ்ரீ கிருஷ்ண பகவானது சமீபத்திலுள்ள கோமதி தீர்த்தத்தின் ஸ்நானமாத்திரத்தால், முக்தியை அடைகின்றான். இச்சாஸ்திர வசனம் பிரஹ்ம ஞானத்தாலும், பிரயாகையில் மரித்தலாலும் கோமதியின் ஸ்நானத்தாலும் முக்தியின் அடைவு கூறியிருக்கிறது. சில சுருதிகளிற் சகுணப் பிரஹ்மத்தி னுபாசனையாலும் முக்தியினடைவு கூறியிருக்கின்றது, ஆகையால் ஆத்ம ஞானத்தினானேயே முக்தியுண்டாகிறது வேறுபாயத்தா லுண்டாகிறதில்லை யென்னும் நியமம் சம்பவியாது.

சகூ. அக்காசிமரணம், கர்மம், உபாசனை முதலியவைகட்குத் தத்துவ ஞானத்தி லுபயோகத்தின் வர்ணனம்.

சமாதானம்:—"நாந்ய: பந்தா வித்யதேऽயநாய" அவ்வாத்ம ஞானமன்றி வேறுவழியில்லையென முற்கூறிய சுருதி அம்மோக்ஷத்தினடைவில் அவ்வாத்ம ஞானமன்றி வேறு கர்மம், உபாசனைமுதலிய வெல்லா வுபாயங்களையும் நிஷேதிக்கின்றது. ஆகையால் எங்ஙனம் அவ்வாத்மஞானவடிவ வத்து

ஞானத்திற்கு நேராக மோக்ஷத்தின் சாதனத்தன்மை யுண்டோ அங்ஙனம் கர்ம முதலியவைகட்கு நேராக மோக்ஷத்தின் சாதனத் தன்மை யில்லை. ஆனால் அந்த தத்துவஞானத்திலேயே அக்கர்மாதிகட்குச் சாதனத்தன்மை யிருக்கின்றது. ஆண்டுக் காசியில் மரித்த புருஷனுக்கு மஹாதேவரி னுபதேசத்தால் தத்துவ ஞானமுண்டாகின்றது. அத்தத்துவ ஞானத்தால் முக்தியி னடைவு உண்டாகின்றது. இவ்வாறாக நிஷ்காமகர்மமும் தத்துவஞானத்தைப் பிரதிபந்திக்கும் பாபங்களின் துவம்சவாயிலாக அத்தத்துவ ஞானத்திற்கே காரணமாம். அங்ஙனமே அப்பிரயாகையில் மரித்தலும், கோமதி ஸ்நானமும், சகுணப் பிரஹ்மத்தி னுபாசனையுமாம் யாவும் தத்துவ ஞானத்திற்கே சாதனங்களாம். நேராக முக்திகருச் சாதனமன்று. தத்துவஞான மொன்றே நேராக முக்திக்குச் சாதனமாம். அத்தத்துவ ஞானத்தில் காசிமரண முதலிய வுபாயங்கள் உபயோகிகளாம். இவ்வாறாய பரம்பரை யுபயோகத்தின் அங்கீகாரத்தினாலேயே சாத்திரத்தில் காசிமரண முதலியவைகட்கு முக்தியின் சாதனங் கூறப்பட்டிருக்கிறது. ஆகையால் கேவல தத்துவஞானத்தால் மோக்ஷத்தை யொப்புவதால் அவ்வசனங்கட்கு விரோதமுண்டாவதின்று.

௩௰. கர்மத்தில் மோக்ஷத்தினது சாதனத் தன்மையின் கண்டனம்.

அல்லது வாதி கேவலம் கர்மத்தினையே மோக்ஷத்தின் சாதனமாக வொப்பின் அவ்வாதியை இதுவினவுவாம். சன்னியாசிக்கு சாஸ்திரமானது விதித்துள்ள பிக்ஷையின் பொருட்டுத் திரிதல்முதலிய கர்மங்க ளியாவையோ அக்கர்மங்கட்கு மோக்ஷத்தின் சாதனத்தன்மையுளவா? அல்லது. கிருகஸ்தனுக்கு சாஸ்திரமானது விதித்துள்ள அக்கினி ஹோத்திராதி கர்மங்க ளியாவையோ அக்கர்மங்கட்கு மோக்ஷத்தின் சாதனத்தன்மையுளவா?

ஆண்டுச் சன்னியாசியின் கர்மங்கட்கு மோக்ஷத்தின் சாதனத் தன்மையாமென்னும் முதற்பக்ஷத்தை வாதி அங்கீகரிக்கின் பிக்ஷையின்பொருட்டுத் திரிதல் முதலிய சன்னியாசியின் கர்மங்களில் கிருகஸ்தனுக்கு அதிகாரமின்றாம். ஆகையால் அக்கிருகஸ்தனுக்கு முக்தியுண்டாவதின்றாகவேண்டும். சாத்திரத்திலோ அக்கிருகஸ்தனுக்கும் முக்திகூறப்பட்டிருக்கின்றது. ஆண்டுச் சாத்திரவசனம் "கர்மணைவ ஹி ஸம்ஸித்திமாஸ்திதா ஜநகாதய: । ஶ்ராத்தக்ருத் ஸத்யவாதீ ச க்ருஹஸ்தோऽபி விமுச்யதே" (இ-ள்.) ஜனகர் முதலிய கிருகஸ்தர்கள் நிட்காம கர்மங்களினாலேயே மோக்ஷத்தை யடைந்தார்கள். சிரார்த்த முதலிய கர்மங்களைச் செய்பவனும், சத்திய முரைப்போனுமான கிருகஸ்தனும் முக்தியையடைகின்றான். சன்னியாசியின் கர்மத்திற்கே மோக்ஷத்தின் சாதனத்தன்மையொப்பின் கிருகஸ்தனுக்கு முக்தியைக்கூறுவதான இவ்வெல்லா வசனங்களும் விருத்தமாகையால் அச்சன்னியாசியின் கர்மத்திற்கு மோக்ஷத்தின் சாதனத்தன்மை சம்பவியாது. கிருகஸ்தரின கர்மங்கட்கே மோக்ஷத்தின் சாதனத் தன்மையாமென்று மிரண்டாவது பக்ஷத்தை வாதி அங்கீகரிக்கின் அந்தக் கிருகஸ்தரின் அக்கினிஹோத்திரமுதலிய கர்மங்களில் சன்னியாசிகட்கு அதிகாரமின்றாகையால் அச்சன்னியாசிகட்கு முக்தி

யின்றாக வேண்டும். அச்சன்னியாசிகட்கு முக்தியின் அடைவு சுருதி ஸ்மிருதிகளில் பிரசித்தமே. ஆகையால் கிருகஸ்தரின்கர்மங்கட்கே மோக்ஷத்தின் சாதனத் தன்மை சம்பவியாது. எங்ஙனம் சொர்க்கமுதலிய சுகங்களில் விலக்ஷணத் தன்மையுண்டோ, அங்ஙனம் முக்தியில் ஓர் விலக்ஷணத் தன்மையுமின்று. அவ்விலக்ஷணத் தன்மையைக் கொண்டு விஜாதீய முக்திக்கு சன்னியாசிகளின் கர்மங்கட்கும் கிருகஸ்தர்களின் கர்மங்கட்கும் காரணத் தன்மையுண்டு. ஆகையால் அக்கர்மங்கட்கு நேராக மோக்ஷத்தின் சாதனத் தன்மை சம்பவியாது, அல்லது "தமேதம் வேதாநுவசநேந ப்ராஹ்மணா விவிதிஷந்தி யஜ்ஞேந தாநேந தபஸாऽநாஶகேந" (இ-ள்.) அதிகாரிபிராமணன் இவ்வாத்மாவை வேதாத்தியயனம், வேள்வி, தானம், தவமிவைமுதலிய கர்மங்களால் அறிவதற்கு இச்சிக்கின்றான். இச்சுருதியில் அவ்வேள்வி தான முதலிய கர்மங்கட்கு ஆத்மஞானத்தினிச்சா வடிவ * விவிதிஷைக்கு அல்லது அவ்வாத்ம ஞானத்திற்கே காரணத் தன்மையைக் கூறப்பட்டிருக்கின்றது. மோக்ஷத்தின் காரணத் தன்மைக் கூறப்படவில்லை. அன்றியும் "ந கர்மணா ந ப்ரஜயா தநேந த்யாகேநைகே அம்ருதத்வமாநஶு:" (இ-ள்.) முன்னிருந்த வித்துவான்கள் அக்கினிஹோத்திர முதலிய கர்மங்களாலும், புத்திரர்முதலிய பிரஜைகளாலும், சுவர்ண முதலிய தனங்களாலும், மோக்ஷத்தை அடைந்தனரல்லர். ஆனால் அக்கர்ம முதலியவைகளின் தியாக பூர்வகமான தத்துவ ஞானத்தினாலேயே மோக்ஷத்தை அடைந்துள்ளார். இச்சுருதி அம்முக்தி யடைவின் பொருட்டு அக்கர்மங்களை நிஷேதஞ் செய்கின்றது. இக்காரணத்தினாலும் அக்கர்மங்கள் அம்மோக்ஷத்திற்குச் சாதனமன்று. ஆனால் தத்துவஞானமொன்றே அம்மோக்ஷத்திற்குச் சாதனமாமென்னும் நியமம் சித்தமாயிற்று.

௩௧. மோக்ஷத்திற்கு ஏதுவாகிய தத்துவஞானத்தின் சொருப வர்ணனம்.

ஆத்மாவினை தேகம், இந்திரியம் முதலிய சர்வ அனாத்ம பதார்த்தங்களினும் வேறாக அறிவதைத் தத்துவஞானமெனப்படும். ஈண்டு ஆத்ம சப்தத்தால் ஜீவாத்மா, ஈஸ்வர வடிவ பரமாத்மாவாமிரண்டையுங் கொள்ளுக. ஒன்றைக் கொள்ளற்க. ஏனெனின் "ஆத்மாநம் சேத்விஜாநீயாதயமஸ்மீதி பூருஷ: । கிமிச்சந் கஸ்ய காமாய ஶரீரமநுஸஞ்ஜ்வரேத்" என்னும் இச்சுருதியில் ஜீவாத்மாவின் ஞானமே மோக்ஷத்தின் காரணமெனப் பட்டது. அன்றியும் "தமேவ விதித்வாऽதிம்ருத்யுமேதி" என்னும் இச்சுருதியில் பரமாத்மாவின் ஞானமே மோக்ஷத்தின் காரணமெனப்பட்டது. கேவலம் ஜீவாத்மாவின் ஞானத்திற்கே மோக்ஷத்தின் காரணமொப்பின், பரமாத்மாவின் ஞானத்தால், மோக்ஷத்தின் அடைவைக்கூறிய அச்சுருதி அசங்கதமாகும். அல்லது கேவலம் பரமாத்மாவின் ஞானத்திற்கே மோக்ஷத்தின் காரணமொப்பின் ஜீவாத்மாவின் ஞானத்தால் மோக்ஷத்தின் அடைவைக் கூறிய சுருதி அசங்கதமாகும். ஆகையால் ஓரோர் ஞானம் மோக்ஷத்தின்

* விவிதிஷை - ஞானத்திற்கு முற்றோன்றும் அவா.

காரணமன்று. ஆனால் தேகாதி ஜடபதார்த்தங்களினும் வேறு வடிவமாயுள்ள ஜீவாத்மாவினதும் பரமாத்மாவினதுமாம் இரண்டின் தத்துவஞானமே அம்மோக்ஷத்தின் காரணமாம்.

௫௨. தத்துவஞானத்தின் சிரவணமுதலிய சாதனங்களின் வர்ணனம்.

அத்தகைய ஆத்மஞானத்தின் பிராப்தி, சிரவணம், மனனம், நிதித்தியாசனமாம் மூன்று சாதனங்களாலேயே யுண்டாகின்றது. ஆண்டுச் சுருதி "ஆத்மா வா அரே த்ரஷ்டவ்ய: ச்ரோதவ்யோ மந்தவ்யோ நிதித்யாஸிதவ்ய:" (இ-ள்.) பிருகதாரண்ணியமென்னும் உபநிஷத்தில் யாஞ்ஞவல்கிய முனியானவர் தனது காதலியான மைத்ரேயிக்கு இவ்வசனங்கூறினர். ஓ மைத்திரேயி! ஆத்மா காணத்தக்கது. அதாவது ஆத்மசாக்ஷாத்கார மோக்ஷவடிவ இஷ்டத்திற்குச் சாதனமாம். ஆகையால் முமுக்ஷுக்கள் அவ்வாத்மசாக்ஷாத்காரத்தை அவசியமாய்ச் சம்பாதிக்கவேண்டும். ஆண்டு அவ்வாத்மசாக்ஷாத்காரத்திற்குச் சாதனம் யாது என்னுஞ் சங்கை பிரசப்தமாக அந்த யாஞ்ஞவல்கிய முனிவர் அச்சாதனங்களைக் கூறுகின்றனர். ஓ மைத்திரேயி! இவ்வாத்மா கேட்கத்தக்கதும், மனனஞ் செய்யத்தக்கதும், நிதித்தியாசனஞ் செய்யத்தக்கதுமாம். அதாவது ஆத்மாவின் சிரவண மனன நிதித்தியாசனங்களும் அவ்வாத்ம சாக்ஷாத்கார வடிவ இஷ்டத்தின் சாதனங்களாம். ஆகையால் அவ்வாத்ம சாக்ஷாத்காரத்தின் இச்சையுடைய புருஷன் சிரவணம், மனனம், நிதித்தியாசனமாம் மூன்றினை அவசியமாய்ச் சம்பாதிக்கவேண்டும். இச்சுருதியானது ஆத்ம தத்துவ ஞான சாக்ஷாத்காரத்தின் பிராப்தியின் பொருட்டு, சிரவணம், மனனம், நிதித்தியாசனமென்னு மூன்று சாதனங்களை விதிக்கின்றது. இனி முறையாக அச்சிரவணமுதலிய மூன்றின் லக்ஷணங் கூறுவாம்.

௫௩. சிரவணத்தின் லக்ஷணம்.

ஆண்டு "ச்ரோத்ரிய ப்ரஹ்மநிஷ்ட குருமுகாத் வேதாந்தவாக்யார்த்த விஜ்ஞாநம் ச்ரவணம்" இ-ள். எக்குரு சுரோத்திரியாகி அதாவது நானா யுக்திகளால் சிஷ்யரது ஐயத்தை நிவர்த்திச் செய்வதிற் சமர்த்தராயும், பிரஹ்மநிஷ்டராகி அதாவது ஆத்ம தத்துவ சாக்ஷாத்காரமுடையவருமாயுள்ளரோ அத்தகைய சுரோத்திரிய பிரஹ்மநிஷ்ட குருவின் முகத்தினின்றும் சுருதி வாக்கியங்களின் அர்த்தத்தை அறிவது சிரவணமாம்.

௫௪. மனனத்தின் லக்ஷணம்.

"ச்ருதஸ்ய வாக்யஸ்ய ப்ரமேயாவகாஹி யுக்திபிரநுசிந்தநம் மநநம்" (இ-ள்.) அச்சிரவணஞ் செய்யப்பட்ட அர்த்தத்திற்குச் சாதகமான பிரமாணங்களையும் அவ்வர்த்தத்தினும் விபரீதமான அர்த்தத்தைப் பாதிக்கும் பிரமாணங்களையும் விளக்குதல் வடிவயுக்திகளால் சிரவணஞ்செய்யப்பட்ட அர்த்தத்தினை மீண்டு மீண்டுஞ் சிந்திப்பது மனனமாம். இவ்விதமாகச் சிரவணம், மனனங்களின் சொரூபம் சுருதிகளினும்

கூறப் பட்டிருக்கிறது. ஆண்டுச் சுருதி "ச்ரோதவ்ய: ச்ருதிவாக்யேப்யோ மந்தவ்யச்சோபபத்திபி:" (இ-ள்.) ஆத்மா சுருதி வாக்கியங்களால் சிரவணஞ் செய்யயோக்கியமும், சாதக பாதக பிரமாணங்களின் விளக்க வடிவ யுக்திகளால் மனனஞ் செய்ய யோக்கியமுமாம்.

௫௫. நிதித்தியாசனத்தின் லக்ஷணம்.

"ச்ருதார்த்தஸ்ய நைரந்தர்யேண தீர்க்ககாலாநுஸந்தாநம் நிதித்யாஸநம்" (இ-ள்.) சிரவணஞ்செய்யப்பட்ட அர்த்தத்தினை நிரந்தரம் (இடைவிடாது) நீண்டகால பரியந்தம் அநுசந்தானஞ் செய்வது நிதித்தியாசனமாம். இவ்வாறுய சிரவணம், மனனம், நிதித்தியாசனங்களால் அதிகாரிக்குத் தத்துவ ஞானத்தின் அடைவு உண்டாகின்றது.

௫௬. நிஷ்காமகர்மம், ஆத்மசுத்தி, வைராக்கியம், சிரவண முதலியன, தத்துவஞானம், மோக்ஷமா மிவைகளில் முன் முன்னுள்ளவைகள் பின் பின்னுள்ளவைகட்குச் சாதனத்தன்மையின் வர்ணனம்.

வைராக்கியமின்றி விஷய விருப்புடையவனுக்கு அச்சிரவண முதலியவைகளில் பிரவிருத்தி சம்பவியாது. ஆகையால் அதிகாரியானவன் சிரவண முதலியவைகளை அடையும்பொருட்டு முதலில் வைராக்கியத்தைச் சம்பாதிக்கவேண்டும். இவ்வுலக விஷயங்களாலும், சொர்க்கமுதலிய வுலகங்களின் விஷயங்களாலும் உண்டான எல்லாச் சுகங்களையும், அச்சுகங்கட்குச் சாதனங்களான அனைத்தினும் இச்சையில்லாத் தன்மையினை வைராக்கிய மெனப்படும். அத்தகைய வைராக்கியம் அசுத்த ஆத்மாவிலுண்டாகாது, சுத்த ஆத்மாவிலேயே அவ்வைராக்கிய முண்டாகின்றது. ஆகையால் அவ்வைராக்கியத்தை யடையும் பொருட்டு அதிகாரியானவன் ஆத்மாவின் சுத்தியைச் சம்பாதிக்கவேண்டும். பாபகர்மங்களின் க்ஷயத்தினை ஆத்ம சுத்தியென்பர். அவ்வாத்மசுத்தி நிஷ்காம கர்மங்களின்றி யுண்டாகாது. ஆகையால் இக்கிரமம் சித்தித்தது; நிஷ்காமகர்மங்களால் ஆத்மசுத்தியுண்டாம், அவ்வாத்மசுத்தியால் விஷயங்களில் வைராக்கியமுண்டாம், அவ்வைராக்கியத்தால் சிரவணமுதலியவைகளிற் பிரவிர்த்தியுண்டாம், அச்சிரவணாதிகளால் தத்துவஞான முண்டாம், அத்தத்துவ ஞானத்தால் நிச்சிரேயச வடிவ மோக்ஷமுண்டாகின்றது.

சங்கை:—எங்ஙனம் காசியில் மரணமடைதல் முதலியவைகட்குச் சாக்ஷாத்தாக மோக்ஷத்தின் சாதனத் தன்மையின்றோ அங்ஙனமே அத்தத்துவ ஞானத்திற்கும் சாக்ஷாத்தாக மோக்ஷத்தின் சாதனத்தன்மையின்று. ஏனெனின் தத்துவஞானிகட்கும் சம்சாரத்தில் அவஸ்திதி (அகப்பட்டிருத்தல்) காணப்படுகின்றது. அத்தத்துவ ஞானம் சாக்ஷாத்தாக மோக்ஷத்திற்குச் சாதனமாயின், தத்துவஞானிகட்குச் சம்சாரத்தில் அவஸ்திதி யுண்டாகாததாக வேண்டும்.

௫௭. ஜீவன்முக்திவடிவ அபரமோக்ஷத்தினதும் விதேகமுக்திவடிவ பரமோக்ஷத்தினது வர்ணனம்.

சமாதானம்:—அம்மோக்ஷம் இருவிதமாகின்றன. ஒன்றோ பரமோக்ஷமும், மற்றையது அபரமோக்ஷமுமாம். ஜீவன்முக்தியினை அபரமோக்ஷமென்றும், விதேகமுக்தியினைப் பரமோக்ஷமென்றுங் கூறப்படும். ஆண்டுச் சிரவணமுதலிய சாதனங்களால் நிச்சயஞ் செய்யப்பட்ட ஆத்மாவின் நிஜ சொரூபமும், இடைவிடாதஞானாப்பியாசத்தால் தேகாதிகளிடத்தில் ஆத்மத் தன்மைப்புத்தி வடிவ மித்தியாஞான நிவிர்த்தியுமுடைய பிராரப்த கர்மத்தின் போக்தாவாகிய தத்துவ வேத்தாவிற்குச் சீவன் முக்தி வடிவ அபரமோக்ஷமோ தத்துவஞானத்திற்குப் பின்னரே பிராப்தமாகின்றது.

௫௮. விதேகமுக்தியென்னும் பரமோக்ஷத்தினது பிராப்தியின் கிரம வர்ணனம்.

மற்றைய விதேகமுக்தி என்னும் பரமோக்ஷமோ தத்துவவேத்தாவிற்கு (தத்துவமுணர்ந்தோனுக்கு)த் தத்துவஞானத்திற்குப் பின்னருண்டாவதின்று ஆறுமுறையாகவுண்டாகின்றது. நியாயசாத்திரத்தில் கௌதமமுனியானவர் கூறிய அம்முறையிதுவாம் ஆண்டுச் சூத்திரம், "[illegible]" (இ-ள்.) துக்கம், ஜன்மம், பிரவிர்த்தி, தோஷம், மித்தியாஞானமென்னுமிவ்வைந்தனுள் முன்முன்னுள்ளவைகளை அபேக்ஷித்துப்பின்பின்னுள்ளவைகளின் அபாவமுண்டாக, அப்பின் பின்னுள்ளவைகளோடு மறைப்பின்றி முன்முன்னிருப்பதின் அபாவமுமாகிறதோ அதனால் பரமோக்ஷமெனப் பெயரிய அபவர்க்கம் (வீடுபேறு) பிராப்தமாகின்றது. ஈண்டுக் கருத்திதுவாம். நான் மனிதன், நான் பிராமணன், நான் செவிடன், நான் குருடன் என இவ்வாறாகத் தேகேந்திரியமுதலியவைகளிலுள்ள ஆத்ம புத்தி வடிவ மயக்கத்தினை மித்தியாஞானமெனப்படும். அம்மித்தியா ஞானத்தால் இஷ்ட வஸ்துவின் ராகவடிவமும், அநிஷ்டவஸ்துவில் துவேஷவடிவமுமான தோஷங்களுண்டாகின்றன. அந்த ராகத்துவேஷ வடிவ தோஷத்தால் தர்ம அதர்ம வடிவ பிரவிருத்திகளுண்டாகின்றன, அத்தர்ம அதர்ம வடிவ பிரவிர்த்தியால் சரீரத்தின் சம்பந்த வடிவ ஜன்மமுண்டாகின்றது. அஜ்ஜன்மத்தால் துக்கமுண்டாகின்றது. இவ்வாறாகப் பரம்பரையால் அம்மித்தியாஞானமே ஆத்மாவின் சம்சாரத்திற்குக் காரணமாகின்றது. எப்பொழுது அதிகாரிக்கு முற்கூறிய சிரவணமுதலிய சாதனங்களால், தேகம், இந்திரியம் முதலிய வெல்லாபதார்த்தங்களினும் ஆத்மா வேறுமென்னும், தத்துவஞானமுண்டாகின்றதோ, அப்பொழுது அத்தத்துவஞானத்தால் நான்மனிதன், நான்பிராமணனென்னும் இவைமுதலிய வாசனையோடு கூடிய எல்லா மித்தியாஞானங்களும் நிவிர்த்தியாய் விடுகின்றன. அவ்வாசனையோடு கூடிய மித்தியாஞானத்தின் நிவிர்த்தியால் அவ்வாசனையோடு கூடிய ராகத்துவேஷ வடிவ தோஷங்களின் அபாவமுண்டாகின்றது. இராகத் துவேஷ வடிவ தோஷங்களின் அபாவத்தால் தர்ம

அதர்ம வடிவ பிரவிர்த்தி உண்டாகா, தர்ம அதர்ம வடிவ பிரவிர்த்தி உண்டாகாததால் பிராரப்த கர்மத்திற்குப்பயனாகிய இத்தேகத்தினும் வேறான தேகத்தின் சம்பந்த வடிவ ஜன்மத்தின் அபாவமுண்டாகின்றது. அச்சரீர சம்பந்த வடிவ ஜன்மத்தின் அபாவத்தால் இருபத்தொரு துக்கங்களின் நாசமுண்டாகின்றன. இவ்விருபத்தொரு துக்கங்களின் அத்தியந்தநிவிர்த்தி (மீண்டும் வாராத தன்மை)யே பரமோக்ஷமெனப்படும். இவ்வாறாகக் கூறிய பரம்பரைச் சம்பந்தத்தினாலே அத்தத்துவ ஞானத்திற்கு விதேக முக்தி என்னும் பரமோக்ஷத்திற்குக் காரணத் தன்மை புண்டு.

௫௯. போகத்தாலேயே கர்மத்தின் நாசமுண்டாகின்றதாகையால் அப்போகத்தின் பொருட்டு ஞானிக்கும் ஜன்மமுண்டாகுமென்னும் பூர்வபக்ஷத்தின் வர்ணனம்.

சங்கை:—தத்துவ வேத்தாவிற்குத் தத்துவ ஞானத்தின்பின்னருண்டாம் புண்ணிய பாப வடிவ கர்மத்தால் ஜன்மத்தின் பிராப்தி யுண்டாகாது. எனினும் அத்தத்துவ ஞானத்திற்குமுன் அநேக ஜன்மங்களிற் செய்துள்ள புண்ணிய பாபகர்மங்களினால் தத்துவ வேத்தாவிற்கும் ஜன்மத்தின் பிராப்தி அவசியமுண்டாகும். ஏனெனின், ஸ்மிருதிகளில் போகத்தினாலேயே கர்மங்களின் நாசங் கூறப்பட்டிருக்கின்றது. ஆண்டு ஸ்மிருதி "[illegible]" (இ-ள்.) செய்யப்பட்ட சுபகர்மமும், அசுபகர்மமும் அவசியமாய் அநுபவிக்க வேண்டும். போகமின்றி நூறுகோடி கற்பங்களாலும் அச்சுப அசுப கர்மங்கள் நாசமாவதில்லை. ஆகையால் தத்துவ வேத்தாவிற்கு முன்னுள்ள சஞ்சித கர்மங்களின் வசத்தால் ஜன்மத்தினடைவு அவசியமுண்டாகும்.

௬௰. போகத்தினைப்போன்று பிராயச்சித்தத்திற்கும், தத்துவஞானத்திற்கும் கர்மத்தை நாசஞ் செய்யுந்தன்மையின் வர்ணனம்.

சமாதானம்:—கேவலம் போகத்தினாலேயே அச்சுபாசுப கர்மங்களின் நாசமுண்டாகின்றது வேறுபாயங்களா லுண்டாகிறதில்லை என்னும் நியமம் யாண்டுஞ் சம்பவியாது. ஏனெனின் "[illegible]" (இ-ள்.) அதிகாரி புருஷன் தர்மத்தால் பாபத்தை நிவிர்த்திச் செய்கின்றான். இச்சுருதியில் பலபோகமில்லாமலே கேவலம் தர்மத்தினாலேயே அப்பாபத்தின் நிவிர்த்திக் கூறப்பட்டிருக்கின்றது. அன்றியும் தர்மசாத்திரத்தில் மநு யாஞ்ஞியவல்கியர் முதலிய ரிஷிகளானோர் அவ்வப்பாப நிவிர்த்தியின் பொருட்டு அநேக பிராயச் சித்தங்கள் கூறியிருக்கின்றனர். அந்தப் பிராயச் சித்தங்களாலும் பலபோகமில்லாமலே பாபங்களின் நிவிர்த்தி யுண்டாகின்றது. இவ்வாறாகத் தர்மத்திற்கும் பல போகமில்லாமலே நிவிர்த்தி சாத்திரத்தில் கூறப்பட்டிருக்கின்றது. ஆண்டுச் சுலோகம் "[illegible]" (இ-ள்.) கர்மநாச நதியினைப் பரிசிப்பதாலும் கர்த்தோயாநதியினைக்

கடந்து கரைசேருவதாலும், கண்டகத்தினைத் தோள்களால் நீந்துவதினாலும், செய்துள்ள தருமத்தை உலகவர் முன்னிலையிற் புகழ்ந்துகொள்ளுவதினாலும், அத்தர்மங்கள் நஷ்டமாய் விடுகின்றன. இவ்வாறுகச் சுக துக்க வடிவ பயன்களை அநுபவிக்காமலே கூறிய பிராயச் சித்தமுதலிய உபாயங்களால் அச்சுபாசுபகர்மங்களின் நாசம் சுருதிஸ்மிருதிவடிவசாத்திரங்கள் கூறியிருக்கின்றன. அங்ஙனமே அச்சுருதிஸ்மிருதிவடிவசாத்திரங்கள் தத்துவஞானத்தாலும் அச்சுபாசுப வடிவ சர்வ சஞ்சித கர்மங்களின் நாசமுங் கூறியிருக்கின்றன. ஆண்டுச் சுருதி "க்ஷீயந்தே சாஸ்ய கர்மாணி தஸ்மிந் த்ருஷ்டே பராவரே." (இ-ள்.) நம்மனோர் முதலிய ஜீவர்களின் அபேக்ஷையால் பரமா (உயர்வா) யுள்ள பிரம்மா முதலியயாவரும் எதைநோக்க அவரமெனப்படும் நிக்கிருஷ்டம் (இழிந்தவர்கள்) ஆவர்களோ அதனைப் பராவரம் எனப்படும். அத்தகைய பராவர வடிவம் பரமாத்மாவின் தரிசனமுண்டாகத் தத்துவ வேத்தாவினது முன்னுள்ள சுபாசுபவடிவ சர்வ சஞ்சிதகர்மங்கள் நாசத்தை அடைகின்றன. ஆண்டுச் சுருதி "ஜ்ஞாநாக்நி: ஸர்வகர்மாணி பஸ்மஸாத் குருதே ததா" (இ-ள்.) ஏ அர்ச்சுனா! எங்ஙனம் ஜ்வாலையோடு கூடிய பெரிய வன்னி காஷ்டங்களின் ஸமூஹ (கூட்ட)ங்களை பஸ்மஞ் செய்கின்றதோ அங்ஙனமே தத்துவஞானமான வன்னி சர்வசஞ்சித கர்மங்களையும் நாசஞ் செய்கின்றது. என்னுமிவைமுதலிய அநேக சுருதிஸ்மிருதி வசனங்கள் தத்துவஞானத்தால் பூர்வமுள்ள சர்வகர்மங்களின் நாசத்தைக் கூறியிருக்கின்றன. ஓர் கால் கேவலம் போகத்தானேயே சுபாசுப கர்மங்களின் நாசமுண்டாகுமாயின் முற்கூறிய எல்லா வசனங்களும் அசங்கதமாகும். ஆகையால் அவசியம் போகிக்கவேண்டும் என இச்சுருதியில் கூறப்பட்ட போகமென்னும் பதம் பிராயச் சித்தம், தத்துவ ஞானமுதலாக சுபாசுப கர்மங்களை நாசஞ் செய்யும் எல்லாவற்றிற்கும் உபலக்ஷணமாம். அல்லது பிராரப்த கர்மங்களுக்கு போகமின்றி நாசமுண்டாகாமல் கேவலம் போகத்தானேயே நாசமுண்டாகின்றது. ஆகையால் முற்கூறிய ஸ்மிருதி வசனம் அந்த பிராரப்தகர்மங்களின் மீதேயாம். சஞ்சித கர்மங்களின் மீதிராது. இவ்விதமாதலால் அத்தத்துவ வேத்தாவிற்கு முன்னுள்ள எல்லாக் கர்மங்களும் அத்தத்துவ ஞானத்தினானேயே நாசமாய் விடுகின்றன. அன்றியும் எப்பிராரப்தகர்மமானது அத்தத்துவவேத்தாவினது சரீரத்தையுண்டாக்குகின்றதோ, அந்தப் பிராரப்த கர்மமோவெனில் போகத்தானேயே நாசமாய் விடுகின்றது. வேறோருபாயத்தால் நாசமாவதன்று. அந்தப் பிராரப்த கர்மத்தின் நாசத்திற்குப்பின் தத்துவ வேத்தாவிற்கு இருபத்தொரு துக்கங்களின் அத்தியந்த (முற்றும்) நிவிருத்தி வடிவ பரமோக்ஷம் பிராப்தமாகின்றது.

௬௧. தத்துவஞானத்திற்குப்பின் காயவியூகத்தால் சர்வகர்மங்களினது பலத்தின் போகமென்னும் மதத்தினது வர்ணனம்.

சில ஆசிரியரோ இது கூறுகின்றனர், எங்ஙனம் பிராரப்த கர்மங்கள் பலபோகமின்றி நாசமாவனவன்றோ, அங்ஙனமே அச்சஞ்சித கர்மங்களும் பல போகமின்றி கேவலம் தத்துவ ஞானத்தால் நாசமாவனவன்று.

ஆனால் சஞ்சித கர்மங்களும் பல போகத்தானேயே நாசமாகின்றன. ஆகையால், தத்துவ வேத்தா அக்காலத்தில் அத்தத்துவஞானத்தின் பிரபாவத்தால் அநேகவிதமான சரீரங்களைத் தரிக்கின்றான். அவ்வநேகவித சரீரங்களைச் சாத்திரத்தில் காயவியூக மென்னும் நாமத்தால் வழங்கப் பட்டிருக்கிறது. அநேக ஜன்மங்கட்கு முன்னுள்ள கர்மங்களுள் எவ்வெச்சுபாசுப கர்மங்களின் சுகதுக்க வடிவ பயன்கள் எவ்வெச்சரீரத்தில் அநுபவிக்கப்படுமோ, அவ்வச்சரீரத்தின் சுகதுக்க வடிவபயன்கள் அவ்வச்சரீரத்தில் ஒரே காலத்தில் அநுபவிக்கப்பட்டு அதன் பின்னர் தத்துவ வேத்தாக்கள் அபரமோக்ஷத்தை யடைகின்றனர். இம்மதம் முற்கூறிய தத்துவஞானத்தால் கர்மங்களின் நாசத்தைக் கூறியுள்ள சுருதி ஸ்மிருதிகட்கு விருத்தமாவதால் சிரத்தைசெய்யத் தகுதியன்று.

௬௨. இருபத்தோரு துக்கங்களின் சொரூப வர்ணனம்.

சரீரம் ஒன்று, சுரோத்திர முதலிய இந்திரியங்கள் ஆறு, சுரோத்திர முதலிய இந்திரியங்களின் விஷயம் ஆறு, சுரோத்திரமுதலிய இந்திரியங்களால் உண்டாகும் புத்திகள் (ஞானங்கள்) ஆறு, சுகம் ஒன்று, துக்கம் ஒன்று ஆக இருபத்தொரு துக்கமெனப்படுகின்றன. அதாவது சரீரம், சுரோத்திரேந்திரியம், துவக்கிந்திரியம், சக்ஷுரிந்திரியம், இரசனேந்திரியம், கிராணேந்திரியம், மனேந்திரியம், சுரோத்திரேந்திரியத்தின் சத்த முதலிய விஷயங்கள், துவக்கிந்திரியத்தின் பரிசமுதலிய விஷயங்கள், சக்ஷுரிந்திரியத்தின் உருவ முதலிய விஷயங்கள், இரசனேந்திரியத்தின் இரசமுதலிய விஷயங்கள், கிராணேந்திரியத்தின் கந்தமுதலிய விஷயங்கள் மனேந்திரியத்தின் சுக, துக்க முதலிய விஷயங்கள், சுரோத்திரேந்திரியத்தால் ஜன்னிய (உண்டாம்) சத்த முதலிய விஷயங்களின் சிராவண ஞானம், துவக்கிந்திரியத்தால் ஜன்னிய பரிச முதலிய விஷயங்களின் துவாச ஞானம், சக்ஷுரிந்திரியத்தால் ஜன்னிய உருவமுதலிய விஷயங்களின் சாக்ஷுஷ ஞானம், இரசனேந்திரியத்தால் ஜன்னிய இரச முதலிய விஷயங்களின் இராசன ஞானம், கிராணேந்திரியத்தால் ஜன்னிய கந்தமுதலிய விஷயங்களின் கிராணஜ ஞானம், மனேந்திரியத்தால் ஜன்னிய சுகதுக்கமுதலிய விஷயங்களின் மானச ஞானம், சுகம், துக்கம், ஆக இவை இருபத்தொரு துக்கங்களெனப்படுகின்றன.

௬௩. முக்கிய கௌணபேதத்தால் இருவித துக்க சப்தத்தினது அர்த்தத்தின் வர்ணனம்.

பாபகர்மத்தாலுண்டாயதும், நான் துக்கி என்னும் பிரதீதிக்கு விஷயமும், ஆத்மாவின் விசேஷ குணருபமான அத்தகைய துக்கத் தன்மை ஜாதியுடைய பிரசித்த துக்கமே, அத்துக்க சப்தத்திற்கு முக்கிய அர்த்தமாம். துக்கத் தன்மை ஜாதியில்லாத சரீரமுதலிய இருபது துக்கமோ சாக்ஷாத் அல்லது பரம்பரையாக முக்கிய துக்கத்தை யுண்டாக்குவனவாம். ஆகையால் அச்சரீர முதலிய இருபதுகளும் அத்துக்க சப்தத்திற்கு கௌண அர்த்தமாம். ஆகையால் முக்கிய துக்கத்தைப் போன்று சரீர முதலியவைகளும் துக்க

சப்தத்தாற் கூறப்பட்டது. எங்ஙனம்:—சாக்ஷாத்தாக விஷத்தைப் புசித்தவனி டத்தும் விஷத்தைப் புசித்தானென விஷ பதத்தின் பிரயோக முண்டா கின்றது. விஷங்கலந்த மதுவைப் புசித்தவனிடத்தும் விஷத்தைப் புசித்தா னென்னும் விஷ பதத்தின் பிரயோகமுண்டாகின்றது. அதாவது எங்ஙனம் விஷத்திலும், விஷங்கலந்த மதுவிலும் விஷபதத்தின் பிரயோகம் சமான மாகின்றதோ அங்ஙனமே முக்கிய துக்கத்திலும், அத்துக்கத்தையுண்டாக்கும் சரீரமுதலியவைகளிலும், துக்க பதத்தின் பிரயோகம் சம்பவிக்கின்றது. ஆகையால் ஈண்டுச் சரீரமுதலிய இருபத்தொன்றையும் துக்க சப்தத்தாற் கூறுதல் கூடும்.

சங்கை:—சரீரம், இந்திரிய முதலியன துக்கத்தை யுண்டாக்குவனவா மா கையால் சரீரமுதலியவைகளில் கௌண துக்கவடிவத் தன்மைசம்பவிக்கின்றன, எனினும் சொர்க்கமுதலிய சுகங்களில் கௌண துக்க வடிவத் தன்மையும் சம்பவியாது. ஏனெனின் “யந்ந து:கேந ஸம்பிந்நம்” இவை முதலிய சுரு திகள் சொர்க்க சுகத்தை துக்கமில்லாததாகக் கூறியிருக்கின்றன.

௬௪. சொர்க்க முதலிய சுகங்களிலும் துக்கத்தை உண்டுபண்ணுந் தன்மையால் துக்கவடிவத் தன்மையின் வர்ணனம்.

சமாதானம்:—அச்சொர்க்க சுகம் துக்கமில்லாததன்று. முதற்காலத் திலும், இடைக்காலத்திலும், கடைக்காலத்திலும் சொர்க்க சுகம் துக்கத் தாலேயே நிறைந்துளது. ஈண்டுச் சொர்க்க சுகம் மிகுந்த தனத்தைச்செல விடுவதினாலும், சரீரத்தின் ஆயாசத்தினாலும், புருஷர்கட்குப் பிராப்தமா கின்றது. ஆகையால் அச்சொர்க்கசுகம், முதற்காலத்திலும் துக்கத்தால் வியாப்தமா (நிறைந்தது) கின்றது. சொர்க்கமடைந்த புருஷர்களுக்குத் தன்னினும் மிகுந்தபோகமுடைய தேவதைகளைக்கண்ணுறுவதால்பொறாமை யினாலுண்டாகும் துக்கமுண்டாகின்றது. அன்றியும் இந்திரன் முதலிய தே வர்களுக்கும் பராதீனத்தன்மை (சுதந்திரமின்மை) யாலுண்டாகும் துக்கமும் கீழ்வீழ்தலின் பயத்தாலுண்டாகும் துக்கமு முண்டாகின்றது. ஆகையால் சொர்க்கம் இடைக்காலத்திலும் துக்கத்தால் வியாப்தமாகின்றது எப்பொ ழுது சொர்க்கமடைந்தவர்களது புண்ணிய நாசத்திற்குப் பின்னர் கீழ்வீழ்த லுண்டாகின்றதோ, அப்பொழுதும் அவர்கட்கு அச்சொர்க்கசுகத்தை நீங்கு வதனாலுண்டாகும் துக்கமுண்டாகின்றது. ஆகையால் அச்சொர்க்க சுகம், கடைக்காலத்திலும் துக்கத்தால் வியாப்தமாகிறது. இவ்வாறாக மது விஷங் கலந்த அன்னத்தைப்புசிப்பதனாலாய திருப்தியினைப்போன்று பல துக்கங்க ளால் நிறைந்துள்ளதால் சொர்க்கத்தின்சுகமும் துக்கவடிவமேயாம். சொர்க்க சுகம் அநேக துக்கங்களால் நிறைந்துள்ள தெனின் இவ்வுலகவிஷயங்களா லுண்டாகுஞ் சுகத்தைக் கூறுவானேன். “யந்ந து:கேந ஸம்பிந்நம்” என்னும் இச்சுருதியோ சகாம புருஷர்களை யாகாதி கர்மங்களில் பிரவிர்த்திப்பான் வேண்டி அச்சொர்க்கத்தின் புகழ்ச்சிக் கூறியதாம். ஆகையால் அச்சுருதி அர்த்தவாதவடிவமாம் அர்த்தவாத வடிவ சுருதியால் அச்சொர்க்க சுகத்தில்

எல்லாத் துக்கங்களில்லாத் தன்மை சித்தியாது. அல்லது முற்கூறிய அச் சுருதி அவசியம் வரப்போகிறத் துக்கங்களினும் வேறான வியாதியாலுண்டாம் துக்கங்களின் அபாவத்தைக் கூறியதாம். சர்வதுக்கங்களின் அபாவத்தைக் கூறியதன்று. ஆகையால் அச்சுருதிக்கும் விரோதம் உண்டாகாது.

௬௫. ஆறுஞானங்கள், சரீரம், சுகம், துக்கம் என்னும் ஒன்பான் துக்கங்கள் விஷயங்களில் அடங்குவதாயினும் அவைகளை வேறாக எழுதுவதனாலாம் பயன்.

சங்கை:—முக்கிய துக்கத்தினை யுண்டாக்குந் தன்மையால் அச்சரீர முதலியவைகளில் கௌண துக்க வடிவத் தன்மைச் சம்பவிக்கின்றது, என்று லும் இருபத்தொரு துக்கங்கள் சம்பவியா. ஆறல் ஆறு இந்திரியங்களும், ஆறுவிஷங்களுமான இப்பனிரெண்டுவிதமான துக்கங்களே சம்பவிக்கின்றன, ஏனெனின் சரீரமும், அறுவகை புத்தியாகிய ஞானமும், சுகதுக்கமாமொ ன்பதும் இவைகளுக்கு விஷயத் தன்மை வடிவத்தாலேயே சங்கிரஹமாகின் றன. ஈண்டுச்சரீரமோ சக்ஷுரிந்திரிய ஜன்னிய ஞானத்திற்கும், த்வக்கிந்தி ரிய ஜன்னிய ஞானத்திற்கும் விஷயமாம், அவ்வாறுவிதஞானங்களும், சுகதுக் கமுமாகிய வெட்டும் மனவிந்திரிய ஜன்னிய ஞானத்திற்கு விஷயங்களாம்.

சமாதானம்:—உண்மை விசாரத்தால் நோக்கின் இந்திரியம் ஆறு, விஷயம் ஆறு, என்னும் இப்பன்னிரண்டுவிதத்தாலேயே துக்கம் சம்பவிக் கின்றது. சரீரம், ஆறு ஞானம், சுகம், துக்கமா மிவ்வொன்பான்களுக்கு அறு வித விஷயங்களிலேயே அடக்கம் சம்பவிக்கின்றது. எனினும், சரீரமும், அறுவித புத்தி வடிவ ஞானங்களுமான இவ்வேழில் முக்கிய துக்கத்தின் அசாதாரண காரணத் தன்மை யிருப்பதால், வேறுகட முதலியவைகளின் அபேக்ஷையால் அவைகளுக்குப் பிரதானத் தன்மையிருக்கின்றனவென்னும் அர்த்தத்தைக் குறிப்பிப்பான் சுருதியும், முக்கியத் தன்மையால் விடத் தக்கதான அத்துக்கத்தினும் வேறான சரீரமுதலிய விருபதுகளோ அத்துக் கத்தின் சம்பந்தித் தன்மையால் விடத்தக்கதுமாம் என்னும் அர்த்தத்தைக் குறிப்பிப்பான் வேண்டியும் சரீரம், ஆறுவித ஞானம், சுகம், துக்கமாமொன் பான்களுக்கு அந்தவிஷயத்தினும் வேறானவையென்னும்வசனங்கூறப்பட்டது.

௬௬. சத்த முதலிய ஆறுவிஷயங்களும், ஆத்மாவோடு சம்பந்தமில்லாத தாவதாலும், நித்தியமாவதாலும் அவைகளின் நாசத்தில் மோக்ஷ வடிவத் தன்மையினது அசம்பவத்தின் சங்கை.

சங்கை:—சரீரம், ஆறு இந்திரியங்கள், ஆறு ஞானங்கள், சுகம், துக்கங்களா மிப்பதினைந்து துக்கங்களோ அவ்வந்ஜீவாத்மாவின் சம்பந்த முடையனவாம். ஆகையால் தத்துவஞானத்தால் அவ்வஜ்ஜீவாத்மா முத்த னாக அப்பதினைந்து துக்கங்களின் நிவிர்த்தியோ சம்பவிக்கின்றது. ஆறல் சத்தம், பரிச முதலிய அறுவித விஷயங்களோ அவ்வவ் வாத்மாவின் சம்பந்த முடையனவன்று. ஆகையால் அவ்வவ்வாத்மாவிற்கு முக்தியுண்டாக அச் சத்தம், பரிச முதலிய அறுவகை விஷயங்களின் நிவிர்த்தி சம்பவியாது.

அல்லது எச்சைத்திரியை யென்பெயரிய புருடனுக்குச் சுரோத்திரமுதலிய இந்திரியங்களின் சத்தம், பரிசமுதலிய வெல்லாவிஷயங்கள் நஷ்டமாய்விட்டனவோ அச்சைத்திரியென்போனுக்கு மோக்ஷமுண்டாவதாக ஒருவரும் அங்கீகரிக்க மாட்டார்கள். ஆகையால் சத்தமுதலிய விஷயங்களின் நாசத்தில் முக்தி வடிவத் தன்மை யொப்பவ்வது முற்றும் விருத்தமாம். அல்லது அவ்விஷயங்களின் நாசத்தில் மோக்ஷ வடிவத் தன்மை சம்பவியாது. ஏனெனின், அச் சுரோத்திர முதலிய இந்திரியங்களின் விஷயங்களான சத்தம், பரிச முதலியன நித்தியமல்லாதனவாம். ஆகையால் அவற்றின் நாசம் சம்பவிக்கின்றன, வென்றாலும் அச்சுரோத்திர முதலிய இந்திரியங்களின் விஷயங்களான, சத்தத் தன்மை, பரிசத் தன்மை முதலிய சாதிகளும், மனதுக்கு விஷயமான ஆத்மாவுமா மெல்லா விஷயங்களும் நித்தியமாம். ஆகையால் அவைகளுக்கு நாசமே சம்பவியாது.

கஎ. விஷயசப்தத்தால் அந்த விஷயசம்பந்தி யிச்சாவடிவ ராகத்தின் கிரஹணத்தால் அவற்றின் நாசத்தில் மோக்ஷவடிவத் தன்மையின் சம்பவம்.

சமாதானம்:—சூத்திர விஷய பதத்தால் அவ்வச்சத்த முதலிய விஷயங்களின் ராக (விருப்ப)த் தினையே கொள்ளல் வேண்டும். அந்த ராகம், வெளிப்பட்ட இச்சைவடிவமானதால் ஆத்மாவின் சம்பந்த முடையதும், அநித்தியமுமாம். ஆகையால் சிரமுதலியவைகளைப் போன்று ராகவடிவ அவ்விஷயங்கட்கும் நிவிர்த்தி சம்பவித்துவிடுகின்றது. அங்ஙனமே ராகவடிவ விஷயங்களின் நாசத்தில் முக்தி வடிவத் தன்மையும் சம்பவிக்கின்றது.

கஅ. சுரோத்திரமும், மனமுமா மிவ்விரண்டிற்கும் நித்தியமுளதாயினும் விசேஷணத்தின் நாசத்தால் அவ்விரண்டின் நாசவர்ணனம்.

சங்கை:—முற்கூறப்பட்ட சிரமுதலிய இருபத்தொரு துக்கங்களில் ஆகாசவடிவ சுரோத்திர இந்திரியமும், மனமுமாம் இவ்விரண்டும் சித்தாந்தத்தில் நித்தியமாம். ஆகையால் அவ்விரண்டிற்கும் நாசங் கூறுதல் சம்பவியாது. சிரமுதலிய பத்தொன்பதுகட்கே நாசம் சம்பவிக்கின்றது.

சமாதானம்:—விசேஷணத்தோடு விசிஷ்டமான சுரோத்திரமும், மனமும் ஞானத்தின் உற்பத்தி வாயிலாகத் துக்கத்தினை தருவதால் துக்க வடிவமாகின்றன. அவ்விசிஷ்ட வடிவ சுரோத்திர மனதுகட்கு, முக்திகாலத்தில் விசேஷணத்தின் நாசத்தால் நாசமுண்டாய் விடுகின்றன. இனி இப்பொருளைத் தெளிவாய் விளக்குவாம். கர்ண கோளகத்துள்ள ஆகாசத்தினைச் சுரோத்திர இந்திரிய மெனப்படும். கேவல ஆகாசத்தினை சுரோத்திரமென்பதில்லை. அக்கர்ண கோளகமான விசேஷணத்துடன் விசிஷ்டமான ஆகாச வடிவ சுரோத்திரேந்திரியம் சத்தமுடையது சிரவணத்தின் ஞான வாயிலாகத் கேட்பதை ஆத்மாவில் துக்கத்தினையுண்டாக்குகின்றது, ஆகையால் ஞானத்தினுற்பத்தி வாயிலாக துக்கத்தினை யுண்டாக்குவதாவதால் சுரோத்திரேந்திரியம், துக்க வடிவமேயாம். இங்ஙனம் முக்தி காலத்தில் அக்கர்ண

கோளகமான விசேஷணம் நாசமாய்விடுகின்றது. ஆகையால் முக்தி காலத்தில் ஸ்வரூபத்தி னிருப்புளதாயினும் ஆகாச வடிவ சுரோத்திரம் அக்கர்ண கோளக வடிவ விசேஷணத்தின் அபாவத்தால் சத்த ஞானத்தினை யுண்டாக்குவது வாயிலாக ஆத்மாவில் துக்கத்தினை யுண்டாக்குகிறதில்லை. இவ்வாற்றால் முக்திகாலத்தில் கர்ண கோளகமான விசேஷணத்திற்கு நாசமுண்டாக, தத்விசிஷ்ட (தன்னுடன் கூடிய) சுரோத்ர இந்திரியத்திற்கும் நாசங் கூறப்பட்டது. இவ்வாறாக மனமும், ஆத்மாவோடு சையோக சம்பந்த வடிவ வியாபாரத்தால் விசிஷ்டமாக அவ்வாத்மாவில் ஞானத்தினை யுண்டாக்குவது வாயிலாகத், துக்கத்தினை யுண்டாக்குவதாவதால் துக்க வடிவமாகின்றது. அவ்வாத்மாவோடு மனதின் சையோக சம்பந்தம் மோக்ஷ காலத்திலுண்டாகிறதில்லை. ஆகையால் பரமோக்ஷ காலத்தில் தன் சொரூபத்தி னிருப்புளதாயினும் அம்மனம் சையோக சம்பந்த வடிவ வியாபாரத்தின் அபாவத்தால் ஞானத்தினை யுண்டாக்குவது வாயிலாக ஆத்மாவில் துக்கத்தினை யுண்டாக்குவதன்று.

சங்கை:—மோக்ஷ காலத்தில் ஆத்ம மனதுகளின் சையோக சம்பந்தம் அங்கீகரியாவிடின், மோக்ஷ காலத்தில் அம்முக்த ஆத்மாவில் விபுத்தன்மைச்சம்பவியாததாகும். ஏனெனின் “ஸர்வ-மூர்த்த-ஸம்யோகித்வம் விபுத்வம்” (இ-ள்.) பிருதிவி, ஜலம், தேயு, வாயு, மனமென்னு மிவ்வைந்து திரவியங்களை மூர்த்தத் திரவியங்களெனப்படும். இவ்வெல்லா மூர்த்தத் திரவியங்களோடுள்ள சையோகித்தன்மையே, ஆகாசம், காலம், திக்கு, ஆத்மாவென்னும் நான்கில் விபுத்தன்மையாம் ஆகையால் முக்த ஆத்மாவின் விபுத்தன்மையினை சித்திசெய்யும்பொருட்டு மோக்ஷ காலத்தில் முக்த ஆத்மாவிற்கு மனதோடு சையோக சம்பந்தம் அவசியமொப்ப வேண்டியதாகும்.

சமாதானம்:—முக்தி காலத்தில் ஆத்மாவிற்கு மனதோடு சையோக சம்பந்தமுண்டாகுக, என்றாலும் அச்சையோகத்திற்கு ஞானத்தினுற்பத்தியில் வியாபார வடிவத் தன்மையில்லை.

க௯. புரீததியினும் பாகிய தேசாவச்சின்ன ஆத்ம மனச் சையோகத்தில் ஞானமாத்திரத்திற்குக் காரணத் தன்மையின் வர்ணனம்.

புரீததியென்னும் நாடியினும் பாகிய (புறம்பான) தேசாவச்சின்ன ஆத்ம மனச் சையோகமே அந்தஞானத்தினுற்பத்தியில் வியாபாரமாகின்றது, இக்காரணத்தாலேயே சுழுத்தி அவஸ்தையில் புரீததியென்னும் நாடியில் பிரவேசமடைந்த மனத்திற்கு ஆத்மாவினோடு சையோக சம்பந்தமுளதாயினும், புரீததியின் வெளிதேசாவச்சின்ன ஆத்மமனதுகளின் சையோகத்தின் அபாவத்தால் ஒர் ஞானமும் உண்டாகிறதில்லை. அன்றியும் மோக்ஷ காலத்தில் சரீரத்தின் அபாவமுண்டாவதால் அச்சரீரத்தின் அவயவமான புரீததியின் அபாவமும் உண்டாகின்றது, ஆகையால் மோக்ஷ காலத்தில் ஆத்ம மனச் சையோகத்தின் அபாவத்தால் அங்கு ஞானத்தினுற்பத்தி வாயிலாகத் துக்கத்தின் உற்பத்தி யுண்டாவதின்றாம்.

எ௦. துவக், மனச் சையோகத்தில் ஞானமாத்திரத்தின் காரணத் தன்மை வாதியின் மத வர்ணனம்.

சில நூலாசிரியரோ விது கூறுகின்றனர். சுழுத்தியில் ஞானத்தினுற்பத்தியை நிவிர்த்திப்பான் வேண்டி துவக்கினோடு மனதின் சையோகமே ஞானத்திற்கு நிமித்தகாரணமாக வொப்புகின்றனர். அம்மனம் அச்சுழுத்திகாலத்தில் துவாசமில்லாத புரீததியில் பிரவேசமாய் விடுகின்றது அக்காலத்தில் மனதிற்குத் துவக்கினோடு சையோகமிருப்பதில்லை ஆகையால் அச்சுழுத்தி காலத்தில் ஓர் ஞானமு முண்டாகிறதில்லை. ஜாக்கிரம், சொப்பன காலங்களில் மனதிற்குத் துவக்கினோடு சையோக சம்பந்த மிருக்கின்றதாகையால் சாக்கிர சொப்பனங்களில் அனேக ஞானங்கள் உண்டாகின்றன. ஆகையால் துவக்கின் சகமுடைய மனமே ஞானத்தினையுண்டாக்குவது வாயிலாகத் துக்கத்தினை யுண்டாக்குவதாவதால் துக்கவடிவமாகின்றது, மோக்ஷகாலத்தில் துவக்கிற்கு நாசமுண்டாய்விடுகின்றது. ஆகையால் மோக்ஷகாலத்தில் சொரூபத்தினிருப்புளதாயினும் அம்மனம் துவக்கு சையோக வடிவ வியாபாரத்தின் அபாவத்தால் ஞானத்தினுற்பத்தி வாயிலாகத் துக்கத்தினையுண்டாக்குவதன்று. ஈண்டு துவக்கென்னும் சப்தத்தால் துவக்கிந்திரியத்தைக் கொள்ளுக.

எக. சர்ம, மனச் சையோகத்தில் ஞானமாத்திரத்திற்குக் காரணத் தன்மை வாதியின் மத வர்ணனம்.

சில நூலாசிரியரோ சுழுத்தியில் ஞானத்தினுற்பத்தியை நிவிர்த்திச்செய்வான் வேண்டி சர்மத்தினோடு மனதின் சையோகத்திற்கு ஞானமாத்திரத்தின் நிமித்த காரணமொப்புகின்றனர். சுழுத்தி காலத்தில் புரீததியில் பிரவேசமுள்ள மனத்திற்குச் சர்மத்தினோடு சையோகமிருப்பதில்லை, ஆகையால் அச்சுழுத்தியில் ஓர் ஞானமு முண்டாகிறதில்லை. ஜாக்கிர, சொப்பன காலங்களில் மனதிற்குச் சர்மத்தினோடு சையோக சம்பந்தமுண்டாகின்றது, ஆகையால் சாக்கிர சொப்பனங்களில் அனேக ஞானங்கள் உண்டாகின்றன. ஈண்டுச் சர்மமென்னுஞ் சப்தத்தால் துவக்கிந்திரிய மிருக்கும் கோளகத்தைகொள்ளுக. ஆண்டுப்புரீததியில் எங்ஙனம் துவக்கிந்திரிய மிருப்பதின்றோ அங்ஙனமே அத்துவக்கிந்திரியத்தின்கோளகமிருப்பதின்றும். இவ்வாறுக கோளகவடிவசர்மத்திற்கும் மோக்ஷ காலத்தில் அபாவமே யிருக்கின்றது. ஆகையால் மோக்ஷ காலத்தில் சொரூபத்தினிருப்புளதாயினும் அம்மன சர்ம சையோக வடிவ வியாபாரத்தின் அபாவத்தால் ஞானத்தினுற்பத்தி வாயிலாகத் துக்கத்தை உண்டாக்குவதன்று, ஆகையால் இவ்வர்த்தம் சித்தமாயிற்று. சுரோத்திரேந்திரியமும், மனமுமாகிரண்டும் ஸ்வரூபமாக நித்தியமாயினும் முற்கூறிய சர்ம கோளக வடிவ விசேஷணத்துடன் விசிஷ்டமாகி; ஞானத்தினுற்பத்தி வாயிலாகத் துக்கத்தினை யுண்டாக்குவ தாவதால், துக்கவடிவமாகின்றது. மோக்ஷகாலத்தில் அவ்வக்கர்ண கோளக முதலிய விசேஷணத்தின் அபாவமுண்டாக தத்விசிஷ்ட சுரோத்திர, மனவடிவ துக்கங்கட்கும் நாசம் சம்பவிக்கின்றது. இவ்வாற்றால் சரீரமுதலிய விருபத்தொரு துக்கங்களின் அத்யந்த

நிவிர்த்தி யாதோ அதுவே பரமோக்ஷமாம். இவ்வகையான மோக்ஷம் தத்துவ ஞானம் ஒன்றினாலேயே உண்டாகின்றது. வேறோர் உபாயத்தா லுண்டாவதன்று.

சங்கை:—தத்துவ ஞானமில்லாமலே தத்தங் காரணங்களால் அச்சரீர முதலிய துக்கங்களின் துவம்ச வடிவ நிவிர்த்தி சம்பவமாய் விடுகின்றது. துக்க நிவிர்த்தியின்பொருட்டுத் தத்துவஞானத்தைச் சம்பாதிப்பது வியர்த்தமாம்.

சமாதானம்:—சம்சார காலத்தில் தத்தங் காரணங்களால் அச்சரீர முதலிய துக்கங்களின் நிவிர்த்தியுண்டாகின்றன வென்றாலும், அத்துக்க நிவிர்த்தியில் அத்தியந்தத் தன்மையுண்டாகிறதில்லை, ஆகையால் அத்துக்கத்தின் நிவிர்த்தி முத்தி வடிவ மெனப்படுகிறதில்லை. முற்கூறிய முறைப்படி தத்துவஞானத்தா லுண்டாம் சரீர முதலிய துக்கங்களின் நிவிர்த்தியிடத்தேயே அத்தியந்தத்தன்மையிருக்கின்றது, ஆகையால் அவ்வத்தியந்தத் துக்க நிவிர்த்தியே முக்தியெனப்படும். இனி கூறிய இவ்வபிப்பிராயத்தாலேயே முக்தியின் லக்ஷணம் கூறுவாம்.

எ௨. ஆத்தியந்திக (முற்றும்) துக்க நிவிர்த்தி வடிவ முக்தியின் லக்ஷணம்.

“ஸமானாதிகரண-து:க்கப்ராகபாவாஸமானகாலீந து:க்கத்வம்ஸோ முக்தி:” (இ-ள்.) ஈண்டுச் சுவவென்னுஞ் சப்தத்தால் துக்கத் துவம்ச (நாச)த்தினைக் கொள்ளுக அத்துக்கத்துவம்சத்தின் அதிகரண (இட)த்தில் இருப்பதாகிய துக்கத்தின் பிராகபாவம் (முன்னின்மை) யாதோ அத்துக்கப் பிராக பாவத்தோடு ஒருங்கில்லாத துக்கத் துவம்சத்தினை முக்தியெனப்படும். ஆண்டு சுகர், வாமதேவர் முதலிய முக்த புருஷர்களிடத்திலுள்ள சரீர முதலிய துக்கங்களின் துவம்சம் யாதோ அத்துக்கத் துவம்சம் சுவசமானாதிகரண (தன்னில் உளத்தானதான) துக்கப் பிராகபாவத்தினோடு ஒருங்கில்லாதனவேயாம், ஆகையால் அத்துக்கத் துவம்சத்தில் முக்தி வடிவத்தன்மை சம்பவிக்கின்றது. ஆண்டு “துக்கத்துவம்சம்முக்தி” அதாவது துக்கத்தின் துவம்சம் யாதோ அதனை முக்தியென இம்மாத்திரமே முக்தியின் லக்ஷணமாகக் கூறின் இச்சம்சார காலத்தில் நம்மனோர் முதலிய பத்த ஜீவர்களிடத்தும் சரீர முதலிய சிறிது துக்கங்களின் துவம்சமுண்டாகின்றது, அத்துக்கத் துவம்சத்தில் அம்முக்தியின் லக்ஷணத்திற்கு அதிவியாப்தியுண்டாம். அவ்வதிவியாப்தி தோஷத்தை நிவிர்த்திச் செய்வான் கருதி அந்த லக்ஷணத்தில் சுவசமானாதிகரண துக்கப் பிராக பாவத்தோடு ஒருங்கிராத வென்னுமிவ்வளவும், துக்கத்துவம்சத்திற்கு விசேஷணமாகக் கூறப்பட்டது. ஆண்டுச் சம்சாரகாலத்தில் பத்த புருஷர்களது சரீரமுதலிய துக்கங்களின் துவம்சம் யாதோ அத்துக்கத் துவம்சம், அத்துக்கத்துவம்சத்தின் அதிகரணத்திலிருப்பதான துக்கப் பிராகபாவத்தோடு ஒருங்கிருப்பதாம். எப்பத்த புருஷனிடத்து துக்கத் துவம்சமிருக்கின்றதோ அப்பத்த புருஷனிடத்து பின்னருண்டாவதான சரீர முதலிய அனேக துக்கங்களின் பிராகபாவமிருக்கின்றது.

அத்துக்கப் பிராகபாவத்தோடு இருக்கிறதாகவே அத்துக்கத் துவம்சமாகின்றது. ஆகையால் அந்த விசேஷணத்தைக் கூறுவதால் பத்த புருஷர்களின் துக்கத் துவம்சத்தில் அம்முக்தியின் லக்ஷணத்திற்கு அதிவியாப்தி யுண்டாகாது. அல்லது "துக்கப்பிராகபாவம் சமானகாலத்திலிராத துக்கத்துவம்சமே முக்தி" என விம்மாத்திரமே அம்முக்தியின் லக்ஷணமாகக்கூறி அந்த லக்ஷணத்தில் சுவசமானாதி கரணமென்னும் இவ்வளவும், துக்கப் பிராகபாவத்திற்கு விசேஷணமாகக் கூறவிடின், சுகர், வாமதேவர் முதலியவரது துக்கத் துவம்ச வடிவ முக்தியில் இந்த லக்ஷணத்திற்கு அவ்வியாப்தி யுண்டாகும். ஏற்றுக்கெனின், தத்துவஞானமில்லாத பத்தஜீவரிடத்துள்ளதான சரீரமுதலிய துக்கங்களின் பிராகபாவம் யாதோ அத்துக்கப் பிராக பாவங்களின் சமான காலத்திலிருப்பதே சுகர், வாமதேவர் முதலியவர்களின் துக்கத் துவம்ச வடிவ முக்தியாம். அந்த அவ்வியாப்தி தோஷத்தை நிவிர்த்திச்செய்யும் பொருட்டுச் சுவசமானாதி கரணமென்னும் இவ்வளவும் துக்கப் பிராக பாவத்திற்கு விசேஷணமாகக் கூறப்பட்டது. ஆண்டுச் சுகர், வாமதேவர் முதலிய முக்த புருஷர்களின் ஆத்மாவில் ஓர் துக்கப் பிராக பாவமுமின்றும் ஆகையால் சுகர், வாமதேவர் முதலிய முக்த புருஷர்களின் துக்கத் துவம்ச வடிவ முக்தி சுவசமானாதி கரண துக்கப் பிராக பாவத்தின் சமான காலத்திருப்பதன்றும். ஆகையால் அம்முக்தியிற் கூறிய அந்த லக்ஷணத்திற்கு அவ்வியாப்தியுண்டாகாது. இதனால் இவ்வர்த்தம் சித்தித்தது; சரீரமுதலிய இருபத்தொரு துக்கங்களின் துவம்சம் தத்தங் காரணத்தா லுண்டாகின்றதெனினும் அத்துக்கத் துவம்சத்தில் விசேஷண வடிவ சுவசமானாதி கரணத் துக்கப் பிராக பாவம் சமானகாலத்தி லிராத்தன்மை வடிவ ஆத்தியந்திகத் தன்மை யாதோ அவ் வாத்தியந்திகத் தன்மை வடிவ விசேஷணம் முற்கூறிய வாற்றால் தத்துவ ஞானத்தானேயே சித்தமாகின்றது. வேறுபாயத்தால் சித்தமாவதன்று; இக்காரணத்தால் அவ்விருபத்தொரு துக்கங்களின் ஆத்தியந்திக நிவிர்த்தி வடிவ முக்திக்குத் தத்துவ ஞானத்தினாலேயே சாத்தியமெனப்படும்.

௪௩. நவீன நையாயிகர்களின் துரித (பாப)த் துவம்ச வடிவ முக்தியின் வர்ணனம்.

நவீன நையாயிகர்களோ இவ்வாறாக மோக்ஷ மொப்புகின்றனர். துக்கத்தின் துவம்சம் முக்தியன்று பாபவடிவ துரிதத்தின் துவம்சமேமுக்தியாம். ஏனெனின், விபுத்திரவியத்தின் பிரத்தியக்ஷயோக்கிய விசேஷகுணம் யாதோ அந்த விசேஷ குணம் தனக்குப் பின்னுள்ளதும் தன் அதிகரணத்திலிருப்பதுமான யோக்கிய விசேஷ குணத்தால் நாசமாகின்றது. எங்ஙனம் விபு ஆத்மாவிலுண்டாவதான பிரத்தியக்ஷ யோக்கிய ஞானம், இச்சைமுதலிய விசேஷ குணங்கள் யாவையோ அவ்விசேஷ குணங்கள் தனக்குப்பின்னுள்ளதும் சுவசமானாதி கரணமுமாம். ஞானம், இச்சை முதலிய விசேஷ குணங்களால் நாசமாய் விடுகின்றன. எங்ஙனம் விபு ஆகாசத்தி லுண்டாவதான பிரத்தியக்ஷ யோக்கிய சத்த விசேஷகுணம் யாதோ, அச்சத்தம் தனக்குப் பின்னுள்ளதும் சுவசமானாதிகரணமுமாம், இரண்டாவது சத்த வடிவ விசேஷ

குணத்தால் நாசமாய் விடுகின்றது. சுருத்திருவாம் முதற்க்ஷணத்தில் விபு ஆத்மாவில் ஓர் ஞானமுண்டாகின்றது. இரண்டாவது க்ஷணத்தில் அந்த ஆத்மாவிலுண்டாகும் இச்சை வடிவ யோக்கிய விபுவின் விசேஷகுணம் அந்த ஞானவடிவ யோக்கிய விபுவின் விசேஷ குணத்தின் நாசஞ் செய்வதாகின்றது. மூன்றாவது க்ஷணத்தில் அந்த ஞான குணம் நாசமாய் விடுகின்றது. இம்முறையை எல்லா விபுவின் யோக்கிய விசேஷ குணங்களில் அறியத் தக்கது. இவ்வெல்லா அர்த்தங்களும் பின்னர் ஐந்தாவது பரிச்சேதத்தில் விரிவாய்க் கூறுவராம், இவ்வாறாக அத்துக்கமும் விபு ஆத்மாவின் பிரத்தியக்ஷ யோக்கிய குணமாம். ஆகையால் அத்துக்கமும் தனக்குப்பின்னுள்ள இச்சை முதலிய விசேஷ குணங்களால் தானே நாசமாய் விடும். துக்கநாசத்தில் தத்துவ ஞானத்திற்கு யாதொருபயோகமுமில்லை. பாப வடிவ துரிதம் விபு ஆத்மாவின் விசேஷ குணமாயினும் பிரத்தியக்ஷ யோக்கிய மன்றும். ஆகையால் பாப வடிவ துரிதத்தின் நாசம் தனக்குப் பின்னுள்ள இச்சைமுதலிய விசேஷ குணங்களால் சம்பவியாது. தத்துவ ஞானத்தினாலேயே பாப வடிவ துரிதத்தின் நாசம் சம்பவிக்கின்றது, இவ்வர்த்தத்தை சுருதி ஸ்மிருதிகளிலும் கூறப்பட்டிருக்கின்றது. ஆண்டுச் சுருதி "க்ஷீயந்தே சாஸ்ய கர்மாணி தஸ்மிந் த்ருஷ்டே பராவரே" (இ-ள்.) பரமாத்மாவின் சாக்ஷாத்காரமுண்டாகத் தத்துவவேத்தாப் புருஷனது எல்லாக் கர்மங்களும் நாசமாய்விடுகின்றன. ஆண்டு ஸ்மிருதி "ஜ்ஞாநாக்நி: ஸர்வகர்மாணி பஸ்மஸாத் குருதே ததா" (இ-ள்.) ஏ அர்ச்சுனா! தத்துவ ஞான வடிவ வன்னி, வன்னியைப்போன்று வெல்லா கர்மங்களையும் சாம்பராக்கி விடும். என்னுமிவைமுதலிய சுருதி ஸ்மிருதிகளில் தத்துவஞானத்தால் பாபவடிவ துரிதங்கட்கே நிவிர்த்திக் கூறப்பட்டிருக்கின்றன, துக்கத்தின் நிவிர்த்தியைக்கூறப்படவில்லை ஆகையால் அப்பாப வடிவ துரிதங்களின் துவம்சம் முக்தியாம்; துக்கத் துவம்சம் முக்தியன்று.

சங்கை:—தத்துவஞானமின்றி வேறோருபாயத்தால் பாப வடிவ துரிதங்களின் நிவிர்த்தியுண்டாகாவிடின், தத்துவஞானத்திற்குப் பாபத் துவம்ச வடிவ முக்தியில் காரணத் தன்மையுண்டாகும். பாபங்களின் துவம்சமோ தத்துவஞானமின்றியே பிராயச்சித்த வடிவ வுபாயத்தாலும் உண்டாகின்றது ஆகையால் வியதிரேக வியபிசாரமுண்டாவதால், தத்துவஞானம் பாபத் துவம்சமான முக்தியைக் குறித்துக் காரணமாவதின்று.

சமாதானம்:—பிராயச்சித்தக் கர்மங்களாலும் பாபத்தின் நாசமுண்டாகிறதெனினும் பிராயச்சித்தத்தால் பாப வடிவ துரிதங்களின் ஆத்தியந்திக நிவிர்த்தியுண்டாவதின்று. தத்துவஞானத்தினாலேயே அவ்வாத்தியந்திக நிவிர்த்தியுண்டாகின்றது, ஆகையாலிம்முக்தியின் லக்ஷணம் சித்திக்கின்றது.

௪௪. ஆத்தியந்திக துரித (பாப)த் துவம்ச முக்தியின் லக்ஷணம்.

"ஸ்வஸமாநாதிகரண துரித ப்ராகபாவ அஸமாநகாலீந துரித த்வம்ஸ:" (இ-ள்.) சுவமென்னும் சத்தத்தால் பாபத்துவம்சத்

தினக் கொள்ளுக, அந்தப்பாபத் துவம்சத்தின் அதிகரணத்தி லிருப்பதான பாபத்தின் பிராகபாவம் யாதோ அந்தப் பிராகபாவம் சமானகாலத்தி லிராத பாபத் துவம்சத்தினை முக்தியெனப்படும். ஆண்டுப் "பாபத்துவம்சம் முக்தி" என இம்மாத்திரமே முக்தியின் லக்ஷணமாகக் கூறின், தத்துவஞானமில்லாத பத்த புருஷர்களிடத்தில் பிராயச் சித்தத்தால் உண்டாம் பாபத் துவம்சத்தில் முக்தியின் லக்ஷணத்திற்கு அதிவியாப்தி யுண்டாகும். அவ்வதி வியாப்தி தோஷத்தை நிவிர்த்தி செய்வான் கருதி அக்லக்ஷணத்தில் "சுவசாமாநாதிகரண பாபத்தின் பிராகபாவம் சமான காலத்திராத" என்னு மிவ்வளவும் அந்தப் பாபத் துவம்சத்திற்கு விசேஷணமாகக் கூறப்பட்டது. ஆண்டுப் பிராயச்சித்தத்தாலுண்டாம் பாபத்துவம்சமிருக்கும் பத்த ஆத்மாவில் பின்னருண்டாவதான அநேக பாபங்களின் பிராகபாவமிருக்கின்றது. ஆகையால் பிராயச்சித்தத்தாலுண்டாம் பாபத்துவம்சம் பாபத்தினது பிராகபாவங்களின் சமானகாலத்திலிருப்பதேயாம்; சமானகாலத்தி லிராததன்று. ஆகையால் அந்த விசேஷணத்தைக் கூறுவதால் பிராயச்சித்தத்தா லுண்டான பாபத்துவம்சத்தில் அம்முக்தியின் லக்ஷணத்திற்கு அதிவியாப்தி யுண்டாகாது. "பாபத்தின் பிராகபாவம் சமானகாலத்திராத பாபத்துவம்சம்முக்தி" என விம்மாத்திரமே முக்தியின் லக்ஷணமாகக் கூறி, அந்த லக்ஷணத்தில் சுவசமாநாதி கரணமென்னு மிவ்வளவும் பாபத்தின் பிராகபாவத்திற்கு விசேஷணமாகக்கூறாவிடின் சுகர், வாமதேவர் முதலிய ஆத்மாக்களின் பாபத்துவம்ச வடிவ முக்தியில் அந்த லக்ஷணத்திற்கு அவ்வியாப்தியுண்டாகும், ஏனெனின் சுகர், வாமதேவர்முதலிய முக்தபுருஷர்களினும் வேறான பத்த (பந்தமுடைய) புருஷர்களின் ஆத்மாவிலுள்ள பாபங்களின் பிராகபாவம்யாதோ, அந்தப் பிராகபாவங்களின் சமானகாலத்தில் இருப்பதே அச்சுகர் வாமதேவர் முதலியவர்களின் பாபத்துவம்ச வடிவ முக்தியாம்; சமான காலத்தில் இல்லாததன்றாம். அந்தஅவ்வியாப்திதோஷத்தைநிவிர்த்திப்பான்வேண்டி அவ்விலக்கணத்தில் சுவசமாநாதிகரணமென்னும் இவ்வளவும், அப்பாபத்தின்பிராகபாவத்திற்கு விசேஷணமாகக் கூறப்பட்டது. ஆண்டுச் சுகர் வாமதேவர் முதலிய முக்த புருஷர்களின் ஆத்மாவில் ஓர் பாபத்தின் பிராகபாவமுமிராது. ஆகையால் சுகர், வாமதேவர் முதலியவர்களின் பாபத்துவம்ச வடிவமுக்தி சுவசமாநாதிகரண பாபத்தின் பிராக பாவத்தின் சமானகாலத்தில் இல்லாததேயாம்; சமான காலத்திலிருப்பதன்று. ஆகையால் அவ்விசேஷணத்தைக் கூறுவதால் முக்தியின் லக்ஷணத்திற்கு அவ்வியாப்திபுண்டாகாது. ஆண்டுதுகாறும் பிராசீன நையாயிகர்களினதும் நவீனநையாயிகர்களினதுமாம் வெவ்வேறு முக்தியைநிரூபித்தனம். இனிபிரசங்கத்தால் வேறுசாத்திரக்காரர்களின் முக்திகளையும் நிரூபிப்பாம். முக்தி காலத்தில் ஆத்யந்திக துக்க நிவிர்த்தியுண்டாகிறதென்னும் வார்த்தைச் சர்வ சாத்திரக்காரர்களுமொப்பியுள்ளார். முக்தி காலத்தில் முக்த புருஷனுக்கு துக்கத்தின் அடைவை ஓர் சாத்திரக்காரருமொப்பினரில்லை. ஆனல் துக்கத் துவம்சத்தின் முக்தித்தன்மையில் சாத்திரக்காரர்களுக்குப் பலவ்பா விவாதமுண்டு: அதைக்காட்டுவோம்.

எ௫. மீமாஞ்சகர்களது முக்தியின் லக்ஷணம்.

மீமாஞ்சகர்களோ இம்மோக்ஷ மொப்புகின்றனர் "யந்நது:கேந ஸம்பிந்நம்" என்னுமிச்சுருதியானது ஸ்வர்க்க சுகத்தினை துக்கமில்லாததாகக் கூறியிருக்கிறது. அன்றியும் "அக்ஷய்யம் ஹவை சாதுர்மாஸ்ய யாஜிந: ஸுக்ருதம் பவதி" என்னுமிச் சுருதியானது ஸ்வர்க்க சுகத்தினை நாசமில்லாததாகக் கூறியிருக்கிறது. ஆகையால் அக்கினிஹோத்திர முதலிய கர்மங்களால் ஸ்வர்க்க சுகத்தின் பிராப்தி யாதோ அதுவே முக்தியாம். பட்டபாதர், பிரபாகரர், முராரிமிசிரர் மூவரும் மீமாஞ்சக ரெனப்படுவர்.

எ௬. பட்டபாதரது முக்தியின் லக்ஷணம்.

பட்டபாதரோ இம்மோக்ஷ மொப்புகின்றனர், நித்திய சுகத்தின் அபிவியக்தி (வெளிப்படை) யே முக்தியாம். சுகத்தின் வெளிப்படையோ சம்சாரத்திலுமுண்டாகின்றது, அதனிடத்தில் முக்தியின் லக்ஷணத்தின் அதிவியாப்தி தோஷ நிவிர்த்தி செய்வான் பொருட்டு அச்சுகத்திற்கு நித்திய மென்னு மிவ்விசேஷணங் கூறப்பட்டது. நித்தியசுகத்திற்குச் சம்சாரகாலத்தில் வெளியாதலுண்டாகிறதில்லை. மோக்ஷகாலத்திலேயே வெளியாதலுண்டாகின்றது. "நித்யம் விஜ்ஞாநமாநந்தம் ப்ரஹ்ம" (இ-ள்.) ஆத்மா நித்திய விஞ்ஞானஸ்வரூபமும், ஆனந்தஸ்வரூபமுமென்னு மிச்சுருதியே நித்திய சுகத்திலும் நித்திய விஞ்ஞானத்திலும் பிரமாண வடிவமாம். சுருதிதுவாம், ஜடமோத (அறிவில்லாத) ஸ்வரூப ஆத்மாவில் நித்தியசுகமும் நித்திய ஞானமும் சம்சார காலத்திலுமிருக்கின்றன வெனினும் சம்சாரகாலத்தில் நித்திய சுகமும் நித்திய ஞானமும் பிரதீதியாவனவன்று. எப்பொழுது அதிகாரியானவன் ஆத்மஞானமும் கர்மமுமாம் இரண்டின் அனுஷ்டானம் செய்கின்றனரோ அப்பொழுது அந்தஞான கர்மங்களின் சமுச்சயத்தால் (கலப்பினால்) நித்திய சுகமும் நித்திய ஞானமும் பிராதுர்ப் பாவத்தினை (தோற்றத்தினை) அடைவதாகின்றன, அதன் பின்னர் விஷய விசேஷத்தின் அபேக்ஷையில்லாத நித்திய ஞானத்தால் நித்திய சுகத்தின் வெளிப்படையுண்டாகின்றது. அந்த நித்திய சுகத்தின் அபிவியக்தியே முக்தியாம்.

எ௭. பட்டபாதரை அநுசரித்தவர்களது மதவர்ணனம்.

பட்ட பாதரை அநுசரித்த சில நூலாசிரியரோ விதுகூறுகின்றனர். மானச ஞானத்தாலுண்டாம் நித்திய சுகத்தின் அபிவியக்தியே முக்தியாம்.

எ௮. பட்டபாதரை அநுசரித்த வேறு மதத்தின் வர்ணனம்.

பட்டபாதரை அநுசரித்த வேறு சில நூலாசிரியரோ இது கூறுகின்றனர். எங்ஙனம் நையாயிகர்கள் துக்கா பாவத்திற்கு முக்தித்துவ மொப்புகின்றனரோ அங்ஙனமே துக்கா பாவ மாத்திரமே முக்தியாம்.

எ௯. பிரபாகரர் முக்தியின் வர்ணனம்.

பிரபாகரரோ இம்மோக்ஷம் கூறுகின்றனர். ஆத்ம ஞான வாயிலாக வைதிக கர்மத்தின் அநுஷ்டானம் யாதோ அவ்வநுஷ்டானத்தால் மூலத்

தோடுள்ள தர்மம் அதர்மங்களின் நாசத்தின் பொருட்டு தேக இந்திரிய முதலியவைகளின் சம்பந்தத்தை அத்தியந்தம் கெடுத்தல் யாதோ அதுவே முக்தியாம்.

௮௰. முராரி மிசிரரது முக்தியின் வர்ணனம்.

முராரி மிசிரரோ இம்முக்தியைக் கூறுகின்றனர். துக்கத்தின் அத்தியந்தாபாவமே முக்தியாம்.

சங்கை:—துக்கத்தின் அத்தியந்தா பாவத்தில் முக்தித் தன்மை சம்பவியாது. ஏனெனின் எப்பதார்த்தம் எவ்வதிகரணத்திலோர்காலுமிராததாமோ அப்பதார்த்தத்தின் அத்தியந்தா பாவமே அவ்வதிகரணத்தி லிருக்கின்றது. அங்ஙனமன்றே: வாயுவில் ஒர்காலும் உருவமிராதாகையால் வாயுவில் உருவத்தின் அத்தியந்தாபாவமிருக்கின்றது. அங்ஙனம் ஆத்மாவிலோர் காலும் துக்கமிராதாயின் ஆத்மாவில் துக்கத்தின் அத்தியந்தா பாவம் சம்பவிக்கும். ஆனால் ஆத்மாவிலோ சம்சாரகாலத்தில் [illegible] ஆகையால் ஆத்மாவில் துக்கங்களின் அத்தியந்தா பாவம் சம்பவியாது. அல்லது துக்கத்தின் அத்தியந்தா பாவத்தினை முக்திவடிவமாகவொப்பின் கடமுதலிய பதார்த்தங்களில் துக்கத்தின் அத்தியந்தாபாவம் சுபாவத்தானேயிருக்கின்றதாகையால் அக்கடமுதலியனவும் முக்தியுடையனவெனல் வேண்டும். அல்லது துக்கத்தின் அத்தியந்தா பாவத்தினை முக்தி வடிவமாக வொப்பின் அம்முக்தியில் புருஷப் பிரயத்தினத்தால் சாத்தியத் தன்மையின்றாய் விடும்; ஏனெனின் அவ்வத்தியந்தா பாவம் நித்தியமேயாகின்றது. எவ்வெப்பதார்த்தம் நித்தியமாகின்றதோ அவ்வப்பதார்த்தம் புருஷப் பிரயத்தினத்தால் சாத்தியமாவதின்று. எங்ஙனம்: ஆத்மா நித்தியமாவதால் புருஷப் பிரயத்தினத்தால் சாத்தியமாவதின்றும். அங்ஙனமே அத்துக்கங்களின் அத்தியந்தா பாவ வடிவ முக்தியும் நித்தியமாவதால் புருஷப் பிரயத்தினத்தால் சாத்தியமாவதின்றாகும். அதனால் முக்திப் பிராப்தியின் பொருட்டு முமுக்ஷு ஜனங்களின் முயற்சி வீணாகும். ஆகையால் துக்கத்தின் அத்தியந்தா பாவத்தில் முக்தி வடிவத் தன்மை சம்பவியாது.

சமாதானம்:—துக்கங்களின் நித்திய அத்தியந்தா பாவம் யாதோ அந்த நித்திய அத்தியந்தாபாவத்தை ஈண்டு முக்தி வடிவமாகக் கூறியதன்று. ஆனால் அத்துக்கங்களின் சாமயிக அத்தியந்தாபாவத்தையே ஈண்டு முக்திவடிவமாகக் கூறியதாம். பிரதியோகியின் வருதலுளதாக நஷ்டமாவதும் பிரதியோகியின் போதலுளதாக உண்டாவதுமான அபாவம் யாதோ அவ்வுற்பத்தி நாசமுடைய அபாவம் ஸாமயிகா பாவமெனப்படும். எங்ஙனம்: பூதலத்திலுள்ள அபாவத்தினை ஸாமயிகா பாவமெனப்படும். ஈண்டு அக்கடத்தினை கொணர்ந்து பூதலத்தில் வைத்தகாலத்தில் அக்கடாபாவம் நஷ்டமாய் விடுவதும், அப்பூதலத்தினின்றும் அக்கடத்தினை கொண்டு போங்காலத்தில் அக்கடாபாவம் மீண்டும் உண்டாவதாகின்றது. ஆகையால் உற்பத்திநாசமுடையதாவதால் அக்கடாபாவம் ஸாமயிகா பாவமெனப்படும். இவ்வாறுய அத்துக்கங்க

ளின் ஸாமயிக அத்தியந்தா பாவத்திற்கு முக்தி வடிவ மொப்புவதில் முற்கூறிய தோஷம் பிராப்தமாகாது. இவ்வாறுய துக்க அத்தியந்தா பாவத்தில் முக்தி வடிவத் தன்மை சுருதியிலும், சூத்திரத்திலும் கூறப்பட்டிருக்கின்றது. ஆண்டுச்சுருதி "[illegible]" (இ-ள்.) தத்துவவேத்தாவான புருஷன் துக்கத்தினின்றும் அத்தியந்த விமுக்தமா (நீங்கி) யிருக்கப் பிரவேசிக்கின்றான். ஆண்டுச்சூத்திரம் "ததத்யந்தவிமோக்ஷோபவர்க:" (இ-ள்). துக்கங்களின் அத்தியந்தாபாவமே அபவர்க்கமென்னும் மோக்ஷமாம்.

௮௧. சாங்கிய சாத்திரத்தின் முக்தி வர்ணனம்.

சாங்கிய சாத்திரமுடையாரோ இம்முக்தியை யொப்புகின்றனர், சத்துவம், ராஜசம், தாமதமாமுக்குண வடிவமும், ஏகமும் பரிணாமியுமான இந்தகைய பிரதான மென்னும் ஜடப்பிரகிருதியும், காரிய காரண பாவ மில்லாத நித்திய கூடஸ்த அகர்த்தா சேதன புருஷனுமான இவ்விரண்டின் விவேகத்தால் இப்புருஷனது அநாதி அவிவேகம் நிவர்த்தியாய் விடுகின்றது. அதன் பின்னர் அந்த விவேகமுடைய புருஷனிடத்தினின்றும் நிவர்த்தியாய் விட்ட * பிரகிருதியாதோ அந்தப் பிரகிருதிக்கு மீண்டும் புருஷனது போகத்தின் பொருட்டு பிரவிர்த்தி யுண்டாவதின்று. அதன் பின்னர் † மூவித துக்கங்களின் அத்தியந்த நிரோத (நீக்க) வாயிலாகப் புருஷனுக்கு யதார்த்தகர்த்தா, உதாசீன கூடஸ்த வடிவமா நிற்றல் யாதோ அதுவே முக்தியாம்.

௮௨. யோகசாத்திரமதமுடையாரது முக்தியின் வர்ணனம்.

யோக சாத்திரமுடைய பாதஞ்சல முனிவரோ இம்முக்தியை யொப்புகின்றனர். ‡ அவித்தை, ¶ அஸ்மிதை, ராகம், (விருப்பு) த்வேஷம், (வெறுப்பு) ‖ அபினிவேசமென்னும் ஐந்து கிலேச (துக்க) வடிவமும், ஜாதி, ஆயுள், போகம், ரூபமென்னும் இவை முதலிய பஞ்சத்திர வடிவமுமான எத்தனை பந்தகங்க ளிருக்கின்றனவோ அப்பந்தகங்களுக்கு அஷ்டாங்கயோகத்தால் நிவிர்த்தியுண்டான பின்னர் சுதந்திரத் தன்மையின் அடைவு யாதோ அதுவே முக்தியாம்.

௮௩. பாசுபதசாத்திரத்தின் முக்தி வர்ணனம்.

பாசுபத சாத்திர முடையாரோ இம்முக்தியை யொப்புகின்றனர்; பாசுபதசாத்திரத்திற் கூறிய பசுபதியின் பூஜை அர்ச்சனை முதலியவையாவையோ, அப்பூஜை அர்ச்சனை முதலிய பாசுபத தர்மங்களின் அநுஷ்டானத்தால் ஜீவனாகிய பசுவினது பந்தமாகிய பாசத்தின் நிவிர்த்தியுண்டான பிறகு ஜீவனுக்கு மீண்டும் வருதலில்லாத (ஜனனமில்லாத) பசுபதியின் சமீபத்தில் செல்லுதலே ஜீவனது முக்தியாம்.

---

* பிரகிருதி—சத்துவம், ராஜசம், தாமதமென்னும் முக்குணங்களின் சமநிலைமை. இதனைப் பிரதானமென்றும் வழங்கப்படும். † மூவித துக்கங்கள்—ஆதி ஆத்மிகம், ஆதிதெய்விகம், ஆதிபௌதிகம். ‡ அவித்தை—விசாரித்துப்பார்த்தால் இல்லாமற் போவது. ¶ அஸ்மிதை—புத்தி ஆத்மாக்களின் ஒருமையுணர்ச்சி. ‖ அபினிவேசம்—மரணபயத்தால் சரீரத்தை ரக்ஷித்தற்கு உண்டாகும் ஆக்கிரகம்.

௬௪. வைஷ்ணவர்களின் முக்தி வர்ணனம்.

வைஷ்ணவர்களோ இம்முக்தியை யொப்புகின்றனர். விஷ்ணுவைப் பிரதிபாதிக்கும் நாரதம், பாஞ்சராத்திர முதலிய சாத்திரங்களிற் கூறிய விஷ்ணுபக்தர்களின் தர்மங்கள் யாவையோ அத்தர்மங்களின் அநுஷ்டானத்தாலுண்டாவதான விஷ்ணுவின் பிரசாத (அநுக்கிரக) த்தால் ஜீவனுக்கு மீண்டும் வருதலில்லாத (ஜனனமில்லாத) விஷ்ணு லோக கமன (செல்லுவதான) விசேஷம் யாதோ அதுவே ஜீவனுக்கு முக்தியாம்.

௬௫. ஹைரண்ணிய கர்ப்பரது முக்தியின் வர்ணனம்.

ஹைரண்ணிய கர்ப்பரோ இம்முக்தியை யொப்புகின்றனர், ** பஞ்சாக்கினிவித்தியா முதலிய உபாசனைகளால் ஜீவாத்மாவிற்கு †† அர்ச்சிர முதலிய மார்க்க வாயிலாக மீண்டும் ஜனனமில்லாத பிரமலோகப் பிராப்தியே ஜீவாத்மாவின் முக்தியாம்.

௬௬. ஏகதண்டி வேதாந்திகளது முக்தியின் வர்ணனம்.

ஏகதண்டி வேதாந்திகளோ இம்முக்தியைக் கூறுகின்றனர், அஹம் பிரஹ்மாஸ்மி யென்னும் ஜீவப்பிரஹ்மத்தின் அபேதசாக்ஷாத் காரம் யாதோ அச்சாக்ஷாத்காரத்தால் அநாதி அவித்தையின் நிவிர்த்தியுண்டாக சர்வவுபாதிகளில்லாத கேவல சுத்த வாத்மா சுயப்பிரகாசஞான சுக வடிவமாக இருத்தலே ஜீவாத்மாவின் முக்தியாம்.

௬௭. திரிதண்டி வேதாந்திகளது முக்தியின் வர்ணனம்.

திரிதண்டி வேதாந்திகளோ இம்முக்தியை யொப்புகின்றனர். "[illegible]" என்னுமிவைமுதலிய சுருதிவசனங்களோ ஜீவப்பிரஹ்மத்தின் அபேதத்தைக் கூறுகின்றன. அன்றியும் "[illegible]" என்னுமிவை முதலிய சுருதி வசனங்கள் ஜீவப்பிரஹ்மத்தின் பேதத்தைக்கூறுகின்றன. கேவலம் ஜீவப்பிரஹ்மங்களின் அபேத மொப்பின் பேதத்தைப் போதிக்கும் வசனங்கள் அசங்கதமாகும். கேவலம் ஜீவப்பிரஹ்மங்களின் பேதமொப்பின் முற்கூறிய அபேதத்தைப்போதிக்கும் வசனங்கள் அசங்கதமாகும். ஆகையால் அவ்விரு வாக்கியங்களது பிரமாணத் தன்மையின் பொருட்டு ஜீவப்பிரஹ்மங்களின் பேதம் அபேதமாயிரண்டினையுமொப்பவேண்டும். எப்பொழுது அதிகாரி புருஷன் ஆத்மஞானமும் கர்மமும் இரண்டின் அநுஷ்டானங்க

** பஞ்சாக்கினி—காருகபத்யம், ஆஹவனீயம், தக்ஷிணாக்கினி, சப்பியம், ஆவசத்யம். ஆதி யென்பதால் பிரணவாதி பிரம்ம உபாசனையைக் கொள்ளுக. †† அர்ச்சிர மார்க்க முதலியன—அக்னி அபிமானிதேவதை, ஜோதி அபிமானிதேவதை, தின அபிமானிதேவதை, சுக்லபக்ஷ அபிமானிதேவதை, ஷண்மாச அபிமானிதேவதை, உத்தராயண அபிமானிதேவதை, சம்வச்சர அபிமானிதேவதை, சூரியன், சந்திரன், மின்னல் இவைகள் மூலமாய்ச்சென்று முடிவில் அமானவ புருஷனூடாய்ப் பிரம்மலோகம் சேர்வது. இதனை, தேவயான மார்க்கமென்றும் வழங்கப்படும்.

ளைச் செய்கின்றானோ அப்பொழுது ஞான கர்மங்களின் சமுச்சய (கலப்பு) பழக்கத்தால் காரண வடிவ பிரஹ்மத்தில் காரிய வடிவ ஜீவனுக்கு கர்மவாசனையோடுள்ள பேத அம்சத்தின் நிவிர்த்தி வடிவ மெழுண்டாகின்றது அதுவே ஜீவாத்மாவிற்கு முக்தியாம்.

௬௮. திரிதண்டி வேதாந்திகளை அநுசரித்தவர்களது முக்தியின் வர்ணனம்.

சிலதாசாரியரோ இம்முக்தியை யொப்புகின்றனர். "ஸத்யம் ஞானமனந்தம் ப்ரஹ்ம" என்னுமிவைமுதலிய சுருதிகள் பிரஹ்மத்தின் நிர்விகார அவஸ்தையைக் கூறுகின்றன "யதோவா இமானி பூதானி ஜாயந்தே" என்னுமிவை முதலிய சுருதிகள் பிரஹ்மத்தின் சவிகார அவஸ்தையைக் கூறுகின்றன. அன்றி பிரஹ்மத்திற்குக் கேவல நிர்விகாரமுடைய அவஸ்தையை யொப்பின் பிரஹ்மத்திற்கு விகார அவஸ்தையைக் கூறுவதான சுருதி வசனங்கள் அசங்கதமாகும். பிரஹ்மத்திற்கு கேவல சவிகாரமுடைய அவஸ்தையை யொப்பின் பிரஹ்மத்திற்கு நிர்விகாரமுடைய அவஸ்தையைக் கூறுவதான சுருதி வசனங்கள் அசங்கதமாகும். ஆகையால் இவ்விருவித வாக்கியங்களின் பிரமாணத்தன்மையின் பொருட்டுப் பிரஹ்மத்திற்கு சவிகாரம், நிர்விகாரமாமிரு அவஸ்தைகளை யொப்பவேண்டும். எங்ஙனம்:—சமுத்திரத்திற்கு அலைகளோடும் அலைகளின்றியுமிருக்கு மிரு அவஸ்தைகளுண்டாகின்றனவோ அங்ஙனமே பிரஹ்மத்திற்கும் சவிகார நிர்விகாரமென்னுமிரு அவஸ்தைகளுண்டாகின்றன. அன்றி ஞானகர்மங்களின் சமுச்சய (கலப்பு) அப்பியாசத்தால் சவிகாரஅவஸ்தையின் நீக்கமுண்டாகி ஜீவாத்மாவிற்கு நிர்விகார அவஸ்தையின் பிராப்தியுண்டாகிறது, அதுவே இஜ்ஜீவாத்மாவின் முக்தியாம்.

௬௯. இராமாநுஜ மதமுடையாரது முக்தியின் வர்ணனம்.

இராமாநுஜ மதமுடையாரோ இம்முக்தியை யொப்புகின்றனர், ஸ்ரீ பகவான் வாசுதேவனிடத்திலிருக்கும் சர்வஜ்ஞத்தின் கர்திருத்தன்மையாதோ அக் கர்திருத்தன்மை தர்மத்தினை விட்டு அப்பகவானுடைய சர்வஜ்ஞத்தன்மை முதலிய கல்யாண குணங்களைத்தானேயோ, அச்சர்வஜ்ஞத் தன்மை முதலிய குணங்களின் பிராப்தி வாயிலாக ஜீவாத்மாவிற்கு அப்பகவானுடைய யதார்த்தஸ்வரூபத்தின் அநுபவம் யாதோ அதுவே ஜீவாத்மாவின் முக்தியாம்.

௭௰. மத்துவமதமுடையாரது முக்தியின் வர்ணனம்.

மத்வ மதமுடையாரோ இம்முக்தியை யொப்புகின்றனர், ஜகத்கர்திருத்தன்மை, இலக்குமி, ஸ்ரீவத்சமென்னும் மூன்றையும் விட்டு வேறெத்தனை, விஷ்ணுபகவானுடைய நிரதிசயானந்த முதலிய தர்மங்களுளவோ அவைகளின் சாதுர்சிய (ஒப்புமை) தர்மங்களின் பிராப்தி ஜீவனுக்குண்டாவதே ஜீவாத்மாவின் முக்தியாம். அம்முக்தியும் சாலோக்கியம், சாமீப்பியம், சாரூப்பியம், சாயுச்சியம் என்னும் வேறுபாட்டால் நான்கு விதமாகின்றது. விஷ்ணு பகவானிருக்கும் வைகுண்டலோகம் யாதோ அந்த லோகத்தின்

பிராப்தியினையே ஜீவனுக்கு சாலோக்கியமென்பர். அந்தலோகத்தில் ஜீவாத்மாவிற்கு விஷ்ணுபகவானுடைய சாமீபத் தன்மையின் பிராப்தத்தினையே சாமீப்பியமென்பர். சமீபத் தன்மையின் பிராப்தமுண்டாய் ஜீவாத்மாவிற்கு விஷ்ணுபகவானுடைய சாரூப (ஒப்புமையுருவ) த்தின் பிராப்தம் யாதோ அதனைசாரூப்பிய மென்பர். அவ்விஷ்ணு பகவானுடைய ஸ்வரூபத்தில் ஜீவாத்மாவின் லயமியாதோ அதனை சாயுஜ்யமென்பர்.

கூக. வல்லபமதமுடையாரது முக்தியின் வர்ணனம்.

வல்லபமதமுடையாரோ விம்முக்தியை யொப்புகின்றனர். கோலோகத்தில் இருப்பதமுடைய கிருஷ்ணபகவானோடு அவரது அம்சவடிவஜீவனுக்கு *ராசலீலையின் அநுபவம் யாதோ அதுவே ஜீவனுக்கு முக்தியாம்.

கூஉ. வியாகரண சாத்திரமுடையாரது முக்தியின் வர்ணனம்.

வியாகரண சாத்திரமுடையாரோ இம்முக்தியை யொப்புகின்றனர். †பரா, ‡பைசந்தி, ¶மத்திமை, ‖வைகரி என நான்குவிதமாக வாக்குகளுண்டாகின்றன, இந்நான்குவித வாக்குகளில் முதலிலுள்ள பராவெனப் பெயரிய வாக்கு யாதோ அது பிரஹ்ம வடிவமாம் இத்தகைய பிரஹ்ம வடிவ பரா வாணியின் தரிசனம் யாதோ அதுவே ஜீவனுக்கு முக்தியாம்.

கூங. இரசேஸ்வர வாதிகளது முக்தியின் வர்ணனம்.

இரசேஸ்வர வாதிகளோ இம்முக்தியை யொப்புகின்றனர்; பாதரசத்தினை பானஞ்செய்வதால் (அருந்துவதால்) மூப்பு மரணாதிகளின்றி இத்தேகத்தின் நிலைத்தற்றன்மையான ஜீவன் முக்தியாதோ அதுவே ஜீவாத்மாவின் முக்தியாம்.

கூச. சூன்னியவாதி மாத்திமிகரது முக்தியின் வர்ணனம்.

சூன்னிய வாதி மாத்திய மிகரோ இம்முக்தியை யொப்புகின்றனர். இவ்வெல்லாஜகத்தும் சூன்னியமேயாம் பிராந்தி நோக்கால் சத்வடிவ பிரதீதியுண்டாகின்றது. உண்மையாக வோர் வத்துவும் சத்தன்றுமென சூன்னிய பாவத்தின் பரிபாக பரியந்தம் சூன்னிய வடிவ ஆத்மாவின் தத்துவ ஞானமும் அத்தத்துவ ஞானத்தால் சூன்னிய பாவத்தின் பிராப்தம் யாதோ அதுவே முக்தியாம்.

கூரு. தேகாத்மவாதி சார்வாகரது முக்தியின் வர்ணனம்.

தேகாத்ம வாதி சார்வாகரோ இம்முக்தியை யொப்புகின்றனர். விதிநிஷேதமில்லாத சுதந்திரத் தன்மையாதோ அதுவே முக்தியாம். அல்லது இச்சரீரவடிவ ஆத்மாவின் மரணம் யாதோ அதுவே முக்தியாம்.

* ராசலீலை—ஸ்ரீமத் பாகவதத்தின்கண் தசமஸ்கந்தத்தினில் ஸ்ரீகண்ணன் கோபிகைகளுடன் செய்த சிங்கார ரசசம்பந்தமான கிரீடை யெனக்கூறப்பட்டிருக்கிறது.

† பரா—நாபியினின்றும் எழும் சூக்ஷ்ம சத்தம். ‡ பைசந்தி—இருதயத்தினின்றும் எழும் சூக்ஷ்மசத்தம். ¶ மத்தியமா—கண்டத்தினின்றும் எழும் சூக்ஷ்மசத்தம். ‖ வைகரி—வாக்கினின்றும் எழுஞ் சத்தம்.

கூசா. க்ஷணிக விஞ்ஞான வாதி யோகாசாரரது முக்தியின் வர்ணனம்.

விஞ்ஞான வாதி யோகாசாரரோ விம்முக்தியை யொப்புகின்றனர். அதாவது இருவித விஞ்ஞானமுண்டாகின்றன. ஒன்றோ ஆலயவிஞ்ஞானமும், மற்றையது பிரவிர்த்திவிஞ்ஞானமுமாம். அவ்விருவித விஞ்ஞானமும் க்ஷணிகமாகின்றன. ஆண்டுக் கட பட முதலிய விஷயாகாரமாக இதுகடம், இதுபடம் என்னுமிவைமுதலிய விஞ்ஞானம் யாதோ அந்த விஞ்ஞானமோ பிரவிர்த்தி விஞ்ஞானமெனப் படுகின்றது. இப்பிரவிர்த்தி விஞ்ஞானத்தி னுபாதான காரணவடிவமும், கட பட முதலிய பதார்த்தங்களை விஷயஞ்செய்யாததான யான் யான் என்னுமிவ்வாறாய விஞ்ஞானமும் யாதோ அந்த விஞ்ஞானம் ஆலய விஞ்ஞானமெனப்படுகின்றது. அவ்வாலய விஞ்ஞானத்தினும் வேறான பதார்த்தங்கள் யாவும் துச்சமாம் (பொய்யாம்.) ஆண்டுச் சம்சார காலத்தில் வர்த்தமான பிரவிர்த்தி விஞ்ஞானம் யாதோ அவைகளின் உச்சேதமுளதாக (நாசமுளதாக) கேவல ஆலய விஞ்ஞானத்தின் தாரை (தொடர்ச்சி) யாதோ அதுவே முக்தியாம்.

கூஎ. ஆர்ஹத (ஜைன) மதமுடையாரது முக்தியின் வர்ணனம்.

ஆர்ஹதமதமுடையாரோ விம்முக்தியை யொப்புகின்றனர். எங்ஙனம், கூட்டில் அடைப்பட்டக் கிளிப்பக்ஷி கூட்டிற்கு நஷ்டமுண்டாகச் சுவதந்திரமாக ஆகாசத்திற் பறந்து விடுகின்றதோ அங்ஙனமே, ஆர்ஹத சாத்திரங்கூறிய தத்பத்தினாலும், ஆத்ம ஏகாக்கிரச் சமாதியால் அஷ்டவித கர்மவடிவபந்தத்தின் நாசம்சமுண்டாயதன் பின்னர் சுவதந்த்ரியவடிவமும், நிராவரண ஞான வடிவமுமான ஆத்மாவின் சுவதந்திர முண்டாகி நிரந்தர ஊர்த்துவ கமனம் (மேற்செல்லுவது) யாதோ அல்லது அலௌகிக ஆகாசத்திற் செல்லுவது யாதோ அதுவே இவ்வாத்மாவிற்கு முக்தியாமென்பர். அஷ்டவித கர்மங்களின் ஸ்வரூபமும், அலௌகிக ஆகாசத்தின் ஸ்வரூபமும், பின்னர் இரண்டாவதுபரிச்சேதத்தில் ஆர்ஹதமதநிரூபணத்திற் றெளிவாய்க் கூறுவாம். மீமாம்சகர் மதமுதலாக ஆர்ஹதரது மதமட்டும் எத்தனை வாதிகளின் முக்தியைக் கூறினோமோ அம்முக்தியினைப் பிருஹத் நியாயக் கிரந்தங்களில் தூஷிக்கப்பட்டிருக்கின்றது. அத்தூஷணம் கிரந்தம் விரியுமென்னும் பயத்தா லீண்டெழுதப்படவில்லை. ஆனாலும் சர்வவாதிகளின் முக்தி மாத்திரத்தின் ஸ்வரூபமீண்டு நிரூபித்தனம். முக்தி வாதம் முற்றிற்று.

கூஅ. தத்துவஞானத்தில் திரவியமுதலிய பதார்த்தங்களினது நிருபணத்தின் உபயோக வர்ணனம்.

இனியிந்நூலிற் கூறப்படும் திரவியமுதலிய பதார்த்தங்களின் ஞானத்திற்கு எவ்வகையால் தத்துவஞானத்திலுபயோகமோ அவ்வகையினை நிரூபிப்பாம். ஆண்டு ஆத்மாவானது தேகம், இந்திரிய முதலிய வெல்லாப் பதார்த்தங்களினும் வேறுமென்னும் இவ்வாறாய தத்துவ ஞானத்தால் அத்தியந்த துக்க நிவிர்த்தி வடிவ மோக்ஷத்தின் பிராப்தியை முற்கூறினம். அத்தத்துவ ஞானம் தேகேந்திரிய முதலிய சர்வ அனாத்ம பதார்த்தங்களின் ஞானமின்றி சம்பவியாது. ஏனெனின் எவ்வெவ்வபாவத்தை விஷயஞ்செய்யும் ஞானமுண்

டாகின்றதோ அவ்வவ்வபாவ ஞானம் அவ்வபாவத்தின் பிரதியோகி
விஷயஞ் செய்யும் ஞானத்தினுலேயே யுண்டாகின்றது. பிரதியோகி
ஞானமின்றி அபாவ ஞான முண்டாகாது. எங்ஙனம், கடவடிவப் பி
யோகியின் ஞானமுளதாகியே பூதலமுதலிய விடங்களில் அக்கடாபாவத்
ஞானமுண்டாகின்றது. கடவடிவப்பிரதியோகியின்ஞானமின்றிக் கடாபா
தின் ஞானம் பிரதீதமாவதின்று. அங்ஙனமே ஆத்மாவில் தேகேந்தி
முதலிய சர்வ அநாத்ம பதார்த்தங்களின் அன்னியோன்னியாபாவ வ
பேதத்தைத் விஷயஞ் செய்வதாகிய தத்துவஞானம் யாதோ அத்தத்துவ ஞ
மும் தேகேந்திரியமுதலிய சர்வ அநாத்ம பதார்த்த வடிவப் பிரதியோகி
ஞானமின்றி சம்பவியாது. ஆகையால் தத்துவஞானத்தின் சித்தியின்பொரு
டுந் தேகேந்திரியமுதலிய சர்வ அநாத்மபதார்த்தங்களை அறிதல்வேண்
தேகேந்திரிய முதலிய சர்வ அநாத்ம பதார்த்தங்களின்ஞானம் திரவிய முத
பதார்த்தங்களின் நிரூபணம் செய்தாலன்றிச்சம்பவியாது. ஆகையால் திர
முதலிய பதார்த்தங்களின் நிரூபணம் அவசியங் கூறவேண்டியதாம். முத
சுருக்கமாக நிரூபித்தப்பதார்த்தங்களைப்பின்னர் விரிவாக நிரூபிப்பதால் கே
போருக்குப் பதார்த்தங்களின் போதம் எளிதாயுண்டாகின்றது. ஆகைய
கேட்போருக்கு எளிமை வாயிலாக போதமாம் பொருட்டுத் திரவிய முத
பதார்த்தங்களை முன்னம் சுருக்கமாக நிரூபிப்பாம்.

௯௯. பதார்த்தங்களின் அசாதாரண லக்ஷணம்.

ஆண்டு "ஜ்ஞேயத்வம் ப்ரமேயத்வம் அபிதேயத்வம் அஸ்தித்வம் வ
லக்ஷணம்" (இ-ள்.) திரவிய முதலிய ஏழு பதார்த்தங்களின் அசாதாரண
மாகிய ஞேயத்தன்மை, பிரமேயத் தன்மை, அபிதேயத் தன்மை, அஸ்
தன்மை என்னும் நான்கும் லக்ஷண வடிவமாம், ஞானத்தின் விஷ
தன்மையினை ஞேயத்தன்மை யென்பர். பிரமாஞானத்தின் விஷயத் தன்
யினைப்பிரமேயத் தன்மை யென்பர், ஜீவாத்மாவின் ஞானத்தின் விஷயத்
மையும், பிரமையின் விஷயத்தன்மையும்எல்லாப்பதார்த்தங்களிலிருப்பதி
எனினும் சர்வஞ்ஞவீஸ்வர ஆத்மாவினது ஞானத்தின் விஷயத் தன்மை
பிரமையின் விஷயத் தன்மையும், எல்லாப் பதார்த்தங்களினும் இருக்கின்ற
அந்தவிஷயத் தன்மையே திரவிய முதலிய ஏழு பதார்த்தங்களின் லக்
மாம். கேட்போருக்கு இப்பதத்தா லிவ்வர்த்தத்தின் போதமுண்டா
வென்னும் பதத்திலுள்ள ஈஸ்வரனது விச்சா வடிவ சக்தியாதோ அ
அபிதையென்பர். அவ்வபிதையின் விஷயத் தன்மையினை அபிதேயத் தன்
யென்பர். கடபட முதலிய பதங்கட்கு அபிதையின் விஷயத்தன்மை திர
முதலிய சர்வபதார்த்தங்களிலின்றும். என்றாலும் பதார்த்த மாத்திரத்
வாசகமான சர்வமுதலிய பதங்கள்யாவையோ அவ்வெல்லாப்பதங்கட்கு அ
தையின் விஷயத் தன்மை அத்திரவிய முதலிய சர்வ பதார்த்தங்களினுமி
கின்றது. அதுவே திரவிய முதலிய பதார்த்தங்களின் லக்ஷணமாம். காலத்தி
சம்பந்தத்தினை அஸ்தித் தன்மை யென்பர். அதுவும் திரவிய முதலிய ச
பதார்த்தங்களிலிருக்கின்றது.

௱. திரவிய முதலிய ஏழு பதார்த்தங்களைச் சாமான்னியமாக நிரூபித்தல்.

அப்பதார்த்தங்கள் கணாதமுனிவர் அருளிச்செய்த வைசேடிக சாத்திரத்தில் திரவியம், குணம், கருமம், சாமான்னியம், விசேஷம், சமவாயம், அபாவமென்னும் வேறுபாட்டா லேழுவகையாகின்றன. அல்லது அப்பதார்த்தம் பாவம், அபாவமென்னும் வேறுபாட்டா லிருவிதமாகின்றன. ஆண்டு முதற்பாவ பதார்த்தமோ திரவியம், குணம், கருமம், சாமான்னியம், விசேஷம், சமவாய மென்னும் வேறுபாட்டால் அறுவகைத்தாம். மற்றைய அபாவ பதார்த்தமோ சம்சர்க்கா பாவம், அன்னியோன்னியா பாவமென்னும் வேறுபாட்டா லிருவகைத்தாம். முதற் சம்சர்க்கா பாவமோ பிராகபாவம், பிரத்துவம்சா பாவம், அத்தியந்தாபாவம் என்னும் வேறுபாட்டால் மூவகைத்தாம். மற்றைய அன்னியோன்னியா பாவமோ ஒன்றேயாம்.

௱௧. திரவிய நிரூபணம்.

ஆண்டு ஏழு பதார்த்தங்களுள் முதல் திரவிய பதார்த்தமோ பிருதிவி, ஜலம், தேயு, வாயு, ஆகாசம், காலம், திக்கு, ஆத்மா, மனமென்னும் வேறுபாட்டா லொன்பது வகைத்தாம்.

௱௨. மூர்த்த அமூர்த்தத் திரவியங்களின் பேத வர்ணனம்.

இவ்வொன்பது திரவியங்களினும் பிருதிவி, ஜலம், தேயு, வாயு, மனமென்னும் ஐந்து திரவியங்களோ மூர்த்தத் திரவிய மெனப்படுகின்றன. ஆகாசம், காலம், திக்கு, ஆத்மாவென்னும் நான்கும் அமூர்த்தத் திரவியங்களெனவும், விபுவு மெனப்படுகின்றன.

௱௩. நித்திய அநித்திய திரவியங்களின் பேத வர்ணனம்.

பிருதிவி, ஜலம், தேயு, வாயுவென்னும் நான்கின் பரமாணுக்களும், ஆகாசம், காலம், திக்கு, ஆத்மா, மனமென்னும் யாவும் நித்தியத் திரவியங்களெனப்படுகின்றன. துவியணுகாதி காரியவடிவ பிருதிவி, ஜலம், தேயு, வாயுவென்னும் யாவும் அநித்தியத் திரவியமெனப்படுகின்றன.

௱௪. பிருதிவிவடிவத் திரவியத்தினைச் சுருக்கமாக நிரூபித்தல்.

ஆண்டு அவ்வொன்பது திரவியங்களில் முதற்கட் பிருதிவி வடிவ திரவியம் நித்தியம், அநித்திய மென்னும் வேறுபாட்டா லிருவகைத்தாம். பரமாணுவடிவ பிருதிவியோ நித்தியமும், துவியணுகாதி காரிய வடிவபிருதிவி அநித்தியமுமாகின்றது. அவ்வநித்தியப் பிருதிவியும் சரீரம், இந்திரியம், விஷயமென்னும் வேறுபாட்டால் மூவகைத்தாம். பார்த்திவ சரீரம் யோனிஜம், அயோனிஜ மென்னும் வேறு பாட்டா லிருவகைத்தாம். சுக்ல, சோணித கலப்பினாலுண்டாய சரீரம் யாதோ அச்சரீரம் யோனிஜ மெனப்படுகின்றது. அந்த யோனிஜ சரீரமும், ஜராயுஜம், அண்டஜமென்னும் வேறுபாட்டால் இருவகைத்தாம். மனிதர் முதலிய சரீரங்கள் ஜராயுஜ மெனப்படுகின்றன. பக்ஷி சர்ப்ப முதலிய சரீரங்கள் அண்டஜமெனப்படுகின்றன. யோனிஜ சரீரத்தினும் வேறான சரீரம் யாதோ அச்சரீரம் அயோனிஜமெனப்படுகின்றது. அவ்வயோ

னிஜ சரீரமும் ஸ்வேதஜம், உத்பிஜ்ஜம், அதிர்ஷ்ட விசேஷஜன்னிய மென்னும் வேறுபாட்டால் மூவகைத்தாம். புழு, கொசுகு முதலிய சரீரங்கள் ஸ்வேதஜ மெனப்படுகின்றன. மரமுதலியன உத்பிஜ்ஜமெனப்படுகின்றன. மனு முதலிய சரீரங்கள் அதிர்ஷ்ட விசேஷ ஜன்னியமெனப்படுகின்றன. நாற்றத்தினைக் கிரஹிக்கும் கிராண வடிவ பார்த்திவ இந்திரியம் ஒன்றேயாகின்றது. மண், கல், வஜ்ர முதலிய பார்த்திவ விஷயமோ பல்வகைத்தாம்.

௱௫. ஜலவடிவத் திரவியத்தினைச் சுருக்கமாய் நிரூபித்தல்.

இரண்டாவது ஜலவடிவத்திரவியமும் நித்தியம், அநித்தியமென்னும் வேறுபாட்டா லிருவகைத்தாம். பரமாணு வடிவ ஜலமோ நித்தியமும், துவியணுகாதி காரிய வடிவ ஜலம் அநித்தியமுமாகின்றது. அவ்வநித்திய ஜலமும் சரீரம், இந்திரியம், விஷயம் என்னும் வேறுபாட்டால் மூவகைத்தாம். ஜலீய (ஜலக்கூறும்) சரீரம் அயோனிஜமேயாகின்றது. அந்த ஜலக்கூறும் சரீரம் வருணலோகத்திற் பிரசித்தமாம். இரசத்தைக் கிரஹிக்கும் இரசனேந்திரியம் ஜலீயவிந்திரிய மெனப்படும். நதி, கடல் முதலியன ஜலீயவிஷயமெனப்படும்.

௱௬. தேயு வடிவத் திரவியத்தினைச் சுருக்கமாக நிரூபித்தல்.

மூன்றாவது தேயு வடிவத் திரவியமும் நித்தியம், அநித்தியமென்னும் வேறுபாட்டால் இருவகைத்தாம். பரமாணுவடிவத்தேயுவோ நித்தியமும், துவியணுகாதிகாரிய வடிவத்தேயு அநித்தியமுமாகின்றது. அவ்வநித்தியத்தேயுவும் சரீரம், இந்திரியம், விஷய மென்னும் வேறுபாட்டால் மூவகைத்தாம். தேயு சரீரம் அயோனிஜமேயாகின்றது. அத்தேயு சரீரம் சூரிய லோகத்திற் பிரசித்தமாம். உருவத்தைக் கிரஹிக்கும் சக்ஷு விந்திரியம் தேயு விந்திரிய மெனப்படும். தைஜசவிஷயமோ மண்ணிலுள்ளது, விண்ணிலுள்ளது, வயிற்றிலுள்ளது, ஆகரத்தி (சுரங்கத்தி) லுள்ளது என்னும் வேறுபாட்டால் நான்கு வகைத்தாம். பிரசித்த வன்னியை பௌம மென்றும், மின்னல் முதலியவைகளை திவ்வியமென்றும், ஜடராக்கினியை ஔதர்ய மென்றும், பொன் முதலியவைகளை ஆகரஜமென்றும் வழங்கப்படும். அல்லது உத்பூத ரூபம் உத்பூத பரிசமுடையது, அநுத்பூத ரூபம் அநுத்பூத பரிசமுடையது, உத்பூத பரிசம் அநுத்பூத ரூபமுடையது, உத்பூதரூபம் அநுத்பூதபரிசமுடையது என்னும் வேறுபாட்டால் அத்தேயு நான்குவகைத்தாம்.

௱௭. வாயுவடிவத் திரவியத்தினைச் சுருக்கமாக நிரூபித்தல்.

நான்காவது வாயுவடிவத் திரவியமும் நித்தியம், அநித்தியமென்னும் வேறுபாட்டால் இருவகைத்தாம். பரமாணு வடிவ வாயுவோ நித்தியமும், துவியணுகாதி காரிய வடிவ வாயு அநித்தியமுமாகின்றது. அநித்திய வாயுவும் சரீரம், இந்திரியம், விஷயமென்னும் வேறுபாட்டால் மூவகைத்தாம். வாயவீய சரீரமோ அயோனிஜமேயாகின்றது. வாயவீய சரீரம் வாயுலோகத்திலேயே பிரசித்தமாம். பரிசத்தைக் கிரஹிக்கும் துவக்கிந்திரியம் வாயவீய விந்திரியமெனப்படும். மர முதலியவைகளின் அசைவிற்குக் காரண வாயுவும், சரீரத்தில் சஞ்சரிக்கும் பிராண வாயுவும் வாயவீய விஷயமெனப்படும்.

௱௮. ஆகாசவடிவத் திரவியத்தினைச் சுருக்கமாக நிரூபித்தல்.

ஐந்தாவது ஆகாச வடிவத் திரவியமும் ஒன்றும், நித்தியமும், விபுவுமாம். அவ்வாகாசத்திற்கு பிருதிவி முதலியவைகளைப் போன்று ஓர் சரீரமும் விஷயமுமின்றும். ஆனால் அவ்வாகாசத்திற்கும் இந்திரியமோ இருக்கின்றது அது சத்தத்தைக் கிரஹிக்கும் சுரோத்திரேந்திரியமாம்.

௱௯. காலவடிவத் திரவியத்தினைச் சுருக்கமாக நிரூபித்தல்.

ஆறாவது காலவடிவத் திரவியமும் ஒன்றும், நித்தியமும், விபுவுமாகின்றது.

௱௰. திசைவடிவத் திரவியத்தினைச் சுருக்கமாக நிரூபித்தல்.

ஏழாவது திக்கு வடிவத் திரவியமும் ஒன்றும், நித்தியமும், விபுவுமாகின்றது.

௱௧௧. ஆத்ம வடிவத் திரவியத்தினைச் சுருக்கமாக நிரூபித்தல்.

எட்டாவது ஆத்ம வடிவத் திரவியமோ ஜீவாத்மா, ஈஸ்வராத்மா வென்னும் வேறுபாட்டால் இருவகைத்தாம். ஜீவாத்மாவோ அநேகமும், நித்தியமும், விபுவுமாம். ஈஸ்வர ஆத்மாவோ ஒன்றும், நித்தியமும், விபுவுமாம்.

௱௧௨. மனவடிவத் திரவியத்தினைச் சுருக்கமாக நிரூபித்தல்.

மனவடிவத் திரவியமும் ஜீவாத்மாவினைப் போன்று அநேகமும், நித்தியமும், அணுவுமாம். சுருக்கமாகத் திரவிய நிரூபணம் முற்றிற்று.

௱௧௩. இருபத்து நான்கு வகையான குணங்களின் வர்ணனம்.

இரண்டாவது குண பதார்த்தமோ ரூபம், ரசம், கந்தம், பரிசம், சங்கியை, பரிமாணம், வேற்றுமை, சையோகம், விபாகம், பரத்துவம், அபரத்துவம், குருத்துவம், திரவத்துவம், சிநேகம், சத்தம், புத்தி, சுகம், துக்கம், இச்சை, துவேஷம், முயற்சி, தர்மம், அதர்மம், வாசனை யென்னும் வேறுபாட்டால் இருபத்துநான்கு வகைத்தாம்.

௱௧௪. உருவ குணத்தினைச் சுருக்கமாக வர்ணித்தல்.

இவ்விருபத்து நான்கு குணங்களில் முதலாவது வுருவ குணமோ வெண்மை, கருமை, செம்மை, பொன்மை, பசுமை, புகைமை, சித்திரமென்னும் வேறு பாட்டால் எழுவகைத்தாம். அவ்வுருவ குணம் பிருதிவி, ஜலம், தேயுவென்னும் மூன்றுத் திரவியங்களி லிருக்கின்றது. பிருதிவியிலோ அவ்வெழுவகை உருவமுமிருக்கின்றது. ஜலம், தேயுவென்னுமிரண்டில் கேவலம் சுக்கிலவுருவம் (வெண்மை வுருவ) மே யிருக்கின்றது. அவ்வுருவம் ஜலத் தேயுக்களின் பரமாணு வடிவ நித்தியத் திரவியங்களிலோ நித்தியமும், மற்றையவற்றில் அநித்தியமுமாகின்றது.

௱௧௫. இரசகுணத்தினைச் சுருக்கமாக வர்ணித்தல்.

இரசகுணமோ தித்திப்பு, புளிப்பு, உவர்ப்பு, கைப்பு, கார்ப்பு, துவர்ப்பு என்னும் வேறுபாட்டால் அறுவகைத்தாம்; அந்த ரசம் பிருதிவி,

ஜலமென்னு மிரு திரவியங்களிலேயேயிருக்கின்றது. பிருதிவியிலோ அறுவகை ரசமுமிருக்கின்றது. ஜலத்தில் மதுரரசமொன்றே யிருக்கின்றது, அந்த ரசமும் பரமாணு வடிவ நித்திய ஜலத்தில் நித்தியமும், மற்றையவற்றில் அநித்தியமுமாகின்றது.

௱௧௬. கந்தகுணத்தினைச் சுருக்கமாக வர்ணித்தல்.

கந்தகுணமோ நறுநாற்றம், தீநாற்றமென்னும் வேறுபாட்டா லிருவகைத்தாம், அக்கந்த குணம் பிருதிவியொன்றிலேயே யிருப்பதும், அநித்தியமுமாகின்றது.

௱௧௭. பரிசகுணத்தினைச் சுருக்கமாக வர்ணித்தல்.

பரிசகுணமோ, குளிர்ச்சி, வெம்மை, வெம்மையும் குளிர்ச்சியு மில்லாததென்னும் வேறுபாட்டால் மூவகைத்தாம், அந்தப் பரிச குணம் பிருதிவி, ஜலம், தேயு, வாயுவென்னும் நான்குத் திரவியங்களிலிருக்கின்றது. ஜலத்திலோ குளிர்ந்த பரிசமும், தேயுவில் வெம்மைப் பரிசமும், பிருதிவிவாயுவாம் இரண்டில் வெம்மையும் குளிர்ச்சியு மில்லாப் பரிசமுமிருக்கின்றது. அப்பரிசம் பரமாணு வடிவ நித்தியஜலத்திலும், பரமாணு வடிவ நித்தியத்தேயுவிலும், பரமாணு வடிவ நித்திய வாயுவிலும் நித்தியமாகின்றது. மற்றையவைகளில் அநித்தியமாகின்றது.

௱௧௮. சங்கியைக் குணத்தினைச் சுருக்கமாக வர்ணித்தல்.

சங்கியைக் குணமோ ஒன்றாந் தன்மை, இரண்டாந் தன்மை, மூன்றாந் தன்மை யென்னு மிவை முதலிய வேறுபாட்டால் அநேகவித மாகின்றது. அச்சங்கியைக்குணம் பிருதிவி முதலிய திரவியங்களிலிருக்கின்றது. ஒருமைத் தன்மைச்சங்கியையோ நித்தியத்திரவியங்களில் நித்தியமும், அநித்தியத்திரவியங்களில் அநித்தியமுமாகின்றது. இரண்டாந் தன்மை, மூன்றாந் தன்மை முதலிய சங்கியைகளோ யாண்டும் அநித்தியமேயாம்.

௱௧௯. பரிமாண குணத்தினைச் சுருக்கமாக வர்ணித்தல்.

பரிமாண குணமோ நுண்மை, பெருமை, நெடுமை, குறுமை யென்னும் வேறுபாட்டால் நான்கு வகைத்தாம். அந்நான்கு வகைத்தாய பரிமாணமும், பரமம், மத்திமமென்னும் வேறுபாட்டால் மீண்டு மிருவகைத்தாம். அப்பரிமாணமும் பிருதிவி முதலிய ஒன்பான் திரவியங்களிலேயே யிருக்கின்றது. பிருதிவி, ஜலம், தேயு, வாயு வென்னும் நான்கு பரமாணுக்களிலும், மனதிலும் பரம நுண்மைத்தன்மையும், பரமகுறுமைத்தன்மையுமிருக்கின்றது. அப்பிருதிவி முதலிய நான்கின் துவியணுகங்களில் மத்திம நுண்மைத் தன்மையும், மத்திமகுறுமைத்தன்மைப்பரிமாணமு மிருக்கின்றது. ஆகாசம், காலம், திக்கு, ஆத்மா வென்னும் நான்கிலோ பரம பெருமைத் தன்மையும், பரம நெடுமைத் தன்மையு மிருக்கின்றது. கடமுதலிய திரவியங்களிலோ மத்திம பெருமைத் தன்மையும், மத்திம நெடுமைத் தன்மைப் பரிமாணமு மிருக்கின்றது. இப்பரிமாணம் நித்தியத்திரவியங்களில் நித்தியமும், அநித்திய

திரவியங்களில் அநித்தியமுமாகின்றது. அவ்வநித்திய பரிமாணமும் சங்கியா ஜன்னியம், பரிமாண ஜன்னியம், பிரசய ஜன்னியமென்னும் வேறுபாட்டால் மூவகைத்தாம்.

௱௨௰. வேற்றுமைத் தன்மையினைச் சுருக்கமாக வர்ணித்தல்.

வேற்றுமைக்குணமோ வொருமை வேற்றுமை, இருமை வேற்றுமை, மும்மை வேற்றுமை யென்னு மிவை முதலிய வேறுபாட்டால் அநேக வகைத்தாம். அவ்வேற்றுமைக் குணமும் பிருதிவி முதலிய வொன்பான் திரவியங்களிலேயே யிருக்கின்றது. ஒருமை வேற்றுமையோ நித்தியத் திரவியங்களில் நித்தியமும், அநித்தியத் திரவியங்களில் அநித்தியமு மாகின்றது. இருமை, மும்மை முதலிய வேற்றுமைகளோ யாண்டும் அநித்தியமேயாகின்றது.

௱௨௧. சையோக குணத்தினைச் சுருக்கமாக வர்ணித்தல்.

சையோக குணமோ அன்னியதர கர்மஜ சையோகம், உபயதர கர்மஜ சையோகம், சையோகஜ சையோகமென்னும் வேறுபாட்டால் மூவகைத்தாம். அச்சையோக குணமும் பிருதிவிமுதலிய வொன்பான் திரவியங்களிலேயே யிருப்பதும் யாண்டும் அநித்தியமுமாகின்றது. கிரியாஜன்னிய சையோகமும் * அபிகாதாக்கிய சையோகம், நோதனாக்கிய சையோகமென்னும் வேறுபாட்டா லிருவகைத்தாம்.

௱௨௨. விபாக குணத்தினைச் சுருக்கமாக வர்ணித்தல்.

விபாக (பிரிவு) குணமோ அன்னியதர கர்மஜ விபாகம், உபயதர கர்மஜ விபாகம், விபாகஜ விபாக மென்னும் வேறுபாட்டால் மூவகைத்தாம். அவ்விபாகஜ விபாகம் காரண மாத்திர விபாக ஜன்னியம், காரண அகாரண விபாக ஜன்னியமென்னும் வேறுபாட்டா லிருவகைத்தாம். இவ்விபாகமும் பிருதிவிமுதலிய வொன்பான் திரவியங்களிலேயே யிருப்பதும், யாண்டும் அநித்தியமுமாகின்றது.

௧௨௩. பரத்வ அபரத்வ குணத்தினைச் சுருக்கமாக வர்ணித்தல்.

பரத்வம், அபரத்வ மென்னு மிரு குணங்களோ தைசிக பரத்வம், காலிக பரத்வம், தைசிக அபரத்வம், காலிக அபரத்வமென்னும் வேறுபாட்டா லிருவகைத்தாம். பரத்வ, அபரத்வமா மிரு குணங்களும் பிருதிவி, ஜலம், தேயு, வாயு, மனமென்னும் ஐந்து திரவியங்களி லிருக்கின்றது. அதனிடத்திலும் காலிக பரத்வ அபரத்வங்களோ ஜன்னிய மூர்த்தத் திரவியங்களிலேயே யிருக்கின்றது. பரத்வ அபரத்வமா மிரு குணங்களும் அநித்தியமேயாம்.

௱௨௪. குருத்வ குணத்தினைச் சுருக்கமாக வர்ணித்தல்.

குருத்வ குணமோ வீட்டல், முகத்தல், நிறுத்தல் என்னும் இவை முதலிய வேறு பாட்டால் அநேக வகைத்தாம். இக்குருத்வ குணம்

---

* இதன்விரிவைப் பின்னர் மூன்றாவது பரிச்சேதத்தில் சையோக நிருபணத்திற் காண்க.

பிருதிவி, ஜலமென்னும் இரு திரவியங்களிலேயே இருக்கின்றது. அதனிடத்தும் பரமாணு வடிவ நித்திய பிருதிவி ஜலங்களில் அக்குருத்வம் நித்தியமாகின்றது. துவியணுக முதலிய அநித்திய பிருதிவி ஜலங்களில் அக்குருத்வம் அநித்தியமாகின்றது. இக்குருத்வ குணம் * அதீந்திரியமேயாம்.

௧௨௫. திரவத்வ குணத்தினைச் சுருக்கமாக வர்ணித்தல்.

திரவத்வ குணமோ இயல்பாயுள்ளது, நிமித்தத்தாலாயது வென்னும் வேறுபாட்டா லிருவகைத்தாம். அத்திரவத்வ குணம் பிருதிவி, ஜலம், தேயு வென்னும் மூன்றுந் திரவியங்களிலேயே யிருக்கின்றது. ஜலத்திலோ இயல்பாயுள்ளத் திரவத்வமும், அரக்கு நெய் முதலிய பிருதிவிகளிலும், பொன் முதலிய தேயுக்களிலும் நிமித்தத்தினாலாய திரவத்வமுமிருக்கின்றது. அத்திரவத்வம் ஜலத்தின் பரமாணுக்களில் நித்தியமும், மற்றைய வற்றில் அநித்தியமுமாம்.

௧௨௬. சிநேஹ குணத்தினைச் சுருக்கமாக வர்ணித்தல்.

சிநேஹ குணமோ பிரக்ருஷ்டம் (சிறந்தது,) அபக்ருஷ்டம் (தாழ்ந்தது) என்னும் வேறு பாட்டா லிருவகைத்தாம் அச்சிநேக குணம் ஜலமொன்றினிடத்தே யிருக்கின்றது. எண்ணெய் முதலியவைகளின் அடக்கமாயுள்ள ஜலத்திலோ வுயர்ந்த சிநேஹ குணமிருக்கின்றது. அந்த சிநேஹம் பரமாணு வடிவ நித்திய ஜலத்திலோ நித்தியமும், துவியணுக முதலிய அநித்திய ஜலங்களில் அநித்தியமுமாகின்றது.

௧௨௭. சத்தகுணத்தினைச் சுருக்கமாக வர்ணித்தல்

சத்தகுணமோ ஒலிவடிவ சத்தம், வர்ண (எழுத்து) வடிவ சத்தமென்னும் வேறுபாட்டாலிருவகைத்தாம். அவ்விருவகைத்தாய சத்தமும் சம்யோகஜ சத்தம், விபாகஜ சத்தம், சத்தஜ சத்தமென்னும் வேறுபாட்டால் மூவகைத்தாம். இச்சத்தகுணம் ஆகாசம் ஒன்றிலேயே யிருப்பதும், அநித்தியமுமாம்.

௧௨௮. புத்தி குணத்தினைச் சுருக்கமாக வர்ணித்தல்.

ஞானவடிவ புத்தி குணமோ ஆத்மா வொன்றிலேயே யிருக்கின்றது. அப்புத்தி நித்தியம், அநித்தியமென்னும் வேறுபாட்டா லிருவகைத்தாகின்றது. ஈஸ்வர ஆத்மாவின் புத்தியோ நித்தியமும், பிரத்தியக்ஷமும், ஏகமுமாகின்றது. ஜீவாத்மாவின் புத்தியோ அநித்தியமும், பிரத்தியக்ஷ பரோக்ஷமென்னுமிருவடிவமும், அநேகமுமாகின்றது ; அதாவது அவ்வநித்திய புத்தியும் அநுபவம், ஸ்மிருதி யென்னும் வேறுபாட்டால் இருவகைத்தாம். அநுபவம், ஸ்மிருதி யென்னு மிருவகைத்தாய புத்தியும் யதார்த்தம் அயதார்த்தமென்னும் வேறுபாட்டால் இருவகைத்தாம். முதலாவது யதார்த்தவநுபவமோ பிரத்தியக்ஷம், அநுமிதி, உவமிதி, சாப்தி, யென்னும் வேறுபாட்டால் நான்குவகைத்தாம். இந்நான்கில் முதலாவது பிரத்தியக்ஷமோ கிராணஜம், ராசனம், சாக்ஷுஷம், ஸ்பரிசம், சிராவணம், மானசமென்னும் வேறுபாட்டால் அறுவகைத்தாம். அவ்வறுவகைத்தாய பிரத்தியக்ஷமோ ஸவிகல்பம்,

* அதீந்திரியம் - இந்திரியங்களுக்கு விஷயமாகாதது.

நிர்விகல்ப மென்னும் வேறுபாட்டால் மீண்டு மிருவகைத்தும், லௌகிகம் அலௌகிகமென்னும் வேறுபாட்டால் மீண்டு மிருவகைத்துமாம். அலௌகிகப்பிரத்தியக்ஷமும் சாமான்னிய லக்ஷண சம்பந்தத்தாலுண்டாயது, ஞான லக்ஷண சம்பந்தத்தாலுண்டாயது, யோகஜ தர்ம லக்ஷண சம்பந்தத்தாலுண்டாயது என்னும் வேறுபாட்டால் மூவகையாம். மற்றைய அயதார்த்த அநுபவமோ சம்சயம், விபர்யயம், தர்க்கமென்னும் வேறுபாட்டால் மூவகைத்தாம்.

௧௨௯. சுக குணத்தினைச் சுருக்கமாக வர்ணித்தல்.

சுகுணமோ கேவலம் ஜீவாத்மாவிலேயே யிருக்கின்றது. அச்சுக குணம் வைஷிகம் (விஷயத்தாலுண்டாவது), அபிமானிகம் (அபிமானத்தாலுண்டாவது), மனோரதிகம் (மனதாற் கற்பித்துக் கொள்ளுவதனாலுண்டாவது), ஆப்பியாசிகம் (பழக்கத்தாலுண்டாயது) என்னும் வேறுபாட்டால் நான்குவகைத்தாம். இவ்வெல்லாச் சுகங்களும் அநித்தியமேயாம்.

௧௩௰. துக்க குணத்தினைச் சுருக்கமாக வர்ணித்தல்.

துக்க குணமும் கேவலம் ஜீவாத்மாவிலேயேயிருக்கின்றது. அத்துக்கமும் அச்சுகத்தினைப் போன்று நான்கு வகைத்தாம். அங்ஙனமே அநித்தியமுமாம்.

௧௩௧. இச்சா குணத்தினைச் சுருக்கமாக வர்ணித்தல்.

இச்சா குணமோ நித்தியம், அநித்திய மென்னும் வேறுபாட்டால் இருவகைத்தாம். அவ்விச்சாகுணம் கேவலம் ஆத்மாவிலேயே யிருக்கின்றது. ஈஸ்வர ஆத்மாவிலோ அவ்விச்சா குணம் நித்தியமும், ஏகமுமாம். ஜீவாத்மாவில் அவ்விச்சா குணம் அநித்தியமும், பலவிச்சை, உபாய விச்சை என்னும் வேறுபாட்டால் இருவகைத்துமாம்.

௧௩௨. துவேஷ குணத்தினைச் சுருக்கமாக வர்ணித்தல்.

துவேஷகுணமோ கேவலம் ஜீவாத்மாவிலேயே யிருக்கின்றது. அத்துவேஷமும் துக்கத் துவேஷம், துக்கோபாய துவேஷமென்னும் வேறுபாட்டால் இருவகைத்தாம். இத்துவேஷ குணம் அநித்தியமேயாம்.

௧௩௩. முயற்சி குணத்தினைச் சுருக்கமாக வர்ணித்தல்.

பிரயத்தினமாகிய முயற்சி குணமோ நித்தியம், அநித்திய மென்னும் வேறுபாட்டால் இருவகைத்தாம். அம்முயற்சி குணமும், கேவலம் ஆத்மாவிலேயே யிருக்கின்றது. ஈஸ்வர ஆத்மாவிலோ அம்முயற்சி நித்தியமும், ஏகமுமாம். ஜீவாத்மாவில் அம்முயற்சி அநித்தியமும், பிரவிருத்தி, நிவிர்த்தி ஜீவனயோனி யென்னும் வேறுபாட்டால் மூவகைத்தாம்.

௧௩௪. தர்ம அதர்ம குணங்களைச் சுருக்கமாக வர்ணித்தல்.

தர்ம அதர்மமென்னு மிருகுணங்களோ கேவலம் ஜீவாத்மாவிலேயே யிருக்கின்றன. அநித்தியமும், அதீந்திரியமுமாகின்றன.

௯௫. சம்ஸ்கார குணத்தினைச் சுருக்கமாக வர்ணித்தல்.

சம்ஸ்கார குணமோ வேகம், நிலைபெறுத்துகை, பாவனை யென்னும் வேறுபாட்டால் மூவகைத்தாம். முதலாவது வேக வடிவ சம்ஸ்காரமோ பிருதிவி, ஜலம், தேயு, வாயு, மனமென்னு மைந்து மூர்த்தத் திரவியங்களி லிருக்கின்றது. இரண்டாவது நிலைபெறுத்துகை யென்னும் சம்ஸ்காரமோ கேவலம் பிருதிவியிலேயே யிருக்கின்றது. சில நூலாசிரியரின் மதப்படி நிலைபெறுத்துகை யென்னும் சம்ஸ்காரம் பிருதிவி, ஜலம், தேயு, வாயுவென்னும் நான்கிலு மிருக்கின்றது. மூன்றாவது பாவனை வடிவ சம்ஸ்காரமோ கேவலம் ஜீவாத்மாவிலேயே யிருப்பதும், அதீந்திரியமுமாகின்றது. வேக வடிவ சம்ஸ்காரமும் கர்மஜவேகம், வேகஜ வேகமென்னும் வேறுபாட்டால் இருவகைத்தாம். இச்சம்ஸ்கார குணம் அநித்தியமேயாம்.

௯௬. விசேஷ குணங்களின் நிருபணம்.

இவ்விருபத்து நான்கு குணங்களில் உருவம், ரசம், கந்தம், பரிசம், ஸ்நேகம், இயல்பாயுள்ள திரவத்துவம், சத்தம், புத்தி, சுகம், துக்கம், இச்சை, துவேஷம், முயற்சி, தர்மம், அதர்மம், பாவனை யென்னும் பதினாறும் விசேஷ குணங்களெனப்படும்.

௯௭. சாமான்னிய குணங்களின் நிருபணம்.

சங்கியை, பரிமாணம், வேற்றுமை, சையோகம், விபாகம், பரத்துவம், அபரத்துவம், நிமித்தத்தாலாகிய திரவத்துவம், குருத்துவம், வேகமென்னும் பத்தும் சாமான்னிய குணங்களெனப்படும். நிலைபெறுத்துகை எம்மதப்படி கேவலப் பிருதிவி மாத்திரத்திலிருப்பதாமோ அம்மதப்படி அந்நிலை பெறுத்துகை விசேஷ குணமாம். எம்மதப்படி அந்நிலை பெறுத்துகை பிருதிவி, ஜலம், தேயு, வாயு வென்னும் நான்கிலிருப்பதாமோ அம்மதப்படி அந்நிலை பெறுத்துகை சாமான்னிய குணமாம். சுருக்கமாக குணநிருபணம்.

௯௮. கர்ம பதார்த்தத்தினைச் சுருக்கமாக நிருபித்தல்.

மூன்றாவது கர்ம பதார்த்தமோ எழும்பல், வீழ்தல், வளைதல், நிமிர்தல், நடத்தலென்னும் வேறுபாட்டால் ஐவகைத்தாம். அக்கர்மம் பிருதிவி, ஜலம், தேயு, வாயு, மனமென்னு மைந்து திரவியங்களிலேயே யிருப்பதும் அவ்வெல்லாக் கருமங்களும் அநித்தியமுமாம். சுருக்கமாக கர்ம நிருபணம்.

௯௯. ஜாதிவடிவ சாமான்னிய பதார்த்தத்தினைச் சுருக்கமாக நிருபித்தல்.

நான்காவது ஜாதி வடிவ சாமான்னிய பதார்த்தமோ திரவியம், குணம், கருமமென்னு மூன்று பதார்த்தங்களிலேயேயிருப்பது. அச்சாமான்னியம் பரம், அபரமென்னும் வேறுபாட்டால் இருவகைத்தாம். திரவியம், குணம், கருமமென்னு மிம்மூன்றிலிருப்பதான சத்தா ஜாதியோ பரசாமான்னியமெனப்படுகிறது. ஒன்பான் திரவியங்களிலிருப்பதான திரவியத் தன்மை ஜாதியும், இருபத்துநான்கு குணங்களி லிருப்பதான குணத்தன்மை ஜாதியும், ஐவகை கருமங்களிலிருப்பதான கருமத்தன்மை ஜாதியுமாம். இவை முதலிய வெல்லா ஜாதிகளும் அபர சாமான்னிய மெனப்படுகின்றது. இவ்வெல்லா ஜாதி வடிவ சாமான்னியம் நித்தியமேயாம். சுருக்கமாக சாமான்னிய நிருபணம்.

௱. விசேஷ பதார்த்தத்தினைச் சுருக்கமாக நிருபித்தல்.

ஐந்தாவது விசேஷ பதார்த்தமோ நித்தியத் திரவியங்களிலேயேயிருப்பதும், நித்தியமுமாகிறது. பரமாணு முதலியத் திரவியங்கள் அநேகமாம், ஆகையால் விசேஷமும் அநேகமேயாம். சாமான்னியமாக விசேஷ நிருபணம்.

௱௧. சமவாய பதார்த்தத்தினைச் சுருக்கமாக நிருபித்தல்.

ஆறாவது சமவாயபதார்த்தமோ அவயவம் அவயவியாமிரண்டிற்கும், குணம் குணியா மிரண்டிற்கும், கிரியை கிரியையுடையதாம் இரண்டிற்கும், ஜாதி வியக்தியா மிரண்டிற்கும், விசேஷம் நித்தியத் திரவியங்களா மிரண்டிற்கும் உள்ள பரஸ்பர சம்பந்தம் யாதோ அதனை சமவாயமெனப்படும். அச்சமவாயம் ஏகமும், நித்தியமும், அதீந்திரியமுமாகின்றது. சுருக்கமாக சமவாய பதார்த்த நிருபணம்.

௱௨. அபாவ பதார்த்தத்தினைச் சுருக்கமாக நிருபித்தல்.

ஏழாவது அபாவ பதார்த்தமோ சம்சர்க்காபாவம், அன்னியோன்னியாபாவமென்னும் வேறுபாட்டால் இருவிதமாம். முதலாவது சம்சர்க்காபாவமோ பிராசீனர்களின் மதப்படி பிராகபாவம், பிரத்துவம்சாபாவம், அத்தியந்தாபாவம், சாமயிகாபாவமென்னும் வேறுபாட்டால் நான்குவகைத்தாம். நவீன நையாயிகர் மதப்படி பிராகபாவம், பிரத்துவம்சாபாவம், அத்தியந்தாபாவமென்னும் வேறுபாட்டால் மூவகைத்தாம். அத்தியந்தாபாவம், அன்னியோன்னியாபாவமா மிரண்டும் நித்தியமேயாம். மற்றையவெல்லா அபாவங்களும் அநித்தியமாம். அவ்வநித்திய அபாவங்களிலும் பிராகபாவமோ உற்பத்தியின்றி அநாதியும், நாசமுடையதுமாகின்றது. பிரத்துவம்சாபாவமோ உற்பத்தியுடையதும் நாசமில்லாதது அநந்தமுமாகின்றது. சாமயிகாபாவமோ உற்பத்தி யுடையதும், நாசமுடையதுமாகின்றது. சுருக்கமாக அபாவ நிருபணம்.

கணாதமுனிவர் திருவாய் மலர்ந்தருளிய வைசேடிக சாத்திரத்தின் திரவிய முதலிய எழு பதார்த்தங்களை முதலில் சுருக்கமாய் நிருபணஞ் செய்யப்பட்டது. இனி கௌதமமுனிவர் அருளிச் செய்யப்பட்ட நியாயசாத்திரத்தின் பிரமாணமுதலிய பதினாறு பதார்த்தங்களை நிருபிப்பாம்.

௱௩. பிரமாண முதலிய பதினாறு பதார்த்தங்களைச் சுருக்கமாக நிருபித்தல்.

ஆண்டு பிரமாணம், பிரமேயம், சம்சயம், பிரயோஜனம், திருஷ்டாந்தம், சித்தாந்தம், அவயவம், தர்க்கம், நிர்ணயம், வாதம், ஜல்பம், விதண்டை,

ஹேத்வாபாசம், சலம், ஜாதி, நிக்கிரஹஸ்தானமென்னும் வேறுபாட்டால் பதினறு பதார்த்தங்களைக் கூறப்பட்டிருக்கின்றன.

கசச. பிரமாண பதார்த்தத்தினைச் சுருக்கமாக நிரூபித்தல்.

பிரமாண பதார்த்தமோ பிரத்தியக்ஷம், அநுமானம், உபமானம், சப்தமென்னும் வேறுபாட்டால் நான்கு வகைத்தாம். முதலாவது பிரத்தியக்ஷ பிரமாணமோ பாஹ்யம், ஆந்தரமென்னும் வேறுபாட்டால் இருவகைத்தாம். பாஹ்ய பிரத்தியக்ஷப் பிரமாணம் கிராணம், ரசம், சக்ஷு, த்வக்கு, சுரோத்திரமென்னும் வேறுபாட்டால் ஐவகைத்தாம். மனம் ஆந்தரப் பிரத்தியக்ஷ பிரமாண மெனப்படுகின்றது. இரண்டாவது அநுமானப் பிரமாணமும் பூர்வவத் (காரணத்தை லிங்கமாகவுடைய) அநுமானம், சேஷவத் (காரியத்தை லிங்கமாக உடைய) அநுமானம், சாமான்னியதோதிருஷ்ட (காரண காரியங்கட்கு வேறான லிங்கத்தையுடைய) அநுமானமென்னும் வேறுபாட்டால் மூவகைத்தாம். அம்மூவகை அநுமானமும் ஸ்வார்த்தம் (தன் பொருட்டு), பரார்த்தம் (பிறர் பொருட்டு) என்னும் வேறுபாட்டால் மீண்டும் இருவகையுமாம். மூன்றாவது உபமானப் பிரமாணமும் சாதருசிய விசிஷ்ட (சமான இயல்படுத்த) பிண்ட ஞானம், வைதர்மிய விசிஷ்ட (வேற்றியல் படுத்த) பிண்ட ஞானம், அசாதாரண தர்ம விசிஷ்ட (சிறப்பியல் படுத்த) பிண்ட ஞானம் என்னும் வேறுபாட்டால் மூவகைத்தாம். நான்காவது சப்தப் பிரமாணமோ திருஷ்டார்த்தகம் (புசித்தற்கு விரும்புவோன் அடுதலைச் செய்க என்றல் முதலிய காணப்படும் பொருளைக் கூறுவது), அதிருஷ்டார்த்தகம் (ஸ்வர்க்கம் விரும்புவோன் வேள்வியைச் செய்க என்றல் முதலிய காணப்படாத பொருளைக் கூறுவது) என்னும் வேறுபாட்டால் இருவகைத்தாம்.—(க.)

கசரு. பிரமேய பதார்த்தங்களைச் சுருக்கமாக நிரூபித்தல்.

பிரமேய பதார்த்தமோ ஆத்மா, சரீரம், இந்திரியம், அர்த்தம், புத்தி, மனம், பிரவிருத்தி, தோஷம், பிரேத்தியபாவம், பலம்; துக்கம், அபவர்க்கமென்னும் வேறுபாட்டால் பன்னிருவகைத்தாம். அப்பன்னிரு வகைத்தாய பிரமேயங்களில் முதலாவது ஆத்மவடிவப் பிரமேயமோ ஜீவாத்மா, ஈஸ்வராத்மா வென்னும் வேறுபாட்டால் இருவகைத்தாம். ஜீவாத்மாவோ நாநாவும், ஈஸ்வராத்மா ஏகமுமாம். அவ்விரு ஆத்மாக்களும் நித்தியமும், விபுவுமாகின்றன. சரீர வடிவப் பிரமேயமோ ஜராயுஜம், அண்டஜம், ஸ்வேதஜம், உத்பிஜ்ஜமென்னும் வேறுபாட்டால் நான்குவகைத்தாம். இந்திரிய வடிவப் பிரமேயமோ கிராணம், ரசனம், சக்ஷு, த்வக்கு, சுரோத்திரம், மனமென்னும் வேறுபாட்டால் அறுவகைத்தாம். அர்த்த வடிவப் பிரமேயமோ உருவம், ரசம், சத்தம், ஸ்பரிசம், கந்தம், புத்தி, சுகம், துக்கம், இச்சை, த்வேஷம், பிரயத்னமென்னும் வேறுபாட்டால் பதினொரு வகைத்தாம். அல்லது அவ்வர்த்தவடிவப்பிரமேயம் திரவியம், குணம், கருமம், சாமான்னியம், விசேஷம், சமவாயமென்னும் வேறுபாட்டால் அறுவகைத்

தாம். புத்தி வடிவப் பிரமேயமோ நித்தியம், அநித்தியமென்னும் வேறுபாட்டால் இருவகைத்தாம். ஈஸ்வராத்மாவின் புத்தியோ நித்தியமும், ஏகமும், பிரத்தியக்ஷ வடிவமுமாம். ஜீவாத்மாவின் புத்தி அநித்தியமாகின்றது. அவ்வநித்திய புத்தியும் அநுபவம், ஸ்மிருதியென்னும் வேறுபாட்டால் இருவகைத்தாம். அவ்விரு வகைத்தாய அநித்திய புத்தியும் யதார்த்தம், அயதார்த்தமென்னும் வேறுபாட்டால் மீண்டும் இருவகைத்தாம். யதார்த்த அநுபவமோ பிரத்தியக்ஷம், அநுமிதி, உபமிதி, சாப்தியென்னும் வேறுபாட்டால் நான்கு வகைத்தாம். அயதார்த்த அநுபவமோ சம்சயம், விபர்யயம், தர்க்கமென்னும் வேறுபாட்டால் மூவகைத்தாம். மனவடிவப் பிரமேயமோ நாநாவும், நித்தியமும், அணுவுமாம். பிரவிருத்தி வடிவப் பிரமேயமோ வாகாரம்பம் (வசனத்திற்கு அநுகூலமாயது), புத்தியாரம்பம் (தியானத்திற்கு அநுகூலமாயது), சரீராரம்பம் (உடற்சேட்டைக் கநுகூலமாயது) என்னும் வேறுபாட்டால் மூவகைத்தாம். தோஷ வடிவப் பிரமேயமோ ராகம், த்வேஷம், மோஹ மென்னும் வேறுபாட்டால் மூவகைத்தாம். அவற்றுள் முதலாவது ராகவடிவ தோஷமோ காமம் (இச்சை), மற்சரம் (தன் பயனை விசாரியாமலே பிறன் விருப்பியதை தடுக்க விரும்புதல்), ஸ்ப்ருஹை (தர்ம விரோதமில்லாது பொருளையடைய விரும்புதல்), திருஷ்ணை (என்னுடையது ஒருகாலும் கெடலாகாதென்னும் விருப்பம்), உலோபம் (தர்ம விரோதமாக பிறர் பொருளையடைய விரும்புதல்), மாயை (பிறரை வஞ்சிக்க விரும்புதல்), இடம்பம் (தர்ம மில்லாதவனாக விருந்தும் தர்ம முடையவனைத் தன்னைப் புகழ்ந்துப் பேசுவது) என்னும் வேறுபாட்டால் எழுவகைத்தாம். இரண்டாவது த்வேஷ வடிவ தோஷமோ குரோதம் (கண் சிவத்தல் முதலியவற்றிற்குக் காரணமாயது), ஈர்ஷை (சாதாரண வஸ்து ஒன்றை தன்னுடையதாகக் கொள்ளும் புருஷனைக் குறித்துண்டாவது), அசூயை (வேறு புருஷர்களது கல்வி முதலிய குணங்களைக் குறித்துண்டாவது), துரோகம் (வேறு புருஷரைக் கெடுத்தற் பொருட்டுண்டாவது), அமர்ஷம் (குற்றஞ் செய்வோனைத் தண்டிப்பதற்குத் தன்னிடத்தில் வல்லமையில்லாதவனிடத்துண்டாவது), அபிமானம் (அபகாரஞ் செய்பவனைத் துன்பத்திற்குள்ளாக்குவதற்கு வல்லமையில்லாதவனிடத்துண்டாவது) என்னும் வேறுபாட்டால் அறுவகைத்தாம். மூன்றாவது மோஹ வடிவ தோஷமோ விபர்யயம் (மித்தையாலாய ஞானம்), சம்சயம் (ஒரு தர்மியின் மாறுபட்ட பலதருமங்களால் விசேஷிக்கப்பட்ட வுணர்வு), தருக்கம் (வியாப்பியத்தை ஆரோபித்தலால் வியாபகத்தை ஆரோபிப்பது), மானம் (தன்னிடத்திலில்லாத குணங்களை ஆரோபித்துக் கொண்டு உயர்வாகக் கருதும் புத்தி), பிரமாதம் (முன் கர்த்தவ்விய அகர்த்தவ்வியங்களாக நிச்சயித்தவற்றி லுண்டாம் அகர்த்தவ்விய கர்த்தவ்வியத் தன்மையான ஞானம்), பயம் (அநிஷ்டத்தைச் செய்வோன் யாதேனும் ஓர்காரணம் வாய்த்தகாலத்து அதனைவிடுத்தற்குத் தகுதியில்லாமையை அறிதல்), சோகம் (இஷ்டவஸ்துப் பிரிந்தகாலத்து அதுமீண்டும் கிடைத்தற்குரிய தாகாமையை யுணர்தல்). என்

னும் வேறுபாட்டால் எழுவகைத்தாம். மரணத்திற்குப் பின்னுண்டாம் ஜன்மத்தினை பிரேத்திய பாவமென்பர். பலவடிவப் பிரமேயமோ முக்கியம் (சுக துக்க சாக்ஷாத்காரம்), கௌணம் (முக்கிய பலசாதனம்) என்னும் வேறுபாட்டால் இருவகைத்தாம். துக்க வடிவப் பிரமேயமோ யான் துக்கி என்னும் பிரதீதியால் பிராணிகள் யாவற்றிற்கும் பிரசித்தமாயுள்ளது. சரீரமுதலிய இருபத்தொரு துக்கங்களின் ஆத்தியந்திக நிவிர்த்தியினை மோக்ஷமென்பர். —(உ).

கசசு. சம்சய பதார்த்தத்தினைச் சுருக்கமாக நிரூபித்தல்.

சம்சய வடிவ பதார்த்தமோ சாதாரண தர்மமுடைய தர்மி ஞானத்தாலுண்டாயது, அசாதாரண தர்மமுடைய தர்மி ஞானத்தாலுண்டாயது, விப்பிரதிபத்தி வாக்கியத்தாலுண்டாயதென்னும் வேறுபாட்டால் மூவகைத்தாம். அர்சம்சயம் பகிர்விஷயகம் (புறவிடயத்தது), அந்தர்விஷயகம் (உள்விடயத்தது) என்னும் வேறுபாட்டால் மீண்டும் இருவகைத்தாம். பாகிர்விஷயக சம்சயமும் திருசியமான தர்மிகம் (காணப்படுந் தர்மியினது), அதிருசியமான தர்மிகம் (காணப்படாத தர்மியினது) என்னும் வேறுபாட்டால் இருவகைத்தாம்.—(௩).

கசஎ. பிரயோஜன பதார்த்தத்தினைச் சுருக்கமாக வர்ணித்தல்.

பிரயோஜன பதார்த்தமோ முக்கியம் (சுகம் துக்காபாவம்), கௌணம் (முக்கியப்பிரயோஜன சாதனம்) என்னும் வேறுபாட்டால் இருவகைத்தாம்.—(ச).

கசஅ. திருஷ்டாந்த பதார்த்தத்தினைச் சுருக்கமாக வர்ணித்தல்.

வாதிப் பிரதிவாதிகளது நிச்சயத்திற்குச் சாதகமான திருஷ்டாந்த பதார்த்தமோ சாதர்மியம் (அந்வயதிருஷ்டாந்தம்), வைதர்மியம் (வெதிரேக திருஷ்டாந்தம்) என்னும் வேறுபாட்டால் இருவகைத்தாம்.—(ரு).

கசகூ. சித்தாந்த பதார்த்தத்தினைச் சுருக்கமாக நிரூபித்தல்.

சித்தாந்த (சாத்திரமுணர்ந்தவர்ப் பிரமாணமுடைமையால் அங்கீகரித்த) பதார்த்தமோ சர்வ தந்திர சித்தாந்தம், பிரதி தந்திர சித்தாந்தம், அதிகரண சித்தாந்தம், அப்பியுபகம சித்தாந்தமென்னும் வேறுபாட்டால் நான்கு வகைத்தாம்.—(சு).

கருய. அவயவ பதார்த்தத்தினைச் சுருக்கமாக நிரூபித்தல்.

அவ்யவ பதார்த்தமோ பிரதிஞ்ஞை, ஏது, உதாஹரணம், உபநயம், நிகமனமென்னும் வேறுபாட்டால் ஐவகைத்தாம். அவற்றுள் இரண்டாவது ஏதுவென்னும் அவயவமும் அஞ்ஞாத வியதிரேக வியாப்திக ஏது போதகம், அப்பிரதீதான்வய வியாப்திக ஏது போதகம், பிரதீதான்வய வியதிரேகவியாப்திகயேது போதகமென்னும் வேறுபாட்டால் மூவகைத்தாம். உதாஹரண வடிவ அவயவமோ அன்வயவியாப்தி போதகம், வியதிரேக

வியாப்தி போதகமென்னும் வேறுபாட்டால் இருவகைத்தாம். நான்காவது உபநய வடிவ அவயவமும் அன்வயி, வியதிரேகி யென்னும் வேறுபாட்டால் இருவகைத்தாம்.—(எ).

கருக. தார்க்க பதார்த்தத்தினைச் சுருக்கமாக நிரூபித்தல்.

தார்க்க பதார்த்தமோ ஆத்மாசிரியம், அந்நியோன்னியாசிரியம், சக்கிரிகா, அநவஸ்தா, பிரமாண பாதிதார்த்தப் பிரசங்கமென்னும் வேறுபாட்டால் ஐவகைத்தாம். ஆத்மாசிரியம், அன்னியோன்னியாசிரியம், சக்கிரிகாவென்னும் மூவித தர்க்கங்களோ உற்பத்தி, ஸ்திதி, ஞப்தி யென்னும் வேறுபாட்டால் மும்மூன்று வகைத்தாம். அல்லது அத்தர்க்க பதார்த்தம் வியாகாதம், ஆத்மாசிரியம், இதரேதராசிரியம், சக்கிரிகாசிரியம், அனவஸ்தா, பிரதிபந்தி கல்பனை, லாகவ கல்பனை, கௌரவம், உத்சர்க்கம், அபவாதம், வைஜாத்தியமென்னும் வேறுபாட்டால் பதினொரு வகைத்தாம். அத்தர்க்கபதார்த்தம் விஷய பரிசோதகம், வியாப்தி கிராஹிக மென்னும் வேறுபாட்டால் மீண்டும் இருவகைத்தாம்.—(அ).

கருஉ. நிர்ணய பதார்த்தத்தினைச் சுருக்கமாக நிரூபித்தல்.

பயன் வடிவ நிச்சய ஆத்மஞானம் யாதோ அதனை நிர்ணய மெனப்படும்.—(கூ).

கரு௩. வாத பதார்த்தத்தினைச் சுருக்கமாக நிரூபித்தல்.

தத்துவத்தை (உண்மையை) யறிய விச்சையுடைய இருவர் ஒருவருக்கொருவர் கூறும் வினாவிடை யாதோ அதனை வாதமென்பர்.—(க0).

கருச. ஜல்ப பதார்த்தத்தினைச் சுருக்கமாக வர்ணித்தல்.

ஒருவரை யொருவர் வெல்லவேண்டு மென்னும் இச்சையுடையவர்கள் தத்தங்கருத்தை நிலைக்கச் செய்வதான வசனங்கள் யாவையோ அவற்றை ஜல்பமென்பர்.—(கக).

கருரு. விதண்டை பதார்த்தத்தினைச் சுருக்கமாக வர்ணித்தல்.

ஒருவரை யொருவர் வெல்லும் வேட்கையுடையவர்கள் கூறும் தமது கக்ஷியை நிலைக்கச் செய்யாத கதை யாதோ அதனை விதண்டை யென்பர். —(கஉ).

கருசு. ஏதுப்போலிப் பதார்த்தத்தினைச் சுருக்கமாக வர்ணித்தல்.

ஏதுப்போலிப் பதார்த்தமோ வியபிசாரி, விருத்தம், அசித்தி, சப்பிரதிபக்ஷம், பாதிதமென்னும் வேறுபாட்டால் ஐவகைத்தாம். முதலாவது வியபிசாரி யேத்துவாபாசமோ சாதாரணம், அசாதாரணம், முடிவுபெறுமை யென்னும் வேறுபாட்டால் மூவகைத்தாம். அசித்தியேத்துவாபாசமும் சொரூபாசித்தம், ஆசிரயாசித்தம், வியாப்பியத் தன்மையசித்தமென்னும் வேறுபாட்டால் மூவகைத்தாம்.—(க௩).

கருஎ. சில பதார்த்தத்தினைச் சுருக்கமாக நிரூபித்தல்.

ஒரு பொருள் கருதிச் சொல்லியதற்கு வேறு பொருள் கற்பித்துக் கொண்டு பழித்தலான சலபதார்த்தமோ வாக்சலம், சாமான்னியசலம், உபசாரசலம் என்னும் வேறுபாட்டால் மூவகைத்தாம்.—(கசு).

கருஅ. ஜாதி பதார்த்தத்தினைச் சுருக்கமாக நிரூபித்தல்.

போலிவிடையினை ஜாதியென்பர், அஜ்ஜாதி பதார்த்தமோ சாதர்மிய (பொதுவியல்பு) சமை, வைதர்மிய (வேற்றியல்பு) சமை, உத்கிருஷ்ட (உயர்ச்சி) சமை, அபகிருஷ்ட (தாழ்ச்சி) சமை, வர்ண்ணிய (புகழ்ந்துரை) சமை, அவர்ண்ணிய (பழித்துரை) சமை, விகல்ப சமை, சாத்திய சமை, பிராப்தி (அடைவு) சமை, அப்பிராப்தி (அடையாமை) சமை, பிரசங்கசமை, பிரதி (வேறு) திருஷ்டாந்த சமை, அநுற்பத்தி (உற்பத்தியின்மை) சமை, சம்சய (ஐய) சமை, பிரகரண சமை, ஏது சமை, அர்த்தாபத்தி சமை, அவிசேஷ (விசேஷமின்மை) சமை, உபபத்தி சமை, உபலப்தி சமை, அநுபலப்தி சமை, நித்திய சமை, அநித்திய சமை, காரிய சமை என்னும் வேறுபாட்டால் இருபத்து நான்கு வகைத்தாம்.—(கரு).

கருகூ. நிக்கிரஹ பதார்த்தத்தினைச் சுருக்கமாக நிரூபித்தல்.

பிறரை வெல்வதற்கு ஏது யாதோ அது நிக்கிரஹஸ்தான மெனப்படுகின்றது. அந்நிக்கிரஹஸ்தான பதார்த்தமோ பிரதிஞ்ஞாஹானி (மேற்கோளழிவு), பிரதிஞ்ஞாந்தரம் (வேறுமேற்கோள்), பிரதிஞ்ஞா விரோதம் (மேற்கோண் மாறுபாடு), பிரதிஞ்ஞா சந்நியாசம் (மேற்கோள் விடுதல்), ஏத்வாந்தரம் (வேற்றேது), அர்த்தாந்தரம் (வேற்றுப் பொருள்), நிரர்த்தகம் (பொருளின்மை), அபார்த்தகம் (பொருளுணரப்படாமை), அவிஞ்ஞாதார்த்தம் (பொருட்போலி), அப்பிராப்தகாலம் (காலம் பெறாமை), நியூனம் (குன்றக்கூறல்), அதிகம் (மிகைப்படக்கூறல்), புனருக்தம் (கூறியது கூறல்), அநநுபாஷணம் (பிற்கூற்றின்மை), அஞ்ஞானம் (அறியாமை), அப்பிரதிபா (விடை தெரிந்து விளங்காமையால் பேசாதிருத்தல்), விக்ஷேபம் (தனக்கு வேறு காரியமிருக்கின்ற தெனக்கூறி வாதத்தை நிறுத்தல்), மதாநுஞ்ஞை (தன் குற்றத்தைப் பரிகரியாமல் பிறர் குற்றங் கூறல்), பர்யநுயோஜ்யோபேக்ஷணம் (எடுத்துக் காட்டக்கூடிய தோல்வித்தானத்தைக் காட்டாதிருத்தல்), நிரநுயோஜ்யாநுயோகம் (தோல்வியில்லா விடத்துத் தோல்விகூறல்), அபசித்தாந்தம் (சித்தாந்தபோலி), ஏத்வாபாச மென்னும் வேறுபாட்டால் இருபத்திரண்டு வகைத்தாம். சுருக்கமாகப் பிரமாண முதலிய பதினாறு பதார்த்தங்களின் நிரூபணம்.

முன்னூற்படி கணாதமுனிவ ரருளிச்செய்த வைசேடிக சாத்திரத்தின் திரவிய முதலிய ஏழு பதார்த்தங்களையும், கௌதமுனிவ ரருளிச்செய்த நியாயசாத்திரத்தின் பிரமாண முதலிய பதினாறு பதார்த்தங்களையும் சுருக்கமாய் நிரூபிக்கப்பட்டன. இனி இந்நியாயப் பிரகாச நூலில் பின்னர் அத்திரவிய முதலிய பதார்த்தங்களின் விஸ்தார நிரூபணம் எம்முறைப்படி செய்யப்படுமோ அம்முறையினை நிரூபிப்பாம்.—(கசு).

கசுய. முதற்பரிச்சேதத்தில் சுருக்கமாகக் கூறப்பட்ட திரவிய முதலிய பதார்த்தங்களை இரண்டாவது முதலிய பரிச்சேதங்களில் விரிவாகக் கூறுவதை வர்ணித்தல்.

இந்நியாயப் பிரகாச நூலில் இரண்டாவது பரிச்சேதத்திலே பிருதிவி முதலிய ஒன்பது திரவியங்களை விரிவாக நிரூபிப்பதுடன் இருளினும், பொன்னினும், அத்திரவியங்களினும் வேறுந்திரவியத் தன்மையினைக் கண்டிப்பாம். மூன்றாவது பரிச்சேதத்திலே ரூபமுதலிய இருபத்து நான்கு குணங்களை விரிவாய் நிரூபிப்பாம். நான்காவது பரிச்சேதத்தில் கர்மம், சாமான்னியம், விசேஷம், சமவாயம், அபாவமென்னும் ஐந்து பதார்த்தங்களை விரிவாய் நிரூபிப்பதுடன் சக்தி, சாதிருஸ்ய முதலியவைகளில் அவ்வேழு பதார்த்தங்களினும் வேறான பதார்த்தத் தன்மையினைக் கண்டிப்பாம். ஐந்தாவது பரிச்சேதத்திலே திரவிய முதலிய ஏழு பதார்த்தங்களின் சாதர்மிய வைதர்மியங்களையும், பிருதிவி முதலிய ஒன்பது திரவியங்களின் சாதர்மிய வைதர்மியங்களையும், ரூப முதலிய இருபத்து நான்கு குணங்களின் சாதர்மிய வைதர்மியங்களையும் கூறுவாம். ஈண்டு சாமான்னிய தர்மத்தினைச் சாதர்மியம் என்றும், விருத்த தர்மத்தினை வைதர்மிய மென்றும் கூறுவர்.

மூன்றாவது பரிச்சேதத்தில் சாமான்னியமாகக் கூறப்பட்ட புத்தி வடிவ குணம் யாதோ அந்த ஞான வடிவ புத்தியினை ஆறாவது பரிச்சேதத்தில் விரிவாய் நிரூபிப்பாம். அதாவது அவ்வாறாவது பரிச்சேதத்தில் பிரத்தியக்ஷப் பிரமாணத்தா லுண்டாகும் பிரத்தியக்ஷப் பிரமையினையும், அநுமானப் பிரமாணத்தாலுண்டாகும் அநுமிதிப்பிரமையினையும், உபமானப் பிரமாணத்தாலுண்டாகும் உபமிதிப் பிரமையினையும், சத்தப்பிரமாணத்தாலுண்டாகும் சாப்தீப் பிரமையினையும், ஸ்மிருதி ஞானத்தினையும், சம்சய விபர்யய தர்க்க வடிவ அயதார்த்த அநுபவத்தினையும், பிரமாண்ணிய வாதத்தினையும் நிரூபிப்பாம்.

ஏழாவது பரிச்சேதத்திலே நியாய சாத்திரத்தின் பிரமாண முதலிய பதினாறு பதார்த்தங்களின் விரிவையும், முற்கூறிய திரவியமுதலிய ஏழு பதார்த்தங்களில் அப்பதினாறு பதார்த்தங்களினடக்கமும், நீதிநிகார பட்டாசாரியரானவர் கணாதமுனிவர் அருளிய திரவிய முதலிய ஏழு பதார்த்தங்களில் எத்தனைப் பதார்த்தத்தினைக் கண்டித்து எத்தனைப் பதார்த்தத்தினை அதிகமாக வொப்பினரோ அவ்வெல்லாப் பதார்த்தங்களையும் நிரூபிப்பாம்.

ஸ்ரீமத் பரமஹம்ச பரிவிராஜகாசாரிய ஸ்ரீ ஸ்வாமி-உத்தவாநந்தகிரி பாதத்தை பூஜித்த சிஷ்யராகிய ஸ்ரீ ஸ்வாமி சித்கநாநந்தகிரி யென்பவர் அருளிச் செய்யப்பட்ட நியாயப் பிரகாச மங்கலமுக்தி வாத நிரூபண வாயிலாக சுருக்கமாக திரவிய முதலிய பதார்த்தங்களின் நிரூபண மமைந்த முதற்பரிச்சேதம் முற்றுப்பெற்றது.

ஸ்ரீ குருப்யோநம:. ஸ்ரீ விஸ்வேஸ்வராயநம:.

நியாயப்பிரகாசம் முதற்பரிச்சேதம்

முற்றுப் பெற்றது.

ஓம் ஸ்ரீகணேசாயநம:. ஸ்ரீகாசிவிஸ்வேஸ்வராயநம:.

ஸ்ரீகுருப்யோநம:. ஸ்ரீசங்கராசாரியேப்யோநம:.

நியாயப் பிரகாசம்.

இரண்டாவது பரிச்சேதம்.

௧௧௧. திரவிய நிரூபணம்.

முதற் பரிச்சேதத்தில் சுருக்கமாக நிரூபிக்கப்பட்ட பிருதிவி முதலிய ஒன்பது திரவியங்களை இவ்விரண்டாவது பரிச்சேதத்தில் விரிவாய் நிரூபிப்பாம். லக்ஷணம், பிரமாணத்தாலேயே வஸ்துவின் சித்தி யுண்டாகின்றது. லக்ஷணம் பிரமாணமின்றி வஸ்துவின் சித்தி உண்டாகாதென்னும் நியாயத்தினை அங்கீகரித்துப் பிருதிவிமுதலிய ஒன்பதுதிரவியங்களைச் சித்திசெய்வான் கருதி, முதலில் பிருதிவி முதலிய ஒன்பது திரவியங்களின் சாமான்ய லக்ஷணம் கூறுவாம். அன்றி "ஸமவாயிகாரணம் த்ரவ்யம்" அல்லது "குணாச்ரய: த்ரவ்யம்" அல்லது "த்ரவ்யத்வஜாதிமத் த்ரவ்யம்" அல்லது "குணாத்யந்தாபாவாநதிகரணத்வரஹிதம் த்ரவ்யம்". இனி முறையாக இந்நான்கு லக்ஷணங்களின் அர்த்தத்தை நிரூபிப்பாம்.

௧௧௨. திரவ்வியத்தின் சமவாயி காரணத்தன்மை வடிவ முதலாவது லக்ஷணத்தின் வர்ணனம்.

முதலாவது "ஸமவாயி காரணம் த்ரவ்யம்" என்னும் லக்ஷணத்தின் அர்த்தத்தை நிரூபிப்பாம். காரியத்தின் சமவாயிகாரணம் யாதோ அதனைத் திரவியமெனப்படும். பிருதிவி முதலிய வென்பது திரவியங்களிலேயே யோக்கியத் திரவிய வடிவ காரியத்தின் அல்லது குண வடிவ காரியத்தின் அல்லது கரும வடிவ காரியத்தின் சமவாயிகாரணத் தன்மை யிருக்கிறது. குணம், கருமமென்னும் பதார்த்தங்களில் காரியத்தின் சமவாயி காரணத் தன்மை யுண்டாவதில்லை. ஆகையால் இச்சமவாயி காரண வடிவத் திரவியத்தின் லக்ஷணம் சம்பவிக்கின்றது. மனவடிவத் திரவியத்திலோ வேறோர் காரியத் திரவியமும் சமவாய சம்பந்தமாக வுண்டாகிறதில்லை. குணமும், கருமமும் சமவாய சம்பந்தமாக வுண்டாகின்றன. ஆகையால் மனவடிவத் திரவியத்தில் திரவிய வடிவ காரியத்தின் சமவாயி காரணத் தன்மையின்றும், கேவலம் குணவடிவ காரியத்திற்கும், கருமவடிவ காரியத்திற்குமே சமவாயிகாரணத் தன்மை யிருக்கின்றது. ஆகாசம், காலம், திக்கு, ஆத்மா வென்னும் நான்கு விபுத்திரவியங்களி லோர்த்திரவியமும், கருமமும் சமவாய சம்பந்தமாக வுண்டாகிறதில்லை. குணமே சமவாய சம்பந்தமாக

வுண்டாகிற தாகையால் அந்நான்கு விபுத்திரவியங்களில் கேவலம் குண வடிவ காரியத்தின் சமவாயி காரணத் தன்மை யிருக்கின்றது. பிருதிவி, ஜலம், தேயு, வாயு வென்னும் நான்குத் திரவியங்களிலோ திரவிய வடிவ காரியமும், குணவடிவ காரியமும், கருமவடிவ காரியமுமாம் மூன்றும் சமவாய சம்பந்தமாக வுண்டாகின்றன. ஆகையால் பிருதிவி முதலிய நான்குத் திரவியங்களில் திரவிய வடிவ காரியத்தினதும், குணவடிவ காரியத்தினதும், கருமவடிவ காரியத்தினதும் சமவாயி காரணத் தன்மை யிருக்கின்றது. பிருதிவி முதலிய நான்குத் திரவியங்களினும் சரீரம், கட முதலிய அந்தியாவயவி வடிவ பிருதிவி முதலியவைகளில் ஓர் திரவியமும் சமவாய சம்பந்தமாக வுண்டாவதின்று. குணமும், கருமமு முண்டாகின்றன வாகையால் சரீரம், கட முதலிய வடிவ அந்தியாவயவிகளில் திரவிய வடிவ காரியத்தின் சமவாயி காரணத் தன்மை இன்றும். கேவலம் குண வடிவ காரியத்தினதும், கரும வடிவ காரியத்தினதும் சமவாயி காரணத் தன்மை யிருக்கின்றது. அந்தியாவயவியின் சொரூபம் பின்னர் பிருதிவி நிரூபணத்திற் கூறுவாம். இவ்வாற்றால் பிருதிவி முதலிய வொன்பது திரவியங்களிலேயே சமவாயி காரணத் தன்மை யிருக்கின்றது.

௧௧௩. சமவாயி காரணத்தின் சொரூப வர்ணனம்.

எத்திரவியத்தில் எக்காரியம் சமவாய சம்பந்தமாக வுண்டாவதாகின்றதோ அத்திரவியம் அக்காரியத்தின் சமவாயி காரண மெனப்படும். எங்ஙனம்: தந்துக்களில் பட வடிவ காரியம் சமவாய சம்பந்தமாக வுண்டாவதாகின்றது. ஆகையால் அத்தந்து அப்படத்தின் சமவாயி காரணமாம். அங்ஙனமே அப்படம் தன்னிடத்துள்ள வுருவ முதலிய குணங்கட்கும், கருமங்கட்கும் சமவாயி காரணமாம். "சமவாயி காரணம் திரவியம்" என்னும் முதலாவது லக்ஷணத்தில் "சமவாயி" என்னும் பதங் கூறாது "காரணம் திரவியம்" என விம்மாத்திரமே திரவியத்தின் லக்ஷணமாகக் கூறின் உருவ முதலிய குணங்களினும் அத்திரவியத்தின் லக்ஷணத்திற்கு அதிவியாப்தியுண்டாம். எற்றுக்கெனின், தந்துமுதலிய அவயவங்களினுள்ள உருவ முதலிய குணங்கள் பட முதலிய அவயவியினுள்ள உருவ முதலிய குணங்களின் காரணமாகின்றன. அங்ஙனமே உருவ முதலிய குணங்கள் தன்னை விஷயஞ் செய்யும் பிரத்தியக்ஷ ஞானத்திற்கும், சுவத்துவம்சத்திற்கும், காரணமாகின்றன. அவ்வுருவ முதலிய குணங்களில் அவ்விலக்கணத்தின் அதிவியாப்தியை நிவிருத்தி செய்யும்பொருட்டுத் திரவியத்தின் லக்ஷணத்தில் "சமவாயி" என்னும் இதை காரணத்திற்கு விசேஷணமாகக் கூறப்பட்டது. "சமவாயி" என்னும் விசேஷணத்தைக் கூறுவதால் அவ்வுருவ முதலிய குணங்களில் திரவியத்தின் லக்ஷணத்திற்கு அதிவியாப்தியுண்டாகாது. ஏனெனின், தந்துவிலுள்ள உருவ முதலிய குணங்கள் படத்திலுள்ள உருவ முதலிய குணங்களின் சமவாயி காரணமன்று. ஆனால் அசமவாயி காரணமாம். அங்ஙனமே அவ்வுருவ முதலிய குணங்கள் சுவபிரத்தியக்ஷத்திற்கும், சுவத்துவம்சத்திற்கும், சமவாயி காரணமன்று நிமித்த காரணமாம்.

௧௧௪. அசமவாயி காரணத்தின் சொரூப வர்ணனம்.

எப்பதார்த்தம் எக்காரியத்தின் சமவாயி காரணத்தில் சமவாயசம்பந்தமாக அல்லது சுவாசிரிய சம்பந்தமாக இருப்பதாகி காரியத்தினை யுண்டாக்குவதாகின்றதோ அப்பதார்த்தம் அக்காரியத்தின் அசமவாயி காரண மெனப்படுகின்றது. எங்ஙனம்: தந்துக்களின் சையோகம் பட வடிவ காரியத்தின் சமவாயி காரண வடிவ தந்துக்களில் சமவாய சம்பந்தமாக இருப்பதாகி அப்பட வடிவ காரியத்தினை யுண்டாக்குவதாகின்றது. ஆகையால் அத்தந்துக்களின் சையோகம் பட வடிவ காரியத்தின் அசமவாயி காரணமெனப்படுகின்றது. அங்ஙனமே: அத்தந்துக்களின் உருவ முதலிய குணங்கள் அப்படத்திலுள்ள உருவ முதலிய குணங்களின் சமவாயி காரணவடிவ அப்படத்தில் சுவாசிரிய சம்பந்தமாக விருப்பதாகி அப்படத்தின் உருவ முதலிய குணங்களை யுண்டாக்குவதாகின்றன. ஆகையால் தந்துக்களின் உருவ முதலிய குணங்கள் அப்படத்திலுள்ள உருவ முதலிய குணங்களின் அசமவாயி காரண மெனப்படுகின்றன. ஈண்டு இரண்டாவது சம்பந்தத்தில் சுவ வென்னுஞ் சத்தத்தால் தந்துக்களின் உருவ முதலிய குணங்களைக் கொள்ளுக. அவ்வுருவ முதலிய குணங்களின் ஆசிரியமாகிய தந்து யாதோ அத்தந்துக்களில் அப்படம் சமவாய சம்பந்தமாக விருக்கின்றது. ஆகையால் அத்தந்துக்களின் உருவ முதலிய குணங்கள் சுவாசிரிய சமவாய வடிவ பரம்பரைச் சம்பந்தமாக அப்படத்தி லிருக்கின்றது.

௧௧௫. நிமித்த காரணத்தின் சொரூப வர்ணனம்.

சமவாயி காரணம், அசமவாயி காரண மென்னு மிரண்டிற்கும் வேறான காரணத்தினை நிமித்த காரணமெனப்படுகின்றது. எங்ஙனம்: பட வடிவ காரியத்திற்கு தறி, வேமா, நாடா முதலிய வெல்லாக் காரணங்களையும் நிமித்த காரண மெனப்படுகின்றன. அங்ஙனமே: கட வடிவ காரியத்திற்கு தண்டம், சக்கிரம், குலாலன் முதலிய யாவும் நிமித்த காரண மெனப்படுகின்றன. ஒரு காரியத்திற்கு சமவாயி காரணமும், அசமவாயி காரணமும் ஒவ்வொன்றேயாகின்றது. நிமித்த காரணம் பலவாகின்றன. அதனிடத்தும் சமவாயி காரணத் தன்மையோ திரவிய பதார்த்த மொன்றினிடத்தேயுண்டாகின்றது. குணமுதலிய பதார்த்தங்களிலுண்டாவதில்லை. அசமவாயி காரணத் தன்மையோ குணம், கரும மென்னு மிருபதார்த்தங்களிடத்தேயே யுண்டாகின்றது. திரவிய முதலிய பதார்த்தங்களிலுண்டாவதின்று. நிமித்த காரணத் தன்மையோ திரவிய முதலிய வெல்லாப் பதார்த்தங்களிலுண்டாகின்றது. இதுகாறும் "சமவாயி காரணம் திரவியம்" என்னும் முதலாவது லக்ஷணம் நிரூபிக்கப்பட்டது. இனி இரண்டாவது லக்ஷணத்தின் அர்த்தம் நிரூபிப்பாம்.

௧௧௬. திரவியத்தின் குணாசிரியத்தன்மை வடிவ இரண்டாவது லக்ஷணத்தின் நிரூபணம்.

"குணாச்ரயோ த்ரவ்யம்" என்னு மிரண்டாவது லக்ஷணத்தின் அர்த்தம் நிரூபிப்பாம். எப்பதார்த்தம் சமவாய சம்பந்தமாக உருவ முதலிய

குணங்களின் ஆசிரியம் (பற்றுக்கோடு) ஆகின்றதோ அப்பதார்த்தம் திரவியமெனப்படுகின்றது. காலிக சம்பந்தமாக உருவ முதலிய குணங்கள் கருமமுதலிய பதார்த்தங்களினு மிருப்பனவாயினும் சமவாய சம்பந்தமாக உருவ முதலிய குணங்கள் கரும முதலிய பதார்த்தங்களி லிருப்பனவன்றாம். பிருதிவி முதலிய ஒன்பது திரவியங்களுக்குச் சமவாயசம்பந்தமாக குணங்களின் ஆசிரியத் தன்மை வடிவ லக்ஷணம் சம்பவிக்கின்றது. பிருதிவி முதலிய ஒன்பது திரவியங்களில் எவ்வெத் திரவியத்தில் எவ்வெக் குணங்க ளிருப்பனவாமோ அவ்வக்குணங்களை அவ்வத்திரவிய நிரூபணத்திற் கூறுவாம்.

கசுஎ. திரவியத்தினுற்பத்தி க்ஷணத்தில் அவற்றின் குணங்களினுற்பத்தியில் தோஷத்தைக் கூறும் வாயிலாக இரண்டாவது க்ஷணத்தில் குணங்களினுற்பத்தியினை நிலைநாட்டுகை.

சங்கை:—குணாசிரியத் தன்மையெனக் கூறிய திரவியத்தின் லக்ஷணம் அவ்வியாப்தி குற்றமுடைய தாவதால் அசங்கதமாம். ஏனெனின், எவ்வெத் திரவியம் எவ்வெக்ஷணத்தி லுண்டாவதாமோ அவ்வக்காரிய திரவியம் அவ்வவ்வுற்பத்தி க்ஷணத்தி லுருவ முதலிய குணங்களின்றியே யுண்டாகின்றது. உற்பத்தி க்ஷணத்தினும் இரண்டாவது க்ஷணத்தில் காரிய திரவியத்து லுருவ முதலிய குணங்க ளுண்டாவ தாகின்றன. ஏனெனின், பாவகாரியம் யாதோ அது சமவாயி காரணம், அசமவாயி காரணம், நிமித்த காரணமென்னும் முக்காரணங்களா லுண்டாகின்றதென்று நியாய சாத்திரக்காரர்களது நியமமாம். அன்றியும் அம்மூவித காரணங்களும் காரியத்தி னுற்பத்தி க்ஷணத்தினும் மறைப்பில்லாத முற்க்ஷணத்தி லிருப்பனவாகியே அக்காரியத்தினை யுண்டாக்குவனவாம். உருவ முதலிய குணங்களும் பாவ காரியமாகையால் உருவ முதலிய குணங்களின் உற்பத்தி க்ஷணத்தினும் முற்க்ஷணத்தில் அம்முக்காரணங்களை அவசிய மொப்பவேண்டும். கட முதலிய திரவியங்களின் உற்பத்தி க்ஷணத்தினும் இரண்டாவது க்ஷணத்தில் கடத்தி னுருவ முதலிய குணங்களுக்கு உற்பத்தி யொப்பின் உருவ முதலிய குணங்களின் உற்பத்தி க்ஷணத்தினும் முதற் க்ஷணத்தில் உருவ முதலிய குணங்களுக்கு சமவாயி காரண வடிவ கடமும், கபாலத்தின் உருவ முதலிய அசமவாயி காரணங்களும், தேசகால முதலிய நிமித்த காரணங்களும் இருக்கின்றன. ஆகையால் இம்மூன்றினது காரணங்களால் கடத்தி னுற்பத்தியினும் இரண்டாவது க்ஷணத்தில் கடத்தி னுருவ முதலிய குணங்களின் உற்பத்தி சம்பவிக்கின்றன. கடத்தி னுற்பத்தி க்ஷணத்திலேயே கடத்தினுருவமுதலிய குணங்களுக்கு உற்பத்தி யொப்பின் உருவ முதலிய குணங்களின் உற்பத்தி க்ஷணத்தினும் முற்க்ஷணத்தில் அக்கட வடிவ சமவாயி காரணமின்றாம். ஆகையால் கட வடிவ சமவாயி காரணத்தின் அபாவத்தால் கடத்தி னுற்பத்தி க்ஷணத்தில் அதனுருவ முதலிய குணங்களுக்கு உற்பத்தியே சம்பவியாது. ஓர்காலக் கடத்தி னுற்பத்தி க்ஷணத்தில் அதனுருவ முதலிய குணங்களுக்கு உற்பத்தி யுண்டாயின் சமவாயி காரணமின்றியே கேவலம் அசமவாயி காரணத்தாலும்

நிமித்த காரணங்களாலும் அவ்வுருவ முதலிய குணங்களி னுற்பத்தி யுண்டாகும். இது சித்தாந்தத்திற்கு விருத்தமாம். எக்காரணத்தாலெனின் சித்தாந்தத்தில் பாவ காரியத்தி னுற்பத்தி மூன்று காரணங்களாலேயே அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றது. அல்லது ஓர் காலத்தில் உண்டாவதான திரவிய குணங்களுக்கு உபாதான உபாதேய பாவ மொப்பின் ஓர் காலத்தில் உண்டாவதான ஆவினிருகோட்டிற்கும் பரஸ்பர உபாதான உபாதேய பாவமுண்டாக வேண்டும். எங்ஙனம்: ஒரே காலத்தில் உற்பத்தியுடைய இவ்விருகோட்டிற்கு பரஸ்பர உபாதான உபாதேய பாவமுண்டாவ தின்றோ அங்ஙனமே ஒரே காலத்தில் உற்பத்தியுடைய அத்திரவியத்திற்கும், குணத்திற்கும் பரஸ்பர உபாதான உபாதேய பாவம் சம்பவியாது.

கசுஅ. காரண சாமக்கிரி யொன்றினால் குண, குணிகளின் உற்பத்தி ஒப்புவதில் தோஷத்தின் வர்ணனம்.

சமவாயி, அசமவாயி, நிமித்த வடிவ மூன்று காரணங்கள் கட பட முதலிய திரவியங்களை யுண்டாக்குவனவாமோ அதே மூன்று காரணங்கள் கடபட முதலிய திரவியங்களின் உருவ முதலிய குணங்களையு முண்டாக்குவனவாம். ஆகையால் கட பட முதலிய திரவியங்களின் உற்பத்திக்ஷணத்திலேயே அதனுருவமுதலிய குணங்களின் உற்பத்தியொப்புவதில் முற்கூறிய சமவாயி காரணத்தின் அபாவ வடிவ தோஷம் பிராப்த மாகாதென சிலர் கூறின் அதுவும் சம்பவியாது. ஏனெனின், அக்கட பட முதலிய திரவியங்களின் காரணங்களே அவைகளின் குணங்களுக்குக் காரணமாகுமாயின் கட பட முதலிய திரவியங்கட்கும், அவற்றின் உருவ முதலிய குணங்கட்கும் பரஸ்பரம் வேறுபாடு சம்பவியாதாகும். ஆனால் கட பட முதலிய திரவியங்களும், உருவ முதலிய குணங்களும் அபின்னமேயாகும். எக்காரணத்தாலெனின் காரியங்களின் வேறுபாடே காரியத்தின் வேறுபாட்டிற்கு சாதகமாகின்றது. எங்ஙனம்: தந்து முதலிய காரணங்களால் உண்டாய பட வடிவ காரியத்தால் அத்தந்து முதலிய காரணங்களினும் வேறான கபால முதலிய காரணங்களா லுண்டாய கட வடிவ காரியம் வேறாவது போலும். அன்றியும் குண, குணியின் அபேதம் நியாய சித்தாந்தத்தில் அங்கீகார மின்றாம். குண, குணியின் பேதமே அங்கீகாரமாம். ஆகையால் கட பட முதலிய திரவியங்களின் காரணம் கட பட முதலியவைகளினது உருவ முதலியவைகளின் காரணமாகமாட்டாது. கட பட முதலிய திரவியங்களின் காரணத்தினும் அவற்றின் உருவ முதலிய குணங்களின் காரணம் வேறாகவே யொப்ப வேண்டும். இங்ஙனம் கூறிய முறைப்படி கட பட முதலிய திரவியங்கள் தனது உற்பத்தி க்ஷணத்தில் உருவ முதலிய குணங்களின்றியும், கருமமின்றியும் உண்டாவதாகின்றன. அதாவது உற்பத்தி க்ஷணத்தில் அக்கட பட முதலிய திரவியங்கள் நிர்குணமும், நிஷ்கிரியையுமாய் உண்டாவதாகின்றன. அத்தகைய உற்பத்திக்ஷணாவச்சின்ன கட பட முதலிய திரவியங்களில் குணாசிரியத் தன்மை வடிவ லக்ஷணமின்றாம். ஆகையால் அந்த லக்ஷணம் அவ்வியாப்தி தோஷமுடையதாவதால் துஷ்டமாம். அத்தகைய துஷ்ட

லக்ஷணத்தால் திரவியத்தின் சித்தியுண்டாக மாட்டாதென்னும் சங்கை யுண்டாகக் கூறிய அந்த லக்ஷணத்தினை இனி வேறு வகையாக வர்ணிப்பாம்.

கசுக. அவ்விரண்டாவது லக்ஷணத்தை வேறுவகையாக வர்ணித்தல்.

"[illegible]" (இ-ள்.) எவ்வதிகரணத்தில் உருவ முதலிய குணங்கள் சமவாய சம்பந்தமாக இருக்கின்றனவோ அவ்வதிகரணத்தில் சமவாய சம்பந்தமாக விருக்கும் ஜாதி யாதோ அஞ்ஜாதி குணசமானாதி கரண மெனப்படுகின்றது. அத்தகைய குண சமானாதி கரணமும் சத்தா ஜாதியினும் வேறான ஜாதி யாதோ அஞ்ஜாதியுடைய பதார்த்தம் திரவிய மெனப்படுகின்றது. இத்தகைய ஜாதி திரவியத் தன்மை ஜாதியாம். ஏனெனின், பிருதிவி முதலிய ஒன்பது திரவியங்களிலேயே உருவ முதலிய குணங்கள் சமவாய சம்பந்தமாக விருக்கின்றன. அத்திரவியத் தன்மை ஜாதியும் அத்திரவியங்களிலேயே சமவாய சம்பந்தமாக இருக்கின்றது. ஆகையால் திரவியத் தன்மை ஜாதி குண சமானாதி கரண மெனப்படுகின்றது. அத்திரவியத் தன்மை ஜாதி சத்தா ஜாதியினும் வேறுமாம். இத்தகைய திரவியத் தன்மை ஜாதியுடையன பிருதிவி முதலிய ஒன்பது திரவியங்களாம். இத்தகையத் திரவியத் தன்மை ஜாதி உற்பத்தி க்ஷணாவச்சின்ன கட முதலிய நிர்குணத் திரவியங்களினு மிருக்கின்றது. ஆகையால் அவற்றில் இந்த லக்ஷணத்தின் அவ்வியாப்தி யுண்டாகாது. அன்றி "சத்தா ஜாதியினும் வேறான ஜாதி யுடையது" திரவியமென இம்மாத்திரமே திரவியத்தின் லக்ஷணமாகக் கூறி அந்த லக்ஷணத்தில் "குணசமானாதி கரணம்" என்னும் பதங் கூறாவிடின் குணத்திலும், கருமத்திலும் அந்த லக்ஷணத்திற்கு அதிவியாப்தி யுண்டாகும். ஏனெனின், உருவ முதலிய இருபத்து நான்கு குணங்களி லிருப்பதான குணத் தன்மை ஜாதியும், எழும்பற்றன்மை முதலிய ஐந்து கருமங்களி லிருப்பதான கருமத் தன்மை ஜாதியும், சத்தா ஜாதியினும் வேறுமாம். ஆகையால் சத்தையினும் வேறான குணத் தன்மை ஜாதியுடைய குணங்களிலும் கருமத் தன்மை ஜாதியுடைய கருமங்களிலும் கூறிய அவ்விலக்கணத்திற்கு அதிவியாப்தி யுண்டாகும். அவ்வதிவியாப்தி குற்றத்தை நிவர்த்தி செய்வான் கருதி அந்த லக்ஷணத்தில் "குண சமானாதி கரணம்" என்னும் இதை அஞ்ஜாதிக்கு விசேஷண மாகக் கூறப்பட்டது. குணத்திலும், கருமத்திலும் சமவாய சம்பந்தமாக ஓர் குணமு மிருப்பதில்லை. ஆகையால் குணத் தன்மை ஜாதியும், கருமத்தன்மை ஜாதியும், குண சமானாதிகரண மன்று. ஆகையால் குண கருமங்களில் கூறிய அந்த லக்ஷணத்திற்கு அதிவியாப்தி யுண்டாகாது. அல்லது "குண சமானாதி கரண ஜாதி யுடையது திரவியம்" என விம்மாத்திரமே திரவியத்தின் இலக்கணமாகக் கூறி அவ்விலக்கணத்தில் "சத்தையினும் வேறானது" என்னும் பதம் கூறாவிடின் அவ்விலக்கணத்திற்கு மீண்டும் அக்குண கருமத்தில் அதிவியாப்தியுண்டாம். ஏனெனின், பிருதிவி முதலிய ஒன்பது திரவியங்களில் உருவ முதலிய குணங்களும், சத்தாஜாதியும் சமவாய சம்பந்தமாக இருக்கின்றன, ஆகையால் அச்சத்தாஜாதியும் குணசமானாதிகரணமாம்.

இத்தகைய் குண சாமானாதி கரண சத்தா ஜாதியுடையது எங்ஙனம் திரவியமாமோ அங்ஙனமே குண, கருமமும், சத்தா ஜாதியுடையனவாம். அக்குண, கருமத்தில் கூறிய அவ்விலக்கணத்திற்கு அதிவியாப்தி யுண்டாம். அவ்வதி வியாப்தி தோஷத்தை நிவர்த்தி செய்வான் வேண்டி அவ்விலக்கணத்தில் "சத்தையினும் வேறான" என்னும் இதை அஞ்ஜாதிக்கு விசேஷணமாகக் கூறப்பட்டது. சத்தா ஜாதி சத்தா ஜாதியினும் வேறன்று. ஆகையால் அச்சத்தா ஜாதியைக் கொண்டு அந்த லக்ஷணத்திற்கு குண, கருமங்களில் அதிவியாப்தி யுண்டாகாது.

சங்கை:—குண சாமானாதி கரண சத்தா ஜாதியினும் வேறான ஜாதியுடையது திரவிய மெனக் கூறிய விலக்கணத்திற்கும் குணத்தில் அதிவியாப்தியுண்டாகின்றது. ஏனெனின், "[illegible]" (இ-ள்.) ஒருமைத்தன்மை எண்ணுடைய உருவகுணம் சுவையினும் வேறாம். (உருவம் ஒன்று சுவையின்வேறு) என்னு முணர்ச்சி உருவ குணத்தில் ஒருமைத் தன்மை யெண்வடிவ குணத்தினையும், வேற்றுமைத் தன்மை குணத்தினையும் விஷயஞ் செய்கின்றது. ஆகையால் அவ்வுணர்ச்சியின் வலியால் உருவ குணத்திலும் ஒருமைத் தன்மை சங்கியா குணமும், வேற்றுமைத் தன்மை குணமும் அவசிய மொப்புவதாகும். அன்றியும், அவ்வுருவ குணத்தில் குணத்தன்மை ஜாதியுமிருக்கின்றது. ஆகையால் அக்குணத் தன்மை ஜாதி ஒருமைத் தன்மைச் சங்கியை வடிவ குணத்தினதும் வேற்றுமைத் தன்மை வடிவ குணத்தினதும் சாமானாதி கரணமும் சத்தா ஜாதியினும் வேறுமாம். இத்தகைய குண சாமானாதி கரண சத்தையினும் வேறான குணத்தன்மை ஜாதியுடையது உருவ முதலிய குணங்களாம். ஆகையால் உருவ முதலிய குணங்களில் கூறிய அவ்விலக்கணத்தின் அதிவியாப்தியுண்டாகும்.

சமாதானம்:—உருவமொன்று சுவையின் வேறு என்னு முணர்ச்சி உருவ குணத்தில் சமவாய சம்பந்தமாக வொருமைத் தன்மை யெண்ணின் குணத்தினையும், வேற்றுமைத் தன்மை குணத்தினையும் விஷயஞ் செய்கிறதில்லை. ஏனெனின், குண பதார்த்தம் சமவாய சம்பந்தமாக திரவிய பதார்த்த மொன்றினிடத்தே யிருக்கின்றது. குண முதலிய பதார்த்தங்களில் சமவாய சம்பந்தமாக இருப்பதில்லை. எக்கட முதலிய திரவியங்களில் உருவ குணம் சமவாய சம்பந்தமாக இருக்கின்றதோ அக்கடாதி திரவியங்களில் ஒருமைத் தன்மையாகிய சங்கியைக் குணமும், வேற்றுமைத் தன்மையாகிய குணமும் சமவாய சம்பந்தமாக இருக்கின்றன. ஆகையால் உருவ குணத்திற்கு ஒருமைத் தன்மை சங்கியை, வேற்றுமைத் தன்மை குணங்களோடு சாமானாதி கரண்ணிய சம்பந்த மிருக்கின்றது. அச்சாமானாதி கரண்ணிய சம்பந்தமாக உருவ குணத்தி லிருப்பதாகிய அவ்வொருமைத் தன்மை, வேற்றுமைத் தன்மை குணங்களையே அவ்வுணர்ச்சி விஷயஞ் செய்கின்றது. ஆகையால் உருவ முதலிய குணங்களில் கூறிய அத்திரவியத்தின் இலக்கணத்திற்கு அதிவியாப்தி யுண்டாகாது.

௧௭௰. திரவியத் தன்மை ஜாதியுடைமை வடிவ திரவியத்தின் மூன்றாவது லக்ஷணத்தின் நிரூபணம்.

"த்ரவ்யத்வஜாதிமத் த்ரவ்யம்" என்னும் மூன்றாவது இலக்கணம் நிரூபிப்பாம். எப்பதார்த்தம் சமவாய சம்பந்தமாக திரவியத் தன்மை ஜாதியுடையதாமோ அப்பதார்த்தம் திரவியமெனப்படும். ஆண்டுச் சமவாய சம்பந்தமாக திரவியத் தன்மை ஜாதி பிருதிவி முதலிய ஒன்பது திரவியங்களிலேயே யிருக்கின்றது. குண முதலிய பதார்த்தங்களில் இருப்பதில்லை. ஆகையால் திரவியத் தன்மை ஜாதியுடைமை வடிவ திரவியத்தின் இலக்கணமும் சம்பவிக்கின்றது.

சங்கை :—இத்திரவியத்தின் ஜாதியுடைமையாகிய திரவிய இலக்கணமும், முற்கூறிய திரவியத் தன்மை ஜாதியுள்ள திரவிய இலக்கணமும், பின்னர் கூறப்படும் திரவியத் தன்மை ஜாதியுள்ள திரவிய இலக்கணமும் சித்திக்கும்போது முதலிலோர் பிரமாணத்தால் திரவியத் தன்மை ஜாதியின் சித்தியுண்டாகவேண்டும். திரவியத்தன்மை ஜாதியின் சித்தியின்றி அவ்விலக்கணம் சம்பவியாதென்னும் சங்கையுண்டாக இனி பிரத்தியக்ஷப் பிரமாணத்தால் திரவியத் தன்மை ஜாதியின் சித்தியைச் செய்வாம்.

௧௭௰௧. ஏகாகாரப் பிரத்தியக்ஷத் தோற்றத்தால் திரவியத் தன்மை ஜாதியின் சித்தியினை வர்ணித்தல்.

பரஸ்பரம் வெவ்வேறான பிருதிவி முதலிய வொன்பது திரவியங்களில் இது திரவியம், இது திரவிய மென்னும் ஏகாகாரப் பிரதீதி யுண்டாகின்றது. அதாவது *ஏகாகார தர்மமாக தோற்ற முண்டாகின்றது. அவ்வேகாகாரப்பிரதீதியில் யாதாமோர் விஷயம் காரணமாக வொப்பவேண்டும். ஆண்டு பரஸ்பரம் வெவ்வேறான பிருதிவி முதலிய திரவியங்களுக்கோர் அவ்வேகாகாரப் பிரதீதியில் காரணத் தன்மைச் சம்பவியாது. ஆனால் பிருதிவி ஜல முதலிய வொன்பதுத் திரவியங்களில் உள்ளீடாயிருக்கின்ற திரவியத் தன்மை ஜாதியாதோ அத்திரவியத் தன்மை ஜாதியே ஓர் விஷய வடிவமாக ஏகாகாரப் பிரதீதியின் காரணமாம். ஆகையால் இது திரவியம், இது திரவிய மென்னும் பிரத்தியக்ஷமே அத்திரவியத் தன்மை ஜாதியில் பிரமாணமாம்.

சங்கை :—பரமாணு முதலிய அதீந்திரிய திரவியங்களில் இது திரவியம், இது திரவியமென்னும் பிரத்தியக்ஷப் பிரதீதி ஓர் ஜீவனுக்கு முண்டாகிறதில்லை. ஆகையால் அந்தப் பிரத்தியக்ஷப் பிரமாணத்தால் அதீந்திரியத் திரவியத் தன்மை ஜாதியின் சித்தியுண்டாவதின்றாம். அல்லது சாத்திர சம்ஸ்காரமில்லாத புருஷர்களுக்கும் பொன் வெள்ளி முதலிய பதார்த்தங்களிலேயே இது திரவியமென்னும் பிரதீதி யுண்டாகின்றது. கட முதலிய திரவியங்களில் இது திரவிய மென்னும் பிரதீதியுண்டாவதின்று. ஆகையால் இது திரவிய மென்னும் பிரத்தியக்ஷப் பிரதீதியால் திரவியத் தன்மை ஜாதி

* ஏகாகாரப்பிரதீதி—ஒரேவடிவத்தோற்றம்.

யின் சம்பவமின்று. என்னுஞ் சங்கையுண்டாக இனி அநுமானப் பிரமாணத்தால் திரவியத் தன்மை ஜாதியின் சித்தி செய்வாம்.

௧௭௰௨. அநுமானப் பிரமாணத்தால் திரவியத் தன்மை ஜாதியினது சித்தியின் வர்ணனம்.

அவ்வநுமானத்தின் ஆகாரமிதுவாம். "த்ரவ்ய வ்ருத்தி ஸம்யோக விபாக ஸமவாயிகாரணதா ஸாக்ஷாத் வ்யாப்ய ஜாதி காரணதாவச் சேதக த்ரவ்யத்வம் காரணதாவத்" (இ-ள்.) பிருதிவி முதலிய வொன்பது திரவியங்களிலிருக்கின்ற சையோக வடிவ காரியத்தின் அல்லது விபாக வடிவ காரியத்தின் சமவாயி காரணத் தன்மை யாதோ அக்காரணத் தன்மை ஓர் தர்மத்தால் அவச்சின்னமாக வேண்டியதாம். காரணத் தன்மை யாதலால், எது வெது காரணத் தன்மை யாமோ அது வது ஓர் தருமத்தால் அவச்சின்னமேயாகின்றது. நிரவச்சின்னமாக ஓர் காரணத் தன்மையுமுண்டாகிறதில்லை. எங்ஙனம்; தந்துக்களிலிருக்கும் படத்தின் சமவாயிகாரணத் தன்மை தந்துத் தன்மை தர்மத்தால் அவச்சின்னமாமோ அங்ஙனமே திரவியத்திலிருக்கும் காரணத் தன்மையும் ஓர் தருமத்தால் அவச்சின்னமேயாகும். ஆண்டுப் பிருதிவி முதலிய ஒன்பது திரவியங்களிலிருக்கும் சையோக, விபாகமாகிய காரியத்தின் சமவாயி காரணத் தன்மை யாதோ அக்காரணத்தன்மையின் அவச்சேதகம் திரவியத் தன்மை ஜாதியே யாகின்றது. வேறோர் தர்மம் அவச்சேதகமாவதின்று.

௧௭௰௩. அவச்சேதகத் தருமத்தின் சொரூப வர்ணனம்.

எத்தருமம் எத்தருமத்தின் குறைந்த விடத்திலும் அதிகவிடத்திலும் இராமல் சமான விடத்திலிருப்பதாமோ அத்தருமம் அத்தருமத்தின் அவச்சேதகமெனப்படும். அதாவது வேறு தருமங்களினின்றும் வேறாவதாகின்றது. அவச்சேதகிய தருமத்தின் குறைந்த அல்லது அதிக விடத்தில் இருப்பதாகிய தருமம் அதற்கு அவச்சேதக மாவதன்று. இவ்வாறாய அவச்சேதகத் தருமத்தின் லக்ஷணமுண்டுத் திரவியத் தன்மை ஜாதியிலேயே யிருக்கின்றது. வேறோர் தருமத்தில் இருப்பதில்லை. ஏனெனின், சையோக, விபாகமாகிய காரியத்தின் சமவாயி காரணத் தன்மையும் பிருதிவி முதலிய ஒன்பது திரவியங்களிலேயே யிருக்கின்றது. குணம், கருமமுதலிய பதார்த்தங்களிலிருப்பதில்லை. திரவியத் தன்மை ஜாதியும் பிருதிவி முதலிய ஒன்பது திரவியங்களிலேயே யிருக்கின்றது. குணம், கரும முதலிய பதார்த்தங்களிலிருப்பதில்லை. ஆகையால் அக்காரணத் தன்மையின் சமானவிடத்தி லிருப்பதால் அத்திரவியத் தன்மை ஜாதியே காரணத் தன்மையின் அவச்சேதகமாகின்றது. குணமாத்திரத்திலிருக்கும் குணத் தன்மை ஜாதியும், கரும மாத்திரத்திலிருக்கும் கருமத்தன்மை ஜாதியும், திரவியத்திலிருக்கும் காரணத்தன்மை ஜாதியின் சமானாதிகரணமேயன்றாம். ஆகையால், குணத் தன்மை ஜாதியும், கருமத் தன்மை ஜாதியும், அக்காரணத் தன்மையின் அவச்சேதகமாவதன்று. அவ்வவச்சேதகிய தருமத்தின் சமானாதிகரணத் தருமமே அதன்

அவச்சேதகமாகின்றது. பிருதிவி மாத்திரத்திலிருக்கும் பிருதிவித் தன்மை ஜாதியும், ஜலமாத்திரத்திலிருக்கும் ஜலத்தன்மை ஜாதியும், தேயுமாத்திரத்திலிருக்கும் தேயுத் தன்மை ஜாதியுமாம் இவை முதலிய திரவியங்களைப் பிரிக்கும் ஜாதிகள் திரவியத்திலிருக்கும் காரணத் தன்மையின் அதிகரணத்திலேயே யிருக்கின்றது. அற்றாயினும் பிருதிவித் தன்மை முதலிய ஜாதிகள் காரணத் தன்மையினும் குறைந்த விடத்திலிருப்பனவாம். ஆகையால் பிருதிவித் தன்மை முதலிய ஜாதிகளும் அக்காரணத் தன்மையின் அவச்சேதகமாவதன்று. சத்தா ஜாதி ஒன்பது திரவியங்களிலிருக்கின்றது. என்றாலும் சத்தா ஜாதி திரவியங்களினும் வேறான குண, கருமங்களிலு மிருக்கின்றது. ஆகையால் திரவியத்திலிருக்கும் காரணத் தன்மையினும் அதிகவிடத்திருப்பதாவதால் அச்சத்தா ஜாதியும் அக்காரணத் தன்மையின் அவச்சேதகமாகாது. பரிசேஷத்தால் திரவியமாத்திரத்திலிருக்கும் திரவியத்தன்மை ஜாதியே அத்திரவியத்திலிருக்கும் காரணத்தன்மையின் அவச்சேதகமாகின்றது.

சங்கை:—திரவியத்தி லிருக்கும் காரணத் தன்மையின் அவச்சேதகம் குணத் தன்மை ஜாதியே யாகின்றது. ஏனெனின், பிருதிவி முதலிய ஒன்பது திரவியங்களிலேயே ஸம்யோக, விபாக குணத்தின் சமவாயி காரணத் தன்மை யிருக்கின்றது. குணத் தன்மை ஜாதியும் அவ்வொன்பது திரவியங்களி லிருக்கின்றது. சமவாய சம்பந்தமாக அக்குணத் தன்மை ஜாதி குணத்திலேயே யிருக்கின்றது. திரவியத்தி லிருப்பதில்லை. எனினும் ஸ்வாசிரயாசிரயத் தன்மை வடிவ பரம்பரைச் சம்பந்தமாக குணத் தன்மை ஜாதி திரவியத்திலு மிருக்கின்றது. ஈண்டு சுவசத்தத்தால் அக்குணத் தன்மை ஜாதியினைக் கிரஹிக்குக. அக்குணத் தன்மை ஜாதியின் ஆசிரயம் உருவ முதலிய குணங்களாம். அவ்வுருவ முதலிய குணங்களின் ஆசிரயம் பிருதிவி முதலிய ஒன்பது திரவியங்களாம். இவ்வாறு ஸ்வாசிரயாசிரயத் தன்மை வடிவ பரம்பரைச் சம்பந்தமாக அப்பிருதிவி முதலிய ஒன்பது திரவியங்களில் இருப்பதாகிய குணத் தன்மை ஜாதியே அத்திரவியத்தி லிருக்கும் காரணத் தன்மையின் அவச்சேதக வடிவமாக சித்திக்கும். ஆகையால் கூறிய அவ்வநுமானப் பிரமாணத்தால் திரவியத் தன்மை ஜாதியின் சித்தி சம்பவியாது.

சமாதானம்:—சாக்ஷாத் சம்பந்தமாயுள்ள அத்தர்மத்திற்கு ஓர் பிரமாணத்தால் பாதம் யாண்டுண்டாகின்றதோ ஆண்டே பரம்பரைச் சம்பந்தமாயுள்ள தர்மத்தினை அவ்வநுமிதி ஞானம் விஷயஞ் செய்கின்றது. யாண்டுச் சாக்ஷாத் சம்பந்தமாயுள்ள தர்மத்திற்கு ஓர் பிரமாணத்தால் பாதமுண்டாகிறதில்லையோ ஆண்டுப் பரம்பரைச் சம்பந்தமாயுள்ள தர்மத்தினை அவ்வநுமிதி ஞானம் விஷயஞ் செய்கிறதில்லை. இப்பிரசங்கத்தில் பிருதிவி முதலிய ஒன்பது திரவியங்களில் சாக்ஷாத் சம்பந்தமாயுள்ள திரவியத் தன்மை ஜாதி வடிவ தர்மத்திற்கு ஓர் பிரமாண பாதகமு மின்றாம். ஆகையால் அச்சாக்ஷாத சம்பந்தமாயுள்ள திரவியத் தன்மை தர்மத்தினை விட்டு அவ்வநுமிதி ஞானம் கூறிய அப்பரம்பரைச் சம்பந்தமாயுள்ள குணத்

தன்மை ஜாதி வடிவ தர்மத்தினை விஷயஞ் செய்கிறதில்லை. திரவியத்தன்மை ஜாதியினையே அவ்வநுமிதி ஞானம் விஷயஞ் செய்கிறது. ஆகையால் கூறிய அவ்வநுமானத்தால் திரவியத் தன்மை ஜாதியின் சித்தியேயுண்டாகின்றது. குணத் தன்மை ஜாதியின் சித்தியுண்டாகிறதில்லை.

சங்கை:—கூறிய இவ்வநுமானத்தால் ஒன்பது திரவியங்களி லிருக்கும் ஓர் திரவியத் தன்மை தர்மத்தின் சித்தி யுண்டாகின்றது. அத்திரவியத்தன்மை தர்மத்தில் ஜாதி வடிவத் தன்மை இவ்வநுமானத்தால் சித்தியாது. ஆகையால் எங்ஙனம் ஆகாசத் தன்மை, காலத் தன்மை, திக்குத் தன்மை, சாமான்னியத் தன்மை, விசேஷத் தன்மை, சமவாயத் தன்மை, அபாவத் தன்மை யென்னு மிவை முதலிய தர்மங்கள் ஜாதி வடிவமாகாது உபாதி வடிவமாமோ அங்ஙனமே திரவியத் தன்மை தர்மமும் ஜாதி வடிவமாகாது உபாதி வடிவமேயாகும்.

சமாதானம்:—காரணத் தன்மையின் அவச்சேதக வடிவமாகவாவது, காரியத் தன்மையின் அவச்சேதக வடிவமாகவாவது, பிரதிபந்தகத் தன்மையின் அவச்சேதக வடிவமாகவாவது, *பிரதிபத்தியத் தன்மையின் அவச்சேதக வடிவமாகவாவது, பதத்தின் †சக்கியத் தன்மையின் அவச்சேதக வடிவமாகவாவது சித்திக்கும் தர்மத்தினை ஓர் தோஷம் பாதிப்பதின்றாகுமாயின் அத்தர்மம் ஜாதி வடிவமேயாகின்றதென்று மிது நியாயசாஸ்திரக்காரர் சித்தாந்தமாம். அஜ்ஜாதித் தன்மையினைப் பாதிக்கும் தோஷம் பின்னர் நான்காவது பரிச்சேதத்தில் சாமான்னிய நிருபணத்தில் கூறுவாம். அத்திரவியத் தன்மை வடிவ தர்மத்தின் ஜாதித்தன்மையினை பாதிக்கும் அத்தோஷம் ஒன்றுமே யின்றாம். ஆகையால் கூறிய அவ்வநுமானத்தால் அத்திரவியத் தன்மை தர்மம் ஜாதி வடிவமாகவே சித்தமாகும்.

சங்கை:—எங்ஙனம் ஸம்யோக, விபாகமென்னும் இரு குணங்கள் திரவியத்தி லிருக்கின்றனவோ அங்ஙனமே உருவம் முதலிய குணங்களும் திரவியத்திலேயேயிருக்கின்றன. அவ்வுருவ முதலிய குணங்களை ‡பரித்தியாகம் செய்து ஸம்யோக, விபாக வடிவ குணத்திற்குச் சமவாயி காரணத் தன்மையின் அவச்சேதக வடிவமாக அத்திரவியத் தன்மை ஜாதியின் சித்தி செய்வதில் காரணம் யாது.

சமாதானம்:—எங்ஙனம் ஸம்யோக, விபாக மென்னு மிரு குணங்கள் பிருதிவி முதலிய ஒன்பது திரவியங்களி லிருக்கின்றனவோ, அங்ஙனம் உருவ முதலிய குணங்கள் ஒன்பது திரவியங்களிலிருப்பனவன்று. சில குணங்களோ ஒவ்வோர் திரவியத்திலேயே யிருக்கின்றன. எங்ஙனம்: சத்தம், புத்தி முதலிய குணங்கள் போலும். சில குணங்க ளிரு திரவியங்களிலேயே யிருக்கின்றன. எங்ஙனம்: ரஸமுதலிய குணங்கள் போலும். சில குணங்களோ மூன்று திரவியங்களிலேயே யிருக்கின்றன. எங்ஙனம்: உருவ முதலிய குணங்கள் போ

*பிரதிபத்தியத்தன்மை—பிரதிபந்திக்கப்படுவது யாதோ அப்பொருளின் தன்மை.
†சக்கியத்தன்மை—பொருள் அல்லது அர்த்தத்தின் தன்மை. ‡பரித்தியாகம்—நீக்குதல்.

னும். சில குணங்களோ நான்கு திரவியங்களிலேயே யிருக்கின்றன. எங்ஙனம்; பரிச முதலிய குணங்கள் போலும். சில குணங்களோ ஐந்து திரவியங்களிலேயே யிருக்கின்றன. எங்ஙனம்; பரத்வம், அபரத்வ முதலிய குணங்கள் போலும். ஆகையால் அவ்வுருவ முதலிய குணங்களுக்கு சமவாயி காரணத் தன்மையின் அவச்சேதக வடிவமாக திரவியத் தன்மை ஜாதியின் சித்தி செய்யின் திரவியத் தன்மை ஜாதி ஒன்பது திரவியங்களில் சித்திப்பதின்று. ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து திரவியங்களிலேயே சித்திப்பதாகும். சையோக, விபாகமென்னு மிரு குணங்களோ பிருதிவி முதலிய ஒன்பது திரவியங்களிலேயே யிருக்கின்றன. ஆகையால் அவ்விரண்டின் காரணத் தன்மை அவச்சேதகமாக அத்திரவியத் தன்மை ஜாதி ஒன்பது திரவியங்களிலேயே சித்தமாகின்றது. இக்காரணத்தால் உருவ முதலிய குணங்களை பரித்தியாகம் செய்ய சையோக, விபாகத்தின் சமவாயி காரணத் தன்மையின் அவச்சேதக வடிவமாக அத்திரவியத் தன்மை ஜாதி ஒன்பது திரவியங்களிலேயே சித்தமாகின்றது. ஆகையால் அவ்வுருவ முதலிய குணங்களின் பரித்தியாகத்தால் சையோக, விபாகத்திற்கு சமவாயி காரணத் தன்மையின் அவச்சேதக வடிவமாக திரவியத் தன்மை ஜாதியின் சித்தி செய்யப்பட்டது.

சங்கை:—எங்ஙனம் சையோக, விபாக மென்னும் இரு குணங்கள் பிருதிவி முதலிய திரவியங்களி லிருக்கின்றனவோ அங்ஙனமே சங்கியை, பரிமாணம், வேற்றுமை என்னு முக்குணங்களும் அவ்வொன்பது திரவியங்களிலுமிருக்கின்றன. ஆகையால் அம்முக்குணங்களின் சமவாயி காரணத் தன்மையின் அவச்சேதக வடிவமாக திரவியத் தன்மை ஜாதியின் சித்தியுண்டாய் விடுகின்றது. அம்முக்குணங்களைப் பரித்தியாகம் செய்து கேவலம் சையோக, விபாக வடிவ குணத்தின் சமவாயி காரணத் தன்மையின் அவச்சேதக வடிவமாக திரவியத் தன்மை ஜாதியின் சித்தி செய்வதில் காரணம் யாது?

சமாதானம்:—சங்கியை, பரிமாணம், வேற்றுமை என்னும் முக்குணங்களும் சையோக, விபாகங்களைப் போன்று ஒன்பது திரவியங்களி லிருக்கின்றன. எனினும் அம்முக்குணங்கள் நித்தியமும், அநித்தியமுமாகின்றன. அன்றி, நித்தியத் திரவியங்களிலிருக்கும் ஒருமைத் தன்மைச் சங்கியையோ நித்தியமும், இருமை முதலிய எல்லாச் சங்கியைகளும் அநித்தியமுமாம். அங்ஙனமே நித்தியத் திரவியங்களி லிருக்கும் பரிமாணம் நித்தியமும், அநித்தியத் திரவியங்களிலிருக்கும் பரிமாணம் அநித்தியமுமாகின்றது. அங்ஙனமே நித்தியத் திரவியங்களிலிருக்கும் ஒருமை வேற்றுமைத் தன்மை நித்தியமும், இருமை வேற்றுமைத்தன்மை முதலிய வெல்லாம் அநித்தியமுமாம். இவ்வாற்றால் சங்கியை, பரிமாணம், வேற்றுமை யென்னும் முக்குணங்களும் நித்தியமும், அநித்தியமு மாகின்றன. நித்திய, அநித்தியமாம் இரண்டிலிருப்பதாகிய தர்மம் காரியத் தன்மையின் அவச்சேதகமாகாது. ஆகையால் நித்திய, அநித்தியங்களி லிருப்பனவாகிய, சங்கியைத் தன்மை, பரிமாணத் தன்மை, வேற்றுமைத் தன்மை யென்னும் தர்மங்கள் அத்திரவியத்தினது காரியத்

தன்மையின் அவச்சேதகமாகிறதில்லை. இக்காரணத்தால் சங்கியை, பரிமாணம், வேற்றுமையென்னும் மூன்று குணங்களின் சமவாயி காரணத் தன்மையின் அவச்சேதக வடிவமாக திரவியத் தன்மை ஜாதியின் சித்தி செய்கிறதில்லை. சையோக, விபாகமென்னு மிருகுணங்களோ அநித்தியமேயாகின்றன. நித்தியமானவன்று. ஆகையால் சையோக, விபாக வடிவ காரியத்தின் சமவாயி காரணத்தன்மையின் அவச்சேதக வடிவமாக திரவியத் தன்மை ஜாதியின் சித்தி செய்யப்பட்டது.

சங்கை:—ஓர் சையோக வடிவ குணத்தின் சமவாயி காரணத்தன்மை அவச்சேதக வடிவமாகவே திரவியத் தன்மை ஜாதியின் சித்தியுண்டாய்விடு மாயின் அவற்றில் விபாக குணத்தைக் கிரகிப்பது பயனின்மையாம்.

சமாதானம்:—சில நூலாசிரியரோ ஆகாச முதலிய விபுத்திரவியங்களில் சையோகத்தினை நித்தியமாக வொப்புகின்றனர். அவர்கள் மதத்தில் எங்ஙனம் சங்கியாத் தன்மை முதலிய தர்மங்கள் நித்தியம், அநித்தியமா மிரண்டிலிருக்கின்றனவோ அங்ஙனமே சையோகத்தன்மை தர்மம் நித்தியம், அநித்திய மாமிரண்டிலிருக்கின்றது. ஆகையால் சங்கியாத்தன்மை, பரிமாணத் தன்மை முதலிய தர்மங்களைப்போன்று சையோகத்தன்மை தர்மமும் அக்காரியத்தன்மையின் அவச்சேதகமாகிறதில்லை. அவர்கள் மதத்தில் சையோகத்தினது சமவாயிகாரணத்தன்மையின் அவச்சேதக வடிவமாக திரவியத்தன்மை ஜாதியின் சித்தியுண்டாகிறதில்லை. விபாக குணத்தினையோ ஒரு நூலாசிரியரும் நித்தியமாக வொப்புகிறதில்லை. விபாகத்தினை யாவரும் அநித்தியமாக வொப்புகின்றனர். இக்காரணத்தால் அவ்விபாகத்தினது சமவாயி காரணத் தன்மையின் அவச்சேதக வடிவமாக திரவியத்தன்மை ஜாதியின் சித்திசெய்யப்பட்டது.

௧௭௪. வேறு அநுமானத்தால் திரவியத்தன்மை ஜாதியின் சித்தி.

சில நூலாசிரியரோ இவ்வாறாக திரவியத் தன்மை ஜாதியின் சித்தி செய்கின்றனர். எவ்வவயவங்களில் எத்திரவியம் சமவாய சம்பந்தமாக இருக்கின்றதோ அவ்வவயவங்களில் அத்திரவியத்தினும் வேறான மற்றைய திரவியத்தினுற்பத்தி யுண்டாகிறதில்லை. எங்ஙனம்: ஓர் படத்தின் ஆசிரயமாகிய தந்துக்களில் வேறுபடத்தினுற்பத்தி யுண்டாவதில்லை. ஆகையால் அவ்வவயவங்களில் சமவாய சம்பந்தமாக வேறு திரவியத்தின் உற்பத்தியில் முதல் திரவியத்திற்கு சமவாயி சம்பந்தமாக பிரதிபந்தகமெனப்படவேண்டும். இவ்விதமாக திரவியத்திலிருக்கும் வேறு திரவியத்தின் பிரதிபந்தகத் தன்மை யாதோ அப்பிரதிபந்தகத் தன்மையின் அவச்சேதக வடிவமாகவே திரவியத் தன்மை ஜாதியின் சித்தியுண்டாகின்றது. இவ்வாறாய அநுமானப் பிரமாணத்தால் பிருதிவி முதலிய வொன்பது திரவியங்களிலிருக்கும் திரவியத் தன்மை ஜாதி யாதோ அத்திரவியத் தன்மை ஜாதியுடைய பதார்த்தம் திரவியமெனப்படும். "திரவியத் தன்மை ஜாதியுடையது திரவியம்" என்னும் மூன்றாவது லக்ஷணத்தின் அர்த்தம் நிரூபிக்கப்பட்டது.

௧௭௫. திரவியத்தின் நான்காவது லக்ஷணத்தின் வர்ணனம்.

"குணகர்மான்யத்வே ஸதி ஸாமான்யவத் த்ரவ்யம்" என்னும் நான்காவது அர்த்தத்தைநிருபிப்பாம். எப்பதார்த்தம் குணம், கருமமென்னுமிரு பதார்த்தத்தினும் வேறும் ஜாதி வடிவ சாமான்னியமுடையதுமாமோ அப்பதார்த்தம் திரவியமெனப்படும். ஆண்டுப் பிருதிவிமுதலிய வொன்பது திரவியங்கள் குண, கருமங்களினும் வேறும் ஜாதிவடிவசாமான்னியமுடையனவுமாம். ஆகையால் கூறிய இத்திரவியத்தின் லக்ஷணம் சம்பவிக்கின்றது. ஈண்டு "சாமான்னிய முடையது" திரவியமென விம்மாத்திரமே அத்திரவியத்தின் லக்ஷணமாகக்கூறி, அந்தலக்ஷணத்தில் குண, கருமங்களுக்கு வேறானது என்னும் பதங்கூறாவிடின் குண, கருமங்களில் அந்த லக்ஷணத்திற்கு அதிவியாப்தியுண்டாம். ஏனெனின், திரவியத்தைப்போன்று குண, கருமங்களும் ஜாதியாகிய சாமான்னியமுடையனவேயாம். அவ்வதிவியாப்திதோஷத்தைநிவிர்த்திக்கும் பொருட்டு அந்த லக்ஷணத்திற்கு குண, கருமங்களுக்கு வேறான தென்னும் விசேஷணங் கூறப்பட்டது. ஆண்டுக் குணமும், கருமமும், குணத்தினும், கருமத்தினும், வேறவனவன்று. ஆகையால் குண கருமங்களில் கூறிய லக்ஷணத்திற்கு அதிவியாப்தியுண்டாகாது. அல்லது "குணத்தினும் கருமத்தினும்" வேறானது திரவியமென இம்மாத்திரமே அத்திரவியத்தின் லக்ஷணமாகக்கூறி, அந்த லக்ஷணத்தில் சாமான்னிய முடைய தென்னும் பதங் கூறாவிடின் சாமான்னியம், விசேஷம், சமவாயம், அபாவ மென்னும் நான்கில் அந்த லக்ஷணத்திற்கு அதிவியாப்தியுண்டாம். ஏனெனின், எங்ஙனம் திரவியம் குண, கருமங்களினும் வேறுமோ அங்ஙனமே சாமான்னிய முதலிய நான்கும் குண, கருமங்களினும் வேறேயாகின்றன. ஆகையால் அவ்வதிவியாப்தி தோஷத்தை நிவிர்த்தி செய்வான் வேண்டி அந்த லக்ஷணத்தில் சாமான்னியமுடைய தென்னும் பதங் கூறப்பட்டது. சாமான்னிய முதலிய பதார்த்தங்கள் ஜாதிவடிவ சாமான்னியமுடையனவன்றாம். ஆகையால் அவற்றில் அந்த லக்ஷணத்திற்கு அதிவியாப்தியுண்டாகாது.

சங்கை :—சாமான்னியமுடைய தென்னும் பதத்தினைக் கூறுவதாலும் கூறிய அந்தலக்ஷணத்திற்கு சாமான்னியம், விசேஷம், சமவாயமாம்மூன்றில் அதி வியாப்தி யுண்டாகும். ஏனெனின், எத்திரவியம், குணம், கருமங்களில் சமவாய சம்பந்தமாக அஜ்ஜாதியாகிய சாமான்னிய மிருக்குமோ அத்திரவிய, குண, கருமங்களிற் சமவாய சம்பந்தமாக அச்சாமான்னிய முதலிய மூன்றுமிருக்கின்றன. ஆகையால் சாமானாதிகரண்ணிய சம்பந்தமாக சாமான்னிய முதலிய மூன்று பதார்த்தங்களும் ஜாதியாகிய சாமான்னியமுடையனவேயாம். அங்ஙனமே குண, கருமங்களினும் வேறுமாம்.

சமாதானம் :—கூறிய அந்த லக்ஷணத்தில் சாமான்னிய முடைய தென்னும் பதத்தால் சமவாய சம்பந்தமாக சாமான்னியமுடைய பதார்த்தத்தினைக் கிரஹிக்குக. ஆண்டுஜ் ஜாதியாகிய சாமான்னியம் சாமான்னியம், விசேஷ முதலிய பதார்த்தங்களில் சமவாய சம்பந்தமாக விருப்பதன்று.

ஆகையால் கூறிய அந்த லக்ஷணத்திற்கு சாமான்னியம், விசேஷ முதலியவற்றில் அதிவியாப்தி யுண்டாகாது.

௧௭௬. ஒன்பது வகைத்தாயத் திரவியத்தின் வர்ணனம்.

இவ்வாறாகக்கூறிய நான்கு லக்ஷணங்களால் லக்ஷிதத் திரவிய பதார்த்தம் யாதோ அத்திரவிய பதார்த்தம் பிருதிவி, ஜலம், தேயு, வாயு, ஆகாசம், காலம், திக்கு, ஆத்மா, மனமென்னும் வேறுபாட்டால் ஒன்பது வகைத்தாம்.

௧௭௭. பிருதிவி வடிவத் திரவியத்தின் லக்ஷணம்.

இனி ஒன்பது வகைத்தாயத் திரவியங்களுள் உத்தேசத்தின் அநுசாரமாக முதலாவது பிருதிவியாகிய திரவியத்தினை நிருபிப்பாம். "கந்தவதீ ப்ருதிவீ" அல்லது "ப்ருதிவீத்வஜாதிமதீ ப்ருதிவீ."

௧௭௮. பிருதிவின் கந்தமுடைமை வடிவ லக்ஷணத்தின் வர்ணனம்.

இனி இவ்விரண்டு லக்ஷணங்களில் முதலாவது லக்ஷணத்தினது அர்த்தத்தின் நிருபணஞ் செய்வாம். ஆண்டு எத்திரவியம் சமவாய சம்பந்தமாக கந்தகுணமுடையதாமோ அத்திரவியம் பிருதிவியெனப்படும். காலிக சம்பந்தமாக கந்தகுணம் காலத்தினும், ஜலமுதலியவைகளினும், தைசிக சம்பந்தமாக திசையினுமிருக்கின்றது. என்றாலும் சமவாய சம்பந்தமாக கந்த குணம் பிருதிவியொன்றிலேயே யிருக்கின்றது. காலதிசைகளிலிருப்பதில்லை. ஆகையால் கந்தமுடைமை வடிவ பிருதிவியின் லக்ஷணத்திற்கு கால முதலியவைகளில் அதிவியாப்தி யுண்டாகாது. நியாய சாத்திரத்தில் காலத்திற்கும், திசைக்கும், சர்வ பதார்த்தங்களின் ஆதாரத் தன்மைக் கூறியிருக்கின்றது. அதுவும் சமவாய சம்பந்தமாக எல்லாப் பதார்த்தங்கட்கும் ஆதாரத் தன்மைக் கூறியதன்று. காலிக சம்பந்தமாக காலத்திற்கு சர்வ பதார்த்தங்களின் ஆதாரத் தன்மையும், தைசிக சம்பந்தமாக திசைக்கு சர்வ பதார்த்தங்களின் ஆதாரத்தன்மையுங் கூறியதாம். கால திசைகளி லிருப்பனவாகிய சங்கியை முதலிய ஐந்து குணங்கட்கும், விசேஷ பதார்த்தத்திற்கும், திரவியத் தன்மை ஜாதி சத்தா ஜாதிகட்குமே அக்கால திசைகளில் சமவாய சம்பந்தமாக ஆதாரத் தன்மை யிருக்கின்றது. ஆகையால் சமவாய சம்பந்தமாக கந்தமுடைமை வடிவ லக்ஷணத்திற்குக் கால முதலியவைகளில் அதிவியாப்தி யுண்டாகாது.

௧௭௯. நறுநாற்றத் தீநாற்றமுடைய கபாலங்களாலுண்டான கடத்தில் நிர்க்கந்தத் தன்மையின் சாதகயுக்தி.

சங்கை :—அக்கந்தமுடைமை வடிவ பிருதிவியின் லக்ஷணத்திற்கு நறுநாற்றத் தீநாற்றமுடையக் கபாலங்களாலுண்டானக் கடத்திலும், தோன்றியவுடன் கடத்திலும், உற்பத்திக்ஷணவச்சின்னக் கடத்திலும் அவ்வியாப்தியே யுண்டாகும் ஏனெனின் நறுநாற்றமுடைய நறுநாற்றக் கபாலமும், தீநாற்றமுடையத் தீநாற்றக்கபாலமும் யாதோ அந்நறுநாற்றத்தீநாற்றக் கபாலங்களாலுண்டான அக்கடம் கந்தமில்லாததேயாம். ஏனெனின் அக்கபால முதலிய

அவயவங்களின் கந்தமே அக்கடமுதலிய அவயவிகளின் கந்தத்திற்கு அசமவாயி காரணமாகின்றது. ஆனால் அக்கடத்தில் எப்பொழுது ஓர் கபாலத்தின் நறுநாற்றத்தால் நறுநாற்றம் உற்பன்னமாகுமோ அப்பொழுது இரண்டாவது கபாலத்தின் தீநாற்றம் நறுநாற்றத்தின் உற்பத்தியில் பிரதிபந்தகமாகும். அக்கடத்தில் எப்பொழுது ஓர் கபாலத்தின் தீநாற்றத்தால் தீநாற்றம் உற்பன்னமாகுமோ அப்பொழுது அவ்விரண்டாவது கபாலத்தின் நறுநாற்றம் அத்தீநாற்றத்தினுற்பத்தியில் பிரதிபந்தகமாகும். இவ்வாறாகப் பரஸ்பர பிரதிபந்திக்கப்படுவதும் பிரதிபந்திப்பதுமாம் பாவத்தால் அக்கடத்தில் ஓர் கந்தமும் உண்டாகாததாகும்.

௧௪௰. அக்கடத்தில் சித்திர (கலப்பு) நாற்ற மொப்புவராகிய வாதியின் மதம்.

சிலர் கூறிய இச்சங்கைக்கு இத்தகைய சமாதானம் கூறுகின்றனர். அந்நறுநாற்றத் தீநாற்றமுடையக் கபாலங்களால் உண்டானக் கடத்தில் ஓர் கந்தமும் உண்டாகாவிடின் உலகவருக்கு கிராண இந்திரியத்தால் அக்கடத்தின் கந்தஞானம் உண்டாகாததாக வேண்டும். உலகர் யாவரின் அநுபவசித்தமான அர்த்தத்தினைக் கேவலம் யுக்தி மாத்திரத்தால் அபாவமாகக் கூறல் அது அத்தியந்த விருத்தமாம். ஆகையால் உலகரது அநுபவத்தின் வலியால் அக்கடத்தில் ஓர் கந்தத்தினுற்பத்தி யவசிய மொப்பவேண்டும். ஆனால் எங்ஙனம் வெண்மை, கருமை, பொன்மை, செம்மை முதலிய உருவமுடைய தந்துக்களால் உண்டாகிய படம் யாதோ அப்படத்தில் முற்கூறிய முறைப்படி பரஸ்பர பிரதிபத்திய, பிரதிபந்தக பாவமாக ஓர் வெண்மை உருவத்திற்கு அல்லது கருமை முதலிய உருவத்திற்கோ உற்பத்தி யுண்டாகிறதில்லை. என்றாலும் அத்தந்துக்களின் வெண்மை, கருமை, பசுமை முதலிய வுருவங்கள் கலந்து அக்கடத்தில் ஓர் சித்திர (கலப்பு) வுருவத்தினை உற்பத்திச் செய்கின்றது. அங்ஙனமே அக்கபாலங்களின் நறுநாற்றமும், தீநாற்றமும் கலந்து அக்கடத்தில் ஓர் சித்திர (கலப்பு) நாற்றத்தை உண்டாக்கும். அக்கடத்தில் கேவலம் நறுநாற்றத்தின் உற்பத்தியிலும், கேவலம் தீநாற்றத்தின் உற்பத்தியிலுமே அக்கபாலங்களின் நறுநாற்றத் தீநாற்றத்திற்குப் பரஸ்பரம், பிரதிபத்திய பிரதிபந்தக பாவமிருக்கின்றது. அக்கடத்தில் ஓர் சித்திர (கலப்பு) கந்தத்தினுற்பத்தியில் ஓர்ப் பிரதிபந்தகமு மின்றாம்.

௧௪௧. அக்கடத்தில் சித்திரக் கந்தத்தின் கண்டனம்.

இச்சமாதானமும் சம்பவியாது ஏனெனின் நறுநாற்றத் தீநாற்றக் கபாலங்களா லுண்டானக் கடத்தில் உலகருக்கு எக்கந்தத்தின் தோற்றம் உண்டாகின்றதோ அத்தோற்றம் ஓர் கால் அக்கடத்தில் கந்தத்தினுற்பத்தி யொப்பிலன்றி சித்தியாவிடின் அத்தோற்றத்தின் வலியால் அக்கடத்தில் கலப்பு நாற்றத்தினுற்பத்தி அங்கீகரிக்கக்கூடும். ஆனால் அத்தோற்றமோ அக்கபாலங்களின் கந்தத்தாலேயே சித்தித்து விடுகின்றது. அதாவது, சுவாசிரய சமவேதத்தன்மைச் சம்பந்தத்தால் அக்கபாலங்களின் கந்தமே அக்கடத்தில் தோற்று

வதாகின்றது, என்பிரசுவசத்தத்தால் அக்கபாலங்களின் நறுநாற்றத் தீநாற்றங்களே கிரகிக்குக. அக்கந்தத்தின் ஆசிரயமாகிய கபாலம்யாதோ அக்கபாலத்தில் அக்கடம் சமவாய சம்பந்தமாக விருக்கின்றது. இவ்வாறாயப் பரம்பரைச் சம்பந்தத்தால் அக்கபாலங்களின் கந்தமே அக்கடத்தில் தோற்றுவதாகின்றது. அத்தோற்றத்தின் வலியால் அக்கடத்தில் சித்திரக் கந்தத்தின் அங்கீகாரம் செய்வது பயனின்மையாம்.

௧௪௨. சித்திரக் கந்தத்தினைப் போன்றச் சித்திரவுருவம், சித்திரப் பரிசத்தின் அங்கீகாரம் செய்யாததின் சங்கை.

சங்கை:—நறுநாற்றத் தீநாற்றக் கபாலங்களாலுண்டானக் கடத்தில் சித்திரகந்தம் அங்கீகரியாவிடின் செம்மை, கருமை, பசுமை, முதலிய உருவமுடைய தந்துக்களாலுண்டான படத்தில் சித்திர உருவமும் அங்கீகரிப்பதின்றாகும். அங்ஙனமே மென்மை, வன்மை, பரிசமுடைய தந்து முதலிய அவயவங்களாலுண்டான பட முதலியவைகளில் சித்திரப் பரிசமும் அங்கீகரிப்பதின்றாகும்.

௧௪௩. சித்திரவுருவத்தினதும், சித்திரப்பரிசத்தினதும் சாதகயுக்தியினைக் கூறும் வாயிலாக மகத்வ சமானாதிகரண உத்பூத உருவ விசேஷத் திரவியத்தின் சாக்ஷுஷ வடிவப் பிரத்தியக்ஷத்தின் ஏதுத் தன்மையின் வர்ணனம்.

சமாதானம்:—அப்படத்தில் அச்சித்திரவுருவம் அங்கீகரிக்காவிடின் அப்படத்தின் சாக்ஷுஷப் பிரத்தியக்ஷமேயுண்டாகாததாகும். ஏனெனின் திரவியத்தின் சாக்ஷுஷப் பிரத்தியக்ஷத்தில் மகத்வ சமானாதிகரண உத்பூதவுருவம் காரணமாகின்றது. அம்மகத்வ சமானாதிகரண உத்பூத உருவமின்றி திரவியத்தின் சாக்ஷுஷப் பிரத்தியக்ஷமுண்டாகிறதில்லை. இக்காரணத்தாலேயே பரமாணு, வாயு, ஆகாசம், காலம், திக்கு, ஆத்மா, மனம், சக்ஷுசு முதலிய இந்திரியங்கள் இவை முதலியவைகளின் சாக்ஷுஷப் பிரத்தியக்ஷமுண்டாகிறதில்லை. பரமாணுக்களில் உத்பூத உருவமோ இருக்கின்றது; என்றாலும் மகத்வ பரிமாணமின்று. ஆகையால் மகத்வ சமானாதிகரண வுத்பூத வுருவத்தின் அபாவத்தால் அப்பரமாணுக்களின் சாக்ஷுஷப் பிரத்தியக்ஷம் உண்டாகிறதில்லை. வாயு, ஆகாசம், காலம், திக்கு, ஆத்மாவென்னும் ஐந்துத் திரவியங்களில் மகத்வ பரிமாணமிருக்கின்றது. என்றாலும் அவைகளில் உத்பூத உருவமின்றாம். ஆகையால் மகத்வ சமானாதிகரண உத்பூத உருவத்தின் அபாவத்தால் அவ்வைந்தினது சாக்ஷுஷப் பிரத்தியக்ஷமுமுண்டாவதின்று. மனதிலோ மகத்வமுமின்று, உத்பூதவுருவமுமின்று, ஆகையால் அம்மகத்வ சமானாதிகரண உத்பூத உருவத்தின் அபாவத்தால் அம்மனதின் சாக்ஷுஷப் பிரத்தியக்ஷமுமுண்டாகிறதில்லை. சக்ஷுசு, ரசனம், கிராணமென்னும் மூன்று இந்திரியங்களிலோ மகத்வமும், உருவமுமிருக்கின்றது ஆனால் உத்பூத வுருவமின்றாம். அநுத்பூத வுருவமிருக்கின்றது. துவாசம், சுரோத்திரமென்னும் இரு விந்திரியங்களில் கேவலம் மகத்வமிருக்கின்றது.

உருவமின்றும். ஆகையால் மஹத்வ சமானாதிகரண உத்பூத உருவத்தின் அபாவத்தால் அவ்விந்திரியங்களின் சாக்ஷுஷப் பிரத்தியக்ஷ முண்டாகிற தில்லை. அல்லது எங்ஙனம் அம்மஹத்வ சமானாதிகரண உத்பூதவுருவம் திரவியத்தின் சாக்ஷுஷப் பிரத்தியக்ஷத்தில் காரணமாகின்றதோ அங்ஙனமே அம்மஹத்வ சமானாதிகரண உத்பூத வுருவம் திரவியத்தின் துவாசப்பிரத்தியக்ஷத்திலும் காரணமாகின்றது. ஆகையால் மஹத்வ சமானாதிகரண உத்பூத உருவத்தின் அபாவத்தால் கூறிய பரமாணு, வாயு, ஆகாசமுதலியவைகளின் சாக்ஷுஷப்பிரத்தியக்ஷம் எங்ஙனமுண்டாவதின்றோ அங்ஙனமே பரமாணு வாயு முதலியவைகளின் துவாசப் பிரத்தியக்ஷமு முண்டாகிறதில்லை. என்பக் கருத்திதுவாம். சமானாதிகரணிய சம்பந்தமாக மஹத்வபரிமாண விசிஷ்ட உத்பூத வுருவமுள்ள திரவியத்தின் சாக்ஷுஷப் பிரத்தியக்ஷமும், துவாச பிரத்தியக்ஷமு முண்டாகின்றது. மஹத்வ விசிஷ்ட உத்பூத வுருவத்தின் அபாவமுடைய திரவியத்தின் சாக்ஷுஷப் பிரத்தியக்ஷமும், துவாசப் பிரத்தியக்ஷமு முண்டாவதின்று. மஹத்வ விசிஷ்ட வுத்பூத உருவத்தின் அபாவ வடிவ விசிஷ்டாபாவம் சிலவிடத்தோ மஹத்வவுருவ விசேஷணத்தின் அபாவத்தாலுண்டாகின்றது, சிலவிடத்தோ உத்பூத வுருவ விசேஷியத்தின் அபாவத்தாலுண்டாகின்றது. சிலவிடத்தோ மஹத்வ வுருவ விசேஷணத்தினதும் உத்பூத உருவ விசேஷியத்தினதுமாமிரண்டின் அபாவத்தாலுண்டாகின்றது. பிருதிவி, ஜலம், தேயுவென்னும் மூன்றின் பரமாணுக்களில் உத்பூத உருவ விசேஷியமோ விருக்கின்றது. மஹத்வ வடிவ விசேஷணமின்றும் ஆகையால் அப்பரமாணுக்களில் விசேஷணாபாவத்தாற்றோன்றிய விசிஷ்டாபாவம் இருக்கின்றது வாயு, ஆகாசம், காலம், திக்கு, ஆத்மாவென்னும் ஐந்தில் மஹத்வ விசேஷணமோ விருக்கின்றது உத்பூத உருவ விசேஷியமின்றும். ஆகையால் வாயுமுதலிய ஐந்துத்திரவியங்களில் விசேஷியாபாவத்தாற்றோன்றிய விசிஷ்டா பாவமிருக்கின்றது. எண்டு வாயு சத்தத்தால் பரமாணு, துவியணுக வடிவ வாயுவினும் வேறான வாயுவினைக் கொள்ளுக. பரமாணு துவியணுக வடிவ வாயுக்களிலோ மஹத்வ வடிவ விசேஷணத்தின் அபாவமு மிருக்கின்றது. மனதிலோ மஹத்வ வடிவ விசேஷணமும், உத்பூத வுருவ விசேஷியமுமின்றும். ஆகையால் அம்மனதில் விசேஷண, விசேஷியமாமிரு அபாவங்களாற்றோன்றிய விசிஷ்டாபாவமிருக்கின்றது. சக்ஷுமுதலிய விந்திரியங்களில் மஹத்வவுருவ விசேஷணமோ இருக்கின்றது, உத்பூதவுருவ விசேஷியமின்றும். ஆகையால் அவ்விந்திரியங்களிலும் விசேஷியாபாவத்தாற்றோன்றிய விசிஷ்டாபாவ மிருக்கின்றது. இவ்வாறாக மஹத்வசமானாதிகரண உத்பூதவுருவமே அத்திரவியத்தின் சாக்ஷுஷப் பிரத்தியக்ஷத்திலும் துவாசப்பிரத்தியக்ஷத்திலுங்காரணமாகின்றது. ஆண்டு வெண்மை, கருமை, பொன்மையாதி உருவமுடைய தந்துக்களாலுண்டான படத்தில் சித்திரவுருவம் அங்கீகரியாவிடில் அம்மஹத்வ சமானாதிகரண உத்பூதவுருவ காரணத்தின் அபாவத்தால் அப்படத்தின் பிரத்தியக்ஷமே யுண்டாகாது. அப்படமும் உலகர் யாவருக்கும் பிரத்தியக்ஷமாகின்றது. இக்காரணத்தால் அப்படத்தில் சித்திர (கலப்பு) உருவ

வத்திற்கு உற்பத்தி அங்கீகரிக்கின்றனர். இவ்வாறாக வன்மை, மென்மைப் பரிசமுடைய அவயவங்களாலுண்டான படமுதலியவைகளில் சித்திர (கலப்பு) பரிசமும் அவசியம் அங்கீகரிக்கவேண்டும். ஏனெனின் எங்ஙனம் மஹத்வ சமானாதிகரண உத்பூதவுருவத்திற்கு திரவியத்தின் சாக்ஷுஷப் பிரத்தியக்ஷத்திலும் துவாசப்பிரத்தியக்ஷத்திலுங்காரணத் தன்மையிருக்கிறதோ, அங்ஙனமே அத்திரவியத்தின் துவாசப் பிரத்தியக்ஷத்தில் உத்பூத பரிசத்திற்குங் காரணத்தன்மையிருக்கின்றது. ஓர் கால் அப்படத்தில் சித்திரப்பரிசம் அங்கீகரியாவிடின் அப்படத்தின் துவாசப் பிரத்தியக்ஷமேயுண்டாவதின்றாகும். ஆகையால் அப்படத்தினது துவாசப் பிரத்தியக்ஷத்தின் பொருட்டுச் சித்திர வுருவத்தைப் போன்றுஞ் சித்திரப்பரிசமும் அவசியம் அங்கீகரிக்க வேண்டும். எங்ஙனம், உருவத்திற்கும், பரிசத்திற்கும் திரவியத்தின் பிரத்தியக்ஷ ஞானத்தில் காரணத் தன்மையிருக்கிறதோ அங்ஙனம் கந்தகுணத்திற்குத் திரவியத்தின் பிரத்தியக்ஷஞானத்தில் காரணத் தன்மையில்லை. ஆகையால் சித்திரவுருவம் சித்திரப் பரிசத்தினைப்போன்று அக்கடத்தில் சித்திர கந்தத்தினை அங்கீகரிப்பது பயனின்மையாம். இவ்வாற்றால் சுகந்த துர்க்கந்தமுடையக் கபாலங்களாலுண்டானக் கடம் கந்தமில்லாததேயாம். அக்கட வடிவ பிருதிவியில் அக்கந்தமுடைமை வடிவ லக்ஷணத்திற்கு அவ்வியாப்தி யுண்டாகின்றது.

கஉச. தோன்றியழியுங் கடத்தில் நிர்க்குணத் தன்மையின் வர்ணனம்.

அல்லது முதற்க்ஷணத்தில் உண்டாய் இரண்டாவது க்ஷணத்தில் நஷ்டமாகும் தோன்றியழிந்தக் கடத்திலும் அக்கந்தமுடைமை வடிவ லக்ஷணத்திற்கு அவ்வியாப்தியே யுண்டாகும். ஏனெனின், முதற்க்ஷணத்திலோ நிர்க்குணத் திரவியமுண்டாகின்றது, இரண்டாவது க்ஷணத்தில் அத்திரவியத்தில் உருவ முதலிய குணங்க ளுண்டாகின்றதென்னும் வார்த்தை திரவிய லக்ஷண நிருபணத்தில் யுக்தியோடுங்கூறப்பட்டிருக்கிறது. ஆகையால் உற்பத்தி க்ஷணத்திலோ கடத்தில் கந்தமின்றும், இரண்டாவது க்ஷணத்தில் கடத்தில் கந்தகுணமுண்டாவதற்கு அவ்விரண்டாம் க்ஷணத்தில் அக்கடம் நஷ்டமேயாகின்றது. இங்ஙனம் தோன்றியழிந்தக் கட முதலிய வடிவ பிருதிவியிலும் கந்தமுடைமை வடிவ லக்ஷணத்திற்கு அவ்வியாப்தியே யுண்டாகின்றது. அங்ஙனமே உற்பத்தி க்ஷணாவச்சின்னக் கட முதலிய வடிவ பிருதிவியிலும் கந்தமுடைமை வடிவ லக்ஷணத்திற்கு அவ்வியாப்தியே யுண்டாகின்றதென்னுஞ் சங்கையுண்டாக, இனி கந்தமுடையது பிருதிவியெனக் கூறிய லக்ஷணத்தை வேறுவிதமாக நிரூபிப்பாம்.

கஉரு. பிருதிவியின் கந்தமுடைமை வடிவ லக்ஷணத்தை வேறுவகையாக வர்ணித்தல்.

"கந்தஸமாநாதிகரண த்ரவ்யத்வ ஸாக்ஷாத்வ்யாப்ய ஜாதிமத்த்வம்" (இ-ள்.) கந்த குணத்தின் சமானாதிகரணமும், திரவியத் தன்மை ஜாதியின் சாக்ஷாத் வியாப்பியமுமாமித்தகைய ஜாதியுடைய திரவியம் பிரு

திரவியமெனப்படும். ஆண்டுக் கந்தகுணம் சமவாய சம்பந்தமாக பிருதிவியிலேயேயிருக்கின்றது ஜலமுதலியவைகளிலிருப்பதில்லை. பிருதிவித் தன்மை ஜாதியும் சமவாயசம்பந்தமாக பிருதிவியிலேயேயிருக்கின்றது ஜலமுதலியவைகளிலிருப்பதில்லை. ஆகையால் அப்பிருதிவித் தன்மை ஜாதி கந்த சமானாதிகரணமெனப்படும். அங்ஙனமே பிருதிவித் தன்மை ஜாதி திரவியத்தன்மை ஜாதியின் சாக்ஷாத் வியாப்பியமுமாம். இப்பிருதிவித் தன்மை ஜாதி யெல்லாப் பிருதிவியிலுமிருக்கின்றது. ஆகையால் உற்பத்திநாற்றக் கபாலங்களாலுண்டான கடவடிவப்பிருதிவியிலும், தோன்றியழிந்த கடமுதலிய பிருதிவியிலும், உற்பத்திக்ஷணவர்த்தினைக் கடமுதலிய பிருதிவியிலும் கூறிய லக்ஷணத்திற்கு அவ்வியாப்தி யுண்டாகாது. ஆண்டு "திரவியத்தன்மை சாக்ஷாத் வியாப்பிய ஜாதியுடையது பிருதிவி" என இம்மாத்திரமே பிருதிவியின் லக்ஷணமாகக் கூறி அந்த லக்ஷணத்தில் "கந்தசமானாதிகரணம்" என்னும் பதங்கூறாவிடின் ஜலமுதலிய திரவியங்களில் அந்தலக்ஷணத்திற்கு அதிவியாப்தியுண்டாம். ஏனெனின், எத்தகைதி திரவியத் தன்மை ஜாதியின் அதிகரண வடிவ இடத்திலும் குறைந்தவிடத்திருக்கின்றதோ அச்ஜாதியே அத்திரவியத்தன்மை ஜாதியின் வியாப்பிய ஜாதியெனப்படும். என்றால் திரவியத்தன்மைஜாதியிருப்பதற்கு இடமாகிய பிருதிவிமுதலிய ஒன்பது திரவியங்களோ அவ்வொன்பது திரவியங்களாகிய இடத்திலுங் குறைந்தவிடமாகிய பிருதிவியாதோ அப்பிருதிவி மாத்திரத்திலிருப்பதாகிய பிருதிவித் தன்மை ஜாதி திரவியத் தன்மை ஜாதியின் சாக்ஷாத் வியாப்பிய மெனப்படுகின்றது. அங்ஙனமே ஜலத்தன்மை, தேயுத் தன்மை, வாயுத்தன்மையென்னுமிவை முதலிய ஜாதிகளும் அத்திரவியத் தன்மை ஜாதியின் சாக்ஷாத் வியாப்பிய ஜாதிகளாம். அஜ்ஜலத்தன்மை முதலிய ஜாதிகளுடைய ஜலமுதலிய திரவியங்களில் அந்த லக்ஷணத்திற்கு அதிவியாப்தியுண்டாகும். அவ்வதிவியாப்தி தோஷத்தை நிவர்த்தி செய்வான் வேண்டி அந்த லக்ஷணத்தில் "கந்தசமானாதிகரணம்" என்னும் இது அஜ்ஜாதிக்கு விசேஷணமாகக் கூறப்பட்டது. ஆண்டு ஜலமுதலிய திரவியங்களில் ஜலத்தன்மை முதலிய ஜாதிகளிருக்கின்றது. ஜலமுதலிய திரவியங்களில் கந்தகுண மிருப்பதின்று. கந்தகுண மிருக்கும் பிருதிவியில் ஜலத்தன்மை முதலிய ஜாதிகளிருப்பது வன்று. ஆகையால் ஜலத்தன்மை முதலிய ஜாதிகள் கந்தகுணத்தின் சமானாதிகரணமன்றாம். பிருதிவித்தன்மைஜாதியே கந்தகுணத்தின் சமானாதிகரணமாம். ஆகையால் ஜலத்தன்மை முதலிய ஜாதிகளைக் கொண்டு ஜலமுதலிய திரவியங்களில் அந்த லக்ஷணத்திற்கு அதிவியாப்தியுண்டாகாது. அல்லது "கந்த சமானாதிகரண ஜாதியுடையது பிருதிவி" என விம்மாத்திரமே பிருதிவியின் லக்ஷணமாகக் கூறி அந்த லக்ஷணத்தில் "திரவியத்தன்மையின் சாக்ஷாத் வியாப்பியம்" என்னும் இப்பதங்கூறாவிடின் திரவியத்தன்மை ஜாதியைக் கொண்டும் சத்தாஜாதியைக்கொண்டும் அந்த லக்ஷணத்திற்குமீண்டும் அஜ்ஜலமுதலியவைகளில் அதிவியாப்தியுண்டாம். ஏனெனின், கந்தகுணமிருக்கும் பிருதிவியில் திரவியத் தன்மை ஜாதியும் சத்தா ஜாதியுமிருக்கின்றன. ஆகையால் திரவியத்தன்மை

ஜாதியும், சத்தா ஜாதியும் பிருதிவித்தன்மை ஜாதியைப்போன்று கந்த சமானாதிகரணமேயாம். இவ்விரு கந்த சமானாதிகரண திரவியத்தன்மை ஜாதியுடையனவும், சத்தா ஜாதியுடையனவும் ஜலமுதலிய திரவியங்களுமாம். ஆகையால் ஜலமுதலிய திரவியங்களில் அந்த லக்ஷணத்திற்கு அதிவியாப்தியுண்டாகும். அவ்வதிவியாப்தி தோஷத்தை நிவர்த்தி செய்வான் கருதி அந்தலக்ஷணத்தில் "திரவியத்தன்மையின் சாக்ஷாத்வியாப்பியம்" என்னுமிது அஜ்ஜாதிக்கு விசேஷணமாகக் கூறப்பட்டது. ஆண்டுத் திரவியத் தன்மை ஜாதி திரவியத் தன்மை ஜாதியின் வியாப்பியமன்றாம். அங்ஙனமே சத்தா ஜாதியும் திரவியத்தன்மை ஜாதியின் வியாப்பியமன்றாம். அச்சத்தா ஜாதி குணம், கருமம் வடிவ அதிக இடத்திருப்பதாவதால் திரவியத் தன்மை ஜாதியின் வியாபக ஜாதியாம். ஆகையால் அவ்விசேஷணத்தைக் கூறுவதால் திரவியத் தன்மை ஜாதியைக் கொண்டும், சத்தா ஜாதியைக் கொண்டும் அந்த லக்ஷணத்திற்கு ஜலமுதலிய திரவியங்களில் அதிவியாப்தியுண்டாகாது. அல்லது "கந்த சமானாதிகரண திரவியத் தன்மையின் வியாப்பிய ஜாதியுடையது பிருதிவி" என விம்மாத்திரமே பிருதிவியின் லக்ஷணமாகக்கூறி அந்த லக்ஷணத்தில் "சாக்ஷாத்" என்னும் பதங்கூறாவிடின் கந்தசமானாதிகரணமும், திரவியத்தன்மை ஜாதியின் வியாப்பியமுமாம் இத்தகைய கடத்தன்மை ஜாதியைக் கொண்டு கேவலம் கட வடிவப் பிருதிவியிலோ அந்தலக்ஷணம் சம்பவிக்கும். படமுதலிய பிருதிவியில் அக்கடத் தன்மை ஜாதியின்றாம். ஆகையால் படாதி வடிவப்பிருதிவியில் அந்தலக்ஷணத்திற்கு அவ்வியாப்தியுண்டாம். அந்த அவ்வியாப்தி தோஷத்தை நிவர்த்தி செய்யும் பொருட்டு அந்தலக்ஷணத்தில் "சாக்ஷாத்" என்னும் பதங் கூறப்பட்டது. ஆண்டுக் கடத் தன்மை முதலிய ஜாதிகள் திரவியத் தன்மை ஜாதியின் சாக்ஷாத் வியாப்பியமன்றாம். ஆனால் பிருதிவித் தன்மை ஜாதியே சாக்ஷாத் வியாப்பியமாகின்றது. பிருதிவி, ஜல முதலிய திரவியங்களை வேறுபடுத்தும் ஜாதிகளே அத்திரவியத் தன்மை ஜாதியின் சாக்ஷாத் வியாப்பிய ஜாதிகளாம். ஆகையால் "சாக்ஷாத்" தென்னும் பதத்தைக் கூறுவதால் அக்கடத்தன்மை முதலிய ஜாதிகளைக் கொண்டு அக்கட முதலியவைகளில் அந்த லக்ஷணத்திற்கு அவ்வியாப்தி யுண்டாகாது. இதுகாறும் "கந்தமுடையது பிருதிவி" என்னும் முதலாவது லக்ஷணத்தின் அர்த்தம் நிரூபிக்கப்பட்டது.

கஅக. பிருதிவியின் பிருதிவித் தன்மை ஜாதியுடைமை வடிவ இரண்டாவது லக்ஷணத்தின் வர்ணனம்.

இனி "ப்ருதிவீத்வஜாதிமதீ ப்ருதிவீ" என்னுமிரண்டாவது லக்ஷணத்தின் அர்த்தம் நிரூபிப்பாம். ஆண்டு எத்திரவியம் சமவாயசம்பந்தமாக பிருதிவித் தன்மை ஜாதியுடையதாகின்றதோ அத்திரவியம் பிருதிவியெனப்படும். சமவாய சம்பந்தமாகப் பிருதிவித் தன்மை ஜாதி கேவலம் பிருதிவியிலேயேயிருக்கின்றது. ஜல முதலியத் திரவியங்களிலிருப்பதில்லை. ஆகையால் பிருதிவித்தன்மை ஜாதியுடைமை வடிவப் பிருதிவியின் லக்ஷணம் சம்பவிக்கின்றது.

சங்கை:—பிருதிவித் தன்மை ஜாதியுடையது வடிவ பிருதிவியின் லக்ஷணம் சித்திக்கும்போது முதலிலேயே பிரமாணத்தால் பிருதிவித் தன்மை ஜாதியின் சித்தியுண்டாகவேண்டும். பிருதிவித்தன்மை ஜாதியின் சித்தியின்றி அந்த லக்ஷணம் சம்பவியாதென்னுஞ் சங்கையுண்டாக, இனி பிரத்தியக்ஷப் பிரமாணத்தால் பிருதிவித்தன்மை ஜாதியின் சித்தி செய்வாம்.

க௱எ. பிரத்தியக்ஷப் பிரமாணத்தால் பிருதிவித் தன்மை ஜாதியின் சித்தி.

ஆண்டுக் கருமை, பொன்மை, செம்மை முதலிய உருவத்தால் பரஸ்பர விலக்ஷணப் பிருதிவியின் இது பிருதிவி, இது பிருதிவி யென்னும் ஏகாகாரத்தோற்றம் உலகர் யாவருக்கும் உண்டாகிறது. அவ்வேகாகாரத் தோற்றம் அப்பரஸ்பர விலக்ஷண பார்த்திவ வியக்திகளால் சம்பவிக்கிறதில்லை. சர்வவியக்திகளில் அடங்கியிருக்கும் பிருதிவித்தன்மை ஜாதி யொன்றினாலே அவ்வேகாகாரத் தோற்றமுண்டாகின்றது. ஆகையால் இது பிருதிவி யென்னும் பிரத்தியக்ஷப் பிரமாணமே பிருதிவித் தன்மை ஜாதியின் சாதகமாம்.

சங்கை:—அதியிந்திரிய பரமாணு, துவியணுக வடிவப் பிருதிவியிலும், கிராணவிந்திரியவடிவப்பிருதிவியிலும், இது பிருதிவியென்னும் பிரத்தியக்ஷப் பிரதீதி ஒருவருக்கு முண்டாகிறதில்லை. ஆகையால் பிரத்தியக்ஷப்பிரமாணத்தால் அதியிந்திரியப் பிருதிவியில் பிருதிவித் தன்மைஜாதி சித்தியாதாகும். அல்லது சாத்திர சம்ஸ்காரமில்லாத புருஷர்கட்கு பிரசித்த பூதலத்திலேயே இது பிருதிவி யென்னும் உணர்ச்சியுண்டாகின்றது. நெய், அரக்கு, இரத்தினம், முத்து, பவழம், முதலிய பார்த்திவ வஸ்துக்களில் இது பிருதிவி யென்னும் உணர்ச்சி யுண்டாகிறதில்லை. ஆகையால் பிரத்தியக்ஷப்பிரமாணத்தால் எல்லாப் பிருதிவிகளில் பிருதிவித்தன்மை ஜாதியின் சித்தியுண்டாகாதென்னும் சங்கையுண்டாக இனி அநுமானப் பிரமாணத்தால் எல்லாப் பிருதிவித் தன்மை ஜாதியினைச் சித்தி செய்வாம்.

க௱அ. அநுமானப் பிரமாணத்தால் பிருதிவித் தன்மை ஜாதியின் சித்தியைக் கூறுதல்.

அவ்வநுமானத்தின் ஆகாரமிதுவாம் "[illegible]" (இ-ள்.) பிருதிவியிலிருக்கும் கந்தகுணத்தின் சமவாயி காரணத் தன்மை ஓர் தர்மத்தால் அவச்சின்னமாக யோக்கியமாம் காரணத் தன்மையாவதால் எதுவெது காரணத்தன்மையாமோ அதுவது ஓர் தர்மத்தால் அவச்சின்னமேயாகும். நிரவச்சின்னமாக ஓர் காரணத்தன்மை யுண்டாகிறதில்லை. எங்ஙனம்: தந்துக்களிலிருக்கும் படத்தின் சமவாயி காரணத்தன்மை தந்துத்தன்மைத் தர்மத்தால் அவச்சின்னமாம். அங்ஙனமே பிருதிவியிலிருக்கும் கந்தத்தின் சமவாயி காரணத் தன்மையும் ஓர் தர்மத்தால் அவசியம் அவச்சின்னமாகும். அத்தர்மம் பிருதிவித்தன்மை ஜாதியேயாம். ஏனெனின்,

பிருதிவிமாத்திரத்தி லிருக்கும் கந்தகுணத்தின் சமவாயிகாரணத் தன்மையால் அதிக இடத்தும் குறைந்த விடத்துமிராமல் காரணத் தன்மையின் சமானவிடத்திருக்கும் தர்மமே காரணத் தன்மையின் அவச்சேதகமாகும். இத்தகைய தர்மம் பிருதிவித்தன்மை ஜாதியேயாம். ஆகையால் கூறிய அவ்வநுமானத்தில் கந்தகுணத்தின் சமவாயிகாரணத்தன்மையி னவச்சேதக வடிவமாக பிருதிவித் தன்மை ஜாதியின் சித்தியேயுண்டாகின்றது. அப்பிருதிவியில் திரவியத்தன்மை ஜாதியும், சத்தா ஜாதியுமிருக்கின்றன. எனினும் திரவியத் தன்மை ஜாதியும், சத்தா ஜாதியும் கந்தத்தின் சமவாயி காரணத் தன்மையின் பிருதிவிவடிவ தேசத்திலும், அதிகமாகிய ஜலாதி தேசத்துமிருக்கின்றன. ஆகையால் திரவியத் தன்மை ஜாதியும், சத்தாஜாதியும் காரணத் தன்மையின் அவச்சேதகமாவனவன்று. ஜலத்தன்மை, தேயுத்தன்மை, வாயுத்தன்மை என்னுமிவை முதலிய ஜாதிகளோ அக்காரணத் தன்மையின் பிருதிவி வடிவ அதிகரணத்திலேயே யிருப்பனவன்றாம். ஆகையால் ஜலத் தன்மையாதி ஜாதிகளும் அக்காரணத் தன்மையின் அவச்சேதகமாவனவன்று. கடத்தன்மை, படத்தன்மை முதலிய ஜாதிகள் அக்கட படமுதலிய பிருதிவியிலேயே யிருக்கின்றன. ஜல முதலியவைகளி லிருப்பனவன்று. என்றாலும் அக்கடத்தன்மை, படத்தன்மை முதலிய ஜாதிகள் எல்லாப் பிருதிவியிலு மிருப்பனவன்று. சில கட பிருதிவி வடிவப் பிருதிவியிலேயே யிருக்கின்றன. கந்தகுணத்தின் சமவாயி காரணத் தன்மையோ எல்லாப்பிருதிவியிலு மிருக்கின்றது. ஆகையால் அக்காரணத்தன்மை யிருந்தவிடத்தும் குறைந்தவிடத்திருப்பதாவதால் அக்கடத்தன்மை, படத்தன்மை முதலிய ஜாதிகளும் அக்காரணத் தன்மையின் அவச்சேதகமாகமாட்டாது. பரிசேஷமாக எல்லாப் பிருதிவியிலுமிருப்பதாகியப் பிருதிவித்தன்மை ஜாதியே அக்காரணத்தன்மையின் அவச்சேதக வடிவமாகச் சித்திக்கின்றது. ஆகையால் கூறிய அவ்வநுமானப் பிரமாணத்தால் பரமாணுத் துவியணுகாதி வடிவ அதீந்திரியப் பிருதிவிகளிலும், பிரசித்தப் பிருதிவியிலும் பிருதிவித் தன்மை ஜாதியின் சித்தி சம்பவிக்கின்றது. இப்பிருதிவித் தன்மை ஜாதியுடையதே திரவியம் பிருதிவியெனப்படும்.

க௱௯. ஜல, வாயுக்களில் கந்தத்தன்மையின் சாதகமான பூர்வபக்ஷம்.

சங்கை:—கந்தமுடையது பிருதிவியெனக் கூறிய அந்த லக்ஷணத்திற்கு ஜலத்திலும், வாயுவிலும் அதிவியாப்தியும் கல், இரத்தினம், முத்து, பவழ முதலியவைகளில் அந்த லக்ஷணத்திற்கு அவ்வியாப்தியு முண்டாம். ஏனெனின், இந்ஜலம் நறுநாற்றமுடையதாம், இந்ஜலம் தீநாற்றமுடையதாம், அங்ஙனமே இக்காற்று நறுநாற்றமுடையதாம், இக்காற்றுத் தீநாற்றமுடைய தாமென்னும் உணர்ச்சி உலகர் யாவருக்கு முண்டாகின்றது. அந்தப்பிரத்தியக்ஷப் பிரதீதியின் வழியால் அந்ஜலத்திலும், வாயுவிலும் கந்தகுணம், அவசியம் அங்கீகரிக்கவேண்டும். ஓர்கால் அந்ஜல, வாயுக்களில் கந்தகுணமின்றாகாவிடின் உலகர் யாவருக்கும் ஆண்டுக் கந்தத்தின் பிரதீதியுண்டாகாததாக

வேண்டும். ஆகையால் அஞ்ஜலத்திலும், வாயுவிலும் கந்தமுடைமை வடிவப் பிருதிவியின் லக்ஷணத்திற்கு அதிவியாப்தியே யுண்டாகும். அல்லது கல், இரத்தினம், முத்து, பவழ முதலிய பிருதிவியில் ஓர் கால் அக்கந்தகுணமிருப்பதாயின் உலகர் யாவருக்கும் கந்த உணர்ச்சியுண்டாகவேண்டும். கல் முதலியவைகளில் ஒருவருக்கும் கந்தவுணர்ச்சி யுண்டாகிறதில்லை. ஆகையால் கல் முதலியவைகளில் கந்தகுணமின்றாம். கல் முதலியவைகளும் பிருதிவி வடிவமேயாம். கல் முதலிய பிருதிவியில் கந்தமுடைமை வடிவ லக்ஷணத்திற்கு அவ்வியாப்தியுண்டாகிறது.

கக௦. ஜல, வாயுக்களில் பிருதிவியின் சம்பந்தத்தால் கந்தவுணர்ச்சியின் வர்ணனம்.

*சமாதானம்:—*ஜலத்திலும், வாயுவிலும் சமவாய சம்பந்தமாக கந்த குணமிருக்குமாயின் எல்லா ஜலத்திலும், எல்லா வாயுவிலும் கந்த குணம் உலகவருக்குப் பிரதீதியாக வேண்டும். எல்லாஜலத்திலும், எல்லாவாயுவிலும் உலகவருக்குக் கந்தகுணம் பிரதீதியாகிறதில்லை. சிலஜலத்திலும், சிலவாயுவிலுமே உலகவருக்குக் கந்தகுணம் பிரதீதியாகின்றது ஆகையால் இதை அறியத்தக்கதாம். கஸ்தூரி, குசும (புட்ப) முதலிய கந்தமுடைய பிருதிவியின் சையோக சம்பந்தமுண்டாகும் ஜலத்திலும், வாயுவிலுமே உலகவருக்கு கந்தத்தின் பிரதீதி யுண்டாகின்றது. கஸ்தூரி, குசும முதலிய பிருதிவியின் சையோக சம்பந்த முண்டாகாத ஜலத்திலும், வாயுவிலும் உலகவருக்கு கந்தத்தின் உணர்ச்சியுண்டாகிறதில்லை. இவ்வாறாய அன்வய வெதிரேகங்களால் கஸ்தூரி, குசும முதலிய பிருதிவியின் கந்தமே சுவாசிரய சையுக்தத் தன்மைச் சம்பந்தமாக ஜலத்திலும், வாயுவிலும் பிரதீதியாகின்றது. சண்டுச் சுவசத்தத்தால் கந்தகுணத்தைக் கொள்ளுக. அக்கந்த குணத்தின் ஆசிரயமாகிய கஸ்தூரி, குசும முதலிய பிருதிவியின் சையோக சம்பந்தமுடையது அஞ்ஜலமும், வாயுவுமாம். இவ்வித பரம்பரைச் சம்பந்தத்தால் கஸ்தூரி, குசும முதலிய பிருதிவியின் கந்தமே ஜலத்திலும், வாயுவிலும் பிரதீதியாகின்றது. இயல்பாக அஞ்ஜல, வாயுக்களில் கந்தகுணமின்றாம்.

ககக. அஞ்ஜல, வாயுக்களில் பிருதிவியின் அம்சங்களுக்கு பிரத்தியக்ஷத்தினது சங்கையின் வர்ணனம்.

*சங்கை:—*உலகவருக்கு கந்தத்தின் பிரதீதியுண்டாகும் ஜல, வாயுக்களில் ஓர் கால் கஸ்தூரி, குசும முதலிய கந்தமுடைய பிருதிவியின் சையோக சம்பந்த முண்டாகுமாயின் அஞ்ஜல, வாயுக்களில் கஸ்தூரி, குசும முதலிய பிருதிவியின் சாக்ஷாஷப் பிரத்தியக்ஷம், அல்லது துவாசப் பிரத்தியக்ஷ முண்டாக வேண்டும். அந்தப் பிரத்தியக்ஷ முண்டாகிறதில்லை. ஆகையால் அக்கந்தம் அஞ்ஜல, வாயுக்களினதேயாம்.

கக௨. அப்பிருதிவியினது அம்சங்களின் சூக்ஷுமத் தன்மையால் பிரத்தியக்ஷமாகாத் தன்மையின் வர்ணனம்.

*சமாதானம்:—*அஞ்ஜலத்தில் கஸ்தூரி, குசும முதலிய பிருதிவியின் அதிசூக்ஷும அம்சங்கள் கலக்கின்றன. இக்காரணத்தால் உலகவருக்கு

கந்தகுணமுடைய சூக்ஷும அம்சங்களின் சாக்ஷுஷப் பிரத்தியக்ஷம், அல்லது துவாசப் பிரத்தியக்ஷமுண்டாகிறதில்லை. இவ்வாறாக அவ்வாயுவும் தூரத்திலுள்ள கஸ்தூரி, குசும முதலிய பிருதிவியின் சூக்ஷும அம்சங்களைக் கொண்டு வருகின்றது. அந்த பிருதிவியின் அம்சம் அத்தியந்த சூக்ஷுமமானகையால் உலகவருக்கு அவைகளின் சாக்ஷுஷப் பிரத்தியக்ஷம், அல்லது துவாசப் பிரத்தியக்ஷ முண்டாகிறதில்லை. கேவலம் கிராண இந்திரியத்தால் அவற்றின் கந்தத்தின் பிரத்தியக்ஷமே யுண்டாகின்றது.

கக௩. கஸ்தூரி, குசும முதலியவைகளில் வாயுவின் சம்பந்தத்தால் அவயவங்களின் நீக்கமும், குறைவுத் தன்மையின் சங்கையும்.

*சங்கை:—*ஓர் கால் கஸ்தூரி, குசும முதலிய பிருதிவியின் சூக்ஷும அம்சங்களை அவ்வாயு வெடுத்துக் கொண்டுவரின் அநேக சூக்ஷும அம்சங்களின் நீக்கத்தால் குசும முதலியவைகளில் அநேக துவாரங்களுண்டாக வேண்டும். கஸ்தூரி முதலியவைகளில் குறைவுத் தன்மையு முண்டாக வேண்டும். அங்ஙன முண்டாகிறதில்லை ஆகையால் அவ்வாயுவினுடையே அக்கந்தம் அங்கீகரிக்க வேண்டும்.

கக௪. கஸ்தூரி, குசும முதலியவைகளில் போக்தா புருஷனது அதிர்ஷ்டத்தால் மீண்டும் அவ்வவயவங்களினது உற்பத்தியின் வர்ணனம்.

*சமாதானம்:—*அக்கஸ்தூரி, குசும முதலிய விஷயங்களை போகிக்கும் ஜீவர்களின் அதிர்ஷ்ட விசேஷத்தின் வசத்தால் அக்கஸ்தூரி, குசும முதலியவைகளில் வெவ்வேறு அம்சங்களின் உற்பத்தியுண்டாய் விடுகின்றன. அதாவது எத்தனை சூக்ஷும அம்சங்களை அவ்வாயு கொண்டு வருகின்றதோ அத்தனை சூக்ஷும அம்சங்களே போகிக்கும் ஜீவர்களது அதிர்ஷ்டத்தின் வசத்தால் மீண்டும் உற்பத்தியாகின்றன. ஆகையால் குசும முதலிய புட்பங்களில் துவாரத் தன்மையுண்டாவதின்று. அங்ஙனமே கஸ்தூரி முதலியவைகளில் குறைவுத் தன்மையு முண்டாகிறதில்லை.

கக௫. கற்பூரத்தில் அவ்வதிர்ஷ்டத்தின் வசத்தால் மீண்டும் அவயவங்களின் உற்பத்தியில் சங்கையின் வர்ணனம்.

*சங்கை:—*போகிக்கும் ஜீவர்களின் அதிர்ஷ்ட விசேஷத்தால் மீண்டும் வேறு அம்சங்களின் உற்பத்தியுண்டாகுமாயின் கற்பூரத்திலும் குறைவுத்தன்மை யுண்டாகலாகாது. கற்பூரத்தில் குறைவுத் தன்மையோ பிரத்தியக்ஷத்தில் காணப்படுகின்றது.

கக௬. கற்பூர முதலியவைகளில் அவ்வதிர்ஷ்டத்தின் அபாவத்தால் மீண்டும் அவ்வவயவங்களின் உற்பத்தியாகாமையின் வர்ணனம்.

*சமாதானம்:—*எங்ஙனம் கஸ்தூரி, குசும முதலியவைகளில் போகிக்கும் ஜீவர்களின் அதிர்ஷ்ட விசேஷமிருக்கின்றதோ அங்ஙனம் கற்பூர முத

ரியவைகளில் போகிக்கும் ஜீவர்களின் அதிர்ஷ்ட விசேஷமின்றும். ஆகையால் கற்பூர முதலியவைகளில் வேறு அம்சங்களின் உற்பத்தி யுண்டாகிறதில்லை. ஆனால் க்ஷண க்ஷணத்தில் குறைவுத்தன்மையே யுண்டாய் விடுகின்றது. இவ்வாறாகப் பிருதிவியின் கந்தமே ஜல, வாயுக்களில் பிரதீதியாகின்றது. இயல்பாக அந்ஜல, வாயுக்களில் அக்கந்தகுணமின்றும். ஆகையால் கந்தமுடைமை வடிவப் பிருதிவியின் லக்ஷணத்திற்கு அந்ஜல, வாயுக்களில் அதிவ்யாப்தியுண்டாகாது.

௧௯௭. கல் முதலியவைகளில் கந்தமுடைமை வடிவ லக்ஷணத்தினது அவ்வியாப்தியினை நிவர்த்தித்தல்.

இனி கல், இரத்தினம், முத்து, பவழ முதலிய பிருதிவியில் கந்தமுடைமை வடிவ லக்ஷணத்திற்கு அவ்வியாப்தியை நிவர்த்திப்பாம். ஆண்டு எவ்வாதி அக்கல் முதலியவைகளில் கந்தமுடைமை வடிவப் பிருதிவியின் லக்ஷணத்திற்கு அவ்வியாப்திக் கூறினானோ அவ்வாதியை வினாவுவாம். அக்கல் முதலியவைகளில் பிருதிவித்தன்மையை அங்கீகரிப்பதின்மையால் அக்கல் முதலியவைகளில் அந்த லக்ஷணத்திற்கு அவ்வியாப்தியைக் கூறுகின்றாயா? அல்லது அக்கல் முதலியவைகளில் பிருதிவித் தன்மையை அங்கீகரித்து அந்த லக்ஷணத்திற்கு ஆண்டு அவ்வியாப்தியைக் கூறுகின்றாயா? ஆண்டு வாதி முதலாவது பக்ஷத்தை அங்கீகரிக்கின் அது சம்பவியாது. ஏனெனின், கல் முதலியவைகள் பிருதிவி வடிவமே அல்லாதபோது அக்கல் முதலியவைகளில் கந்தமுடைமை வடிவப் பிருதிவியின் லக்ஷணத்திற்கு அவ்வியாப்திக் கூறுவது அத்தியந்தம் அசங்கதமாம். ஏனெனின், எந்த லக்ஷணம் தனது லக்ஷியத்தின் ஓரிடத்திருந்து ஓரிடத்திருப்பதில்லையோ அந்த லக்ஷணமே அவ்வியாப்திதோஷமுடையதாகின்றது. எங்ஙனம் கபிலநிறமுடைமைவடிவ ஆவின் லக்ஷணம் சில ஆக்களிடத்தேயிருக்கின்றது. எல்லா ஆக்களினுமிருப்பதில்லை. ஆகையால் அக்கபிலநிறமுடைய ஆவின் லக்ஷணம் அவ்வியாப்தி தோஷமுடையதனைப் போலும். அங்ஙனமே கந்தமுடைமை வடிவப் பிருதிவியின் லக்ஷணம் பிருதிவித்தன்மையல்லாத கல் முதலிய அலக்ஷிய வத்துக்களில் இருப்பதின்மையால் அவ்வியாப்தி தோஷமுடையதாகாது. ஓர்கால் அலக்ஷியத்திலிருப்பதின்றாயினும் அந்த லக்ஷணம் அவ்வியாப்தி தோஷமுடையதாயின் எல்லா சத் லக்ஷணங்களும் அவ்வியாப்தி தோஷமுடையனவேயாகும். இக்காரணத்தால் ஓர் சத்லக்ஷணமும் அலக்ஷியத்திலிருப்பதில்லை. இனி வாதி இரண்டாவது பக்ஷத்தை அங்கீகரிக்கின் அதுவும் சம்பவியாது. ஏனெனின், அக்கல் முதலியவைகளில் பிருதிவித் தன்மையினை அங்கீகரிப்பதாக அப்பிருதிவித்தன்மை வடிவ ஏதுவால் அக்கல் முதலியவைகளில் அக்கந்த குணத்தின் அநுமிதி அவசியமுண்டாகும்.

௧௯௮. அநுமானப் பிரமாணத்தால் கல் முதலியவைகளில் கந்தமுடைமையின் சித்தி.

அவ்வநுமானத்தின் ஆகாரமிதுவாம். “பாஷாணாதயஃ [illegible]” (இ-ள்.) கல், இரத்தினம், முத்து,

பவழ முதலியன கந்தகுணமுடையனவாம், பிருதிவித்தன்மை தர்மமுடையனவாதலால், எவ்வெத் திரவியம் பிருதிவித் தன்மை தர்மமுடையனவாமோ அவ்வத்திரவியம் கந்தகுணமுடையனவேயாம், எங்ஙனம்: பிரசித்த கஸ்தூரி, குசும முதலிய திரவியங்கள் பிருதிவித்தன்மை தர்மமுடையன வாவதால் கந்தகுணமுடையனவுமாம். அங்ஙனமே கல் முதலியனவும் பிருதிவித்தன்மை தர்மமுடையன வாவதால் கந்தகுண முடைமை அவசிய முண்டாகும். இவ்வாறாய அநுமானப் பிரமாணத்தால் கல் முதலியவைகளில் கந்தகுணத்தின் சித்தியுண்டாகின்றது.

௧௯௯. கல் முதலியவைகளின் கந்தத்தில் பிரத்தியக்ஷத் தன்மையின் சங்கை.

சங்கை:—ஓர் கால் கல் முதலியவைகளில் கந்தமிருக்குமாயின் எங்ஙனம் கஸ்தூரி, குசும முதலியவைகளில் கந்தம் உலகவருக்குக் கிராண விந்திரியத்தால் பிரதீதியாகின்றதோ அங்ஙனமே கல் முதலியவைகளின் கந்தமும் உலகவருக்குக் கிராண விந்திரியத்தால் பிரதீதியாதல் வேண்டும்; பிரதீதியாவதின்று. ஆகையால் கல் முதலியவைகளில் கந்தகுணமின்றும்.

௨௱. கல் முதலியவைகளின் கந்தத்தில் அநுத்பூதத்தன்மையால் பிரத்தியக்ஷமாகாத் தன்மையின் வர்ணனம்.

சமாதானம்:—கல் முதலியவைகளிலுள்ள கந்தம் கஸ்தூரி, குசும முதலியவைகளின் கந்தத்தைப்போன்று; உத்பூதமன்றும்; அக்கந்தம் அநுத்பூதமாம். உத்பூதகந்தத்தின் பிரத்தியக்ஷமே கிராணவிந்திரியத்தாலுண்டாகின்றது. அநுத்பூத கந்தத்தின் பிரத்தியக்ஷம் கிராண விந்திரியத்தா லுண்டாவதில்லை. ஆகையால் கல் முதலியவைகளினது கந்தத்தின் பிரத்தியக்ஷம் உலகவருக்குக் கிராண விந்திரியத்தாலுண்டாகிறதில்லை. ஆனால் பிருதிவித் தன்மை வடிவ ஏதுவால் கந்தத்தின் அநுமிதி ஞானமேயுண்டாகின்றது.

௨௦௧. கல் முதலியவைகளில் பிருதிவித் தன்மையின் அபாவத்தினது சங்கையின் வர்ணனம்.

சங்கை:—பிருதிவித் தன்மை வடிவ ஏதுவால் கல் முதலியவைகளில் கந்த குணத்தினைச் சித்திசெய்வதற்கு கல் முதலியவைகளின் பிருதிவித்தன்மையிலேயே ஓர் பிரமாணமுமின்றாயின் பிருதிவித்தன்மை வடிவ ஏதுவால் கல் முதலியவைகளில் கந்த குணத்தின் சித்தியோ அத்தியந்தம் தூரமாமன்று சங்கையுண்டாக இனி அக்கல் முதலியவைகளில் யுக்தியால் பிருதிவித் தன்மையை நிலைகாட்டுவாம்.

௨௦௨. கல் முதலியவைகளில் பிருதிவித் தன்மையின் சாதக யுக்தியின் வர்ணனம்.

ஆண்டு அத்தியந்த வன்னியின் சையோகத்தால் கல் முதலியன பஸ்ம (சாம்பர்) பாவத்தினை அடையும்போது கல் முதலியனவற்றின் பஸ்மத்தில் உலகர் யாவருக்கும் கிராண விந்திரியத்தால் கந்தத்தின் [illegible]

கின்றது. எப்பதார்த்தத்தில் கந்தகுணம் பிரதீதியாகின்றதோ அப்பதார்த்தம் பிருதிவியேயாகின்றது. இவ்வர்த்தத்தில் ஓர் வாதிக்கும் விவாதமின்றாம். ஆகையால் கல் முதலியவைகளின் பஸ்மம் கந்தகுணமுடைய தாவதால் பிருதிவி வடிவமென்றே அங்கீகரிக்கப்படுவதாகும். இவ்வாறாக கல் முதலிவைகளின் பஸ்மத்தில் பிருதிவித் தன்மை வடிவத்தின் சித்திபுண்டாக அப்பஸ்மத்தை ஆரம்பிக்கும் அவயவங்களினும் பிருதிவி வடிவதன்மையே அங்கீகரிக்கப்படுவதாகும். ஏனெனின் அவயவங்களின் கந்தகுணமே அவயவியின் கந்தகுணத்தின் அசமவாயி காரணமாகின்றது. ஓர்கால் அப்பஸ்மத்தினை ஆரம்பிக்கும் அவயவங்களின் கந்த குணம் அங்கீகரியாவிடின் அப்பஸ்ம வடிவ அவயவியினும் கந்தகுணத்தின் உற்பத்தி யுண்டாவதின்றாகும். அப்பஸ்மத்தினை கந்தகுணம் பிரத்தியக்ஷப் பிரதீதியாகின்றது. ஆகையால் அப்பஸ்மத்தை ஆரம்பிக்கும் அவயவங்களினும் கந்தகுணம் அவசிய மொப்பவேண்டியதாகும். கந்தகுண வடிவ ஏதுவால் அவ்வவயவங்களில் பஸ்மத்தைப் போன்று பிருதிவித் தன்மையும் அவசிய மொப்பவேண்டியதாகும். இவ்வாற்றால் அப்பஸ்மத்தை ஆரம்பிக்கும் அவயவங்களில் பிருதிவித் தன்மையின் சித்திபுண்டாக அக்கல் முதலியவைகளை ஆரம்பிக்கும் அவயவங்களினும் பிருதிவித் தன்மையே அங்கீகரிக்கவேண்டியதாகும். ஏனெனின், இது சாத்திரக்காரர் நியமமாம். "யத்3 த்3ரவ்யம் யத்3 த்3ரவ்யத்4வம்ஸஜந்யம் தத்3 த்3ரவ்யம் தத்3த்3ரவ்யோபாதே3யம்" (இ-ள்.) எத்திரவியம் எத்திரவியத்தின் துவம்சத்தாலுண்டாவதாகின்றதோ அத்திரவியம் அத்திரவியத்தின் உபாதான காரணத்தின் உபாதேயமேயாகின்றது. எங்ஙனம்: நாலு முழ அளவுள்ள பெரிய படத்தின் துவம்சத்தாலுண்டான பத்து முழ அளவுள்ள சிறிய படம் அப்பெரிய படத்தின் உபாதான காரண வடிவ தந்துக்களின் உபாதேயமேயாகின்றது. அதாவது பெரிய படத்தி னுபாதான காரண வடிவ தந்துவே அச்சிறிய படத்திற்கும் உபாதான காரணமாம். அங்ஙனமே சஸ்பிர பிரசங்கத்தில் அப்பஸ்ம வடிவத் திரவியமும் கல் முதலியத் திரவியங்களின் துவம்சத்தாலுண்டானதாம். ஆகையால் அப்பஸ்ம வடிவத் திரவியமும் கல் முதலியத் திரவியங்களின் உபாதான காரணத்தின் உபாதேயமாகின்றது. அதாவது கல் முதலியத் திரவியங்களின் உபாதான காரண அவயவமே அப்பஸ்ம வடிவத்திரவியத்தின் உபாதான காரணமாகும். ஆகையால் அவ்வவயவங்களாலுண்டான பஸ்மத்திலெங்ஙனம் பிருதிவித் தன்மை யங்கீகாரமோ அங்ஙனமே அவ்வவயவங்களாலுண்டான கல் முதலியவைகளினும் பிருதிவித்தன்மை அவசியம் அங்கீகரிக்க வேண்டும். இவ்வாறாய யுக்தியால் கல் முதலியவைகளில் பிருதிவித்தன்மையே சித்தமாகின்றது. பிருதிவித் தன்மையின் சித்திபுண்டாக கல் முதலியவைகளில் பிருதிவித் தன்மை வடிவ ஏதுவால் கந்த குணத்தின் அநுமானம் சம்பவிக்கின்றது. ஆகையால் கந்தமுடைமை வடிவப் பிருதிவியின் லக்ஷணத்திற்கு கல், இரத்தினம், முத்து, பவழ முதலிய பிருதிவிகளில் அவ்வியாப்தி யுண்டாகாது.

௨௦௩. பிருதிவியின் பதினான்கு குணத்தின் வர்ணனம்.

இவ்விதமாகக் கூறிய இருவித லக்ஷணங்களால் லக்ஷிதப்பிருதிவியில் உருவம், ரசம், கந்தம், பரிசம், சங்கியை, பரிமாணம், வேற்றுமை, சையோகம், விபாகம், பரத்வம், அபரத்வம், குருத்வம், திரவத்வம், வேகஸ்திதிஸ்தாபக மெனப் பெயரிய சம்ஸ்கார மெனப் பதினான்கு குணங்களிருக்கின்றன.

௨௦௪. நித்திய, அநித்திய வடிவமாக பிருதிவியி னிருவித வேற்றுமை.

இத்தகைய பதினான்கு குணங்களுடைய பிருதிவி நித்தியம், அநித்தியமென்னும் வேறுபாட்டா லிருவிதமாகின்றது. பரமாணு வடிவப் பிருதிவியோ நித்தியமெனப்படும். துவியணுக முதலிய காரிய வடிவ வெல்லாப் பிருதிவிகளும் அநித்தியமெனப்படும். காரிய வடிவ அநித்தியப் பிருதிவியே அவயவியெனப்படும். இனி பிரசங்கத்தால் நித்திய, அநித்திய வஸ்துக்களின் லக்ஷணம் நிருபிப்பாம்.

௨௦௫. பரமாணுமுதலிய நித்திய பதார்த்தங்களின் வர்ணனம்.

ஆண்டு "ப்ராக3பா4வ ப்ரதியோகி3த்வே ஸதி த்4வம்ஸாப்ரதியோகி3த்வம் நித்யத்வம்" (இ-ள்). எப்பதார்த்தம் பிராகபாவத்தின் பிரதியோகியாகாமலும், துவம்சத்தின் பிரதியோகியாகாமலு மிருக்குமோ அப்பதார்த்தம் நித்தியமெனப்படும். ஆண்டுப் பரமாணு, ஆகாசம், காலம், திக்கு, ஆத்மா, மனம், சாமான்னியம், விசேஷம், சமவாயம், அன்னியோன்னியாபாவம், அத்தியந்தாபாவம், அங்ஙனமே நித்திய குணங்களிவைமுதலிய எத்தனை நித்திய பதார்த்தங்கள் அங்கீகரிக்கப்படுமோ அப்பரமாணு முதலிய நித்திய பதார்த்தங்களின் உற்பத்திபுண்டாகிறதில்லை. ஆகையால் அந்த நித்திய பதார்த்தங்களில் பிராகபாவத்தின் பிரதியோகித் தன்மையுண்டாகாது. உண்டாகும் கடமுதலிய பதார்த்தங்களிலேயே பிராகபாவத்தின் பிரதியோகித் தன்மை யுண்டாகின்றது. பரமாணு முதலிய நித்திய பதார்த்தங்களின் நாசமுமுண்டாவதின்று. ஆகையால், நித்திய பதார்த்தங்களில் பிரத்துவம்சாபாவத்தின் பிரதியோகித் தன்மையுமுண்டாகாது. நாசமுடைய கட முதலிய பதார்த்தங்களிலேயே பிரத்துவம்சாபாவத்தின் பிரதியோகித் தன்மை யுண்டாகின்றது. ஆகையால் கூறிய நித்திய லக்ஷணம் சம்பவிக்கின்றது. ஆண்டு "பிராகபாவத்திற்குப் பிரதியோகியாகாதது நித்தியம்" என முன்மாத்திரமே நித்தியத்தின் லக்ஷணமாகக் கூறி அந்த லக்ஷணத்தில் "துவம்சத்திற்குப் பிரதியோகியாகாததும்" என்னும் பதங் கூறாவிடின் பிராகபாவத்தில் அந்த லக்ஷணத்திற்கு அதிவியாப்திபுண்டாம். ஏனெனின், நியாய சித்தாந்தத்தில் பிராகபாவத்திற்கு உற்பத்தி அங்கீகரியாது அநாதியெனப்புகின்றனர். ஆகையால் பிராகபாவம் பிராகபாவத்திற்கு பிரதியோகியன்றாம். சித்தாந்தத்தில் பிராகபாவத்திற்கு நித்தியமொப்புவதில்லை. ஆகையால் அநித்தியப் பிராகபாவத்தில் நித்தியத்தின் லக்ஷணத்திற்கு அதிவியாப்தியை நிவர்த்திசெய்வான் கருதி அந்த லக்ஷணத்தில் "துவம்சத்தின் பிரதியோகியாகாததும்" என்னும்

பதங் கூறப்பட்டது. பிராகபாவத்தில் துவம்சத்திற்குப் பிரதியோகியாகாத் தன்மையில்லை. கடமுதலிய பிரதியோகிகள் உற்பத்தியானபின்னர் கடமுதலிய காரியங்களின் பிராகபாவம் நஷ்டமாய் விடுகின்றது. ஆகையால் அப்பிராகபாவம் அத்துவம்சத்தின் பிரதியோகியேயாம். ஆகையால் அந்தலக்ஷணத்தில் "துவம்சத்திற்குப் பிரதியோகியாகாததும்" என்னும் பதத்தைக் கூறுவதால் பிராகபாவத்தில் நித்தியத்தின் லக்ஷணத்திற்கு அதிவியாப்தியுண்டாகிறதில்லை. அல்லது "துவம்சத்தின் பிரதியோகியாகாதது நித்தியம்" என விம்மாத்திரமே நித்தியத்தின் லக்ஷணமாகக் கூறி அந்த லக்ஷணத்தில் "பிராகபாவத்திற்குப் பிரதியோகியாகாததும்" என்னும் பதங் கூறவிடின் துவம்சத்தில் அந்த லக்ஷணத்திற்கு அதிவியாப்தியுண்டாம் எனெனின், நையாயிகர்கள் துவம்சத்தின் துவம்சம் அங்கீகரிப்பதில்லை. ஆனால் துவம்சத்திற்கு அநந்தமொப்புகின்றனர். ஆகையால் துவம்சத்திற்குப் பிரதியோகியாகாத் தன்மைத் துவம்சத்திலிருக்கின்றது. சித்தாந்தத்தில் துவம்சம் நித்தியமன்றும். ஆகையால் அநித்தியத் துவம்சத்தில் நித்தியத்தின் லக்ஷணத்திற்கு அதிவியாப்தியை நிவிர்த்திச் செய்யும் பொருட்டு அந்த லக்ஷணத்தில் "பிராகபாவத்திற்கு பிரதியோகியாகாத் தன்மையுமாய்" என்னும் விசேஷணங் கூறப்பட்டது. அன்றித் துவம்சத்தில் பிராகபாவத்திற்குப் பிரதியோகியாகாத் தன்மையின்றும், கடமுதலிய காரியங்களைப்போன்று உண்டாவதானதால் துவம்சம் பிராகபாவத்தின் பிரதியோகியே யாகின்றது. ஆகையால் அவ்விசேஷணத்தைக் கூறுவதால் பிரத்துவம்சாபாவத்தில் நித்தியத்தின் லக்ஷணத்திற்கு அதிவியாப்தியுண்டாகாது.

௨௬. கடமுதலிய அநித்திய பதார்த்தங்களின் லக்ஷணம்.

அன்றி "ப்ராகபாவ ப்ரதியோகித்வ ப்ரத்வம்ஸப்ரதியோகித்வாந்யதரவத்வம் அநித்யத்வம்" (இ-ள்.) பிராகபாவப் பிரத்துவம்சாபாவப் பிரதியோகித் தன்மையுடைய பதார்த்தமும், அவ்விரண்டில் ஒன்றைப் பிரதியோகியாக வுடைய பதார்த்தமும், அநித்தியமெனப் படுகின்றது. அதாவது பிராகபாவமொன்றிற்கு, அல்லது துவம்சமொன்றிற்கு, அல்லது பிராகபாவம், துவம்சமாம் இரண்டிற்குப் பிரதியோகியாம் பதார்த்தம் யாதோ அப்பதார்த்தம் அநித்தியமெனப் படுகின்றது. ஈண்டுக் கேவலம் பிராகபாவத்தின் பிரதியோகித் தன்மையே அநித்தியத்தின் லக்ஷணமாகக் கூறின் பிராகபாவத்தில் பிராகபாவத்தின் பிரதியோகித் தன்மையின்றும். ஆகையால் பிராகபாவத்தில் அநித்தியத்தன்மை புண்டாகாது. பிராகபாவத்திலும் அநித்தியத் தன்மை அங்கீகாரமாம். ஆகையால் அந்த லக்ஷணத்தில் துவம்சத்தின் பிரதியோகித் தன்மைக்கும் அநித்தியத்தன்மைக் கூறப்பட்டது. துவம்சத்தின் பிரதியோகித் தன்மைப் பிராகபாவத்திலிருக்கின்றது. ஆகையால் பிராகபாவமும் அநித்தியமேயாம். அல்லது கேவலம் துவம்சத்தின் பிரதியோகித் தன்மையே அநித்தியத்தின் லக்ஷணமாகக் கூறின் துவம்சத்தில் துவம்சத்தின் பிரதியோகித் தன்மையின்றும். ஆகையால் துவம்சத்

தில் அநித்தியத் தன்மையுண்டாகாது. சித்தாந்தத்தில் துவம்சத்திலும் அநித்தியத் தன்மையே அங்கீகாரமாம். ஆகையால் அந்த லக்ஷணத்தில் பிராகபாவத்தின் பிரதியோகித் தன்மைக்கும் அநித்தியத் தன்மைக் கூறப்பட்டது. பிராகபாவத்தின் பிரதியோகித் தன்மை துவம்சத்திலிருக்கின்றது. ஆகையால் அத்துவம்சமும் அநித்தியமேயாம். ஆகையால் இது சித்தமாயிற்று. பிராகபாவத்திலோ கேவலம் துவம்சத்தின் பிரதியோகித் தன்மை வடிவ அநித்தியத் தன்மை யிருக்கின்றது. பிரத்துவம்சாபாவத்திலோ கேவலம் பிராகபாவத்தின் பிரதியோகித்தன்மை வடிவ அநித்தியத்தன்மையிருக்கிறது. கடமுதலிய பதார்த்தங்களில் பிராகபாவம், பிரத்துவம்சாபாவமாம் இரண்டின் பிரதியோகித்தன்மை வடிவ அநித்தியத்தன்மை யிருக்கின்றது. இவ்வாறாகப் பரமாணு வடிவப் பிருதிவியோ நித்தியமாம். துவியணுக முதலிய காரிய வடிவ வெல்லாப் பிருதிவியும் அநித்தியமாம்.

௨௭. அநித்தியப் பிருதிவியின் சரீரம், இந்திரியம், விஷயமென்னும் வேறுபாட்டால் மூவித வகுப்பின் வர்ணனம்.

அவ்வநித்தியப் பிருதிவியும் சரீரம், இந்திரியம், விஷயமென்னும் வேறுபாட்டால் மூவகைத்தாம். அன்றி எப்பதார்த்தம் முதலில் சாமான்னிய வடிவமாக அறியப்படுகிறதோ அப்பதார்த்தத்தினைப் பின்னர் விசேஷ வடிவமாக அறிவதற்கு இச்சையுண்டாகின்றது. ஆகையால் பின்னர்க் கூறப்படும் பார்த்திவ, ஜலீய, தைஜஸ, வாயவீய வடிவ சரீர இந்திரிய விஷயங்களின் நிரூபணஞ் செய்யவேண்டி முதலில் அவ்வெல்லாச் சரீரங்கட்கும், எல்லா இந்திரியங்கட்கும், எல்லா விஷயங்கட்கும் ஓர் சாமான்னிய லக்ஷணம் அவசியம் நிரூபிக்கப்படவேண்டும்.

௨௮. சரீரங்களின் சாமான்னிய லக்ஷணம்.

பார்த்திவ, ஜலீய, தைஜஸ, வாயவீயமென்னும் நான்கு வகைச் சரீரங்களின் சாமான்னிய லக்ஷணம் முதலில் நிரூபிப்பாம். "அந்த்யாவயவித்வே ஸதி சேஷ்டாஸ்ரயஃ சரீரம்" (இ-ள்.) எத்திரவியம் அந்தியா வயவியாகி சேஷ்டையின் ஆசிரயமாகின்றதோ அத்திரவியம் சரீரமெனப்படும். எங்ஙனம் மனிதர், பசு, பக்ஷி, புழு, விருக்ஷம் இவை முதலிய சரீரங்கள் அந்தியாவயவியும் சேஷ்டையின் ஆசிரயமுமாகின்றன. ஆகையால் அம்மனிதர் முதலிய தேகங்களில் சரீரத் தன்மை பொருந்தியதாம். அன்றி "சேஷ்டாசிரயம் சரீரம்" என விம்மாத்திரமே சரீரத்தின் லக்ஷணமாகக் கூறி அந்த லக்ஷணத்தில் "அந்தியாவயவித் தன்மையாகி" என்னும் பதங் கூறவிடின் அஸ்தம், பாதம் முதலிய அவயவங்களில் அந்த லக்ஷணத்திற்கு அதிவியாப்தியுண்டாம். ஏனெனின், சரீரத்தைப்போன்று கை, கால் முதலிய அவயவங்களும் சேஷ்டையின் ஆசிரயமேயாம். ஆனால் கை, கால் முதலிய அவயவங்கள் சரீரமெனப்படுவனவன்று. இவ்வித சரீர வடிவமல்லாத கை, கால் முதலிய அவயவங்களில் அந்த லக்ஷணத்திற்கு அதிவியாப்தியை நிவிர்த்தி செய்யவேண்டிச் சேஷ்டையின் ஆசிரயத்திற்கு "அந்தியாவயவியென்னும்" விசேஷ

ணங் கூறப்பட்டது. அன்றி கை, கால் முதலிய அவயவங்களில் அவ்வந்தியாவயவித் தன்மையின்றும். ஆகையால் கை, கால் முதலியவைகளில் அந்த லக்ஷணத்திற்கு அதிவியாப்திபுண்டாகாது. அல்லது "அந்தியாவயவிசரீரம்" என விம்மாத்திரமே அச்சரீரத்தின் லக்ஷணமாகக் கூறி அந்த லக்ஷணத்தில் "சேஷ்டையின் ஆச்ரயம்" என்னும் பதங் கூறாவிடின் கட, பட முதலிய பதார்த்தங்களில் அந்த லக்ஷணத்திற்கு அதிவியாப்தி யுண்டாகும். எனெனின், மனிதர் முதலிய சரீரங்கள் எங்ஙனம் அந்தியாவயவியாமோ அங்ஙனமே கட, பட முதலியவைகளும் அந்தியாவயவியாம். கட, பட முதலியவைகளில் அந்த லக்ஷணத்திற்கு அதிவியாப்தியை நிவர்த்திக்கும்பொருட்டு அந்த லக்ஷணத்தில் "சேஷ்டையின் ஆச்ரயம்" என்னும் பதங் கூறப்பட்டது. கட, பட முதலிய பதார்த்தங்கள் சேஷ்டையின் ஆச்ரயமானவையன்று. ஆகையால் அக்கட, பட முதலியவைகளில் அந்த லக்ஷணத்திற்கு அதிவியாப்தி யுண்டாகாது.

௨௰. சேஷ்டையின் லக்ஷணம்.

"ஹிதாஹிதப்ராப்தி பரிஹாரார்த்த க்ரியா சேஷ்டா" (இ-ள்.) இதப் பிராப்தியின் பொருட்டும், அகித நிவர்த்தியின் பொருட்டுமாம் கிரியாவிசேஷம் யாதோ அக்கிரியா விசேஷத்தினைச் சேஷ்டையென்பது. இவ்வாறாய சேஷ்டை மனிதர் முதலிய சரீரங்களிற் பிரசித்தமேயாம். அந்தியாவயவியின் ஸ்வரூப மறிந்தாலன்றி அந்தியாவயவி வடிவ சரீரத்தின் லக்ஷணம் அறியப்படாது. ஆகையால் அந்தியாவயவியின் லக்ஷணம் நிரூபிப்பாம்.

௨௰௧. அந்தியாவயவியின் லக்ஷணம்.

"அவயவாநுத்பாதகாவயவி அந்த்யாவயவீ" (இ-ள்.) எத்திரவியம் அவயவங்களையுடையதாய் வேறோர் அவயவியினை யுண்டாக்குவதன்றோ அத்திரவியம் அந்தியாவயவியெனப்படும். எங்ஙனம்: மனிதர் முதலிய சரீரங்கள் கை, கால் முதலிய அவயவங்களையுடையனவாயினும் தன்னிடத்தில் சமவாய சம்பந்தமாக வேறு அவயவியினை யுண்டாக்காததுமாம். ஆகையால் மனிதர் முதலிய சரீரங்கள் அந்தியாவயவியெனப்படும். இவ்வாறாக கட, பட முதலிய திரவியங்களும் கபாலம், தந்து முதலிய அவயவங்களையுடையனவாயினும் தன்னிடத்தில் சமவாய சம்பந்தமாக வேறு அவயவியினை யுண்டாக்காதனவுமாம். ஆகையால் கட, பட முதலிய திரவியங்களும் அந்தியாவயவியெனப்படும். அன்றி "அவயவியையுண்டாக்காதது அந்தியாவயவி" என விம்மாத்திரமே அந்தியாவயவியின் லக்ஷணமாகக் கூறி அந்த லக்ஷணத்தில் "அவயவத்தையுடையதாய்" என்னும் பதங் கூறாவிடின் ஆகாச முதலிய திரவியங்களிலும் குணம், கருமம் முதலிய பதார்த்தங்களிலும் அந்த லக்ஷணத்திற்கு அதிவியாப்தியுண்டாகும். எனெனின், ஆகாச முதலியவைகள் தன்னிடத்தில் சமவாய சம்பந்தமாக ஓர் அவயவியினை யுண்டாக்குவனவுமன்றும். ஆகாச முதலியன அந்தியாவயவிகளுமன்றும். ஆகையால் ஆகாசமுதலியவைகளில் அந்தலக்ஷணத்திற்கு அதிவியாப்தியை நிவர்த்திசெய்வான் பொருட்டு அந்த

லக்ஷணத்தில் "அவயவங்களையுடையதாய்" என்னும் விசேஷணங் கூறப்பட்டது. ஆகாச முதலிய திரவியங்களும், குணம், கருமம் முதலிய பதார்த்தங்களும் அவயவியினை யுண்டாக்காதனவாயினும் அவயவங்களையுடையனவன்றும். ஆகையால் ஆகாச முதலியவைகளில் அந்த லக்ஷணத்திற்கு அதிவியாப்திபுண்டாகாது. அல்லது "அவயவங்களையுடையது அந்தியாவயவி" என விம்மாத்திரமே அந்தியாவயவியின் லக்ஷணமாகக் கூறி அந்த லக்ஷணத்தில் "அவயவியையுண்டாக்காதது" என்னும் பதங் கூறாவிடின் கை, கால் முதலியவைகளில் அந்த லக்ஷணத்திற்கு அதிவியாப்தியுண்டாகும். எனெனின், கை, கால் முதலிய அவயவங்களும் தத்தம் அவயவங்களையுடையனவேயாம். ஆனால் கை, கால் முதலிய அவயவங்கள் அந்தியாவயவியெனப்படுகிறதில்லை. கை, கால் முதலிய அவயவங்களில் அந்தலக்ஷணத்திற்கு அதிவியாப்தியை நிவர்த்தி செய்வான் வேண்டி அந்த லக்ஷணத்தில் "அவயவியை யுண்டாக்காதது" என்னும் பதங் கூறப்பட்டது. அன்றி கை, கால் முதலிய அவயவங்களில் அவயவியினை யுண்டாக்காத் தன்மையின்றும். ஆனால் சரீர முதலிய அவயவியினையுண்டாக்கும் தன்மையே யிருக்கின்றது. ஆகையால் கை, கால் முதலிய அவயவங்களில் அந்த லக்ஷணத்திற்கு அதிவியாப்தி யுண்டாகாது. அல்லது "அவயவங்களையுடையதாகி யுண்டாக்காதது அந்தியாவயவி" என விம்மாத்திரமே அவ்வந்தியாவயவியின் லக்ஷணமாகக்கூறி அந்த லக்ஷணத்தில் "அவயவியினை" என்னும் பதங்கூறாவிடின் அந்த லக்ஷணம் அசம்பவ தோஷமுடையதேயாம். எனெனின், சரீரம், கட முதலிய எத்தனை அந்தியாவயவிகளுண்டோ அவ்வெல்லா அந்தியாவயவிகளும் தம்மிடத்திலுள்ள குணம், கிரியை முதலியவைகளை யுண்டாக்குவனவேயாம். அந்தியாவயவியொன்றினையு முண்டாக்காதனவன்றும். தோன்றி அழிந்த கட முதலியவைகள் தம்மிடத்துள்ள குணக்கிரியைகளை யுண்டாக்குவனவன்று. எனினும் அக்கட முதலியவைகளும் தமது த்வம்ச முதலியவைகளை யுண்டாக்குவனவேயாம். அவ்வசம்பவ தோஷத்தை நிவர்த்திக்கும்பொருட்டு அந்த லக்ஷணத்தில் "அவயவியினை" என்னும் பதங் கூறப்பட்டது. கட, பட முதலிய அந்தியாவயவிகள் தம்மிடத்துள்ள குண, கரும முதலியவைகளை யுண்டாக்குவனவாயினும் அவயவியினை யுண்டாக்குவனவன்று. ஆகையால் அந்தியாவயவியின் லக்ஷணத்தில் லக்ஷிதார்த்தத்தின்மை வடிவ அசம்பவ தோஷம் பிராப்தமாகாது. அன்றி அவயவம், அவயவி யென்னும் இருபதங்கள் பொருந்திய முற்கூறிய அந்தியாவயவியின் லக்ஷணம் யாதோ அந்த லக்ஷணத்தின் ஞானமுண்டாகும்போது முதலில் அவயவம், அவயவி யென்னும் இரு ஞானங்களுண்டாகின்றன. இவ்விரு ஞானங்களின்றி அந்தியாவயவியின் ஞானம் சம்பவிக்கிறதில்லை. இக்காரணத்தால் அவயவத்தினதும், அவயவியினதும் ஸ்வரூபம் வர்ணிப்பாம்.

௨௰௨. அவயவத்தின் லக்ஷணம்.

"த்ரவ்யஸமவாயிகாரணம் அவயவ:" (இ-ள்.) திரவியத்தின் சமவாயி காரணம் யாதோ அது அவயவமெனப்படும். எங்ஙனம், தந்து பட

வடிவ திரவியத்தின் சமவாயிகாரணமாம். கபாலம் கடவடிவத் திரவியத்தின் சமவாயி காரணமாம். கை, கால் முதலியன சரீர வடிவ திரவியத்தின் சமவாயி காரணமாம். ஆகையால் தந்து, கபாலம், கை, கால் முதலியன அவயவங்களெனப்படும். ஆண்டு "சமவாயி காரணம் அவயவம்" என விம்மாத்திரமே அவயவத்தின லக்ஷணமாகக்கூறி அந்த லக்ஷணத்தில் "திரவியம்" என்னும் பதங்கூறாவிடின் ஆகாச முதலிய திரவியங்களில் அவயவத்தின் லக்ஷணத்திற்கு அதிவியாப்தியுண்டாம். ஏனெனின் ஆகாச முதலிய திரவியங்களும் சத்த முதலிய குணங்களின் சமவாயி காரணமேயாம். ஆதலால் ஆகாச முதலியனவைகளில் அவயவ வடிவத்தன்மை அங்கீகாரமின்றாம். ஆகாச முதலியனவைகளில் அவயவத்தின் லக்ஷணத்திற்கு அதிவியாப்தியை நிவர்த்தி செய்யும் பொருட்டு அந்த லக்ஷணத்தில் "திரவியம்" என்னும் பதங் கூறப்பட்டது. ஆகாச முதலியனவைகளில் ஓர் திரவியத்திற்கும் சமவாயி காரணத் தன்மையின்றாம். ஆகையால் ஆகாச முதலியத் திரவியங்களில் அவயவத்தின் லக்ஷணத்திற்கு அதிவியாப்தியுண்டாகாது. அல்லது "திரவிய காரணம் அவயவம்" என விம்மாத்திரமே அவயவத்தின் லக்ஷணமாகக்கூறி அந்த லக்ஷணத்தில் "சமவாயி" என்னும் பதங் கூறாவிடின் தந்து முதலிய அவயவங்களின் சையோகமும் பட முதலியத் திரவியங்களின் அசமவாயி காரணமாகின்றது. காலம், திக்கு, ஈஸ்வரன், பிராகபாவமிவை முதலியனவும் கட முதலிய திரவியங்களின் நிமித்த காரணமாகின்றன. அவ்வெல்லாக் காரணங்களில் அவயவத்தின் லக்ஷணத்திற்கு அதிவியாப்தி யுண்டாகும். அவ்வதிவியாப்தி தோஷத்தை நிவர்த்தி செய்யும் பொருட்டு அந்த லக்ஷணத்தில் "சமவாயி" என்னும் பதங் கூறப்பட்டது. ஆண்டு அவயவ சையோக முதலிய காரணங்களில் திரவியத்தின் சமவாயி காரணத் தன்மையின்றாம். ஆகையால் அக்காரணங்களில் அவயவத்தின் லக்ஷணத்திற்கு அதிவியாப்தியுண்டாகாது.

உகஉ. அவயவியின் லக்ஷணம்.

"ஜந்யத்ரவ்யம் அவயவீ" (இ-ள்.) உற்பத்தியாகுந் திரவியம் யாதோ அது அவயவியெனப்படும். ஆண்டுப் பிருதிவியின் துவியணுக முதலாக உற்பத்தியுடைய பார்த்திவத் திரவியங்களும், ஜலத்தின் துவியணுக முதலாக உற்பத்தியுடைய ஜலீயத் திரவியங்களும், தேயுவின் துவியணுக முதலாக உற்பத்தியுடையத் தேயுத் திரவியங்களும், வாயுவின் துவியணுக முதலாக உற்பத்தியுடைய வாயவீயத்திரவியங்களுமாம் எல்லா ஜன்னியத் திரவியங்களும் அவயவியெனப்படுகின்றன. ஆண்டு "திரவியம் அவயவீ" என விம்மாத்திரமே அவயவியின் லக்ஷணமாகக் கூறி அந்த லக்ஷணத்தில் "ஜன்னியம்" என்னும் பதங் கூறாவிடின் பரமாணு ஆகாச முதலிய நித்தியத் திரவியங்களில் அவயவியின் லக்ஷணத்திற்கு அதிவியாப்தி யுண்டாம். அவ்வதிவியாப்தி தோஷத்தை நிவர்த்திக்கும் பொருட்டு அத்திரவியத்திற்கு "ஜன்னியம்" என்னும் விசேஷணங் கூறப்பட்டது. "ஜன்னியம் அவயவீ" என விம்மாத்திரமே அவயவியின் லக்ஷணமாகக்கூறி அந்த லக்ஷணத்தில் "திரவியம்" என்னும் பதங் கூறாவிடின் உற்பத்தியுடைய குண, கருமங்களில் அவயவியின் லக்ஷணத்திற்கு

அதிவியாப்தியுண்டாம். அவ்வதிவியாப்தி தோஷத்தை நிவர்த்திக்கும் பொருட்டு "திரவியம்" என்னும் பதங் கூறப்பட்டது. அக்குண, கருமாதிகளில் திரவியத் தன்மையின்றாம். ஆகையால் குண, கருமங்களில் அவயவத்தின் லக்ஷணத்திற்கு அதிவியாப்தியுண்டாகாது.

உகங. யோனிஜம், அயோனிஜமென்னும் வேறுபாட்டால் சரீரத்தின் இருவித வர்ணனம்.

இவ்வாறாகக்கூறிய லக்ஷணத்தால் லக்ஷித அச்சரீரம் யோனிஜம், அயோனிஜமென்னும் வேறுபாட்டாலிருவகைத்தாம்.

உகச. யோனிஜ சரீரத்தின் வர்ணனம்.

"ஶுக்ரஶோணிதயோ: ஸம்யோகேந ஜந்யம் ஶரீரம் யோநிஜம்" (இ-ள்.) புருஷனது வீரிய வடிவ சுக்ரமும், ஸ்திரீயின் வீரிய வடிவ சோணிதமுமா மிரண்டுங் கலத்தலாலுண்டாகுஞ் சரீரம் யோனிஜமெனப்படும்.

உகரு அயோனிஜ சரீரத்தின் லக்ஷணம்.

"யோநிஜபிந்நம் ஶரீரம் அயோநிஜம்" (இ-ள்.) யோனிஜசரீரத்தினும் வேறான சரீரம் அயோனிஜமெனப்படும்.

உகசு. ஜராயுஜம், அண்டஜமென்னும் வேறுபாட்டால் யோனிஜ சரீரத்தின் வர்ணனம்.

யோனிஜ சரீரமும் ஜராயுஜம், அண்டஜமென்னும் வேறுபாட்டாலிருவகைத்தாம். ஆண்டு மாதாவின் உதரத்தில் பாலகனை ஆவரணஞ் செய்வதாகிய சர்மவிசேஷத்தினை ஜராயு (கருப்பை) என்பர். அஜ்ஜராயுவினின்றும் உண்டாகும் சரீரம் ஜராயுஜமெனப்படும். எங்ஙனம்: மனிதர், ஆ, குதிரை, எருமை, ஸ்வான மிவை முதலிய சரீரங்கள் ஜராயுஜமெனப்படும். ஸ்திரீயின் உதரத்தில் உண்டாகிய முட்டையினின்றும் உண்டாம் சரீரம் அண்டஜமெனப்படும். எங்ஙனம்: பக்ஷி, சர்ப்ப முதலிய சரீரங்கள் அண்டஜமெனப்படும்.

உகஎ. ஸ்வேதஜம், உத்பிஜ்ஜம், அதிர்ஷ்டவிசேஷ மென்னும் வேறுபாட்டால் அயோனிஜ சரீரத்தின் மூவகை வர்ணனம்.

அயோனிஜ சரீரமும் ஸ்வேதஜம், உத்பிஜ்ஜம், அதிர்ஷ்ட விசேஷ ஜன்னியமென்னும் வேறுபாட்டால் மூவகைத்தாம். ஆண்டு ஜலாதி வடிவ ஸ்வேதத்தால் (வேர்வையால்) உண்டாகும் சரீரங்கள் ஸ்வேதஜமெனப்படும். எங்ஙனம்: புழு, கொசு, ஈ முதலிய சரீரங்கள் ஸ்வேதஜமெனப்படும். அப்புழு முதலிய சரீரங்களினுற்பத்தி கேவலம் அதர்மத்தோடுங்கூடிய பரமாணுக்களாலேயே யுண்டாகின்றது. பிருதிவியினை பேதித்து தத்தம் விதையினின்றும் உற்பன்னமாகும் சரீரங்கள் உத்பிஜ்ஜமெனப்படும். எங்ஙனம்: மரம், கொடி, செடி இவை முதலியன உத்பிஜ்ஜ சரீரங்களெனப்படும். கேவலம்

புண்ணிய, பாப வடிவ அதிர்ஷ்ட விசேஷத்தாலேயே யுண்டாகுஞ் சரீரம் அதிர்ஷ்ட விசேஷத்தா லுண்டாம் சரீரங்களெனப்படும். எங்ஙனம்; ஸ்வர்க்கத்திலுள்ள தேவதா சரீரங்களும், நரகத்திலுள்ள நரகர் சரீரங்களும் அதிர்ஷ்ட விசேஷத்தா லுண்டாயின வெனப்படும். புண்ணிய விசேஷத் தோடுங்கூடிய பரமாணுக்களாலே தேவசரீரங்களின் உற்பத்தி யுண்டாகின் றது. பாப விசேஷத்தோடுங் கூடிய பரமாணுக்களால் நரகர் சரீரங்களின் உற்பத்தியுண்டாகின்றது.

சங்கை:—தேவர்களின் சரீரங்கள் அயோனிஜமேயா மென்னும் அர்த்தத்திற் பிரமாணம் யாது?

உகஅ. தேவர் சரீரங்களில் சுருதிப் பிரமாணத்தால் அயோனிஜத் தன்மையினது சித்தியின் வர்ணனம்.

சமாதானம்:—தேவ சரீரங்களின் அயோனிஜத்தன்மையில் சாக்ஷாத் வேதத்தின் சுருதியே பிரமாணமாம். அந்தச் சுருதி "[illegible]" (இ-ள்.) மனு முதலியோர் பிரஹ்மாவின் மானச புத்திரர்களாம். அதாவது, அதிர்ஷ்ட விசேஷ வசமாக மனு முதலி யோர் கேவலம் பிரஹ்மாவின் சங்கல்ப மாத்திரத்தாலேயே யுண்டாயினர். மனிதர் முதலிய சரீரங்களைப்போன்று சுக்ல, சுரோணிதத்தின் கலப்பால் மனு முதலியோரின் சரீரம் உண்டாயினவன்று என்னும் இச்சுருதி தேவர் முதலிய வர்களின் சரீரத்திற்கு அயோனிஜமே கூறியிருக்கிறது.

சங்கை:—"[illegible]" (இ-ள்.) சுக்ல, சுரோணிதத் தின் கலப்பு வடிவ யோனியின்றி சரீரம் உண்டாவதின்று என்னும் இச் சுருதி எல்லாச் சரீரங்கட்கும் யோனிஜம் கூறியதாகி அயோனிஜ சரீரத்தின் நிஷேதமே கூறியிருக்கின்றது. ஆகையால் இச்சுருதியினும் விருத்தமாகிய முற்கூறிய சுருதி அயோனிஜ சரீரத்தினைச் சித்தம் செய்வதெப்படியாகும்.

சமாதானம்:—"யோனியின்றி சரீரமில்லை" என்னும் சுருதியிலுள்ள யோனி சத்தம் சுக்ல, சுரோணிதத்தின் கலத்தல் வடிவ யோனியின் வாசக மன்று. ஆனால் அந்த யோனி சத்தம் காரணத்தின் வாசகமாம். அதாவது காரணமின்றி ஓர் சரீரத்தினுற்பத்தியும் உண்டாவதன் றென்னும் அர்த்தம் அச்சுருதியால் சித்தமாயின்றது. தேவர் முதலியவர்களின் சரீரங்களும் அதிர்ஷ்ட முதலிய காரணங்களாலுண்டாவனவேயாம். ஆகையால் அவ் விரு சுருதிகட்கும் பரஸ்பரம் விரோதமுண்டாகாது. அல்லது "யோனி யின்றி சரீரமில்லை" எனக் கூறிய சுருதியிலுள்ள யோனி சத்தத்தால் சுக்ல, சுரோணிதத்தின் கலப்பு வடிவ யோனியினையே கிரஹிக்குக. ஆனால் அச்சுருதியிலுள்ள சரீர சத்தத்தால் சரீர மாத்திரத்தினைக் கிரஹிப்பதன்று. சரீர சத்தத்தால் கேவலம் மனிதர், பசு, பக்ஷி, முதலிய ஜராயுஜ அண்டஜ சரீரங்களையே கிரஹிக்குக. அதனால் சுக்ல, சுரோணிதத்தின் கலப்பு வடிவ யோனியின்றி மனிதர் முதலிய சரீரங்களின் உற்பத்தியுண்டாகாதென்னுமிது அச்சுருதியின் அர்த்தமாகச் சித்தமாகின்றது. ஆகையாலும் அவ்விரு சுருதி கட்கும் விரோதமுண்டாகமாட்டாது.

உகக. மர முதலியவைகளில் சரீரத்தினது அபாவத்தின் சங்கை.

சங்கை:—எங்ஙனம்; மனிதர், பசு, பக்ஷி, புழு, இவை முதலிய சரீரங்களில் உலகவருக்குச் சரீர வடிவத்தன்மை தோற்றுகிறதோ அங்ஙனம் மரம், கொடி, செடி முதலியவைகளில் ஒருவருக்கும் சரீரத் தன்மை பிர தீதியாகிறதில்லை. ஆகையால் எங்ஙனம் மனிதர், பசு முதலிய தேகங்கள் ஜீவாத்மாவின் சரீர வடிவமாமோ அங்ஙனம் அம்மர முதலியன ஓர் ஜீவாத் மாவின் சரீர வடிவமன்றா மென்னுஞ் சங்கையுண்டாக இனி அநுமானப் பிரமாணத்தால் மர முதலியவைகளில் சரீரத் தன்மையைச் சித்தஞ்செய்வாம்.

உஉ௦. மர முதலியவைகளில் அநுமானப் பிரமாணத்தால் சரீர வடிவத்தன்மை சித்தியின் வர்ணனம்.

அவ்வநுமானத்தின் ஆகாரமிதுவாம் "[illegible]" (இ-ள்.) மரம், கொடி முதலியன சரீர வடிவமாக யோக்கியமாம் பிராணவாயுவின் சம்பந்தமுடைய தாவதால், எவ்வெத்திரவியம் பிராணவாயுவின் சம்பந்தமுடையதாமோ அவ் வத்திரவியம் சரீர வடிவமேயாகின்றது. எங்ஙனம்; மனிதர் முதலிய தேகம் பிராணவாயுவின் சம்பந்தமுடையனவாவதால் சரீர வடிவமாமோ, அங்ஙன மே மர முதலியனவும் பிராணவாயுவின் சம்பந்தமுடையன வாவதால் சரீர வடிவமேயாகும் என்னு மிவ்வநுமானத்தால் மரம், கொடி முதலியவைகளில் சரீரத்தன்மையே சித்திக்கின்றது.

உஉக. மர முதலியவைகளில் பிராணவாயுவினது அபாவத்தின் சங்கை.

சங்கை:—எங்ஙனம் மனிதர் முதலிய சரீரங்களில் பிராணவாயுவின் சம்பந்தம் பிரத்தியக்ஷமாகப் பிரதீதியாகின்றதோ அங்ஙனம் மர முதலியவை களில் பிராணவாயுவின் சம்பந்தம் பிரத்தியக்ஷமாகப் பிரதீதியாகிறதில்லை. ஆகையால் பிராணவாயுவின் சம்பந்தத்தால் மர முதலியவைகளில் சரீரத் தன் மை எங்ஙனம் சித்திக்கும்; சித்தியாது. ஏனெனின், எவ்வேதுவு எப்பக்ஷத் தில் ஞாதமாகின்றதோ (அறியப்படுகின்றதோ) அவ்வேதுவே அப்பக்ஷத்தில் தனது சாத்தியத்தினைச் சித்திசெய்வதாகின்றது. எங்ஙனம் பர்வத வடிவ பக்ஷத்தில் அறியப்படும் புகை வடிவ ஏதுவே அப்பர்வதத்தில் அக்னி வடிவ சாத்தியத்தினைச் சித்தி செய்கின்றது. அறியப்படாத ஓர் ஏதுவும் தனது சாத்தியத்தினைச் சித்தி செய்கிறதில்லை.

உஉஉ. மர முதலியவைகளில் அநுமானப் பிரமாணத்தால் வாயுவினது சித்தியின் வர்ணனம்.

சமாதானம்:—மர முதலியவைகளில் பிராணவாயுவின் சம்பந்தம் பிரத் தியக்ஷமாகப் பிரதீதியாவதின்று. என்றாலும் வளர்ச்சி முதலிய ஏதுக்களால் பிராண வாயுவினது சம்பந்தத்தின் அநுமானமுண்டாகின்றது. அவ்வநுமா னத்தின் ஆகாரமிதுவாம். "[illegible]"

(இ-ள்.) இம்மரம் பிராணவாயுவின் சம்பந்தமுடையதாம் வளர்ச்சியுடைய தாவதால் அல்லது வெட்டடைந்த, சிதைவடைந்த அவயவங்களின் கூடுதற் றன்மை யுடையதாவதால் எவ்வெத்திரவியம் வளர்ச்சி யுடையதாகின்றதோ அல்லது வெட்டடைந்த, சிதைவடைந்த அவயவங்களின் கூடுதற்றன்மை யுடையதாகின்றதோ அவ்வத்திரவியம் பிராணவாயுவின் சம்பந்தமுடையதே யாகின்றது. எங்ஙனம் மனிதர் முதலிய சரீரங்கள் போலும் கருத்தி துவாரம். எங்ஙனம் மனிதர் முதலிய சரீரங்களில் சில கை, கால் முதலிய அவயவங்கள் வெட்டடைந்தும், சிதைவடைந்தும் சில காலத்திற்குப் பிறகு மீண்டும் முன் போன்று கூடிக்கொள்ளுகிறதோ அங்ஙனமே மர முதலியவைகளிலு முண் டாகின்றது. ஒவ்வொருகாலும் வளர்ச்சியாகிய விருத்தியும், குறைவாகிய நாசமும் எங்ஙனம் மனிதர் முதலிய சரீரங்களி லுண்டாகின்றனவோ அங்ங னமே அப்பெருக்கமும், குறைவும், மர முதலியவைகளிலு முண்டாகின்றன. ஆகையால் அம்மர முதலியனவும் மனிதர் முதலிய சரீரங்களைப்போன்று பிராணவாயுவின் சம்பந்த முடையனவேயாம். பிராணவாயுவின் சம்பந்த முடையன வாவதாலேயே அம்மர முதலியன மனிதர் முதலிய சரீரங்களைப் போன்று சரீர வடிவமேயாம். இவ்வாறாகக்கூறிய அநுமானப் பிரமாணத் தால் அம்மர முதலியவைகளில் சரீரத்தன்மையே சம்பவிக்கின்றது.

௨௨௬. மர முதலியவைகளில் சாத்திரப் பிரமாணத்தால் சரீரத்தன்மை சித்தியின் வர்ணனம்.

அல்லது அநுமானப் பிரமாணத்தால் மர முதலியவைகளில் சரீரத் தன்மை சித்திப்பதுடன் சாத்திரப் பிரமாணத்தாலும் மர முதலியவைகளில் சரீரத்தன்மையே சித்தமாம். அன்றிச் சுலோகம் "[illegible]" "[illegible]" (இ-ள்.) ஸ்ரீகர்மதாநதியின் கரைமேல் உண்டாகிய சரளார்ஜுனமெனப் பெயரியமரங்கள் கர்மதாநதியி னது ஜலஸ்பரிசத்தால் உண்டாகியதர்மங் காரணமாக பரமகதியை அடைவ னவாகின்றது. தனது குருவைக் குறித்து அதட்டிப்பேசுவதாலும், எதிர்த் துப் பேசுவதாலும், பிராமணரை விவாதத்தில் ஜெயித்து அவமானப்படுத் துவதாலு முண்டான பாபத்தின் வசத்தால் இப்புருஷன் மயான பூமியில் மரசரீரத்தினை யடைபவனாகின்றான் அம்மரம் மாம்சங்களை ஆகாரமாகவுடைய கழுகு, பருந்து முதலிய பக்ஷிகளால் சதாகாலமும் சேவிக்கப்படுவதாகின்றது. அன்றி முதலாவது சுலோகத்திலோ கர்மதா நதியின் ஜலஸ்பரிசத்தா லுண் டாகிய தர்ம விசேஷத்தின் வசத்தால் அம்மர அவச்சின்ன ஜீவாத்மாவிற்கு முற்கூறிய உத்தமகதியின் பிராப்தி அம்மரத்திற்கு ஜீவாத்மாவின் சரீர வடிவ மொப்புவதிலேயே சம்பவமாகிறது. ஏனெனின் சரீராவச்சின்ன ஜீவாத்மாவிற்கே அச்சரீரத்தோடு கங்காஜல முதலியவைகளின் ஸ்பரிசத்தா லுண்டாகிய தர்ம விசேஷங் காரணமாக சுப கதியின் பிராப்தி யுண்டாகின் றது. கடாவச்சின்ன ஆத்மாவிற்கு கங்காஜலமுதலியவைகளின் ஸ்பரிசத்தால்

தர்மவிசேஷத்தின் உற்பத்தியும் தர்மத்தால் சுப கதியின் பிராப்தியும் உண்டா காது. ஆகையால் அம்மரத்தில் ஜீவாத்மாவின் சரீர வடிவத் தன்மை அவசிய மொப்பவேண்டும். இரண்டாவது சுலோகத்தில் குரு, பிராமணர்களின் திரஸ் காரத்தாலுண்டாகிய பாபத்தின் துக்க வடிவப் பயனை அநுபவிக்கும் பொ ருட்டு அஜ்ஜீவாத்மாவிற்கு மயானபூமியில் மரசரீரத்தின் பிராப்திக் கூறப்பட் டிருக்கிறது. அன்றி அம்மரத்திற்குச் சரீர வடிவ மொப்பாவிடின் அம்மராவச் சின்ன ஜீவாத்மாவில் அப்பாப கர்மத்தின் துக்க வடிவப் பயனது போகம் சம்பவியாததாகும். ஏனெனின், சரீராவச்சின்ன ஆத்மாவிலேயே சுக துக்கங் களின் சாக்ஷாத்கார வடிவ போகமுண்டாகின்றது. கடாவச்சின்ன ஆத்மா வில் அப்போகமுண்டாகிறதில்லை. எவ்வவச்சின்ன ஆத்மாவில் அப்போக முண்டாகின்றதோ அது சரீரமேயாகின்றது. இக்காரணத்தாலேயே சாத் திர வேத்தா புருஷர்கள் "[illegible]" என சரீரத்தின் லக்ஷ ணங் கூறியுள்ளார், ஆகையால் சாத்திரப் பிரமாணத்தாலும் அம்மர முதலிய வைகளிற் சரீர வடிவமே சித்தமாகின்றது. இதனாலும் சரீரத்தின் லக்ஷணம் நிரூபிக்கப்பட்டது. இனி கிராண, ரசன, சக்ஷு, துவக், சுரோத்திரம், மன மென்னும் ஆறு விந்திரியங்களின் சாதாரண லக்ஷணத்தினைக் கூறுவாம்.

௨௨௭. இந்திரிய சாமான்னியத்தின் லக்ஷணம்.

"[illegible]" (இ-ள்.) எத்திரவியம் சத்தத்தி னும் வேறான உத்பூத விசேஷ குணங்களின் ஆசிரயமாகாது. ஞானத்தின் காரணமாகிய மனதின் சையோகத்திற்கு ஆசிரயமாகின்றதோ அத்திரவியம் இந்திரியமெனப்படும். அத்தகையது கிராண முதலிய ஆறு விந்திரியங்க ளாம். அன்றி கட முதலிய வைகளிலிருக்கும் உருவ முதலிய குணங்கள் யாவையோ அவ்வுருவ முதலிய குணங்கள் சத்த குணத்தினும் வேறாமாம். அங்ஙனமே உத்பூதமும் விசேஷ குணமுமாம். அத்தகைய சத்தத்தினும் வேறான உத்பூத விசேஷ குணங்களின் ஆசிரய வடிவம் அக்கட முதலிய திரவி யங்களாம். கிராண முதலிய ஆறு விந்திரியங்களோ அச்சத்தத்தினும் வேறான உத்பூத விசேஷ குணங்களின் ஆசிரயமாகாதனவேயாம். ஞானத் தின் காரணமாகிய மனச்சையோகம் யாதோ அச்சையோகத்திற்கும் கிராண முதலிய ஆறு விந்திரியங்கள் ஆசிரய வடிவமுமாம். ஆகையால் கூறிய கிராண முதலிய ஆறு விந்திரியங்களின் லக்ஷணம் சம்பவிக்கின்றது. அன்றி முதலில் ஜீவாத்மாவிற்கு மனதினொடு சையோக சம்பந்த முண்டாகின்றது. அதன் பின்னர் அவ்வாத்ம சம்புக்த மனதிற்கு அக்கிராணாதி இந்திரியங்களோடு சையோக சம்பந்தமுண்டாகின்றது. அதன் பின்னர் அம்மன சம்புக்த கிராண முதலிய விந்திரியங்களுக்கு கந்த முதலிய அர்த்தங்களோடு யோக்கிய சை யோக சம்புக்த சமவாயாதி வடிவ சம்பந்தமுண்டாகின்றது. அதன் பின்னர் அக்கந்தமுதலிய அர்த்தங்களின் பிரத்தியக்ஷ ஞான முண்டாகின்றது. இவ் வாறாய வழியின்றி ஓர் அர்த்தத்தின் பிரத்தியக்ஷ ஞானமுமுண்டாகிறதில்லை. இவ்வாறாக அவ்விந்திரிய மனதின் சையோகமும் அந்த ஞானத்தின் காரண

மாகின்றது. அச்சையோகத்தின் ஆசிரயத் தன்மை அக்கிராண முதலிய வெல்லா விந்திரியங்களிலுமிருக்கின்றன. ஆண்டு "ஞானத்தின் காரணமான மனச்சையோகத்திற்கு ஆசிரயமிந்திரியம்" என விம்மாத்திரமே அவ்விந்திரியங்களின் லக்ஷணமாகக் கூறி, அந்த லக்ஷணத்தில் "சத்தத்திலும் வேறான உத்பூத விசேஷ குணங்கட்கு ஆசிரயமாகாததாய்" என்னும் பதங் கூறுமிடின் ஆத்மாவில் அந்த லக்ஷணத்திற்கு அதிவியாப்தி யுண்டாகும். எனெனின், எங்ஙனம் இந்திரிய மனச் சையோகம் பிரத்தியக்ஷ ஞானத்தின் காரணமாகின்றதோ அங்ஙனமே ஆத்ம மனச் சையோகமும் அந்த ஞானத்தின் காரணமாகின்றது. அந்த ஞானத்தின் காரணமாகிய மனச் சையோகத்தின் ஆசிரயத் தன்மை எங்ஙனம் அம்மனத்திற்காமோ அங்ஙனமே ஆத்மாவிற்குமாம். ஆகையால் ஆத்மாவில் அவ்விந்திரியத்தின் லக்ஷணத்திற்கு அதிவியாப்தி யுண்டாகும். அவ்வதிவியாப்தி தோஷத்தை நிவர்த்தி செய்வான் வேண்டி அந்த லக்ஷணத்தில் "சத்தத்திலும் வேறான உத்பூத விசேஷ குணத்திற்கு ஆசிரயமாகாததாய்" என்னும் விசேஷணங் கூறப்பட்டது. ஆண்டு சத்தத்திலும் வேறான ஞானம், சுகம், துக்காதி வடிவ விசேஷ குணங்கள் யாவையோ அக்குணங்களுக்கு அவ்வாத்மா ஆசிரய வடிவமேயாம். ஆசிரயமாகாததன்று. ஆகையால் அவ்விசேஷணத்தைக் கூறுவதால் அவ்வாத்மாவில் அந்த லக்ஷணத்திற்கு அதிவியாப்தி யுண்டாகாது. அல்லது "சத்தத்திலும் வேறான உத்பூத விசேஷ குணத்திற்கு ஆசிரயமாகாதது விந்திரியம்" என விம்மாத்திரமே அவ்விந்திரியத்தின் லக்ஷணமாகக் கூறி அந்த லக்ஷணத்தில் "ஞானத்தின் காரணமான மனச் சையோகத்திற்கு ஆசிரயம்" என்னும் பதங் கூறாவிடின் காலம், திக்குகளிலும், குண, கரும முதலிய பதார்த்தங்களிலும் அந்த லக்ஷணத்திற்கு அதிவியாப்தியுண்டாம். எனெனின், காலத்திலும், திசையிலும் ஓர் விசேஷ குணமு மிருப்பதின்று. சங்கியை முதலிய ஐந்து சாமான்னிய குணங்களே யிருக்கின்றன. குணம், கரும முதலிய பதார்த்தங்களிலோ ஓர் குணமுமிருப்பதின்று. ஆகையால் கால, திசைகளும், குணம், கரும முதலிய பதார்த்தங்களும் அச்சத்தத்திலும் வேறான உத்பூத விசேஷ குணங்களின் ஆசிரயமாகாதனவேயாம். அக்கால, திக்குகளில் அந்த லக்ஷணத்திற்கு அதிவியாப்தி தோஷத்தை நிவர்த்தி செய்வான் கருதி அந்த லக்ஷணத்தில் "ஞானத்திற்குக் காரணமான மனச்சையோகத்தின் ஆசிரயம்" என்னும் விசேஷ்ய பாகம் கூறப்பட்டது. ஆண்டு அக்கால முதலியவைகளில் ஞானத்தின் காரணமாகிய மனச் சையோகத்தின் ஆசிரயத் தன்மையின்றும். ஆகையால் அக்காலம், திக்கு முதலியவைகளில் அந்த லக்ஷணத்திற்கு அதிவியாப்தி யுண்டாகாது. அல்லது "உத்பூத விசேஷ குணத்திற்கு ஆசிரயமாகாததாகி ஞானத்திற்குக் காரணமான மனச் சையோகத்திற்கு ஆசிரயமாவது இந்திரியம்" என விம்மாத்திரமே அந்த விந்திரியத்தின் லக்ஷணமாகக் கூறி அந்த லக்ஷணத்தில் "சத்தத்திலும் வேறான" என்னும் பதங் கூறாவிடின் சுரோத்திர இந்திரியத்தில் அந்த லக்ஷணத்திற்கு அவ்வியாப்தியுண்டாம். எனெனின், ஆகாச வடிவ சுரோத்திர விந்திரியத்தில் உத்பூத விசேஷ குணத்தின் ஆசிரய

மாகாத் தன்மையின்றும். அச்சுரோத்திர இந்திரியம் சத்தமாகிய உத்பூத விசேஷ குணத்தின் ஆசிரய வடிவமேயாம். அச்சுரோத்திர இந்திரியத்தில் அந்த லக்ஷணத்திற்கு அதிவியாப்தியை நிவர்த்தி செய்யும் பொருட்டு அந்த லக்ஷணத்தில் அவ்வுத்பூத விசேஷ குணத்திற்கு "சத்தத்திலும் வேறான" என்னும் விசேஷணங் கூறப்பட்டது. ஆண்டு சுரோத்திர விந்திரியத்தில் அச்சத்தமாகிய உத்பூத விசேஷ குணத்தின் ஆசிரயத்தன்மையிருக்கின்றது. என்றாலும், அச்சத்தத்திலும் வேறான உருவ முதலிய உத்பூத விசேஷ குணங்களின் ஆசிரயத் தன்மையின்றும். ஆகையால் அச்சுரோத்திர இந்திரியத்தில் அந்த லக்ஷணத்திற்கு அதிவியாப்தி யுண்டாகாது. அல்லது "சத்தத்திலும் வேறான விசேஷ குணத்திற்கு ஆசிரயமாகாததாய் ஞானத்திற்கு காரணமான மனச் சையோகத்திற்கு ஆசிரயமாவ திந்திரியம்" என விம்மாத்திரமே அவ்விந்திரியத்தின் லக்ஷணமாகக் கூறி அந்த லக்ஷணத்தில் "உத்பூதம்" என்னும் பதங் கூறாவிடின் சுரோத்திரம், மன மென்னு மிரு திரவியங்களிலோ அந்த லக்ஷணம் பொருந்தும். ஆனால் கிராணம், ரசனம், சக்ஷு, துவக்கு வென்னும் நான்கு விந்திரியங்களில் அந்த லக்ஷணத்திற்கு அவ்வியாப்தியே யுண்டாம். எனெனின், அந்நான்கு விந்திரியங்களில் சத்தத்திலும் வேறான விசேஷ குணங்களுக்கு ஆசிரயமாகாத் தன்மையில்லை. ஆனால் அநுத்பூத உருவ முதலிய விசேஷ குணங்களின் ஆசிரயத் தன்மையிருக்கின்றது. அந்த அவ்வியாப்தி தோஷத்தை நிவர்த்தி செய்யும் பொருட்டு அந்த லக்ஷணத்தில் அவ்விசேஷ குணங்களுக்கு "உத்பூதம்" என்னும் விசேஷணங் கூறப்பட்டது. ஆண்டுக் கிராண முதலிய நான்கு விந்திரியங்கட்கு அநுத்பூத உருவ முதலிய விசேஷ குணங்களின் ஆசிரயத் தன்மை யிருக்கின்றது என்றாலும் உத்பூத உருவ முதலிய விசேஷ குணங்களின் ஆசிரயத் தன்மையின்றும். ஆகையால் கிராண முதலிய நான்கு விந்திரியங்களில் அந்த லக்ஷணத்திற்கு அவ்வியாப்தி யுண்டாகாது. அல்லது "சத்தத்திலும் வேறான உத்பூத குணங்கட்கு ஆசிரயமாகாததாய் ஞானத்திற்குக் காரணமான மனச் சையோகத்தின் ஆசிரயமாவது இந்திரியம்" என இம்மாத்திரமே அவ்விந்திரியத்தின் லக்ஷணமாகக் கூறி அந்த லக்ஷணத்தில் "விசேஷம்" என்னும் பதங் கூறாவிடின் இந்த லக்ஷணம் ஓர் விந்திரியத்தினிடத்தும் பொருந்தாது. ஆகையால் லக்ஷிய மாத்திரத்தில் இல்லாததாவதால் அந்த லக்ஷணம் அசம்பவ தோஷமுடையதாம். எனெனின், சத்தத்திலும் வேறானதும் உத்பூதமுமாம் அத்தகைய சையோக முதலிய சாமான்னிய குணங்கள் யாவையோ அவைகளுக்கு ஆசிரயமாகாத் தன்மை ஓர் விந்திரியத்தினிடத்துமின்று. சர்வ விந்திரியங்களும் அச்சையோக முதலிய குணங்களின் ஆசிரய வடிவமேயாம். அவ்வசம்பவ தோஷத்தை நிவர்த்தி செய்யும் பொருட்டு அந்த லக்ஷணத்தில் "விசேஷம்" என்னும் பதங் கூறப்பட்டது. ஆண்டு சையோக முதலியன விசேஷ குணங்களன்று சாமான்னிய குணங்களாம். ஆகையால் அவ்விசேஷமென்னும் பதத்தைக் கூறுவதால் அச்சையோக முதலிய சாமான்னிய குணங்கள் மூலமாக அந்த லக்ஷணத்திற்கு அசம்பவ தோஷத்தின் பிராப்தி யுண்டாகாது. அல்லது "சத்தத்திலும் வேறான உத்பூத விசேஷ குணத்திற்கு ஆசிரயமாகாது காரண மனச் சையோகத்

தின் ஆசிரயமாவது இந்திரியம்" எனவிம்மாத்திரமே அவ்விந்திரியத்தின் லக்ஷணமாகக் கூறி அந்த லக்ஷணத்தில் "ஞானம்" என்னும் பதங் கூறாவிடின் கால திசைகளில் அந்த லக்ஷணத்திற்கு அதிவியாப்தியுண்டாம். ஏனெனின், கால மனச் சையோகம் அல்லது திசை மனச்சையோகமும் தனது துவம்சத்திற்குக் காரணமேயாம். அக்காரண வடிவ மனச்சையோகத்தின் ஆசிரயத் தன்மை அக்கால திசைகளிலுமிருக்கின்றது. அங்ஙனமே கால திசைகளில் சத்தத்தினும் வேறான உத்பூத விசேஷ குணங்களின் ஆசிரயமாகாத் தன்மையுமிருக்கின்றது. அக்கால திசைகளில் அந்த லக்ஷணத்திற்கு அதிவியாப்தியை நிவர்த்தி செய்யும் பொருட்டு அந்த லக்ஷணத்தில் "ஞானம்" என்னும் பதங் கூறப்பட்டது. அன்றி கால மனச்சையோகம், அல்லது திக்கு மனச்சையோகம் தன் துவம்சத்தைக் குறித்துக் காரணமாயினும் ஞானத்திற்குக் காரணமன்று. ஆகையால் அந்த லக்ஷணத்திற்கு கால, திசைகளில் அதிவியாப்தியுண்டாகாது. அல்லது "சத்தத்தினும் வேறான உத்பூத விசேஷ குணத்திற்கு ஆசிரயமாகாது ஞானத்திற்குக் காரணமான சையோகத்தின் ஆசிரயமாவது இந்திரியம்" எனவிம்மாத்திரமே அவ்விந்திரியத்தின் லக்ஷணமாகக் கூறி அந்த லக்ஷணத்தில் "மனம்" என்னும் பதங் கூறாவிடின் சக்ஷுர் இந்திரியத்தை ஆரம்பிக்கும் அவயவங்களில் அந்த லக்ஷணத்திற்கு அதிவியாப்தியுண்டாம். ஏனெனின், பிராசீன நையாயிகர்கள் கடமுதலியவைகளினது பரிமாணத்தின் சாக்ஷுஷப் பிரத்தியக்ஷத்தில், அச்சக்ஷுர் இந்திரியத்தின் அவயவத்தினதும் அக்கடமுதலிய திரவியங்களின் அவயவங்களினதும் சையோகமும் காரணமாக ஒப்புகின்றனர். அந்த ஞானத்தின் காரண வடிவ சையோகத்தின் ஆசிரயத் தன்மை அச்சக்ஷுர் இந்திரியத்தின் அவயவங்களிலுமிருக்கின்றது அங்ஙனமே சத்தத்தினும் வேறான உத்பூத விசேஷ குணங்களின் ஆசிரயமாகாத் தன்மையுமிருக்கின்றது. அந்த சக்ஷுர் இந்திரியத்தின் அவயவங்களில் அந்த லக்ஷணத்திற்கு அதிவியாப்தி தோஷத்தை நிவர்த்தி செய்யும் பொருட்டு அந்த லக்ஷணத்தில் "மனம்" என்னும் பதங் கூறப்பட்டது. அன்றி அச்சக்ஷுவின் அவயவங்களுக்கு ஞானத்தின் காரண வடிவ மனதின் சையோகத்திற்கு ஆசிரயத் தன்மையின்று; ஆகையால் மனமென்னும் பதத்தைக் கூறுவதால் சக்ஷுர் இந்திரியத்தின் அவயவங்களில் அந்த லக்ஷணத்திற்கு அதிவியாப்தியுண்டாகாது. நவீன நையாயிகர்களோ மனமென்னும் பதத்தைக் கூறுவதற்கு இப்பயன் கூறுகின்றனர். அந்த லக்ஷணத்தில் "மனம்" என்னும் பதத்தைக் கூறாவிடின் காலத்தில் அந்த லக்ஷணத்திற்கு அதிவியாப்தியுண்டாம். ஏனெனின் "காலத்தில் உருவமில்லை" என்னும் சாக்ஷுஷப் பிரத்தியக்ஷம் அக்காலத்தில் உருவாபாவத்தினை விஷயம் செய்கின்றது. எதுவெது பிரத்தியக்ஷ ஞானமாமோ அதுவது இந்திரிய அர்த்தங்களின் சம்பந்தத்தாலேயே உண்டாவதாகின்றது. இந்திரிய அர்த்தங்களின் சம்பந்தமின்றி அந்தப் பிரத்தியக்ஷ ஞானமுண்டாகாது. ஆகையால் அவ்வுருவாபாவத்தோடு சக்ஷுர் இந்திரியத்தின் சக்ஷுர் சம்யுக்த விசேஷணத் தன்மை சம்பந்தம் யாதோ அச்சம்பந்தமே அவ்வுருவாபாவத்தின் பிரத்தியக்ஷத்தில் காரணமாம். அன்றி சக்ஷுவின் சையோக முடையதாவதால்

சக்ஷுர் சம்யுக்த காலம் யாதோ அக்காலத்தில் அவ்வுருவாபாவம் விசேஷணமாம். இவ்வாறாக சக்ஷுர் சம்யுக்த விசேஷணத் தன்மை வடிவ பரம்பரைச் சம்பந்தத்தினை நிகழச் செய்யும் சக்ஷுவிற்கு காலத்தினோடு சையோக சம்பந்தம் யாதோ அச்சையோக சம்பந்தமும் அப்பரம்பரைச் சம்பந்தத்தினை நிகழச்செய்யுந் தன்மை வடிவமாக அவ்வுருவாபாவத்தின் பிரத்தியக்ஷத்தில் காரணமேயாம். அத்தகைய ஞானத்தின் காரண வடிவ சையோகத்தின் ஆசிரய வடிவம் காலமாம். அங்ஙனமே அக்காலம் சத்தத்தினும் வேறான உத்பூத விசேஷ குணங்களின் ஆசிரயமாகாததுமாம். இவ்வாறாக அக்காலத்தில் அந்த லக்ஷணத்திற்கு அதிவியாப்தியுண்டாகின்றது. அவ்வதிவியாப்தி தோஷத்தை நிவர்த்தி செய்யும் பொருட்டு அந்த லக்ஷணத்தில் "மனம்" என்னும் பதங் கூறப்பட்டது. அன்றி அக்காலத்தில் ஞானத்தின் காரணமாகிய மனதின் சையோகத்திற்கு ஆசிரயத் தன்மையின்றாம். ஆகையால் அக்காலத்தில் அந்த லக்ஷணத்திற்கு அதிவியாப்தியுண்டாகாது.

சங்கை:—"ஞானத்திற்குக் காரணமான மனச்சையோகத்திற்கு ஆசிரயம் இந்திரியம்" எனவிம்மாத்திரமே அவ்விந்திரியத்தின் லக்ஷணமாகக் கூறுவதால் ஆத்மாவில் அந்த லக்ஷணத்திற்கு அதிவியாப்தியுண்டாம். அவ்வதிவியாப்தியை நிவர்த்தி செய்யும் பொருட்டு அந்த லக்ஷணத்தில் "சத்தத்தினும் வேறான உத்பூத விசேஷ குணத்திற்கு ஆசிரயமாகாததாய்" என்னும் பதங் கூறப்பட்டது. அவ்வதிவியாப்தியோ "ஆத்மாவினும் வேறானது" என இவ்வளவு லகு விசேஷணத்தைக் கூறுவதாலேயே நிவர்த்தியாய் விடுகின்றது. ஆகையால் அவ்வதிவியாப்தி தோஷத்தை நிவர்த்தி செய்யும் பொருட்டு அந்த லக்ஷணத்தில் "சத்தத்தினும் வேறான உத்பூத விசேஷ குணத்தின் ஆசிரயமாகாததாய்" என அதி குருவாகிய விசேஷணங் கூறுவது பயனின்மையாம்.

சமாதானம்:—சுஷுப்தி காலத்தில் ஞானத்தினது உற்பத்தியின் ஆபத்தினை நிவர்த்தி செய்யும் பொருட்டு, சர்ம, மனச்சையோகத்தினை எந்நையாயிகர்கள் ஞானத்திற்குக் காரணமாக ஒப்பினரோ அவர்கள் மதத்தில், அவ்விந்திரியத்தின் லக்ஷணத்திற்கு அச்சர்மத்தில் அதிவியாப்தியுண்டாகும். ஏனெனின், அச்சர்மம் ஆத்மாவினும் வேறாம் ஞானத்தின் காரண வடிவ சர்ம மனச்சையோகத்திற்கு ஆசிரய வடிவமுமாம். அச்சர்மத்தில் அந்த லக்ஷணத்திற்கு அதிவியாப்தியை நிவர்த்தி செய்யும் பொருட்டு அந்த லக்ஷணத்தில் ஆத்மாவினும் வேறாந் தன்மை வடிவ லகு விசேஷணத்தினை தியாகம் செய்து சத்தத்தினும் வேறான உத்பூத விசேஷ குணத்திற்கு ஆசிரயமாகாத் தன்மையாகிய குரு விசேஷணங் கூறப்பட்டது. அந்த சர்மத்தில் சத்தத்தினும் வேறான உத்பூத விசேஷ குணங்களுக்கு ஆசிரயமாகாத்தன்மையின்றாம். ஆசிரயத் தன்மையேயிருக்கின்றது. ஆகையால் அச்சர்மத்தில் கூறிய அந்த லக்ஷணத்திற்கு அதிவியாப்தியுண்டாகாது. சண்டு த்வகிந்திரியமிருக்கும் இடத்தினை சர்மமென்பர்.

எந்நையாயிகர் மதத்தில் சர்ம மனச்சையோகம் ஞான மாத்திரத்திற்கு காரணமன்றோ ஆனால் புரீததியினும் பாகிய தேகாவச்சின்ன ஆத்ம மனச்

சையோகமே அந்த ஞான மாத்திரத்திற்கு காரணமாமோ அந்நையாயிகர் மதத்திலோ "ஆத்மாவினும் வேறான ஞானத்திற்கு காரணமான மனச்சையோகத்தின் ஆசிரயமாவது இந்திரியம்" என்னும் லக்ஷணமாகிய இந்திரியத்தின் லக்ஷணமே சம்பவிக்கின்றது. இவ்விரு மதமும் முன்னர் முதற் பரிச்சேதத்தில் முத்தி நிரூபணத்தில் விரிவாய்க் கூறி வந்துள்ளோம். இது காறும் கிராண முதலிய ஆறு இந்திரியங்களின் சாதாரண லக்ஷணங் கூறப்பட்டது. இனி பார்த்திவ, ஜலிய, தைஜச, வாயவீய மென்னும் நான்கு வகைத்தாய விஷயங்களின் சாதாரண லக்ஷணங் கூறுவாம்.

௨௨௫. விஷய சாமான்னியத்தின் லக்ஷணம்.

ஆண்டு "ஶரீரேந்த்ரியபிந்நத்வே ஸதி போகஸாதநீபூதோ விஷய:" (இ-ள்.) எத்திரவியம் சரீர, இந்திரியங்களினும் வேறாகி போகத்திற்குபயோகியாகின்றதோ அத்திரவியம் விஷயமெனப்படும். எங்ஙனம்: பிருதிவி, ஜலம், தேயு, வாயு வென்னும் நான்கின் துவியணுகமுதலிய காரியங்கள் முதற்கொண்டு தூலவடிவ பிருதிவி, ஜலம், தேயு, வாயு மட்டுமாம் எல்லாக்காரிய திரவியங்களும் சரீரம் இந்திரியத்தினும் வேறும் ஜீவர்களின் போகத்திற்குபயோகியுமாம். ஆகையால் துவியணுக முதல் தூல மட்டுமாம் காரியத் திரவிய வடிவ விஷயங்கட்கு கூறிய அந்த லக்ஷணம் சம்பவிக்கின்றது.

௨௨௬. போகத்தின் லக்ஷணம்.

ஆண்டு "ஸுகது:கா(ந்)யதர ஸாக்ஷாத்காரோ போக:" (இ-ள்.) யான் சுகி என்னும் சாக்ஷாத் காரத்தினையும், யான் துக்கி என்னும் சாக்ஷாத் காரத்தினையும் போகமென்பர். இவ்விரு போகத்திற் குபயோகியாம் திரவியம் விஷயமெனப்படும். ஆண்டு "போகத்திற் குபயோகி விஷயம்" என விம்மாத்திரமே விஷயத்தின் லக்ஷணமாகக்கூறி அந்த லக்ஷணத்தில், "சரீர இந்திரியத்தினும் வேறாகியது" என்னும் பதங் கூறாவிடின் சரீர இந்திரியங்களிலேயே அந்த லக்ஷணத்திற்கு அதிவியாப்தி யுண்டாகும். ஏனெனின், எங்ஙனம் அவ்விஷயங்களின்றி அப்போகம் சம்பவியாதாமோ அங்ஙனமே அச்சரீர இந்திரியங்களின்றியும் அப்போகம் சம்பவியாதாகும். ஆகையால் போகத்தி னுபயோகித் தன்மை அச்சரீர இந்திரியங்களினு மிருக்கின்றது. அச்சரீர இந்திரியங்களில் அந்த லக்ஷணத்திற்கு அதிவியாப்தியை நிவர்த்தி செய்வான் வேண்டி அந்த லக்ஷணத்தின் "சரீர இந்திரியத்தினும் வேறானது" என்னும் விசேஷணங் கூறப்பட்டது. ஆண்டு தனது பேதம் தனது ஸ்வரூபத்திலிருப்பதில்லை. ஆகையால் அச்சரீர இந்திரியங்களில் சரீர இந்திரியங்களின் பேதமின்றாம். ஆகையால் சரீர இந்திரியத்தில் அந்த லக்ஷணத்திற்கு அதிவியாப்தி யுண்டாகாது. அல்லது "சரீரத்தினும் இந்திரியத்தினும் வேறானது விஷயம்" என விம்மாத்திரமே அவ்விஷயத்தின் லக்ஷணமாகக்கூறி அந்தலக்ஷணத்தில் "போகத்திற்கு பயோகி" என்னும் பதங் கூறாவிடின், பரமாணு வடிவ நித்தியத்திரவியங்களில் அந்தலக்ஷணத்திற்கு அதிவியாப்தியுண்டாகும். எக்காரணத்தாலெனின், அப்பரமாணு வடிவ நித்தியத் திரவியம் அச்சரீர இந்

திரியத்தினும் வேறாமாம். அவ்வதிவியாப்தியை நிவர்த்தி செய்யும் பொருட்டு அந்தலக்ஷணத்தில் "போகத்திற்குபயோகி" என்னும் பதங் கூறப்பட்டது. ஆண்டு பரமாணு வடிவ நித்தியத் திரவியங்களில் போகத்தின் உபயோகித் தன்மையில்லை. ஆகையால் அப்பரமாணு வடிவ நித்தியத் திரவியங்களில் அந்தலக்ஷணத்திற்கு அதிவியாப்தி யுண்டாகாது.

௨௨௭. காரியத் திரவியங்கள் யாவற்றினும் விஷய வடிவத் தன்மையின் சாதகயுக்தி.

ஈண்டு கருத்திதுவாம். சர்வ காரிய மாத்திரத்தின் உற்பத்தி ஜீவர்களது புண்ணிய பாபமாகிய அதிர்ஷ்டத்தின் அதீனமாகின்றது. எக்காரியத்தின் உற்பத்தி எஜ்ஜீவனது புண்ணிய பாபமாகிய அதிர்ஷ்டத்தின் அதீனமாகின்றதோ அக்காரியம் அஜ்ஜீவாத்மாவின் போகத்தினை சாக்ஷாத் அல்லது பரம்பரையாக உண்டாக்குகின்றது. எக்காரணத்தாலெனின், பீஜம், பிரயோஜனமாம் இரண்டுமின்றி ஓர் காரியத்தி னுற்பத்தியும் உண்டாகாது, ஆனால் அப்பீஜப் பிரயோஜனங்களாலேயே சர்வ காரியங்களி னுற்பத்தி யுண்டாகின்றது. ஆண்டு ஜீவர்களின் புண்ணிய பாப வடிவ அதிர்ஷ்டமோ அக்காரியங்களின் உற்பத்தியில் பீஜமாம். அஜ்ஜீவர்களைக் குறித்த போகத்தின் பிராப்தி அக்காரியத்தினது உற்பத்தியின் பிரயோஜனமாம். இவ்வாறாக துவியணுக முதலாக பிரம்மாண்டபரியந்தம் எவ்வளவு காரியத் திரவியங்கள் இருக்கின்றனவோ அவ்வெல்லாக் காரியத் திரவியங்கள் ஜீவர்களது புண்ணிய பாபவடிவ அதிர்ஷ்டத்தாலுண்டாவன வாவதால் அஜ்ஜீவர்களுக்கு சாக்ஷாத் அல்லது பரம்பரையாக அப்போகத்தின் பிராப்தியை அவசியம் செய்கின்றன. ஆகையால் துவியணுக முதற்கொண்டு பிரம்மாண்டமட்டுமாம் எல்லாக்காரியத் திரவியங்கள் விஷய வடிவமேயாம்.

௨௨௮. காரிய மாத்திரத்திற்கு விஷய வடிவ மொப்புவதில் சரீரம், இந்திரியம், விஷய மென்னும் வேறுபாட்டின் அசித்தியின் சங்கை.

சங்கை:—கூறிய முறைப்படி துவியணுக முதற்கொண்டு பிரம்மாண்ட மட்டுமாம், எல்லாக் காரியத்திரவியங்களுக்கும் விஷய வடிவத் தன்மையின் பிராப்தமுண்டாக அவ்வெல்லாக் காரியத்தினிடையிலுள்ள சரீர இந்திரிய வடிவகாரியங்கட்கும் விஷய வடிவத் தன்மையே பிராப்தமாகும். ஆகையால் மேற்கூறப்பட்டுள்ள சரீரம், இந்திரியம், விஷயமென்னும் மூவகை வேறுபாடு சித்தியாததாகும்.

௨௨௯. கேட்போரது புத்தியைத் தெளிவித்தற் பொருட்டு அம்மூவகை வேறுபாட்டின் வர்ணனம்.

சமாதானம்:—உண்மை விசாரத்தால் நோக்கினோ சரீரம், இந்திரியம் என்னுமிரண்டிலும் விஷய வடிவத் தன்மையே சித்திக்கின்றது. விஷயத்தினும் வேறுமியத் தன்மை சித்தியாது. எனினும், நூலாசிரியரோ, சரீரம், இந்திரியம், விஷய மென்னும் மூன்றினை வெவ்வேறாக நிரூபித்துளார். அது கேட்போருக்குப் புத்தியினது பெருக்கத்தின் பொருட்டு நிரூபிக்கப்பட்டது.

௨௬௦. சூக்ஷ்ம திருஷ்டியால் பரமாணுக்களிலும் விஷய வடிவத் தன்மையின் வர்ணனம்.

அல்லது சூக்ஷ்ம விசாரத்தால் நோக்கின் பரமாணு வடிவ நித்தியத் திரவியங்களிலும் விஷயத் தன்மையே சித்தமாகின்றது. ஏனெனின், "சரீரத்திலும் இந்திரியத்திலும் வேறாய் போகத்திற்குவுபயோகி விஷயம்" என முற்கூறிய விஷயத்தின் லக்ஷணத்தில் "போகத்திற்கு வுபயோகி" என்னும் பதத்தால் சாக்ஷாத் போகத்தின் சாதனத் தன்மை அல்லது சாக்ஷாத் பரம்பரைச் சாதாரண போகத்தின் சாதனத் தன்மைக் கூறக்கருதியதாம். சாக்ஷாத் போகத்தின் சாதனத்தன்மை கூறக்கருதியதாயின் துவியணுகங்களிலும் அவ்விஷயத்தன்மை சித்தமாகாததாகும். ஏனெனில் சாக்ஷாத் போகத்தின் சாதனத் தன்மையோ துவியணுக முதலியவைகளிலுமில்லை. சாக்ஷாத் பரம்பரைச் சாதாரணபோகத்தின் சாதனத் தன்மைக் கூறக்கருதியதாயின் பரம்பரையாக போகத்தின் சாதனத் தன்மை எங்ஙனம் துவியணுக முதலியவைகளி லிருக்கின்றதோ அங்ஙனமே அப்பரமாணுக்களிலும் இருக்கின்றது. ஆகையால் அத்துவியணுகங்களைப் போன்று அப்பரமாணுவும் விஷய வடிவமாகவே சித்திக்கின்றது. இவ்வாற்றானேயே சில நியாய நூற்களில் காரிய வடிவப் பிருதிவி ஜல, முதலியவைகளுக்கு அச்சரீரம், இந்திரியம், விஷய வடிவத்தால் வேறுபாடு கூறப்படவில்லை. ஆனால் சாமான்னியத்தானேயே அந்தப் பிருதிவி ஜல, முதலியவைகளுக்கு, சரீர, இந்திரியம், விஷய வடிவத்தால் வேறுபாடு கூறப்பட்டிருக்கிறது. இதனாலும், சாமான்னியமாக சரீர, இந்திரிய, விஷய மென்னும் மூன்றின் நிருபணஞ் செய்யப்பட்டது. இனி பார்த்திவ சரீரம், பார்த்திவ விந்திரியம், பார்த்திவ விஷய மென்னும் மூன்றின் ஸ்வரூபம் வர்ணிப்பாம். அவற்றுள்ளும் முதலில் பார்த்திவ சரீரத்தின் வர்ணனஞ் செய்வாம்.

௨௬௧. பார்த்திவ சரீரத்தின் லக்ஷணம்.

"கந்தவச்சரீரம் பார்த்திவசரீரம்" (இ-ள்.) எச்சரீரம் சமவாய சம்பந்தமாக கந்தகுண முடையதாமோ அச்சரீரம் பார்த்திவ சரீர மெனப்படும். எங்ஙனம், மனிதர், விலங்கு, பக்ஷி, மரம், புழு, இவை முதலிய சரீரங்கள் சமவாய சம்பந்தமாக அக்கந்தகுணமுடையனவாம். ஆகையால் மனிதர் முதலிய சரீரங்கள் பார்த்திவ சரீரமெனப்படும்.

௨௬௨. வேறுவகையாக பார்த்திவ சரீரத்தின் லக்ஷணம்.

தோன்றியழிந்த சரீரத்திலும், உற்பத்தி க்ஷணவச்சின்ன சரீரத்திலும், நறுநாற்ற, தீநாற்றமுடைய அவயவங்களாலுண்டான சரீரத்திலும் கந்தகுணத்தின் அபாவமிருப்பதால் கூறிய அந்த லக்ஷணத்திற்கு அவ்வியாப்தியே யுண்டாம். என்றாலும் முற்கூறிய பிருதிவியின் லக்ஷணத்தைப் போன்று ஈண்டும் "கந்தஸமாநாதிகரண த்ரவ்யத்வ வ்யாப்ய ஜாதிமச் சரீரம் பார்த்திவசரீரம்." என இவ்வாறாகப் பிருதிவித் தன்மை ஜாதியுள்ள லக்ஷணத்தைக் கூறுவதால் அச்சரீரத்தில் இந்த லக்ஷணத்திற்கு அவ்வியாப்தி யுண்டாகாது. ஈண்டு இந்த லக்ஷணத்தில் "சரீரம்" என்னுமிப்பதம் பார்த்திவ விந்திரிய விஷயங்களில் அந்த லக்ஷணத்திற்கு அதிவியாப்தியைநிவர்த்திக்கும் பொருட்டாம். மற்றைய பதங்களின் பயனை முற்கூறிய பிருதிவியின் லக்ஷணத்தைப் போன்று அறிந்து கொள்க.

௨௬௩. பார்த்திவ சரீரம் யோனிஜம், அயோனிஜம் என்னும் வேறுபாட்டால் இருவிதப் பிரிவின் வர்ணனம்.

கூறிய அப்பார்த்திவ சரீரம், யோனிஜம், அயோனிஜ மென்னும் வேறுபாட்டால் இருவகைத்தாம். ஆண்டு அந்த யோனிஜ பார்த்திவ சரீரமும் ஜராயுஜம் அண்டஜ மென்னும் வேறுபாட்டால் இருவகைத்தாம். அயோனிஜ பார்த்திவ சரீரமும், ஸ்வேதஜம், உத்பிஜ்ஜம், அதிர்ஷ்ட விசேஷ ஜன்னியமென்னும் வேறுபாட்டால் மூவகைத்தாம். ஆண்டு மனிதர், விலங்கு முதலிய சரீரங்களோ ஜராயுஜமெனப்படும். பக்ஷி, சர்ப்ப முதலிய சரீரங்களோ அண்டஜமெனப்படும். புழு, கொசு முதலிய சரீரங்கள் ஸ்வேதஜமெனப்படும். மரம், கொடி முதலிய சரீரங்கள் உத்பிஜ்ஜமெனப்படும். மனு முதலியவர்களின் சரீரங்கள் அதிர்ஷ்ட விசேஷ ஜன்னியமெனப்படும். யோனிஜ, அயோனிஜ சரீரங்களின் நிருபணம் முன் சரீர சாமான்னிய நிருபணத்தில் விரிவாய்க் கூறி வந்துள்ளோம். அது ஈண்டும் அறிந்து கொள்க.

சங்கை:—மனிதர் முதலிய சரீரங்களின் பார்த்திவத் தன்மையில் பிரமாணம் யாதென்னுஞ் சங்கையின் பிராப்தமுண்டாக இனி அநுமானப் பிரமாணத்தால் மனிதர் முதலிய சரீரங்களில் பார்த்திவத்தன்மையை நிலை நாட்டுவாம்.

௨௬௪. மனிதர் முதலிய சரீரங்களில் அநுமானப் பிரமாணத்தால் பார்த்திவத் தன்மையின் வர்ணனம்.

ஆண்டு மனிதர் முதலிய சரீரங்களில் கந்தப் பிரதீதியும், வெண்மை நிறத்திலும் வேறான கருமை, பொன்மை முதலிய உருவமும் பிரதீதியாகின்றன. அக்கந்த குணமும் கருமை, பொன்மை முதலிய உருவங்களும் பிருதிவியன்றி வேறோர் திரவியத்திலிருப்பனவன்று. கேவலம் பிருதிவியொன்றிலேயே யிருக்கின்றன. ஆகையால் அக்கந்த குணத்தால் அல்லது கருமை முதலிய உருவங்களால் இம்மனிதர் முதலிய சரீரங்களில் பார்த்திவத் தன்மையின் அநுமானமே யுண்டாகின்றது. அவ்வநுமானத்தின் ஆகாரமிதுவாம். "உதா—மநுஷ்யாதிசரீரம் பார்த்திவம் கந்தவத்வாத் கஸ்தூர்யாதிவத் வா க்ருஷ்ணரூபவத்வாத் வா" (இ-ள்.) மனிதர் முதலிய சரீரங்கள் பார்த்திவமாகயோக்கியமாம் கந்தகுணமுடையனவாவதால் அல்லது கருமை முதலிய உருவமுடையன வாவதால் எவ்வெத்திரவியம் கந்தகுணமுடையதாமோ அல்லது கருமை முதலிய உருவமுடையதாமோ அவ்வத்திரவியம் பார்த்திவமேயாம். எங்ஙனம் பிரசித்த கஸ்தூரி, குசும முதலிய திரவியங்கள் கந்தகுணமுடையனவாவதால் அல்லது கருமை முதலிய உருவமுடையனவாவதால் பார்த்திவ வடிவமாமோ அங்ஙனமே மனிதர் முதலிய சரீரங்

களும் கந்தகுண முடையனவாவதால் அல்லது கருமை முதலிய உருவ முடையனவாவதால் பார்த்திவ வடிவமேயாகும் இவ்வாறுய அநுமானத்தால் மனிதர் முதலிய சரீரங்களில் பார்த்திவத் தன்மையே நிலைக்கின்றது.

உருரு. மனிதர் முதலிய சரீரங்களில் ஜல முதலிய வடிவத் தன்மையின் சாதகச் சங்கை.

சங்கை :—அம்மனிதர் முதலிய சரீரங்களில் எங்ஙனம் பிருதிவியின் அசாதாரண தர்ம வடிவ கந்தம் பிரதீதியாகின்றதோ அங்ஙனமே ஜலத்தின் அசாதாரண தர்ம வடிவ ஸ்வேதமும் (வேர்வையும்), தேயுவின் அசாதாரண தர்ம வடிவ வெம்மையும், வாயுவின் அசாதாரண தர்ம வடிவ சுவாசஞ்சரித்த லுடைமையும், ஆகாசத்தின் அசாதாரண தர்ம வடிவ அவகாசமும் (இடமும்) பிரதீதியாகின்றன. ஆகையால் எங்ஙனம் கந்தமுடைமை வடிவ ஏதுவால் மனிதர் முதலிய சரீரங்களில் பார்த்திவத் தன்மை சித்தியாகின்றதோ அங்ஙனமே ஸ்வேதம், வெம்மை முதலிய ஏதுக்களால் மனிதர் முதலிய சரீரங்களில் ஜலீய, தைஜசாதி வடிவத் தன்மையும் சித்தமாய் விடுகின்றது. ஆகையால் மனிதர் முதலிய சரீரங்களில் ஜலீய, தைஜசாதி வடிவத் தன்மை ஏனுண்டாகக் கூடாது.

உருசு. மனிதர் முதலிய சரீரங்களில் பார்த்திவத் தன்மையினது சாதக யுக்தியினது வர்ணனம்.

சமாதானம் :—மரணம், மூர்ச்சை முதலிய காலங்களில் ஸ்வேதம், வெம்மை முதலியவைகளின் நாசமுண்டாயினும் மனிதர் முதலிய சரீரங்களில் சரீர வடிவமாக பிரத்தியபிஞ்ஞை யுண்டாகின்றது. அங்ஙனமே கந்தகுணத்தின் பிரதீதியும், கருமை முதலிய உருவங்களின் பிரதீதியும் அன்றி உண்டாகின்றன. ஆகையால் மனிதர் முதலிய சரீரங்களில் பார்த்திவத் தன்மையே சம்பவிக்கின்றது; ஜலீய, தைஜச முதலிய வடிவத் தன்மை சம்பவிக்கிறதில்லை.

சங்கை :—மனிதர் முதலிய சரீரங்களில் கேவலம் பார்த்திவத்தன்மையை அங்கீகரித்து ஜலீய, தைஜச முதலிய வடிவத் தன்மை அங்கீகரியாவிடின் மனிதர் முதலிய சரீரங்கட்கு சாத்திரத்தில் பாஞ்சபௌதிகத் தன்மைக் கூறப்பட்டது யாதோ அது அசங்கதமாகும்.

உருஎ. பார்த்திவ முதலிய சரீரங்களில் பஞ்சபூதோபாதானத் தன்மையின் கண்டனம்.

சமாதானம் :—மனிதர் முதலிய சரீரங்கட்குச் சாத்திரத்தில் பாஞ்சபௌதிகத்தன்மை கூறப்பட்டிருக்கிறதென்னும் வார்த்தை உண்மையாயினும் பிருதிவி, ஜலம், தேயு, வாயு, ஆகாசமென்னும் ஐந்து பூதங்கள் மனிதர் முதலிய சரீரங்களின் உபாதான காரணங்களாகின்றனவென்னுங் கருத்தால் சாத்திரமானது சரீரத்தில் பாஞ்சபௌதிகத் தன்மைக் கூறப்பட்டதன்று. ஆனால் மனிதர் முதலிய சரீரங்கள் ஐந்து பூதங்களாலேயே யுண்டாகின்றனவென்னுங் கருத்தாக அச்சரீரத்தில் சாத்திரமானது பாஞ்சபௌதிகத் தன்மைக்கூறப்பட்டிருக்கின்றது. ஆன்றி மனிதர்முதலியபார்த்திவசரீரங்களிலோ

பிருதிவியொன்றே உபாதான காரணமாகின்றது. மற்றய ஜலமுதலிய நான்கு பூதங்களும் நிமித்த காரணமாகின்றன. அங்ஙனமே வருணலோகத்திலுள்ள ஜலீய சரீரங்களிலோ ஜலமொன்றே உபாதான காரணமாகின்றது. மற்றய பிருதிவி முதலிய நான்கு பூதங்கள் நிமித்த காரணமாகின்றன. அங்ஙனமே சூரிய லோகத்திலுள்ள தைஜச சரீரத்தில் தேயுவொன்றே உபாதான காரணமாகின்றது. மற்றய பிருதிவி முதலிய நான்கு பூதங்கள் நிமித்த காரணமாகின்றன. அங்ஙனமே வாயு லோகத்திலுள்ள வாயவீய சரீரங்களிலோ வாயுவொன்றே உபாதான காரணமாகின்றது. மற்றய பிருதிவி முதலிய நான்கு பூதங்கள் நிமித்த காரணமாகின்றன. இதுகாறும் பார்த்திவ சரீரத்தின் நிரூபணஞ் செய்யப்பட்டது. இனி பார்த்திவ இந்திரியத்தின் நிரூபணஞ் செய்வாம்.

உருஅ. கிராணமாகிய பார்த்திவ விந்திரியத்தின் லக்ஷணம்.

"கந்தவதிந்த்ரியம் பார்திவேந்த்ரியம்" (இ-ள்.) எவ்விந்திரியம் சமவாய சம்பந்தமாக கந்தகுணமுடையதாமோ அவ்விந்திரியம் பார்த்திவ விந்திரியமெனப்படும். சமவாய சம்பந்தமாக கந்தகுணமுடையது கிராண விந்திரியமொன்றேயாம். ஆகையால் கிராண விந்திரியம் பார்த்திவ விந்திரியமெனப்படும்.

உருகூ. பார்த்திவ விந்திரியத்தினை வேறுவகையாக வர்ணித்தல்.

நறுநாற்றத் திநாற்றமுடைய அவயவங்களாலுண்டான கிராண விந்திரியத்திலும், தோன்றியழிந்த கிராண விந்திரியத்திலும், உற்பத்திக்ஷணவச்சின்ன கிராண விந்திரியத்திலும் கந்த குணத்தின் அபாவமிருப்பதால் கூறிய லக்ஷணத்திற்கு அவ்வியாப்தியே யுண்டாகும். எனினும் முற்கூறிய பிருதிவியின் லக்ஷணத்தைப் போன்று ஈண்டும் "கந்த ஸஹகாரிகாரண த்ரவ்ய ஸாக்ஷாத் வ்யாப்ய ஜாதிமதிந்த்ரியம் பார்திவேந்த்ரியம்" என்னும் பிருதிவித் தன்மை ஜாதி பொருந்திய லக்ஷணத்தைக் கூறுவதால் அக்கிராண விந்திரியத்தில் இந்த லக்ஷணத்திற்கு அவ்வியாப்தி யுண்டாகாது. ஆன்றி இந்த லக்ஷணத்தில் "இந்திரியம்" என்னும் பதம் பார்த்திவ சரீர விஷயங்களில் அந்த லக்ஷணத்திற்கு அதிவியாப்தியை நிவர்த்தி செய்யும் பொருட்டாம். மற்றய பதங்களின் பயன் முற்கூறியவாறே அறிந்து கொள்க. கூறிய கிராண விந்திரியம் நாசி நுனியிலிருக்கின்றது. நறுநாற்றத் திநாற்றங்களைக் கிரஹிக்கின்றது.

சங்கை :—கூறிய கிராண விந்திரியத்தின் லக்ஷணம் சம்பவிக்கும் போது முதலில் கிராண விந்திரியத்தில் ஓர் பிரமாணத்தால் கந்தகுணத்தின் சித்தியுண்டாக வேண்டும். கந்தகுணத்தின் சித்தியின்றி கூறிய அந்த லக்ஷணம் சம்பவியாதென்னுஞ் சங்கையின் பிராப்தமுண்டாக வினி அநுமானப் பிரமாணத்தால் கிராண விந்திரியத்தில் கந்த குணத்தின் சித்தியைச் செய்வாம்.

உசய. கிராண விந்திரியத்தில் கந்தகுணத்தின் சாதகயுக்தி.

ஆண்டு கிராண விந்திரியம் கஸ்தூரி, குசும முதலிய பிருதிவியின் கந்தகுணத்தினைக் கிரஹிக்கின்றது. ஆகையா லிது அறியத்தக்கதாம். கிராண விந்திரியமும் கந்தகுணமுடையதேயாம் ஏனெனில் இது சாஸ்திரக்காரரின் நியமமாம். "[illegible]" (இ-ள்.) எவ்விந்திரியம் உருவம், ரசம், கந்தம், பரிசம், சத்தமென்னும் ஐந்து குணங்களுள் எக்குணத்தை கிரஹிக்கின்றதோ அவ்விந்திரியம் அக்குணமுடையதேயாம். எங்ஙனம் சக்ஷுஸ், ரசனம், கிராணம், துவக், சுரோத்திரமென்னும் ஐந்து இந்திரியங்கள் முறையாக உருவமுதலிய குணங்களைக் கிரஹிக்கின்றன. ஆகையால் இவ்வைந்திந்திரியங்கள் முறையாக அந்த உருவ முதலிய குணங்களை யுடையனவேயாம். ஆகையால் இவ்வநுமானம் சித்தமாயிற்று. "[illegible]" (இ-ள்.) கிராண விந்திரியம் கந்தகுண முடையதாக போக்கியமாம். கந்தத்தைக் கிரஹிக்கும் இந்திரியமாவதால், எவ்வெவ்விந்திரியம் உருவ முதலிய வைந்து குணங்களுள் எக்குணத்தை கிரஹிக்கின்றதோ, அவ்விந்திரியம் அக்குணமுடையதேயாம். எங்ஙனம் சக்ஷுஸ் முதலிய விந்திரியம் உருவ முதலிய குணங்களைக் கிரஹிப்பனவாவதால் அவ்வுருவ முதலிய குணங்களுடையனவாமோ அங்ஙனமே கிராண விந்திரியமும் கந்தகுணத்தினைக் கிரஹிப்பதாவதால் அக்கந்த குணமுடையதேயாமென்னும் அநுமானப் பிரமாணத்தால் கிராண விந்திரியத்தில் கந்த குணத்தின் சித்தியுண்டாகிறது. கந்தகுண வடிவ ஏதுவால் கஸ்தூரி, குசும முதலிய பிருதிவியினைப் போன்று கிராண விந்திரியத்தில் பார்த்திவத் தன்மையே சித்தமாகின்றது.

உசக. கிராண விந்திரியத்தில் பார்த்திவத் தன்மையின்
சாதக அநுமானம்.

அல்லது கிராண விந்திரியத்தில் இவ்வாறாக அநுமானப் பிரமாணத்தால் பார்த்திவத் தன்மையின் சித்தியைச் செய்க. "[illegible]" (இ-ள்.) கிராண விந்திரியம் பார்த்திவமாக யோக்கியமாம் உருவம், ரசம், கந்தம், பரிச மென்னும் நான்கனுள் கேவலம் கந்தத்தினையே வெளிப்படுத்துவதாவதால், எவ்வெத் திரவியம் உருவ முதலிய நான்கனுள் கந்தகுண மொன்றையே வெளிப்படுத்துகிறதோ அவ்வத்திரவியம் பார்த்திவமேயாகின்றது, எங்ஙனம் குங்குமத்தில் கலப்புற்ற பசுநெய் அக்குங்குமத்தின் உருவம், ரசம், கந்தம், பரிசமென்னும் நான்கனுள் கேவலம் கந்தகுண மொன்றையே வெளியாக்குவதாகின்றது; உருவம், ரசம், பரிசமென்னும் மூன்று குணங்களை வெளியாக்குகிறதில்லை. ஆகையால் பசுநெய்யில் பார்த்திவத் தன்மைப் பிரத்தியக்ஷ சித்தமாம். அல்லது கஸ்தூரி, குசும முதலிய பார்த்திவத்

திரவியங்களினின்றும் வாயு எடுத்துக்கொண்டு வந்த ஸூக்ஷ்மாம்சப் பார்த்திவ பாகம் யாதோ அந்த ஸூக்ஷ்மாம்சப் பார்த்திவபாகம் தன்னிடத்திலுள்ள உருவ முதலிய நான்கனுள் கேவலம் கந்தமொன்றினையே வெளியாக்குகின்றது. உருவம், ரசம், பரிசமென்னும் மூன்றினை வெளிப்படுத்துவதன்று. ஆகையால் அந்த அம்சமுடைய பார்த்திவ பாகங்களில் அப்பார்த்திவத் தன்மை நிச்சயமாகவே யிருக்கின்றது. அங்ஙனமே அக்கிராண விந்திரியமும் கஸ்தூரி, குசும முதலிய பார்த்திவத் திரவியங்களின் உருவ முதலிய நான்கனுள் கேவலம் கந்தகுணமொன்றையே வெளிப்படுத்துவதாகின்றது. உருவம், ரசம், பரிச மென்னும் மூன்றினை வெளியாக்குவதன்று. ஆகையால் கிராண விந்திரியத்திலும் பார்த்திவத் தன்மை அவசிய மொப்ப வேண்டும். ஆண்டுக் கூறிய அநுமானத்தில் "உருவ முதலியவைகளுள் கந்தத்தை வெளிப்படுத்துவதால்" என விம்மாத்திரமே ஏதுவாகக் கூறி அவ்வேதுவில் "ஏ" என்னும் பதங் கூறுவிடின் மட்பாத்திர விசேஷமாகிய புது கலசம் யாதோ அக்கலசத்தில் வார்க்கப்பட்டஜலம் அக்கலசத்தின் கந்தத்தினை வெளியாக்குகின்றது. அஜ்ஜலத்தில் அவ்வேது வியபிசாரியாகும். மணமின்றி ஓர் வஸ்துவின் ஞானமு முண்டாகாது. ஆகையால் அம்மனமும் அக்கந்தத்தினை வெளிப்படுத்துவதாம். அம்மனத்திலும் அவ்வேது வியபிசாரியாகும். அதாவது அஜ்ஜலத்திலும், மனதிலும் அப்பார்த்திவத் தன்மை வடிவ சாத்தியமின்றாம் ஆனால் உருவ முதலியவைகளுள் கந்தத்தினை வெளியாக்குந் தன்மையேது வடிவம் அஜ்ஜலத்திலும், மனதிலுமிருக்கின்றது. ஆகையால் பார்த்திவத் தன்மைச் சாத்தியத்தின் அபாவமுடைமை அஜ்ஜலத்திலும், மனதிலுமிருப்பதாவதால் அவ்வேது வியபிசாரியேயாகும். அவ்வியபிசார தோஷத்தை நிவர்த்தி செய்யும் பொருட்டு அவ்வேதுவில் "ஏ" என்னும் பதங் கூறப்பட்டது. அத்தேற்றவேகார பதம் அக்கந்த குணத்தினும் வேறான உருவம், ரசம், பரிசமென்னும் மூன்றின் பிரத்தியக்ஷஞானத்தினை நிஷேதஞ் செய்கின்றது. ஆண்டு புதுகலசத்தின் ஜலம் கேவலம் அம்மட்பாத்திரத்தின் கந்தத்தினையே வெளியாக்குவதன்று ஆனால் மாவில் வார்க்கப்பட்ட அப்புது கலசத்தின் ஜலம் அம்மாவின் ரசத்தினையும் வெளியாக்குகின்றது. அம்மனமும் கேவலம் கந்தமொன்றினையே வெளியாக்குகிறதில்லை. ஆனால் உருவ முதலியவைகளையும் வெளியாக்குவதாகின்றது. ஆகையால் அத்தேற்றவேகாரம் பொருந்திய ஏதுவைக்கூறுவதால் அப்புது கலசத்தின் ஜலத்திலும், மனதிலும் அவ்வேதுவிற்கு வியபிசாரமுண்டாகாது. அல்லது அவ்வநுமானத்தில் "கந்தத்தையே வெளியாக்குவதாவதால்" என விம்மாத்திரமே ஏதுவாகக் கூறி அவ்வேதுவின் "உருவ முதலியவைகளுள்" என்னும் பதங் கூறுவிடின் அவ்வேது சொரூபாசித்தி தோஷமுடையதாம். ஆண்டு பக்ஷத்தில் ஏதுவினிருப்பின்றியுத்தினை சொரூபாசித்தி யென்பர். ஏனெனின் கிராண விந்திரியம் கேவலம் கந்தமொன்றினையே வெளியாக்குவதன்று. ஆனால் கந்தத்திலிருக்கும் கந்தத் தன்மை ஜாதியினையும், அக்கந்தத்தின் அபாவத்தினையும் வெளியாக்குகின்றது அச்சொரூபாசித்தி தோஷத்தை நிவர்த்திசெய்யும் பொருட்டு அவ்வேதுவில்

"உருவ முதலியவைகளுள்" என்னும் பதங் கூறப்பட்டது. அதாவது உருவம், ரசம், கந்தம், பரிசமென்னு மைந்தனுள் கிராண விந்திரியம் கந்தமொன்றினையே வெளியாக்குவதாகின்றது. உருவ முதலிய மூன்றினை வெளியாக்குவதன்று. ஆகையால் கிராண விந்திரியத்திற்கு கந்தத் தன்மையுடைமையினையும், கந்தாபாவத்தினையும் வெளியாக்குந் தன்மையிருக்கினும் சொரூபாசித்தி தோஷத்தின் பிராப்தியுண்டாகாது.

சங்கை:—எங்ஙனம் கிராண விந்திரியம் உருவ முதலியவைகளுள் கேவலம் கந்தத்தையே வெளியாக்குகின்றதோ அங்ஙனமே அக்கந்தத்தினோடு கிராண விந்திரியத்தின் சுவ சம்யுக்த சமவாய வடிவசம்பந்தம் யாதோ அச்சம்பந்தமும் கேவலம் கந்தத்தினையே வெளியாக்குகின்றது. உருவ முதலியவைகளை வெளியாக்குவதன்று. அச்சம்பந்தம் பார்த்திவ பதார்த்தமன்றாம். ஆகையால் பார்த்திவத் தன்மை வடிவ சாத்தியத்தின் அபாவமுடைமை அச்சம்பந்தத்திலிருப்பதாவதால் அவ்வேது வியபிசாரியேயாகும்.

சமாதானம்:—அவ்வேதுவினோடு "திரவியமாய்" என்னும் பதமும் சேர்க்குக. அது "திரவியமாய் உருவ முதலியவைகளுள் கந்தத்தை வெளியாக்குவதால்" என இவ்வாறேது கூறுக. ஆண்டு அக்கிராண விந்திரியத்தின் சம்பந்தத்தில் அத்திரவியத் தன்மை தர்மமின்றாம். ஆகையால் அச்சம்பந்தத்தில் கூறிய இவ்வேதுவிற்கு வியபிசாரமுண்டாகாது.

சங்கை:—கூறிய அவ்வேது கிராண விந்திரிய வடிவ பக்ஷத்திலேயிருக்கின்றதெனினும் அக்குங்குமங் கலந்த ஆவின்நெய் வடிவ திருஷ்டாந்தத்தில் அவ்வேதுவில்லை. ஏனெனின், அவ்வாவின்நெய் எங்ஙனம் குங்குமத்தின் கந்தத்தினை வெளியாக்குகிறதோ, அங்ஙனமே தன்னிடத்துள்ள உருவ முதலியவைகளையும் வெளியாக்குவதேயாகின்றது. கேவலம் கந்த மாத்திரத்தையே வெளியாக்குவதன்று.

சமாதானம்:—அந்நெய் வடிவ திருஷ்டாந்தத்தில் கூறிய அவ்வேதுவின் அசித்தியை நிவர்த்திக்கும் பொருட்டு அவ்வேதுவினோடு "மற்றவைகளைச் சார்ந்த" என்னும் பதமுங் கூறுக. அதாவது "திரவியமாகி பிறவற்றைச்சார்ந்த உருவ முதலியவைகளுள் கந்தத்தை வெளியாக்குவதாவதால்" என இவ்வாறேது கூறுக. ஆண்டு அந்நெய் தனது உருவ முதலியவைகளை வெளியாக்குவதாயினும் அக்குங்குமத்தின் உருவமுதலியவைகளுள் கேவலம் கந்தமொன்றையே வெளியாக்குவதாகின்றது. அக்குங்குமத்தின் உருவ முதலியவைகளை வெளியாக்குகிறதில்லை. ஆகையால் அவ்வேதுவில் அவ்வுருவ முதலியவைகளுக்கு "பிறவற்றைச்சார்ந்த" என்னும் விசேஷணத்தைக் கூறுவதால் அவ்வாவின்நெய் வடிவ திருஷ்டாந்தத்தில் அவ்வேதுவிற்கு அசித்தியுண்டாகாது.

சங்கை:—அவ்வேதுவினோடு "பிறவற்றைச்சார்ந்த" என்னும் பதத்தைக் கூறுவதால் அவ்வேதுவின் சரீரம் பெரிதாகும். ஆகையால் சரீரத்தினால் கௌரவ தோஷத்தின் பிராப்தியுண்டாகும்.

சமாதானம்:—இக்கௌரவ தோஷத்தை நிவர்த்திக்கும் பொருட்டு முற்கூறிய அவ்வநுமானத்தில் "வாயு கொண்டு வந்த கந்தநாற்றமுடைய பார்த்திவ பாகத்தைப் போன்று" என்னுமிரண்டாவது திருஷ்டாந்தங் கூறப்பட்டது. ஆண்டு வாயுவானது வேற்றிடத்திருந்து கொண்டு வந்த கஸ்தூரி, குங்கும முதலிய பிருதிவியின் சூக்ஷ்ம கந்தநாற்றமுள்ள பாகம் யாதோ அவைகளின் உருவ முதலிய குணங்கள் ஒன்றிற்கும் பிரத்தியக்ஷமாவதன்று. ஆதலால் அவைகளின் கந்த மாத்திரமே பிரத்தியக்ஷமாகின்றது. ஆகையால் அக்கந்தநாற்றமுடைய பார்த்திவ பாகம் தன்னிடத்துள்ள உருவ முதலியவைகளை வெளியாக்குவதன்று தன்னிடத்துள்ள கந்தமொன்றையே வெளியாக்குகின்றது. ஆகையால் கூறிய அவ்வேதுவில் "பிறவற்றைச்சார்ந்த" என்னும் பதத்தைக் கூறாவிடினும், அக்கந்தநாற்றமுடைய பார்த்திவபாக வடிவ திருஷ்டாந்தத்தில் கூறிய அவ்வேதுவிற்கு அசித்தியுண்டாகாது. இவ்வாறாய அநுமானத்தால் அக்கிராண விந்திரியத்தில் பார்த்திவத் தன்மை சித்தமாகின்றது.

சங்கை:—"ஸதிகுட்யே சித்ரம்" (இ-ள்.) ஆதார வடிவ சுவற்றினிருப்புள்ளதாகவே சுவற்றின் பேரில் சித்திரமெழுதப்படுகின்றது. அச்சுவற்றின் அபாவமிருக்க அவற்றின் பேரில் சித்திரமெழுதப்படுகிறதில்லையென்னும் நியாயம் உலகத்தில் பிரசித்தமாம். அங்ஙனமே ஈண்டு பிரசங்கத்திலும் முதலில் ஓர் பிரமாணத்தால் கிராண முதலிய ஆறுவிந்திரியங்களின் சித்தியுண்டாகிய பின்னரே அக்கிராண முதலிய விந்திரியங்களில் பார்த்திவ முதலிய வடிவத் தன்மை சித்தமாகும். கிராண முதலிய விந்திரியங்களின் சித்தியின்றி கிராண முதலிய விந்திரியங்களில் பார்த்திவ முதலிய வடிவத் தன்மை சித்தியாதாகும். ஆகையால் கிராண முதலிய ஆறு விந்திரியங்களை ஓர் பிரமாணத்தால் அவசியம் சித்தி செய்யவேண்டுமென்னுஞ் சங்கையின் பிராப்தியுண்டாக இனி அநுமானப் பிரமாணத்தால் கிராண முதலிய ஆறு விந்திரியங்களின் சித்தியைச் செய்வாம்.

௨௪௨. இந்திரிய மாத்திரத்தின் சாதக அநுமானம்.

அவ்வநுமானத்தின் ஆகாரமிதுவாம். "ரூபோபலப்தி: கரணஸாத்யா க்ரியாத்வாத் சிதிக்ரியாவத்" (இ-ள்.) உருவத்தின் உபலப்தியும் (ஞானமும்), ரசத்தினுபலப்தியும், கந்தத்தினுபலப்தியும், பரிசத்தினுபலப்தியும், சத்தத்தினுபலப்தியும், சுக துக்கத்தினுபலப்தியுமாம் அறுவகையாய ஞானவடிவவுபலப்திகள் ஓர்காரணத்தால் சாத்தியமாக யோக்கியமாம். கிரியாவடிவமாவதால், எதுவெது கிரியையாமோ அவ்வக்கிரியை ஓர் காரணத்தால் அவசியம் சாத்தியமாகின்றது. எங்ஙனம், சேதிக்கும் வடிவகிரியை கோடரிவடிவகாரணத்தால் சாத்தியமாம். அக்கிரியாத்தன்மை அவ்வுருவமுதலிய வுபலப்திகளிலுமிருக்கின்றது. ஆகையால் அவ்வுபலப்திகளுமோர் காரணத்தால் அவசியம் சாத்தியமாவனவாம். ஆண்டு இவ்வநுமானத்தால் உருவவுபலப்தியின் காரண வடிவமாக சக்ஷுர்விந்திரியத்தின் சித்தியுண்டாகின்றது. ரசவுபலப்தியின் காரண வடிவமாக ரசன விந்திரியத்தின் சித்தியுண்

டாகின்றது. கந்த வுபலப்தியின் காரண வடிவமாக க்ராணவிந்திரியத்தின் சித்தியுண்டாகின்றது. பரிச வுபலப்தியின் காரண வடிவமாக துவக்கிந்திரியத்தின் சித்தியுண்டாகின்றது. சத்த வுபலப்தியின் காரண வடிவமாக சுரோத்திர விந்திரியத்தின் சித்தியுண்டாகின்றது. சுக துக்க வுபலப்தியின் காரண வடிவமாக மன விந்திரியத்தின் சித்தியுண்டாகின்றது. இவ்வாறாய அநுமானப் பிரமாணத்தால் க்ராண முதலிய ஆறு விந்திரியங்களின் சித்தியுண்டாக க்ராண முதலிய விந்திரியங்களில் பார்த்திவாதி வடிவத்தினை சித்திசெய்தல் சம்பவிக்கின்றது. இதனால் பார்த்திவ விந்திரியத்தின் நிரூபணஞ் செய்யப்பட்டது. இனி பார்த்திவ விஷயத்தின் நிரூபணஞ் செய்வாம்.

௨௪௩. பார்த்திவ விஷயத்தின் லக்ஷணம்.

“ கந்தவிஷயஃ பார்திவவிஷயஃ ” (இ-ள்.) எவ்விஷயம் சமவாய சம்பந்தமாக கந்தகுணமுடையதாமோ அவ்விஷயம் பார்த்திவ விஷயமெனப் படும். ஆண்டு பார்த்திவ த்வியணுக முதலாக எவ்வளவு மண், கல், கஸ்தூரி, குசும முதலிய திரவியங்களுளவோ அவையெல்லாம் சமவாய சம்பந்தமாக கந்தகுணமுடையனவாவதால் பார்த்திவ விஷயமெனப்படும்.

௨௪௪. வேறுவகையாக பார்த்திவ விஷயத்தின் லக்ஷணம்.

நஷ்டகாரணத் தீநாசமுடைய அவயவங்களாலுண்டான கட முதலிய பார்த்திவ விஷயங்களிலும், தோன்றியழிந்த கட முதலிய பார்த்திவ விஷயங்களிலும், உத்பத்தி க்ஷணாவச்சின்ன கட முதலிய பார்த்திவ விஷயங்களிலும் கந்த குணத்தின் அபாவமிருப்பதால் இந்த லக்ஷணத்திற்கு அவ்வியாப்தியே யுண்டாகும். என்றாலும் முற்கூறிய பிருதிவியின் லக்ஷணத்தைப் போன்று “ கந்தவத்தாவச்சேதக த்ரவ்யத்வவ்யாப்ய ஜாதிமத்விஷயஃ பார்திவவிஷயஃ ” என இவ்வாறாய பிருதிவித் தன்மை ஜாதி பொருந்திய லக்ஷணத்தைக் கூறுவதால் அக்கட முதலிய வடிவ பார்த்திவ விஷயத்தில் இந்த லக்ஷணத்திற்கு அவ்வியாப்தி யுண்டாகாது. ஆண்டு இந்த லக்ஷணத்தில் “விஷயம்” என்னும் பதம் பார்த்திவசரீர விந்திரியத்தில் அந்தலக்ஷணத்திற்கு அதிவியாப்தியை நிவர்த்தி செய்யும் பொருட்டாம். மற்றைய பதங்களின் பயன் முற்கூறியவாறே அறிந்து கொள்க. பார்த்திவ விஷய நிரூபணம்.

சங்கை:—முன்னர் பரமாணு வடிவ பிருதிவிக்கு நித்தியங் கூறப்பட்டது அங்ஙனமே பின்னர் பரமாணு வடிவஜலத்திற்கும், பரமாணு வடிவ தேயுவிற்கும், பரமாணு வடிவ வாயுவிற்கும் நித்தியம் கூறப்படும். பரமாணுக்களில் நித்திய வடிவத்தன்மை சித்திப்பதற்கு முதலிலோர் லக்ஷணத்தாலும் ஓர் பிரமாணத்தாலும் அப்பரமாணுக்களின் சித்தியுண்டாகவேண்டும். பரமாணுக்களின் சித்தியின்றி அவைகளில் நித்தியத் தன்மைக் கூறுதல் சம்பவியாது. ஆகையால் அப்பரமாணுக்கட்கு ஓர் லக்ஷணமும் பிரமாணமும் அவசியம் கூறவேண்டுமென்னுஞ் சங்கையின் பிராப்தமுண்டாக வினி முதலில் பரமாணுக்களின் லக்ஷணம் நிரூபிப்பாம்.

௨௪௫. பரமாணுவின் லக்ஷணம்.

“ மனோபிந்நத்வே ஸதி பரமாணுபரிமாணவத் பரமாணுஃ ” (இ-ள்.) எத்திரவியம் மனதினும் வேறாய் சமவாய சம்பந்தமாக பரம அணுத் தன்மைப் பரிமாணமுடையதாமோ அத்திரவியம் பரமாணுவெனப் படுகின்றது. ஆண்டுப் பிருதிவி, ஜலம், தேயு, வாயு வென்னும் நான்கின் பரமாணுக்கள் மனதினும் வேறாம் சமவாய சம்பந்தமாக பரமாணுத் தன்மைப் பரிமாணமுடையனவாம். ஆகையால் அப்பரமாணுக்களுக்குக் கூறிய அந்த லக்ஷணம் சம்பவிக்கிறது. ஆண்டு “பரமாணுத்தன்மைப் பரிமாணமுடையது பரமாணு” என விம்மாத்திரமே அப்பரமாணுக்களின் லக்ஷணமாகக்கூறி அந்த லக்ஷணத்தில் “மனதினும் வேறாய்” என்னும் பதங் கூறாவிடின் மனதில் அந்த லக்ஷணத்திற்கு அதிவியாப்தியுண்டாம். யாது காரணத்தாலெனின், அம்மனமும் அப்பரமாணுக்களைப்போன்று பரம அணுத்தன்மைப் பரிமாணமுடையதேயாம். அவ்வதிவியாப்தித் தோஷத்தை நிவர்த்தி செய்யும்பொருட்டு அந்த லக்ஷணத்தில் “மனதினும் வேறாய்” என்னும் பதங் கூறப்பட்டது. ஆண்டு மனத்தில் மனதின் பேதம் சம்பவியாதாகையால் அம்மனதில் அந்த லக்ஷணத்திற்கு அதிவியாப்தியுண்டாகாது. அல்லது “மனதினும் வேறாய் அணுத் தன்மைப் பரிமாணமுடையது பரமாணு” என விம்மாத்திரமே அப்பரமாணுவின் லக்ஷணமாகக் கூறி, அந்த லக்ஷணத்தில் “பரம” என்னும் பதங் கூறாவிடின் த்வியணுகாதி வடிவ காரியத்தில் அந்த லக்ஷணத்திற்கு அதிவியாப்தியுண்டாம். ஏனெனின், இரு பரமாணுக்களின் சையோகத்தாலுண்டாய த்வியணுக வடிவ காரியம் யாதோ அத்த்வியணுகம் மனதினும் வேறாம் அணுத் தன்மைப் பரிமாணமுடையதாமாம். அத்த்வியணுகத்தில் அந்த லக்ஷணத்திற்கு அதிவியாப்தியை நிவர்த்தி செய்யும் பொருட்டு அணுத் தன்மைப் பரிமாணத்திற்கு “பரம” என்னும் விசேஷணங் கூறப்பட்டது. ஆண்டுத் த்வியணுகத்தில் மத்திம அணுத்தன்மைப் பரிமாணத்தி னிருப்புளதாயினும் பரம அணுத்தன்மைப் பரிமாணம் இருப்பதில்லை. ஆகையால் த்வியணுகத்தில் அந்த லக்ஷணத்திற்கு அதிவியாப்தியுண்டாகாது. அல்லது “மனதினும் வேறாய்ப் பரிமாணமுடையது பரமாணு” என விம்மாத்திரமே அப்பரமாணுவின் லக்ஷணமாகக் கூறி அந்த லக்ஷணத்தில் “பரமாணுத்தன்மை” என்னும் பதங்கூறாவிடின் பரமாணு, மனமென்னுமிரண்டை விட்டு எல்லாத் திரவியங்களில் அந்த லக்ஷணத்திற்கு அதிவியாப்தியுண்டாகும். ஏனெனின் அப்பரிமாண குணம் பிருதிவி முதலிய ஒன்பதுத் திரவியங்களி லிருக்கின்றது. அங்ஙனமே பிருதிவி முதலிய எட்டுத் திரவியங்கள் மனதைவிட வேறுமாம். அவ்வதிவியாப்தியை நிவர்த்திப்பான் கருதி அந்த லக்ஷணத்தில் “பரம அணுத்தன்மை” என்னும் பதம் பரிமாணத்திற்கு விசேஷணமாகக் கூறப்பட்டது. ஆண்டு பிருதிவி முதலிய ஒன்பது திரவியங்களில் பரிமாணத் தினிருப்புளதாயினும் அப்பரம அணுத்தன்மைப் பரிமாணம் கேவலம் பரமாணுவிலும், மனதிலுமே யிருக்கின்றது. வேறோர் திரவியத்தில் அப்பரமாணுத்தன்மைப் பரிமாணமிருப்பதில்லை. ஆகையால் அப்பரமாணுக்களி

னும் வேறான திரவியங்களில் அந்தலக்ஷணத்திற்கு அதிவியாப்தியுண்டாகாது. அல்லது "மனதினும் வேறானது பரமாணு" என விம்மாத்திரமே அப்பரமாணுவின் லக்ஷணமாகக்கூறி அந்த லக்ஷணத்தில் "பரமாணுத் தன்மைப் பரிமாணமுடையது" என்னும் பதங்கூறாவிடின் பரமாணுவினும், மனதினும் வேறான திரவிய குண முதலிய எல்லா பதார்த்தங்களில் அந்தலக்ஷணத்திற்கு அதிவியாப்தியுண்டாம். அவ்வதிவியாப்திதோஷத்தை நிவர்த்திசெய்வான்வேண்டி அந்தலக்ஷணத்தில் "பரமாணுத் தன்மைப் பரிமாணமுடையது" என்னும் பதம் கூறப்பட்டது. ஆண்டு அப்பரமாணுவினும், மனதினும் வேறான வேறோர் பதார்த்தம் அப்பரமாணுத் தன்மைப் பரிமாண முடையதன்றாம். ஆகையால் திரவியமுதலிய பதார்த்தங்களில் அந்த லக்ஷணத்திற்கு அதிவியாப்தியுண்டாகாது. இதுகாறும் பரமாணுக்களின் லக்ஷணம் நிரூபிக்கப்பட்டது. இனி அநுமானப்பிரமாணத்தால் அப்பரமாணுக்களின் சித்தியை செய்வாம்.

உசசு. அநுமானப் பிரமாணத்தால் பரமாணுக்களின் சித்தி.

சுவர் முதலியவைகளிலுள்ள வீட்டின் சாளரத்தில் நுழையும் சூரியக் கிரணங்களிலுள்ள எல்லாவற்றிலும் நுண்ணியத் துகளினைத் திரியணுகமென்பர், இதனை திரிஸரேணுவென்றும், துருடியென்றுங் கூறுவர்.

"த்ர்யணுகம் அவயவஜந்யம் சாக்ஷுஷத்ரவ்யத்வாத் படவத்" (இ-ள்.) அத்திரியணுகம் அவயவங்களால் ஜன்னியமாக யோக்கியமாம், சாக்ஷுஷத் திரவியமாவதால், அதாவது சக்ஷுரிந்திரியத்தாலுண்டாம் பிரத்தியக்ஷ ஞானத்திற்கு விஷயமாகும் திரவியமாவதால், எவ்வெத்திரவியம் சாக்ஷுஷத் திரவியமாகின்றதோ அவ்வத் திரவியம் அவயவங்களாலுண்டாவதேயாம். எங்ஙனம்: கடம் சாக்ஷுஷத் திரவியமாம். ஆகையால் கபால வடிவ அவயவங்களாலுண்டாவதுமாம். அங்ஙனமே திரியணுகமும் சாக்ஷுஷத் திரவியமாவதால் அவயவங்களாலுண்டாவதேயாகும். ஆண்டு இவ்வநுமானத்தில் "திரவியமாவதால்" என விம்மாத்திரமே ஏதுவாகக்கூறி அவ்வேதுவில் "சாக்ஷுஷம்" என்னும் பதங் கூறாவிடின் அவ்வேது ஆகாச முதலிய நித்தியத் திரவியங்களில் வியபிசாரியாகும். ஏனெனின், ஆகாசம், காலம், திக்கு, ஆத்மா, மனம், பரமாணுவென்னும் நித்தியத் திரவியங்களில் அவ்வவயவ ஜன்னியத் தன்மை வடிவ சாத்தியமோ வின்றாம். ஆனால் அத்திரவியத் தன்மை வடிவ ஏது அவ்வாகாச முதலியவைகளிலுமிருக்கின்றது. ஆகையால், அவ்வவயவ ஜன்னியத் தன்மை வடிவ சாத்தியத்தின் அபாவமுடைமை அவ்வாகாச முதலிய நித்தியத் திரவியங்களில் இருப்பதாவதால் அத்திரவியத் தன்மை வடிவ ஏது வியபிசாரியேயாகும். அவ்வியபிசார தோஷத்தை நிவர்த்தி செய்வான் வேண்டி அவ்வேதுவில் "சாக்ஷுஷம்" என்னும் பதம் திரவியத்திற்கு விசேஷணமாகக் கூறப்பட்டது. ஆண்டு அவ்வாகாச முதலியவைகளில் மஹத்வ சமானாதிகரண உத்பூத உருவத்தின் அபாவத்தால் அச்சாக்ஷுஷத்தன்மை ஏதுவின்றாம். ஆகையால் அவ்வாகாச முதலியவைகளில் அவ்வேதுவிற்கு வியபிசாரமுண்டாகாது. அல்லது அவ்வநுமானத்தில் "சாக்ஷுஷத் தன்மையால்" என விம்மாத்திரமே

ஏதுவாகக் கூறி அவ்வேதுவில் "திரவியம்" என்னும் பதங் கூறாவிடின் சாக்ஷுஷ ஞானத்தின் விஷயமாகிய குணம், கரும முதலியவைகளில் அவ்வேதுவிற்கு வியபிசாரமுண்டாகும். ஏனெனின் அக்குணம், கரும முதலியவைகளில் அவ்வவயவ ஜன்னியத் தன்மை வடிவ சாத்தியமோவின்றாம் ஆனால் அச்சாக்ஷுஷத்தன்மை வடிவ ஏது அக்குண, கருமங்களிலும் இருக்கின்றது. ஆகையால் அவ்வவயவ ஜன்னியத்தன்மை வடிவ சாத்தியத்தின் அபாவமுடைமை அக்குண, கரும முதலியவைகளில் இருப்பதாவதால் அச்சாக்ஷுஷ வடிவத்தன்மை ஏது வியபிசாரியேயாகும். அவ்வியபிசார தோஷத்தை நிவர்த்தி செய்யும் பொருட்டு அவ்வேதுவில் "திரவியம்" என்னும் பதம் கூறப்பட்டது. ஆண்டு அக்குண, கருமங்களில் அத்திரவியத் தன்மையின்றாம். ஆகையால் அக்குண, கரும முதலியவைகளில் அவ்வேதுவிற்கு வியபிசார முண்டாகாது. இவ்வாறாய அநுமானப் பிரமாணத்தால் அத்திரியணுகத்தில் அவயவ ஜன்னியத்தும் சித்திக்கின்றது. அத்திரியணுகத்தின் அவயவமே துவியணுகமெனப்படும். ஏனெனின், பரஸ்பர சம்புக்த மூன்று துவியணுகங்களானேயே திரியணுக வடிவ காரியத்தினுற்பத்தி யுண்டாகின்றது. ஆகையால் மூன்று துவியணுகங்கள் திரியணுகவடிவ காரியத்தினை ஆரம்பிக்கும் அவயவங்களாம். இவ்வாறாக திரியணுகம்சித்தித்தபின்னர் மீண்டுமிவ்வாறாக அநுமானம் செய்க. "த்வ்யணுகம் அவயவஜந்யம் மஹதாரம்பகத்வாத் கபாலவத்" (இ-ள்.) துவியணுகமும் அவயவங்களாலுண்டாக யோக்கியமாம். மஹத்வபரிமாணமுடைய திரியணுக வடிவத்திரவியத்தை ஆரம்பிப்பதாவதால், எவ்வெத்திரவியம் மஹத்துவ பரிமாணமுடையத் திரவியத்தினை ஆரம்பிப்பதாமோ அவ்வத்திரவியம் அவயவங்களாலுண்டாவதேயாம். எங்ஙனம்: கபால வடிவ திரவியம் மஹத்துவ பரிமாணமுடைய கட வடிவ திரவியத்தை ஆரம்பிப்பதாம். ஆகையால் அக்கபால வடிவத் திரவியம் *கபாலிகா வடிவ அவயவங்களாலுண்டானதேயாம். அங்ஙனமே மஹத்துவ பரிமாணமுடைய திரியணுக வடிவத்திரவியத்தினை ஆரம்பிக்குந்தன்மை துவியணுகங்களிலுமிருக்கின்றது. ஆகையால் துவியணுகமும் சில அவயவங்களாலுண்டாவதேயாகும். இவ்வாறாய அநுமானத்தால் துவியணுகத்தின் அவயவம் சித்தியாகின்றது. துவியணுகத்தினை ஆரம்பிக்கும் அவயவமே பரமாணுவெனப்படுகின்றது. ஏனெனின் பரஸ்பர, சம்புக்த விரு பரமாணுக்களானேயே துவியணுக வடிவ காரியத்தினுற்பத்தி யுண்டாகின்றது. ஆகையால் அவ்விரு பரமாணுக்களே துவியணுகத்தை ஆரம்பிக்கும் அவயவங்களாம். அப்பரமாணுவோ அவயவத்தாலுண்டாவதன்று, ஆனால் அப்பரமாணு அஜன்னியமேயாம்.

உசஎ. பரமாணுக்களில் அவயவ ஜன்னியத் தன்மையின் சங்கை.

சங்கை:—எங்ஙனம் கூறிய அநுமானப் பிரமாணத்தால் துவியணுக் வடிவ காரியத்தில் அவயவ ஜன்னியத்தன்மை சித்தம் செய்யப்பட்டதோ அங்

---

*கபாலிகா - கபாலங்களின் அவயவங்கள்.

னமே அவ்வநுமானப்பிரமாணத்தால் பரமாணுக்களிலும் அவயவ ஜன்னியத்தன்மையே சித்தமாகின்றது. அவ்வநுமானத்தின் ஆகாரமிதுவாம். "[illegible]" (இ-ள்.) அப்பரமாணு அவயவங்களாலுண்டாக யோக்கியமாம், துவியணுக வடிவு காரியத் திரவியத்தின் சமவாயி காரணமாவதால், எவ்வெத்திரவியம் காரியத் திரவியத்தின் சமவாயி காரணமாமோ அவ்வத்திரவியம் அவயவங்களாலுண்டாவதேயாகின்றது. எங்ஙனம் கபாலம் கட வடிவக் காரியத் திரவியத்தின் சமவாயி காரணமாவதால் கபாலிகா வடிவ அவயவங்களா லுண்டாவதே யாம். அங்ஙனமே பரமாணுவும் துவியணுக வடிவ காரியத் திரவியத்தின் சமவாயி காரணமாவதால் அவயவங்களால் அவசியம் ஜன்னியமாவதாகும். இவ்வாறாய அநுமானத்தால் பரமாணுக்களிலும் அவயவத்தன்மையே சித்தமாகின்றது. ஆகையால் அப்பரமாணுவும் அவயவங்களா லுண்டானதே யாகின்றது.

உசஅ. பரமாணுக்களில் நிரவயவத் தன்மையின் சாதக யுக்தி.

சமாதானம்:—இவ்வாறாய அநுமானத்தால் பரமாணுக்களில் அவயவத்தாலுண்டாந் தன்மை அங்கிகரிக்கின் அப்பரமாணுக்களை ஆரம்பிக்கும் அவயவங்களிலும் பரமாணு வடிவ காரியத் திரவியத்தின் சமவாயி காரணத் தன்மை வடிவ ஏதுவால் அவயவ ஜன்னியத் தன்மையே சித்தமாகும். பின்னர் அவ்வவயவங்களிலும் அவ்வேதுவால் அவயவ ஜன்னியத் தன்மையே சித்தமாகும். இவ்வாறாக முடிவில்லாத அவயவங்களின் தொடர்ச்சி யொப்புவதில் அனவஸ்தை தோஷத்தின் பிராப்தியுண்டாகும். அவ்வனவஸ்தை தோஷத்தை நிவர்த்தி செய்யும் பொருட்டு முடிவில் சில அவயவங்களுக்கு அவயவங்களா லுண்டாதலின்மை எப்பொழுது வொப்புவதாமோ அப்பொழுது அவ்வஜன்னிய அவயவங்களிலேயே அக்காரியத்திரவியத்தின் சமவாயி காரணத் தன்மை வடிவ ஏது வியபிசாரியாகும்.

உசகூ. பீஜாங்குர நியாயத்தால் அநவஸ்தையில் தோஷமில்லாத் தன்மையின் சங்கை.

சங்கை:—எங்ஙனம் பீஜத்தால் அங்குரமுண்டாகிறது. அவ்வங்குரத்தால் மீண்டும் பீஜமுண்டாகிறது. அப்பீஜத்தால் மீண்டும் அங்குர முண்டாகிறது. இவ்வாறாய முடிவில்லாத பீஜாங்குரங்களின் தொடர்ச்சி யொப்புவதில் பிராப்தமாகும் அனவஸ்தையை ஓர் நூலாசிரியரும் தோஷவடிவமாக வொப்பினரில்லை. அங்ஙனமே எங்ஙனம் புண்ணிய பாப வடிவ அதிர்ஷடத்தால் சரீரமுண்டாவ தாகின்றது. அச்சரீரத்தால் மீண்டும் அதிர்ஷ்ட முண்டாவதாகின்றது. அதிர்ஷ்டத்தால் மீண்டும் சரீரமுண்டாவதாகின்றது. இவ்வாறாக முடிவில்லாத அதிர்ஷ்ட சரீரங்களின் தொடர்ச்சி யொப்புவதில் பிராப்தமாகும் அனவஸ்தையையும் ஓர் நூலாசிரியரும் தோஷ வடிவமாக வொப்பினரில்லை. அங்ஙனமே அப்பரமாணுக்களின் அவயவங்கட்கு முடிவில்லாத தொடர்ச்சியை யொப்புவதில் பிராப்தமாகும் அனவஸ்தையும் தோஷ வடிவமாகாததாகும்.

உ௫௦. பிரமாணத்தால் சித்தமாகாத அனவஸ்தையில் தோஷவடிவத் தன்மையின் சித்தி.

சமாதானம்:—எவ்வனவத்தை பிரத்தியக்ஷ முதலிய பிரமாணங்களால் சித்தமாகின்றதோ அவ்வனவத்தையே தோஷ வடிவமாகாததாம். எவ்வனவத்தையில் ஓர் பிரமாணமுமின்றாகுமோ அவ்வனவத்தையோ தோஷ வடிவேயாம். ஆண்டு அப்பீஜ அங்குரங்களின் அனவத்தையில் எங்ஙனம் பிரத்தியக்ஷப் பிரமாணமும், அதிர்ஷ்ட சரீரங்களின் அனவத்தையில் சாத்திரப் பிரமாணமு மிருக்கின்றனவோ, அங்ஙனம் அப்பரமாணுக்களின் அவயவங்களின் அனவஸ்தையில் ஓர் பிரமாணமுமின்றாம். மாறாக பிரத்தியக்ஷப் பிரமாண விரோதமே அவ்வனவத்தையைப் பாதிப்பதா மென்னும் வகையைக் காட்டுவாம்.

உ௫க. முடிவில்லாத அனவஸ்தையின் தொடர்ச்சி யொப்புவதில் மேருவிற்கும், கடுகிற்கும் சமானத்தன்மையின் பிராப்தி.

ஆண்டு எவ்வாதி ஓர் திரவியத்தில் அவயவங்களின் தொடர்ச்சியின் முடிவை அங்கிகரியாது அவ்வவயவங்களின் அனவஸ்தையை அங்கிகரிக்கின்றானோ அவ்வாதியின் மதத்தில் மேருபர்வதத்திற்கும், கடுகிற்கும் சமான பரிமாண முண்டாகவேண்டும். ஏனெனின், திரவியத்திலுள்ள பரிமாணத்தின் பெரிது, சிறிதுக்களின் பயனைப் பயப்பிப்பது திரவியத்தை ஆரம்பிக்கும் அவயவங்களின் எண்ணிக்கையேயாம். ஆண்டுக்குறைந்த வெண்ணிக்கையுடைய அவயவங்களால் ஆரம்பிக்கப்பட்ட திரவியமோ சிறிய பரிமாணமுடையதாகின்றது. அதிக வெண்ணிக்கையுடைய அவயவங்களால் ஆரம்பிக்கப்பட்ட திரவியம் பெரிய பரிமாணமுடையதாகின்றது. அப்பரிமாணத்தின் பெரிது, சிறிதாம் பயனைப் பயப்பிக்கும் அவயவங்களின் அதிக, குறைந்த வெண்ணிக்கை அவயவங்களுக்கு அனவஸ்தை யொப்புவதில் சம்பவியாது. ஏனெனின், எங்ஙனம் மேருபர்வதம் கணக்கில்லாத அவயவங்களால் ஆரம்பிக்கப்பட்டதாமோ அங்ஙனமே கடுகும் கணக்கில்லாத அவயவங்களால் ஆரம்பிக்கப்பட்டதாம். ஆகையால் மேரு பர்வதத்திற்கும், கடுகிற்கும் சமான பரிமாண முண்டாகவேண்டும். அது பிரத்தியக்ஷப் பிரமாணத்திற்கு விரோதமாம். மேரு பர்வதத்தின் அவயவங்களின் தொடர்ச்சியும், கடுகின் அவயவங்களின் தொடர்ச்சியும் பரமாணுபரியந்தம் அங்கிகரிக்கப்படின் பரமாணுவிற்குப் பின் அவயவ தொடர்ச்சி அங்கிகரிக்கப்படாவிடின் மேரு பர்வதத்தின் சமான வடிவத் தன்மை தோஷம் பிராப்தமாகாது. ஏனெனின் கடுகின் பருமனோ குறைந்த எண்ணிக்கையுடைய அவயவங்களால் ஆரம்பிக்கப்பட்டதாம். மேரு பர்வதமோ அதிக வெண்ணிக்கையுடைய அவயவங்களால் ஆரம்பிக்கப்பட்டதாம். இக்காரணத்தால் கடுகின் பருமனில் குறைந்த பரிமாணமிருக்கின்றது. மேரு பர்வதத்தில் அதிக பரிமாணமிருக்கின்றது.

௨௫௨. முடிவில்லாத அவயவ தொடர்ச்சியை யொப்புவதில் பரமாணுக்களில் மகத்துவத்தினது பிராப்தியின் வர்ணனம்.

அல்லது முடிவில்லாத அவயவங்களின் அனவஸ்தையை யொப்புவதில் கேவலம் மேரு பர்வதத்தின் சமானத் தன்மை வடிவ தோஷமே பிராப்தமாகாது. ஆனால் அப்பரமாணுக்களில் மஹத்துவத்தின் பிராப்தி வடிவ தோஷமும் பிராப்தமாகின்றது. ஏனெனின், எத்திரவியம் சாவயவத் திரவியத்தால் ஆரம்பிக்கப்பட்ட திரவியமாமோ அத்திரவியம் மஹத்துவ பரிமாணமுடையதேயாகின்றது. எங்ஙனம், திரியணுக வடிவத் திரவியம் துவியணுக வடிவ சாவயவத் திரவியத்தால் ஆரம்பிக்கப்பட்டதாம். ஆகையால் அத்திரியணுகம் மஹத்துவ பரிமாணமுடையதுமாம். அங்ஙனமே அவயவங்களின் அனவஸ்தையில் அப்பரமாணுவும் சாவயவத் திரவியத்தாலேயே ஆரம்பிக்கப்படுவதாகும். ஆகையால் அப்பரமாணுவும் திரியணுகத்தைப் போன்று மஹத்துவ பரிமாணமுடைமை அவசியமாகும். அது அத்தியந்தம் விருத்தமாம். ஏனெனின், அப்பரமாணுக்களின் அம்மஹத்துவ பரிமாணம் அங்கீகரிக்கின் அப்பரமாணுக்களுக்கும் திரியணுகத்தைப் போன்று சாக்ஷுஷப் பிரத்தியக்ஷமுண்டாகவேண்டும். பரமாணுக்களின் சாக்ஷுஷப் பிரத்தியக்ஷம் ஒருவருக்குமுண்டாவதில்லை. இக்காரணத்தாலும் அவ்வவயவங்களின் அனவஸ்தை அங்கீகரிக்க யோக்கியமன்றாம். ஆனால் மேரு, கடுகு, கடம், படம் இவை முதலிய அவயவிகளெவ்வளவோ அவைகளின் அவயவங்களின் தொடர்ச்சியின் முடிவு ஒன்றில் அங்கீகரிக்கவேண்டும். அவ்வவயவ தொடர்ச்சியின் முடிவு எதனிடத்திலுண்டாகிறதோ அதுவே பரமாணுவெனப்படும்.

சங்கை:—மேரு பர்வத முதலிய அவயவிகளினது அவயவ தொடர்ச்சியாண்டு முடிவையடைகிறதோ அது பரமாணுவாகுக. என்றாலும் அம்முடிவின் ஆசிரய வடிவ பரமாணுக்களின் நித்தியத்தன்மையில் ஓர் பிரமாணமுமின்றாம்.

௨௫௩. பரமாணுக்களின் நித்தியத் தன்மையின் சாதக யுக்தி.

சமாதானம்:—அவயவத் தொடர்ச்சியினது முடிவின் வரம்பாகிய பரமாணுவாமேதா, அப்பரமாணுக்கட்கு நித்தியமொப்பாவிடின் அசமவேத பாவ காரியத்தினுற்பத்தி யொப்புவதாகும். அதாவது அப்பரமாணு வடிவ பாவ காரியத்திற்கு சமவாயி காரணமின்றியே உற்பத்தி யொப்புவதாகும். அது அத்தியந்தம் விருத்தமாம். ஏனெனின் எதுவெது பாவ காரியமாமோ அது சமவாயி காரணமும், அசமவாயி காரணமும், நிமித்த காரணமுமென்னும் மூன்று காரணங்களாலேயே உண்டாவதாகின்றது; சமவாயி காரணமின்றி ஓர் பாவ காரியமும் உண்டாவதின்று. ஆன்மப் பிரத்துவம்சாபாவ வடிவ காரியமோ, சமவாயி அசமவாயி காரணங்களின்றி கேவலம் நிமித்த காரணமாத்திரத்தாலேயே உண்டாவதாகின்றது. ஆகையால் எண்டு பாவ காரியத்தினையே மூன்று காரணங்களாலுண்டாகுந் தன்மைக் கூறப்பட்டிருக்கிறது. அப்பரமாணுவும் பாவவடிவமாம். ஆகையால் அப்பரமாணுக்களை அநித்தியமாக வொப்பின் சமவாயி காரணமின்றியே பரமாணு வடிவ பாவ காரியத்தினுற்பத்தி யொப்புவதாகும். இவ்வசமவேத பாவகாரியத்தினுற்பத்திப் பிரசங்க வடிவ தோஷத்தை நிவர்த்திக்கும் பொருட்டு அப்பரமாணுக்களுக்கும் துவியணுக முதலியவைகளைப் போன்று சில அவயவங்களால் ஜன்னியத்துவமொப்பின் முற்கூறிய மேரு, கடுகுகளில் சமான பரிமாணத்தின் பிராப்தி வடிவ தோஷம் பிராப்தமாகும். அப்பரமாணுக்களுக்கு நித்தியத்துவமொப்புவதில் அவ்விரு தோஷமும் பிராப்தமாகாது. ஆகையால் அப்பரமாணுக்கட்கு நித்தியத்துவமொப்புவதே யோக்கியமாகும்.

சங்கை:—இவ்வாறாய யுக்தியால் அப்பரமாணுக்களில் நித்திய வடிவத் தன்மையின் சித்தியுண்டாகுக. எனினும் அப்பரமாணுக்களின் பரம அணுத்தன்மையில் பிரமாணம் யாது?

௨௫௪. பரமாணுக்களின் பரம அணுத்துவ வடிவத் தன்மையின் சாதக யுக்தி.

சமாதானம்:—எங்ஙனம் மஹத்வ பரிமாணத்தின் ஏற்றத் தாழ்வுத் தன்மை ஆகாச முதலிய விபுத்திரவியங்களில் முடிவடைகின்றதோ, அங்ஙனமே அணுத் தன்மைப் பரிமாணத்தினேற்றத்தாழ்விற்கும் ஒன்றில் முடிவொப்பவேண்டும். அவ்வணுத்தன்மைப் பரிமாணத்தின் ஏற்றத் தாழ்வின் முடிவு பரமாணுக்களிலேயே யுண்டாகின்றது. ஆகையால் அப்பரமாணுக்களில் அப்பரம அணுத்தன்மைச் சம்பவிக்கின்றது. கருத்திதுவாம்: நெல் முதலியவைகளின் மஹத்வபரிமாணத்தினும் கடமுதலியவைகளின் மஹத்வ பரிமாணம் மிகுதியாகின்றது. கட முதலியவைகளின் மஹத்வ பரிமாணத்தினும், மட முதலியவைகளின் மஹத்வ பரிமாணம் மிகுதியாகின்றது. அம்மட முதலியவைகளின் மஹத்வ பரிமாணத்தினும் பர்வத முதலியவைகளின் மஹத்வ பரிமாணம் மிகுதியாகின்றது. இவ்வாறாக அம்மஹத்வ பரிமாணத்தின் குறைவு மிகுதித் தன்மைகளின் சாபேக்ஷை ஆகாச முதலிய விபுத்திரவியங்களின் மஹத்வ பரிமாணத்தில் சென்று முடிவை அடைகின்றது. அவ்வாகாச முதலியவைகளின் மஹத்வ பரிமாணத்தினும் மிகுதியான பரிமாணம் ஓர் திரவியத்திற்குமுண்டாகிறதில்லை. இக்காரணத்தால் அவ்வாகாசமுதலியவைகளின் மஹத்வ பரிமாணத்தினை பரம மஹத்வமென்பர். அங்ஙனமே கட முதலியவைகளின் பரிமாணத்தினும் நெல் முதலியவைகளின் பரிமாணம் குறைவாகின்றது. நெல் முதலியவைகளின் பரிமாணத்தினும் கடுகின் பரிமாணம் குறைவாகின்றது. கடுகின் பரிமாணத்தினும் திரியணுகத்தின் பரிமாணம் குறைவாகின்றது. இவ்வாறாக அவ்வணுத்தன்மைப் பரிமாணத்தின் குறைவு அதிகத்தன்மைகளின் சாபேக்ஷை அப்பரமாணுக்களின் பரிமாணத்திற்சென்று முடிவை அடைகின்றது. அப்பரமாணு

யின் அணுத்தன்மைப் பரிமாணத்திலும் அதிகமான அணுத்தன்மைப் பரிமாணம் ஓர் திரவியத்திற்கு முண்டாகிறதில்லை. ஆகையால் சாத்திரவேத்தா புருடர்கள் அப்பரமாணுவின் அணுத்தன்மைப் பரிமாணத்தினை மேலான அணுத்தன்மைப் பரிமாண மென்பர். இவ்வாறு யுக்தியால் அப்பரமாணுக்களில் பரம அணுத்தன்மை சித்தமாகின்றது.

உருரு. திரியணுகத்தில் அணுத்தன்மைப் பரிமாணத்தினது தாரதம்மியத் தன்மையின் முடிவைக் கண்டித்தல்.

சங்கை:—அவ்வணுத் தன்மைப் பரிமாணத்தின் தாரதம்மியத் தன்மை திரியணுகத்திலேயே ஏன் முடிவடையக் கூடாது?

சமாதானம்:—முன்னர் சாக்ஷாத்தைப் பிரத்தியக்ஷத் திரவிய வடிவ ஏதுவால் அத்திரியணுகத்தில் அவயவ ஜன்யத்தன்மையைச் சித்தஞ் செய்து வந்துள்ளோம். அங்ஙனமே பெரிதை ஆரம்பிக்கும் தன்மை வடிவ ஏதுவால் அத்திரியணுகத்தின் அவயவ வடிவ துவியணுகங்களிலும் அவ்வவயவத்தானுண்டாந் தன்மைச் சித்தஞ் செய்து வந்துள்ளோம். ஆகையால் அத்திரியணுகத்திலும், துவியணுகத்திலும் அவ்வணுத் தன்மைப் பரிமாணத்தினது தாரதம்மியத் தன்மையின் முடிவுண்டாகிறதில்லை. ஆகையால் பரமாணுவினையும், துவியணுகத்தினையும் அங்கீகரியாது திரியணுகத்தில் அவ்வணுத் தன்மைப் பரிமாணத்தினது வீறறத்தாழ்வுகளின் முடிவை யேற்புபவராகிய நீதிநீகாரரின் மதம் அசங்கதமாம். இதனாலும் அநுமானப் பிரமாணத்தால் அப்பரமாணுக்களின் சித்தி செய்யப்பட்டது. இனி சாத்திரப் பிரமாணத்தானும் அப்பரமாணுக்களின் சித்தியைச் செய்வாம்.

உருசு. சாத்திரப் பிரமாணத்தால் பரமாணுக்களினது சித்தியின் வர்ணனம்.

அன்றி ஸ்மிருதி:—“ஜாலாந்தரகதே பானௌ யத் ஸூக்ஷ்மம் த்ருச்யதே ரஜ: தஸ்ய ஷஷ்டதமோ பாக: பரமாணு: ஸ உச்யதே” (இ-ள்.) சுவர் முதலியவைகளிலுள்ள சாளரவாயிலாக வீட்டில் விழும் சூரியனது கிரணங்களில் பிரதீதியாகும் சூக்ஷமதூள்கள் திரியணுகமெனப்படும். அத்திரியணுகமாகிய தூள்களின் ஆறிலொரு பாகம் பரமாணு வெனப்படுகின்றது. என்னும் ஸ்மிருதி வசனம் பரமாணுக்களில் பிரமாண வடிவமேயாம். அங்ஙனமே “யஸ்ய நாஸ்தி [illegible] த்ரிவ [illegible] யதஸ்துநாஸ்தி

[illegible] வாஸோ [illegible] லக்ஷ்ணா [illegible]

[illegible] ஸவிசேஷோ [illegible]”

என்னும் இவை முதலிய அநேக சாத்திரங்களின் வசனம் அப்பரமாணுக்களில் பிரமாண வடிவமாம். ஆகையால் முற்கூறிய லக்ஷணப் பிரமாணங்களினிருப்புளதாக சித்திப் பரமாணுவை அவசியம் அங்கீகரிக்க யோக்கியமாம். பிருதிவி நிருபணம் முற்றிற்று. இனி ஜல நிருபணம்.

...இச்சுருதிப் பிரமாணங்களும்
...னால் அச்சிடப்பட்டுவருகின்றன.
...கை நிரூபிப்பதற்கு இந்நூல் இன்றிய
...விரிவுடைய நியாய நூல் தமிழ்ப் பாஷையில்
...இதுவல் தத்துவ ஞானம் சாஸ்திர முண்டாகு மென்ப
...இதன் முதற் பரிச்சேதத்தில் மங்களவாதமும் பிரார்த்தனை
...நையாயிகர், மீமாஞ்சகர், அவ்வகைப் பட்டபாதர், பிரபாக
ரர், முராரிமிசிரர், சாங்கியர், யோகசாத்திர மதமுடையார், பாசுபத சாத்திர
மதமுடையார், வைஷ்ணவர், ஹைரண்ணிய கர்பர், ஏகதண்டி வேதாந்திகள்,
திருவித திரிதண்டி வேதாந்திகள், இராமாநுஜ மதமுடையார், மத்வ மதமு
டையார், சைவ மதமுடையார், ஈசுவர வாதிகள், சூனிய வாதிமா
த்திமிகர், தேகாத்ம வாதிசார்வாகர், க்ஷணிக விஞ்ஞான வாதியோகாசார
சைனர் இவர்கள் யாவரும் நுவலிய மோக்ஷத்தின் நிரூபணமும் கூறப்பட்
டிருப்பதுடன் வைசேஷிக சாத்திரத்திற் கூறப்பட்ட திரவிய முதலிய சற்
பதார்த்தங்களும் நியாயசாத்திரத்திற் கூறப்பட்ட பிரமாண முதலிய பதினாறு
பதார்த்தங்களும் சுருக்கமாய்க் கூறப்பட்டிருக்கின்றன. இரண்டாவது
முதல் பரிச்சேதங்களில் அடங்கிய விஷயங்களை அறிய இச்சையுடையோர்
இந்நூலின் 73-வது பக்கத்தைக் காண்க. இது [illegible] ஆகியிருப்ப
தற்கு குறையாத நூலாகும். இதன் பிழை திருத்தமும், அட்டவணையும்
நூல் முடிவில் அச்சிடப்படும். தொடர்ச்சியாய் அச்சிட்டு வரும் பிற்பாகங்க
ளுடன் இந்நூல் விலை ரூபா 4-0-0 முன் பணம் அனுப்புவோர்கட்கு
தொடர்ச்சியாய் அச்சிட்டு வரும் பிற்பாகங்களும் இலவசமாக அனுப்பப்படும்.

வேண்டுவோர் சென்னை [illegible] வீதி 143-வது கதவிலக்கமுள்ள
[illegible]ரத்தின் காரியா[illegible]க்கொள்ளலாம்.